Registered as Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 36
கதிர் : 122
ஞாயிற்றுக்கிழமை
பங்குனி 15 நாள்
28 மார்ச் 2021
வள்ளுவர் ஆண்டு 2051
பக்கங்கள்: 24+24
விலை : ரூ.40
செய்தி : 021 493 0000
விளம்பரம்: 021 493 1111

# யாழில் நேற்று 143 பேருக்கு கொரோனா!

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மேலும் 143 பேருக்கு கொரோனாத் தொற்றுள்ளமை நேற்றுச் சனிக்கிழமை உறுதிப்படுத்தப்பட்டது. அவர்களில் 127 பேர் திருநெல்வேலி பொதுச்சந்தை தொகுதி வியாபாரிகள் மற்றும் தொழிலாளர்கள் என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். 23

## தாதியர்கள் இருவருக்கு வவுனியாவில் தொற்று!

வவுனியா, மார்ச் 28

வவுனியா பொது மருத்துவமனையில் பணிபுரியும் தாதிய அலுவலர்கள் இருவருக்கு கொரோ 23



## பி.சி.ஆர். அறிக்கை கையளித்தாலேயே கடை திறக்கலாம்

சவேந்திர தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 28

யாழ்ப்பாணத்தில் முடக்கப்பட்டுள்ள வர்த்தக நிலையங்களை மீளத் திறப்பதற்கு முன்னர், 23

## குடாநாட்டில் கொரோனா கோரம்; அவசர கலந்துரையாடல் இன்று!

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ்ப்பாணத்தின் கொரோனா நிலைமைகள் தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் மகேசன் தலைமையில் அவசர கலந்துரையாடல் ஒன்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் இன்று காலை இடம்பெறவுள்ளது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நாளுக்கு நாள் கொரோனாவின் கோரம் அதி 23

## பெண் சிசு உயிரிழப்பு

காரணம் கண்டறிய மாதிரி கொழும்புக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 28

45 நாள்களேயான பெண் சிசு திடீரென்று உயிரிழந்துள்ள நிலையில், இறப்புக்குக் காரணம் என்ன? என்று அறிவதற்காக மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன. கிளிநொச்சி உருத்திரபுரத்தைச் சேர்ந்த சுதர்சன் திசானி என்ற 45 நாள்களான சிசுவே உயிரிழந்துள்ளது. 23

## சச்சினுக்கு கொரோனா

புதுடெல்லி, மார்ச் 28

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் ஜாம்பவனான சச்சினுக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள் 23

## நீதிக்கான போராட்டம் ஐ.நா.வில் இருட்டடிப்பு

தமிழ் சிவில் சமூக அமையம் விளக்கமாக எடுத்துரைப்பு

கொழும்பு, மார்ச் 28

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது அமர்வில் இலங்கை குறித்து நிறை வேற்றப்பட்ட தீர்மானம் பொறுப்புக்கூறலை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க அளவில் பங்களிக்காது. அத்துடன் நீதிக்கான தமிழ் மக்களது போராட்டத்தை தாமதிப்பதற்கானதும் இருட்டடிப்புச் செய்வதற்குமான இன்னொரு முயற்சியே இது இவ்வாறு தமிழ் 23



## தாமரை பறிக்கச் சென்ற ஆசிரியர் மூழ்கிச் சாவு!

வவுனியாவில் சோகம்

வவுனியா, மார்ச் 28


ஆலய தேர்த்திருவிழாவுக்கு தாமரைப் பூ பறிக்கச் சென்ற ஆசிரியர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். 23

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.70,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
• அதிகபட்ச இரகசியத் தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,
செலான் பிக்கக் கடன்
011 200 88 88
செலான் வங்கி
Brand Finance Rating "A+" Fitch Rating: "A" (lka) கம்பனிப் பதிவிலக்கம் PQ 9
இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கி

இலங்கையில் அதிக நன்மைகளை கொண்ட மொபைல் முற்கொடுப்பனவு Planக்கு மாறுங்கள்
TRIPLE BLASTER
D2D 1150 நிமிடங்கள்
D2D 1150 SMS
Anytime Data 550MB
FREE Bonus Data 825MB
(Anytime 4G Bonus 275MB, Night Bonus 550MB)
ரூ.345/-*
*வரிகள் உள்ளடங்களாக
செயற்படுத்திக்கொள்ள ரூ.345/-ஐ ரீலோட் செய்யுங்கள் அல்லது #678# டயல் செய்யுங்கள்
Dialog
எதிர்காலம் இன்றே.

noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




# சிறப்பைச் சொல்லும் கதை தொடர்கிறது...

## இவ்வாண்டின் மக்களுக்கான வங்கியியல் சேவை வழங்குனர் SLIM சிறப்பு விருது



எம்மீது நம்பிக்கைக்கொண்டு எப்பொழுதும் எம்மை முதல் தேர்வாகத் தேர்ந்தெடுத்து உயர்த்தியமைக்கு எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களுக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்!

1975
BOC CALL CENTRE
www.boc.lk

தலைமை அலுவலகம், "இலங்கை வங்கி சதுக்கம்" இல. 01,
இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 01.

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மணல் அகழ்வுப் பணிக்கு இடம்தேடி களப் பயணம்



**மன்னார், மார்ச் 28**

**சூழலைப் பாதுகாக்கும் வகையிலும், முறையற்ற விதத்தில் மேற்கொள்ளப்படும் மணல் அகழ்வுகளை தடுக்கும் விதத்திலும் நானாட்டான் பிரதேசத்தில் மணல் அகழ்வு செய்வதற்கு பொருத்தமான இடங்களைத் தேடிய களப் பயணம் மேற்கொள்ளப்பட்டது.**

மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தலைமையில் நேற்றுமுன்தினம் காலை இக்களப் பயணம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது நானாட்டான் பிரதேசத்தில் உள்ள இசைமாலை தாழ்வு, தேத்தாக்குளி, கட்கிடந்த குளம் மற்றும் பண்டிதன்கட்டு போன்ற இடங்கள் பார்வையிடப்பட்டன.

இந்தக் களப் பயணத்தின்போது நானாட்டான் பிரதேச செயலாளர், நானாட்டான் பிரதேச சபையினர், புவிச்சரிதவியல் திணைக்களம், மாவட்டச் செயலகத்தின் காணிப் பயன்பாட்டு குழு, விசேட அதிரடிப் படையினர், பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் ஆகியோர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஐ-213)

# சாவ. மருத்துவமனையில் மீண்டும் ஸ்கான் வசதி

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் நீண்ட காலத்தின் பின்னர் மீண்டும் நோயாளர்களுக்கான ஸ்கான் பரிசோதனைகள் நடைபெறவுள்ளன என மருத்துவமனை நிர்வாகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்கான் பரிசோதனைகள் ஏப்ரல் மாதம் தொடக்கம் மாதத்தின் முதலாம் மற்றும் மூன்றாம் வியாழக்கிழமை களில் முன்னர் இடம்பெற்ற பரிசோதனை அறையில் இடம்பெறவுள்ளன. அதற்கான மருத்துவர் வருகை தரவுள்ளார். ஸ்கான் பரிசோதனைகள் தொடர்பாக மக்கள் மருத்துவமனை நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்று நிர்வாகம் அறிவித்துள்ளது. மூன்று வருடங்களுக்கு முன்னர் யாழ். போதனா மருத்துவமனையிலிருந்து வரும் மருத்துவரால் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் ஸ்கான் பரிசோதனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ப-9)

# அத்துமீறி மணல் அகழ்வு; 10 பேர் கைதாகி பிணை

கிளிநொச்சி, மார்ச் 28

கல்லாறு, பிரமந்தனாறு, மற்றும் மயில்வாகனபுரம் ஆகிய பகுதிகள் மணல் அகழ்வுக்கு தடைசெய்யப்பட்ட பகுதிகள் என்று அறிவிக்கப்பட்டு, அங்கு இராணுவத்தினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தபோதிலும், சட்டவிரோத மணல் அகழ்வுகள் இடம் பெறுகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த பகுதிகளில் உள்ள காட்டுப்பகுதியில் மணல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மூன்று டிப்பர்கள் கைப்பற்றப்பட்டு, தருமபுரம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவற்றின் சாரதிகள், மணல் கொண்டு சென்றவர்கள் என 10 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் அதிகாலை இடம்பெற்றுள்ளது. கைதுசெய்யப்பட்டவர்கள் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர். தற்பொழுது இந்தப் பகுதிகளில் சட்டவிரோதமணல் அகழ்வு குறைந்துள்ளபோதும், சிலர் கட்டுப்பாடுகளை மீறி சட்டவிரோதமாக இவ்வாறு மணல் அகழ்வில் தொடர்ச்சியாக ஈடுபடுகின்றனர் என்று மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ப-113)

# நூல் அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 28

"மன்னார் சிவபூமி" நூல் அறிமுக நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை இந்து சமய ஆசிரியர் கழக அனுசரணையில் இணுவில் மத்திய கல்லூரியில் காலை 9 மணிக்கு பேராசிரியர் க.தேவராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்து சமய ஆசிரியர் கழகத்தின் அனுசரணையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதுவர் க.பாலச்சந்திரன் கலந்துகொள்ளவுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு மீது எதிர்க்கட்சிகள் தொடர்ந்தும் சேறடிப்பாம்!

## ஆதங்கத்தை கொட்டித் தீர்த்தார் கோத்தாபய



**கொழும்பு, மார்ச் 28**
**அரசின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் எதிர்க்கட்சிகள் தொடர்ச்சியாக பல்வேறு போலிப் பரப்புரைகளை மக்கள் மத்தியில் முன்னெடுத்து வருகின்றன. அவர்களது இந்தப் பரப்புரை தொடர்பில் மக்களைத் தெளிவுபடுத்த வேண்டும்.**

இவ்வாறு உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகளிடம், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார்.
பத்தரமுல்லையில் உள்ள தியத உயன வளாகத்தில் நேற்று நடைபெற்ற உள்ளூராட்சி பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இன்று எதிர்க்கட்சி நாட்டை வெற்றிபெறச்செய்யும் கொள்கைத் திட்டங்களுக்கு எதிராகவே தாக்குதல் தொடுத்திருக்கிறது. அரசின் மீது மக்கள் வைத்துள்ள எதிர்பார்ப்புகளை பூர்த்திசெய்து அபிவிருத்திப் பணிகளைத் தொடர வேண்டும். அரசின் திட்டங்களை முறையாகச் செயற்படுத்துவதன் மூலம் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்.
தனிநபர்களை அல்லாமல், அரசின் கொள்கைகளை முன்னிலைப்படுத்த அனைவரும் உறுதியாக இருக்க வேண்டும். கொள்கைகள் தோல்வியுற்றால் நாடு மீண்டும் அழிவுக்குள்ளாவதைத் தவிர்க்க முடியாது. அரசை ஆட்சிக்கு கொண்டு வருவதற்கு அளித்த ஆதரவையும் அர்ப்பணிப்பையும் அரசின் கொள்கைகள் மற்றும் திட்டங்களை முன்னெடுப்பதிலும் அனைவரிடமிருந்தும் எதிர்பார்க்கிறேன் என ஜனாதிபதி கூறினார். (ஒ)

## தே.எண்ணெயில் இரசாயனம்: அடுத்தவாரம் அறிக்கை வரும்

கொழும்பு, மார்ச் 28
இறக்குமதி செய்யப்பட்ட 13 தேங்காய் எண்ணெய் கொள்கலன்களில் புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய இரசாயனம் அடங்கியுள்ளது என்று வெளிப்படுத்தப்பட்டுள்ள தகவல் தொடர்பில், நுகர்வோர் அதிகார சபையின் பரிசோதனை அறிக்கை அடுத்த வாரம் வெளியிடப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பரிசோதனைக்காக, நாடு முழுவதிலுமுள்ள பல்வேறு வர்த்தக நிலையங்களில், தேங்காய் எண்ணெய் மாதிரிகள் பெறப்பட்டன என்று நுகர்வோர் அதிகார சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
புற்று நோயை ஏற்படுத்தும் இரசாயனம் கலந்த தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது என்று எழுந்த சர்ச்சையை அடுத்தே இந்தப் பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (த-இ)

## மாகாணத் தேர்தல்: நாளை இறுதி முடிவு

கொழும்பு, மார்ச் 28
மாகாண சபைகளுக்கான தேர்தலை எந்த முறைமையின் கீழ் நடத்துவது என்பது தொடர்பில் நாளை இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது என அரச வட்டாரங்களில் இருந்து அறியமுடி கின்றது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசின் வாராந்த அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் நாளை திங்கட் கிழமை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது. அதிலேயே மாகாண சபைத் தேர்தலை விகிதாசார முறைப்படி நடத்துவதா? அல்லது புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட தொகுதி அடிப்படையில் நடத்துவதா? என்பது குறித்து ஆராயப்பட்டு இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது என தெரியவருகின்றது.
வடக்கு, கிழக்கு உட்பட 9 மாகாணங்களுக்குமான தேர்தலை எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்குள் நடத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. அதற்கான நகர்வுகளே தற்போது முன்னெடுக்கப்பட்டுவருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. (ப-44)

## கொவிட் தடுப்பூசி: பேச்சுக்கள் வெற்றி

கொழும்பு, மார்ச் 28
பைசர் - பயோ என்டெக் நிறுவனத்திடம் இருந்து கொரோனாத் தடுப்பூசிகளை பெற்றுக் கொள்வதற்கான பேச்சு வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது என்று அரசு தெரிவித்துள்ளது.
அந்த ஊசிகளை 70 டிகிரி உறைநிலையில் வைத்திருப்பதற்கான சேமிப்பு வசதிகள் இலங்கையிடம் இல்லை என்றும் இருப்பினும் உற்பத்தியாளர்கள் அதற்கான தீர்வை வழங்கியுள்ளனர் என்றும் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.
இந்த நிறுவனம் தயாரிக்கும் தடுப்பூசிகளை ஏறக்குறைய ஒரு வாரம் சாதாரண உறைநிலையில் வைத்திருக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். எனவே பைசர் - பயோ என்டெக் நிறுவனத்திடம் இருந்து விரைவில் இலங்கைக்கு தடுப்பூசிகளை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார். (த-இ)



யாழ்ப்பாணம் நல்லூர் சட்டநாதர் சிவன் கோயிலின் தேர்த்திருவிழா நேற்றுக் காலை மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

## சா.த. பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 28
2020 ஆம் ஆண்டுக்கான சாதாரண தரப் பரீட்சைக்கான விடைத்தாள் மதிப்பீடும் முதல் கட்டப் பணி நேற்று ஆரம்பமாகியது.
நாட்டிலுள்ள 86 பாடசாலைகள் மற்றும் 111 மத்திய நிலையங்கள் இதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித்த தெரிவித்துள்ளார். இதன் முதற்கட்டப் பணிகள்வரும் ஏப்ரல் 05 ஆம் திகதி வரை நடைபெறும். நாட்டில் 57 நகரங்களில் இந்த மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ப)

## இலவச தனிமைப்படுத்தல்

கொழும்பு, மார்ச் 28
நாடு திரும்புவதற்கு பணம் இல்லாது அந்தரிக்கும் இலங்கையர்களை அழைத்துவந்து இலவசமாக தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது. வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில்பதிவுசெய்துள்ளபணியாளர்களே இவ்வாறு அழைத்து வரப்படவுள்ளனர். (ஒ.இ)

## 3 நிறுவனங்களுக்கு ‘சீல்’

மக்கள் பாவனைக்குப் பொருத்தமற்ற புற்றுநோயை ஏற்படுத்தக் கூடியதென்று அடையாளம் காணப்பட்ட தேங்காய் எண்ணெயை இறக்குமதி செய்த மூன்று நிறுவனங்களுக்கு நுகர்வோர் அதிகார சபை ‘சீல்’ வைத்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ.இ)

### சஹ்ராம் ஹாசிமின்
## உறவினர்களின் சடலங்கள் மீண்டும் தோண்டப்படுகின்றன

கொழும்பு, மார்ச் 28
சாரா தொடர்பில் எழுந்துள்ள சந்தேகங்களையடுத்து, சாய்ந்தமருது மோதலில் கொல்லப்பட்ட சஹ்ராம் ஹாசிமின் உறவினர்களின் சடலங்கள் மீளவும் தோண்டியெடுக்கப்படவுள்ளன.
மொஹமட் ஹஸ்துன் என்பவரின் மனைவியாக கருதப்படும் சாரா எனப்படும் புலஸ்தினி இராஜேந்திரன் உயிரிழந்து விட்டாரா? இல்லையா? என்பதை உறுதிப்படுத்துவதற்காக மீண்டும் மரபணு பரிசோதனை மேற்கொள்ளப்படவேண்டி யுள்ளது.
இதற்காக, சாய்ந்தமருது குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் உடல் பாகங்களை மீளத் தோண்டி எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.
சாராவினுடையது என்று சந்தேகிக்கப்படும் மரபணு, அவரது தாயின் மரபணுவுடன் இதற்கு முன்னர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. எனினும், அவை பொருந்தியிருக்கவில்லை.
இதன்காரணமாக, சாய்ந்தமருது பகுதியில் அடக்கம் செய்யப்பட்டுள்ள, சஹ்ரான் ஹாசிமின் உயிரிழந்த உறவினர்களது உடற்பாகங்களை மீளத் தோண்டி எடுத்து பரிசோதனை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஒ.இ)



## 8 லட்சம் பேருக்கு கொவிட் தடுப்பூசி

கொழும்பு, மார்ச் 28
இலங்கையில் இதுவரையில் 8 லட்சத்து 84 ஆயிரத்து 164 பேருக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் மாத்திரம் 14 ஆயிரத்து 455 பேருக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞான பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




இப்புத்தாண்டில், நேர்த்தியின் பிரதிபலிப்பு
உங்கள் இல்லத்தில் செழித்தோங்கட்டும்.

இப்புத்தாண்டில் 30% கழிவுடன் உங்கள் வீட்டின் களிப்பை இரட்டிப்பாக்குங்கள். Rocell டைல்ஸ், குளியலறை மற்றும் உதிரிப்பாகங்கள். நாடு முழுவதிலுமுள்ள Rocell காட்சியறைகள் மற்றும் விற்பனை நிலையங்களில் கிடைக்கும்.

DentsuGrant

Rocell
என்றும் இனிமை

www.rocell.com | அழையுங்கள் 076 6 22 33 44 | காட்சியறைகள் வாரத்தின் 7 நாட்களும் திறந்திருக்கும்.

TILES | BATHWARE | ACCESSORIES


## கலைஞனின் இழப்பால் சோகத்தில் முள்ளியவளை

முல்லைத்தீவு, மார்ச் 28



கோவலன் - கண்ணகை நாட்டுக் கூத்தில் தொடர்ச்சியாக கண்ணகை கதாபாத்திரத்தை ஏற்று நடித்த கலைஞனின் மரணத்தால் முள்ளியவளை கிராம மக்கள் சோகத்தில் மூழ்கியுள்ளனர். முள்ளியவளையில் பிறந்து வளர்ந்த கணபதிப்பிள்ளை ஜெயசீலன் என்ற கலைஞர் கடந்த புதன்கிழமை அகால மரணமடைந்தார். இளவயது தொடக்கம் கலைக்காக உழைத்துவந்த அவர் கூலித் தொழில் செய்து தனது குடும்பத்தைக் கொண்டு சென்ற நிலையில் இந்த இறப்பு நிகழ்ந்துள்ளது. கலைஞனின் இழப்பு கிராம மக்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. (வ-19)

## பொருண்மியம் நலிந்தவருக்கு குழாய்க்கிணறு

வன்னி விளாங்குளம், மார்ச் 28

வன்னிவிளாங்குளம் பகுதியில் பொருண்மியம் நலிந்த நிலையிலுள்ள ஒருவருக்கு சுமார் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா செலவில் குழாய்க் கிணறு ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

புலம்பெயர் அன்பர் ஒருவரின் நிதிப் பங்களிப்பிலேயே இந்தக் கிணறு அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

அதற்கான நீர் இறைக்கும் இயந்திரம் மற்றும் தண்ணீர் தாங்கி என்பவையும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.


அவர் தமக்கான குடிதண்ணீர் வசதிக்கு குழாய்க் கிணறு ஒன்றை அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்த நிலையில், வன்னி மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராஜாவின் ஒழுங்கமைப்பில் இந்தக் கிணறு அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. (ற-12)

## வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும்

**யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் இவ்வாண்டுக்கான புதிய நிர்வாகசபைத்** தெரிவும் எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத் தலைவர் திரு.தெ.சுகிர்தன் தலைமையில், இணுவிலிலுள்ள யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் கேட்போர் கூடத்தில் இந்தக் கூட்டம் நடைபெறுமென சங்கத்தின் செயலாளர் வை.ஆனந்தஜேஸ்கரன் அறிவித்துள்ளார்.

இதேவேளை, தாச்சி நடுவர்களுக்கான புதிய நிர்வாகசபைத் தெரிவும் இடம் பெறவுள்ளது. எனவே இந்தப் பொதுக் கூட்டத்தில் யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களைச் சேர்ந்த தலா இரண்டு அங்கத்தவர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார். (ற-288)



வவுனியா ஓஹான் நிறுவனத்தின் புதுவாழ்வுப் பூங்கா பாடசாலையில் வருடாந்தம் நடத்தப்பட்டுவருகின்ற மனவளர்ச்சி குன்றிய சிறார்களுக்கான மருத்துவ பரிசோதனை, வவுனியா பொது மருத்துவமனையின் மருத்துவர்கள் மற்றும் உளவளத்துணையாளர்களால் முதல் கட்டமாக 44 பேருக்கு நடத்தப்பட்டது. (வ-222)

## கல்வி மேம்பாட்டு விழா இன்று கைதடியில்

யாழ்ப்பாணம், மார்ச் 28

புலம்பெயர் வாழ் கைதடி உறவுகளின் அனுசரணையுடன் கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக்கழகம் நடத்தும் கல்வி மேம்பாட்டு விழா இன்று பிற்பகல் 3மணிக்கு கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகத்தின் தலைவர் க.சிறீதரன் தலைமையில் கைதடி தெற்கு விநாயகர் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் இ.தமிழ்மாறன் அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.துப்பிலன் கலிசியா, சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் திருமதி.இ.யானகி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (வ-288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

மிக்சர் தொழிற்சாலைக்கு 18 -25 வயதிற்குட்பட்ட ஆண்கள் வேலைக்கு தேவை.

தொடர்பு: 077 546 0028

## இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்

### பிரிவு-32

க.பொ.த (சா/த), (உ/த) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான குறுகிய கால பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

★ English Courses:
Foundation Diploma /
Diploma in English / Spoken English

★ Computer Courses:
Foundation Diploma / Diploma in ICT / Ms-Office/ Website Development / Programming.

★காலம் : 3 மாதங்கள் ★சான்றிதழ் ★ அடிப்படையிலிருந்து

● ICT வகுப்புக்கள்
பாடசாலை மாணவர்களுக்கானது
Grade 10,11, A/L ஆரம்பமாகின்றன

★ SINHALA சிங்கள வகுப்புக்கள்:
பிரபல சிங்கள விரிவுரையாளரின் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
சனி, ஞாயிறு - 11.00 - 12.30
★ சான்றிதழ் ★ அடிப்படையிலிருந்து
★ எழுத்து, பேச்சு கற்பிக்கப்படும்.

★ IELTS / LIFE SKILLS - A1,B1
BATCH - V
பிரபல விரிவுரையாளரின் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
சனி, ஞாயிறு 3.00 - 5.00 PM
● Band Score : 7.5 ● 30% Discount
● Sample papers/Mock Exam
● Smart Class room

HND Courses
● HND IT
● HND ENGLISH
● HND IN SOFTWARE ENGINEERING
● HND IN NETWORK ENGINEERING
★ Certificate ★UK, America, Canada, Srilanka.

ஆரம்பம் 2,3,4/04/2021
10.00 AM, 4 PM

Online பதிவுகள் 076 685 2529 Whatsapp, Viber

**IPS CAMPUS**
பல்கலைக்கழகம் அண்மையில், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T.P: 021 4640229
076 685 2529

## வேலையாள் தேவை

**பெயின்ரிங் வேலை செய்யக்கூடிய ஆண் தேவை**
நாள் ஒன்றுக்கு 1200/- மதிய உணவும் வழங்கப்படும்
தொடர்ச்சியாக வேலையுண்டு.
075 988 1000

## வேலையாள் தேவை

சிறிய குடும்பமொன்றிற்கு **சமையல் வேலை** செய்வதற்கு 40 வயதுக்கு மேற்பட்ட **பணிப்பெண்** தேவை.
தங்கி நிற்பவர்கள் விரும்பத்தக்கது.
077 937 0000

## அனெக்ஸ் வீடு வாடகைக்கு

ராஜ வீதி, கோப்பாய் தலையான் கொட்டலுக்கு அருகாமை, 1 அறையும் சமையலறையும் வாடகைக்குண்டு. சிறிய குடும்பம் விரும்பத்தக்கது.

தொடர்பு:- 077 8094901

## வீடு, காணி, கடை விலைக்கு தேவை

யாழ் காரைநகர் Main Road முகப்பாக மருதடி பிள்ளையார் கோவிலில் இருந்து தாவடி Road சந்தி வரை சிறிய வீடு, காணி, கடை விலைக்கு வேண்டும். உரிமையாளர் மட்டும் தொடர்பு கொள்ளவும். தரகர் வேண்டாம்.

தொடர்பு:-074 076 8863

## சேவை

நீங்கள் அடகுவைத்து மீட்டெடுக்கமுடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும் நாடளாவிய ரீதியில் சினேக பூர்வமான சேவை.

**AAA Gold Center**
076 568 4346

## கடை வாடகைக்கு

கண்டி வீதி, (பெற்றோல் செட்டுக்கு) அருகாமையில் கடை வாடகைக்கு உண்டு. அருகில் முச்சக்கர வண்டித் திருத்த நிலையம் இருப்பதால் முச்சக்கர வண்டித் உதிரிப் பாகங்கள் விற்பனைக்கு சிறந்த இடம். வேறு தேவைகளுக்கும் பயன்படுத்தலாம்.

தொடர்புக்கு: 077 837 4001

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி. திருவேணி தவநேசன் அவர்களின் அன்புத் தந்தையார்
**கார்த்திகேசு சிவசுப்பிரமணியம்**
அவர்கள் (26.03.2021) வெள்ளிக்கிழமை காலமானார். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் வட்டம்
யாழ்ப்பாண மத்திய கல்லூரி

## விற்பனைக்கு

புளியந்தோட்டம் K.K.S. றோட், மல்லாகம் காங்கேயன் பேக்கறி அருகில் 6½ பரப்புக் காணியுடன் சகலவசதிகளும் கொண்ட வீடு 3 மாடி, நான்கு கடையுடன் விற்பனைக்குண்டு.

077 900 3780

## வேலைவாய்ப்பு

யாழ் நகரில் உள்ள பிரபல்யமான கட்டட பொருள் விற்பனை நிறுவனத்திற்கு கீழ்வரும் பணியாளர்கள் தேவை.
முன் அனுபவம் உள்ளவர் விண்ணப்பிக்கவும்
அனுபவத்திற்கேற்ப ஊதியம் வழங்கப்படும். விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை கீழ்வரும் முகவரிக்கு 05.04.2021 விண்ணப்பிக்கவும்.

1. கணக்கு பதியுனர் - பெண்கள்
2. விற்பனையாளர்கள் - ஆண்
3. கனரக வாகன சாரதிகள் - ஆண்.

விளம்பர இல:-JF/1026
C/O உதயன் பப்ளிகேசன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## வேலைவாய்ப்பு


கோண்டாவிலில் அமைந்துள்ள நிறுவனத்திற்கு விற்பனை பிரதிநிதி தேவை.

**தகைமைகள்:**
- க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் (A/L) 3 பாடத்திலும் சித்தி பெற்றிருத்தல்
- வயது எல்லை : 20-30
- முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிக்கு கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப் படும்.
உங்கள் CV இனை 05.04.2021 இற்கு முன்னர் jobvacanciesjfn@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மேலதிக விவரங்களுக்கு:-076 095 3655

## மரண அறிவித்தல்



தோற்றம் 10.01.1944 — மறைவு 26.03.2021

### முத்தையா செல்லத்துரை

சாவகச்சேரி கோவிலாக்கண்டியை பிறப்பிடமாகவும், மாவிட்டபுரம் சாயுடையை வதிவிடமாகவும் கொண்ட முத்தையா செல்லத்துரை அவர்கள் (26.03.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா லட்சுமிப் பிள்ளை தம்பதியினரின் மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா சின்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் இராசேஸ்வரியின் (பட்டு) அன்புக் கணவரும், கலையரசி (லண்டன்), கலையன்பன் (பட்டதாரிப் பயிலுனர் - வலி வடக்கு பிரதேச சபை) ஆகியோரின் அருமைத் தந்தையும், காந்தரூபனின் அன்பு மாமனாரும், நகுலேஸ்வரி, நாக ரட்ணம், குலமணி, இராசலிங்கம் (கனடா), அன்னப் பிள்ளை (கனடா) ஆகியோரின் சகோதரனும் அகரனின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (28.03.2021) ஞாயிற் றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாவிட்டபுரம் தச்சன்காடு இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாயுடை,
மாவிட்டபுரம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 869 6037
075 070 9228

## முகக்கவசங்கள் விற்பனைக்கு (Surgical Face Mask)

BAM

99% பக்டீரியா மற்றும் வைரஸ்களிலிருந்து பாதுகாக்கும் (Melt Blown Fabric) பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட Bureau Veritas மற்றும் NMRA அங்கீகரிக்கப்பட்ட முகக்கவசங்கள் குறைந்த விலைக்கு விற்பனைக்கு.

*மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும்.*

074- 14 355 79

விற்பனை மேலாளர்,
பிஏஎம் ஹெல்த்கேர் (பிரைவேட்) லிமிடெட் ஹோமகம
மின்னஞ்சல்: marketing@thermosl.com keneth@thermosl.com

## பதவி வெற்றிடம்

**பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையம் வவுனியா**
**சாயி முதியோர் மகிழ்வகம்**
**கூமாங்குளம், வவுனியா.**

**சாயி முதியோர் மகிழ்வக இல்ல உதவியாளர்** (Male Attendant)
வவுனியா கூமாங்குளத்தில் அமைந்துள்ள சாயி முதியோர் மகிழ்வக ஆண்கள் இல்ல உதவியாளர் மற்றும் சமையல் உதவியாளர் பதவிக்கான **விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

**தகைமைகள் :**
01. 40 வயதிற்கு குறையாமலும் 60 வயதுக்கு மேற்படாமலும் இருக்கும் ஆண்.
02. சிறந்த நல்லொழுக்கமும், தேக ஆரோக்கியமும், இரக்கசுபாவமும், சேவைமனப்பான்மையும் உடையவராக இருத்தல்
03. சாயி முதியோர் மகிழ்வக இல்லத்தில் உதவியாளர் நிரந்தமாக தங்கியிருந்து கடமையாற்றக் கூடியவராக இருத்தல் விரும்பத்தக்கது.

**சாயி முதியோர் மகிழ்வக இல்ல சமையல் உதவியாளர் (பெண்)**
**தகைமைகள் :**
01. சிறந்த நல்லொழுக்கமும், தேக ஆரோக்கியமும், சேவை மனப்பான்மையும் உடையவராக இருத்தல்
02. சிறந்த முறையில் சுவையான உணவு தயாரிக்கும் ஆற்றல் உடையவர்.

சம்பளம், உணவு தங்குமிடம் உட்பட திறமை மற்றும் தகைமைக்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும்.

மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தமது சுய விபரத்தினை (உறவினர் அல்லாத மத்தியஸ்தருடன் கூடிய) கீழ் வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவும். அஞ்சல் உறையில் இடது பக்க மேல் மூலையில் "விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாக குறிப்பிடல் வேண்டும்"

விண்ணப்ப முடிவுதிகதி : 28.04.2021
தொலைபேசி இல. : 024 - 222 2492, 077 282 8330
மின்னஞ்சல் : sai_mahilvagam@ssiosrilanka.org

**பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையம்,**
**வவுனியா.**

## மரண அறிவித்தல்



பிறப்பு 10 . 02 . 1932 — இறப்பு 25 . 03 . 2021

### திரு.தம்பிஐயா கனகராஜா

(இளைப்பாறிய Physical Therapist- யாழ்ப்பாணம், கொழும்பு, வவுனியா, முன்னைநாள் இலங்கை சர்வதேச பிரிட்ஜ் விளையாட்டு அணி உறுப்பினர்)

யாழ். நாவற்குழி சித்தி விநாயகர் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto ஐ வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஐயா கனகராஜா அவர்கள் கடந்த (25.03.2021) வியாழக்கிழமை அன்று கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், வேலுப்பிள்ளை பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற குணபாக்கியம் கனகராஜா அவர்களின் அன்புக் கணவரும், ரவிசங்கர் (பேராதனை பல்கலைக்கழகம்), காலஞ்சென்ற தேவதா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், கமல வதனி (பேராதனை பல்கலைக்கழகம்) அவர்களின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் நவமணி, தியாகராஜா, புஸ்பராணி, இரத்தினபூபதி, காலஞ்சென்ற இந்திரபூபதி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற நவரத்தினம் மற்றும் செல்வரத்தினம், செல்வத்திரவியம், காலஞ்சென்றவர்களான செல்வக்கண்டு, செல்வராணி, செல்லம்மா, யோகம்மா, சந்திரகாந் தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் சற்குணலீலாவதி, மங்கயற்கரசி, செல்வராசா, சரஸ்வதி, சிவதேவி, மாணிக்கவாசகர், செல்வரத்தினம் காலஞ்சென்றவர்க ளான பரமலிங்கம், வரதராஜா, இரத்தினராஜா ஆகியோரின் அன்புச் சகலனும், சகாயன், சரேசன் ஆகியோரின் அன்பு அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (29.03.2021) திங்கட்கிழமை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
த.தியாகராஜா (தம்பி)
021 205 0956

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பற்சுகாதாரமும் அதன் அவசியமும்

சிரிக்கும் போது பளீச்சென்று அழகூட்டும் அழகுப் பொருளாக, பேசும் மொழியினை சிறப்புடன் உச்சரிக்க உதவும் சாதனமாக மற்றும் உண்ணும் உணவுப் பொருளினை நன்றாக அரைத்துப் பின்னர் அது சமிபாடு அடைவதற்கு உதவும் இன்றியமையாத உறுப்பாக பற்கள் உதவுகின்றன.

"பல் போனால் சொல் போச்சு" என்பார்கள். அத்தகைய மகத்துவமுடைய பற்களை பாதுகாப்பதில் இன்று எம்மில் பலர் தவறுகின்றோம். முரசு நோய்கள், பற்சூத்தை என்பவற்றுக்கு இன்னும் பலரும் ஆட்பட்டுள்ளோம். அல்லது அதன் ஆபத்தில் உள்ளோம்.

முரசு நோய்கள் பற்களிற்குப் பாதுகாப்புத் தரும் இழையங்கள் மற்றும் என்புகள் முதலியவற்றில் ஏற்படும் கிருமித்தாக்க மற்றும் அழற்சி நோயாகும். இது பல் ஈறுகளையும் அதனைச் சுற்றியுள்ள இழையங்களையும் பாதிக்கின்றது. நோயின் தீவிரத்தைப் பொறுத்து பல்வேறு படிகளாக முரசு நோய்கள் காணப் படுகின்றன.

பல் ஈறுகளில் கிருமித்தாக்கத்தால் ஏற்படும் அழற்சி பல் ஈறழற்சி எனப்படுகின்றது. இதில் முரசானது செந்நிறமாக வீங்கிக் காணப்படும். பற்களைத் தீட்டும் போது இரத்தம் கசியும். பெரும்பாலும் இத்தகைய நோயுடையோருக்கு வலி எடுப்பதில்லை, எனவே அதனைப் பற்றி அக்கறை கொள்ளாது உரிய நேரத்தில் சிகிச்சை பெற்றுக்கொள்வதில்லை. இது உருவாகுவதற்குரிய முன்னணிக் காரணியாக பாக்டீரியாக்கள் திகழ்கிறன. பொதுவாகவே பற்களில் முரசுகளில் ஒரு நிறமற்ற படலமாக பக்டீரியாக்கள் படிகின்றன. பற்சூத்தை மற்றும் பற்சுற்றி நோய்களின் ஆரம்ப நிலையில் ஏற்படும் இத்தகைய படலம் "பிளாக்" என்று அழைக்கப்படுகிறது.

இந்தப்படலமானது ஆரம்பத்தில் இலகுவாக விரல் நகம் கொண்டு அகற்றப்படக்கூடியளவு இளகலாகக் காணப்படும். இது அகற்றப்படவில்லை என்றால் 48 மணி நேரங்களுக்குள் கடினமடைந்துவிடும். மேலும் பத்து நாள்கள் சென்ற பின்னர் மேலும் தீவிரமடைந்து அகற்ற முடியாததாகவே ஆகிவிடும். அல்லது தாத்தார் எனப்படும் மஞ்சள் நிறமுடைய நிலையை அடைந்துவிடும். எனவே தான் நாளாந்த வாய்ச் சுகாதாரம் அவசியம். ஒழுங்காக பல் துலக்காதவிடத்து இத்தகைய சிக்கல்கள் பற்சிதைவு, பற்சூத்தை மற்றும் பற்சுற்றி நோய்களைத் தோற்று விக்கும்.

பல்லின் அமைப்பைப் பற்றி பார்த்தோமானால், அது நான்கு வகை இழையங்களால் ஆனது:

1. பற்காரை : பல் வேரின் வெளிப்பகுதியைச் சூழ உள்ளது.
2. காற்றிடை என்பு : தாடையில் பற்களுக்கு ஆதாரமாக விளங்குவது.
3. ஈறு : தொடுப்பிழைய அமைப்பு
4. பல் சுற்றி இணைப்பிழை : பற்காரைக்கும் காற்றிடை என்புக்கும் இடையிலே தொடுப்பாகத் திகழ்வது.

மேற்கூறியவற்றுடன் இன்னும் சில நார்கள், இழையங்கள் சேர்ந்து ஆரோக்கியமான பற்களை உறுதியாக வைத்திருக்க உதவுகின்றன. இந்த அமைப்பினை முரசு தொடுப்புச் சாதனம் என்று அழைப்பர்.

முரசு அழற்சியின் போது பற்களுக்கும் இந்த அமைப்புகளுக்கும் இடையிலான தொடுகையானது இழக்கப்படுகிறது. ஆனால் இது தற்காலிக மாற்றமே, சிகிச்சை பெறப்பட்டால் மீண்டும் பழைய ஆரோக்கிய நிலைக்கு திரும்பி விடும். இங்கு என்புகளோ மற்றைய இழையங்களோ பாதிப்படைவது இல்லை.

எனவே பற்களில் அக்கறை கொண்டவர்களாக அவற்றின் தேவை மற்றும் பெறுதியை உடையவர்களாக பற்சுகாதாரத்தையம் வாய் சுகாதாரத்தையும் பேணுவோம். நோய்களில் இருந்து தூரமாக இருப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## எதனைப் புதைக்க இந்த அகழ்வாய்வு முனைப்புகள் ?

வடக்கில் தொல்பொருள் திணைக்களத்தினரின் செயற்பாடுகள் யாவும் நன்கு திட்டமிட்ட, உள்நோக்குடன் கூடிய, தமிழ் மக்களின் வாழ்வியல் இருப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கக்கூடிய நகர்வுகளாக இருக்கின்றன என பல தரப்பினராலும் சந்தேகிக்கப்படுவதில் நியாயம் இருக்கவே செய்கிறது.

தொல்லியல் ஆய்வென்பது துறைசார்ந்தோரால் வரலாற்றின் தேவை அல்லது அவசியம் கருதி மேற்கொள்ளப்படும் ஒரு செயற்பாடாகவே உலகெங்கும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் மேற்படி துறையினரின் செயற்பாடுகள் அனைத்தும் வெளிப்படைத்தன்மை கொண்டவையாகவும், சர்வதேச ரீதியிலும் துறைசார் அறிஞர்களின் ஆலோசனை மற்றும் நேரடிப்பங்கு பற்றலுடன் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளேயாகும்.

இன்று இலங்கையில் அதுவும் தமிழ் மக்கள் செறிந்து வாழும் வடக்கு கிழக்கு பகுதிகளிலேயே இந்தத் தொல்லியல் ஆராய்ச்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதுவும் சர்ச்சைக்குரியதும் தமிழ் மக்களின் தொன்மை வரலாற்றுடன் தொடர்புடைய வாழ்வியல் சான்றாதாரங்களைக் கொண்டதுமான இடங்களே அவர்கள் ஆய்வுக்காகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற இடங்களாகக் காணப்படுகின்றன. அந்த இடங்கள் பாரம்பரிய, புராண இதிகாச காலத் தொடர்புகளை ஆதாரப்படுத்தி மண்ணின் பெருமையையும், மக்களின் வரலாற்றுத் தொன்மைமிகு கலாசாரச் செழுமையின் கம்பீரத்தையும் பறைசாற்றி நிற்கின்ற பகுதிகள் என்பதை அனைவரும் அறிவர். அங்கே எந்தவிதமான முன்னறிவிப்போ, சம்பந்தப்பட்டவர்களுடனான கலந்துரையாடலோ, அனுமதியோ ஏதுமின்றி சுயாதீனமாக அகழ்வாய்வுப் பணிகளுக்கான ஏற்பாடுகளை அதிகார பந்தாக்களுடன் மேற்கொள்ள தொல்லியல் திணைக்களத்தினர் முனைகின்றனர். இதனை எல்லா வகையிலும் ஒரு மேலாதிக்க அதிகாரத்துடன் கூடிய வன்முறைச் செயற்பாடாக மக்கள் அர்த்தம் கொள்வது தவிர்க்க முடியாதது மட்டுமல்ல நியாயமானதும் கூட.

தொல்பொருள் ஆய்வுப்பணி என்று கூறிக்கொண்டு அகழ்வாய்வுப் பணிக்கெனத் திடீர் திடீரெனக் களமிறங்கும் அணியினரின் அனைத்து நகர்வுகளும் சம்பந்தப்பட்ட பிரதேசங்களில் வாழும் மக்களின் மீதான தமது அதிகார வலுவைக் காட்ட முற்படும் போதுதான் அவர்களின் நோக்கம் சந்தேகத்துக்குரியதாகின்றது.

அத்துமீறி ஆக்கிரமிப்பு முனைப்பு முன்தள்ள, தொல்பொருள் திணைக்களம், வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம், பல்வேறு திணைக்களங்கள், பாதுகாப்பு கட்டமைப்பினர் எனப் பல்வேறு அரச அமைப்புகளின் அடையாளங்களுடன் தாம் விரும்பும் அல்லது கையகப்படுத்த நினைக்கும் நிலங்களை அளவீடு செய்ய முனைவதும், குறித்த திணைக்களங்களின் பெயரால் அடையாளப்படுத்துவதும், எந்த வகையிலும் ஒரு ஜனநாயகச் செயற்பாடாகாது. இந்த நாட்டின் ஒரு பகுதி வாழ் சிறுபான்மை இனத்தவரை அவமதிப்பதோடு மட்டுமல்லாது அவர்கள் மனங்களைக் காயப்படுத்தும் நோக்கிலான திட்டமிட்ட செயற்பாடாகவே இதுவும் மனித உரிமை அமைப்புகளால் அடையாளப்படுத்தப்படும். இதுவும் இனஅழிப்பு நடவடிக்கையின் மற்றொரு உபாயமேயாகும்.


முல்லைத்தீவில் ஆரம்பித்து திருகோணமலை, கன்னியா, வவுனியா, நெடுந்தீவு,கிளிநொச்சி எனத் தொடரும் இந்த அகழ்வாய்வாளர்களின் செயற்பாடு நேற்றுமுன்தினம் புத்தூரில் வந்து நிலைகொள்ள முயன்றுள்ளது.

எல்லா இடங்களிலும் மக்களின் எதிர்ப்பால் பின்வாங்கிப் போகும் இந்தத் தொல்பொருள் ஆய்வு மற்றும் ஏனைய குழுவினர் தம் இலக்கை எவ்வகையிலேனும் எட்ட வியூகம் அமைத்துக்கொண்டே இருப்பர் என்பது தெளிவு. இன, மத அடிப்படைவாத ஆக்கிரமிப்பாளர் ஒரு போதும் ஓய்ந்திருப்பது கிடையாது.பௌத்த, சிங்கள மேலாதிக்க சிந்தனையாளர்களும் அப்படித்தான்!

இன்றைய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நாளன்றே தம்மை பௌத்த - சிங்கள ஆட்சியாளர் எனப் பிரகடனம் செய்து தமது எதிர்கால அரசியல் இலக்கை வெளிப்படையாகவே சுட்டிக்காட்டி விட்ட நிலையில், ஏனைய இனத்தவரும் மதத்தவரும் இந்த மண்ணின் மீதான தமது வாழ்வியல், பண்பாடு மற்றும் கலாசாரம் சார் தனித்துவ இறைமை சார் உரிமையைப் பாதுகாக்க உறுதியாகப் போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டார்கள் என்ற உண்மை உணர்த்தப்பட்டு விட்டது.

ஜனநாயகம், சமதர்மம் என்பதெல்லாம் பேரினவாத சக்திகளின் நாநுனிச் சொற்கள் மட்டுமே!

அடக்கப்படும், ஆக்கிரமிக்கப்படும், ஒடுக்குமுறைக்குள்ளாகும் மக்களின் ஒருமித்த செயற்பாடே அவர்களுக்கான வரலாற்றைத் தக்க வைக்கும் ஒரே பலம்.




# இலங்கை விவகாரத்தில் ஐ.நா. தலையிட முடியும்

## பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 28**

**காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பது அவசியமாகும். ஜெனிவா விவகாரத்தில் மாகாண சபைத் தேர்தல் விவகாரம் குறித்து அதிகம் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இலங்கையின் உள்ளக விவகாரங்களில் சர்வதேசம் தலையிட முடியாது என தெரிவிக்க முடியாது. ஏனெனில் இலங்கை, ஜனநாயகக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு சர்வதேசத்துடன் ஒன்றிணைந்துள்ளது.**

இவ்வாறு லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை மூலம் இலங்கையின் இராஜதந்திர உறவும் மற்றும் இலங்கை மீது சர்வதேசம் கொண்டுள்ள பார்வை ஆகியவை தொடர்பாகவும் அதிகம் ஆராய நேரிட்டுள்ளது. இலங்கைக்கு ஆதரவாக 11 நாடுகள் மாத்திரமே வாக்களித்துள்ளன. கடந்த காலங்களில் இலங்கைக்கு ஆதரவாகச் செயற்பட்ட ஆசிய நாடுகள் இம்முறை நடுநிலை வகித்துள்ளன. இவற்றில் இந்தியா, ஜப்பான் ஆகிய நட்பு நாடுகளை பிரதானமாகக் குறிப்பிட வேண்டும்.

நடுநிலை வகித்த நாடுகள் இலங்கைக்கு சார்பாகச் செயற்பட்டுள்ளன எனக் கருத முடியாது. 14 நாடுகள் இலங்கை விவகாரம் தமக்கு தேவையற்றது என ஒதுங்கியுள்ளன. இந்தவிடயம் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். ஜெனிவா விவகாரத்தில் அரசு சற்று வினைத்திறனான முறையில் செயற்பட்டிருக்கலாம் என்று தற்போது கருதப்படுகிறது.

சர்வதேச நாடுகளுக்கு அடிபணிய முடியாது எனப் பேச்சளவில் மாத்திரமே குறிப்பிட முடியும். இலங்கையின் ஒரு சில உள்ளக விவகாரங்களில்சர்வதேசம்கவனம்செலுத்தும். இலங்கை ஜனநாயகக் கோட்பாட்டை முன்வைத்து சர்வதேசத்துடன் ஒன்றிணைந்துள்ளது.ஆகவே ஜனநாயக விவகாரங்கள் தொடர்பாக சர்வதேசம் கேள்வி எழுப்பும். காலவரையறையின்றிப் பிற்போடப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவது குறித்து அரசு அதிக கவனம் செலுத்துவது அவசியம். ஜெனிவாவில் மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மாகாண சபைத் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளமைக்கு கடந்த அரசில் இரு அரச தலைவர்களும் பொறுப்புக் கூறவேண்டும் - என்றார். (ப)

# யானை - மனித மோதலை தவிர்க்க பலகோடி செலவிட்டும் பயனில்லை

யானைகளுக்கும் மனிதர்களுக்குமான மோதலை தவிர்ப்பதற்காக 2019 மற்றும் 2020ஆம் ஆண்டுகளில் 49 கோடி ரூபா செலவுசெய்யப்பட்டுள்ளபோதும் அந்த இரு தரப்புக்கள் இடையேயான மோதல்கள் குறையவில்லை என்று நாடாளுமன்றில் நடைபெற்ற அரச கணக்குகள் பற்றிய குழு விவாதத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

யானை - மனித மோதலைத் தவிர்ப்பதற்கு 2019ஆம் ஆண்டு மின்சார வேலிகளை அமைப்பதற்காக 275 கோடியே 44 லட்சத்து 7 ஆயிரத்து 639 ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. 2020ஆம் ஆண்டில் 221 கோடியே 50 லட்சத்து 5 ஆயிரத்து 818 ரூபா செலவுசெய்யப்பட்டுள்ளது. இந்தத் தொகையைப் பயன்படுத்தி 4 ஆயிரத்து 756 கிலோமீற்றர் தூரத்துக்குமின்சாரவேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. இருந்தபோதும் 2021ஆம் ஆண்டு மார்ச் 23 ஆம் திகதி வரையில் இலங்கையில் யானை-மனித மோதல் காரணமாக 28 பேர் உயிரிழந்துள்ளனர். அவ்வாறே 83 யானைகளும் உயிரிழந்துள்ளன.

அரச கணக்குகள் பற்றிய குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர்களான, லசந்த அலகியவண்ண மற்றும் தயாசிறி ஜயசேகர ஆகியோர் உள்ளிட்ட அதிகாரிகள் பலர் கலந்துகொண்டிருந்தனர். (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தருமபுரம் மேற்கில்

## சிறுபோக செய்கைக்கு மேலதிக நீர்ப்பங்கு!

முல்லைத்தீவு, மார்ச் 28

கண்டாவளை பிரதேச செயலகத்துக்குட்பட்ட தருமபுரம் மேற்குப் பகுதியில் இம்முறை சிறுபோக பயிர்ச்செய்கைக்காக மேலதிகமாக பத்து ஏக்கர் நிலப் பரப்புக்கு நீர்ப்பங்கு வழங்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் புளியம்பொக்கணை கமநல சேவைகள் திணைக்களத்தில் நடைபெற்ற கமக்கார அமைப்புக்களுடனான ஒன்றுகூடலில் தருமபுரம் மேற்கு கமக்கார அமைப்பினர் முன் வைத்த வேண்டுகோளையடுத்து இந்த நீர்ப்பங்கு வழங்கப்பட்டது.

கல்மடு குளத்தின் நீர்பாசனத்தின் மூலம் மேட்டு நிலப் பயிர்ச்செய்கைக்கு இந்த நீர்பங்கை வழங்குவதற்கு புளியம்பொங்கணை கமநலசேவைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது. (ற-12)

## நாடு முழுவதும் வர்த்தக நிலையங்கள் சோதனைக்கு உட்படுத்தப்படும்

கொழும்பு, மார்ச் 28

எதிர்வரும் தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு, நாடு முழுவதும் வர்த்தக நிலையங்களை சோதனையிடும் நடவடிக்கை நாளை தொடக்கம் ஆரம்பிக்கப்பட உள்ளது.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம், இந்த நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளது என்று அதன் செயலாளர் மஹேந்திர பாலசூரிய தெரிவித்தார்.

இந்த விசேட சோதனை நடவடிக்கையில், மூவாயிரம் அலுவலர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (த-இ)



## மாணவர்களுக்கு கற்றல் உதவி

முல்லைத்தீவு, மார்ச் 28

புதுக்குடியிருப்பு 10ம் வட்டாரத்தில் பொருண்மியம் நலிந்த நிலையில் வாழும் இரு மாணவர்களின் கல்விக்கான நிதிப்பங்களிப்பைத் தொடர்ந்து வழங்க, தாய்த்தமிழ் பேரவையின் ஒழுங்கமைப்பில் புலம்பெயர் தமிழர் களான தியாகராசா.இளஞ்செல்வன், சி.கெங்காதரன் ஆகியோர் முன்வந்து ள்ளனர். இதன்படி, தந்தையைப் பிரிந்து வாழும் மாணவன் ஒருவனுக்கும், தந்தை இரண்டு கண்களையும் இழந்த நிலையில் ஒரு கண் பார்வை இழந்த மாணவி ஒருவருக்குமே கற்றலுக்கான உதவி தொடர்ந்து வழங்கப்படவுள்ளது. அதன் அடிப்படையில் மாணவர்களுக்கான கல்வி நிலையத்துக் கான கட்டணங்கள், கற்றல் உபகரணங்கள், உலர் உணவுப் பொருள்கள் என்பவற்றை தாய்த்தமிழ் பேரவையின் ஸ்தாபகர் ச.ரூபன் வழங்கினார். (வ-222)

## வயற்காணிகள் இல்லாதவர்கள் கிராம அலுவலரிடம் பதியலாம்

### பூநகரி பிரதேச செயலர் தெரிவிப்பு

வயற்காணி இல்லாதவர்கள் தத்தமது கிராம அலுவலரிடம் பதிவுகளை மேற்கொண்ட பின்னர் , பிரதேச செயலகத்துக்கு வருகை தருமாறு பூநகரி பிரதேச செயலர் ச.கிருஸ்ணேந்திரன் தெரிவித்தார்.

கடந்த 23 ஆம் திகதி குடமுருட்டிக் குளத்தின் கீழான சிறுபோக நெற்செய்கைக் கூட்டம் நடைபெற்றது. இதன்போது வயற்காணி அற்ற குடும்பங்கள் தமது பிரச்சினைகளை பிரதேச செயலரிடம் தெரிவித்த நிலையிலேயே இந்த அறிவிப்பை அவர் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

பூநகரி குடமுருட்டிக் குளத்தின் சூழலில் நடைபெறுகின்ற மணல் அகழ்வைக் கட்டுப்படுத்துவதற்கு குழுவொன்று அமைக்கப்படவுள்ளது. அத்துடன் குடமுருட்டிக் குளத்தின் கீழான பகுதிகளில் யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளது என பொதுமக்களால்தொடர்ச்சியாகமுறைப்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இது தொடர்பிலும் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (ஐ-13)

## பண்டிதரின் இழப்பு தமிழுக்கு பேரிழப்பு

### இந்து சமயப்பேரவை இரங்கல்

யாழ்ப்பாணம், மார்ச் 28

சைவத்தமிழ் பேரறிஞர் பண்டிதர் தி.பொன்னம்பலவாணரின் இழப்பு முழு தமிழுலகுக்கும், குறிப்பாக நமது நாட்டுக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும் என இந்து சமயப் பேரவையின் தலைவர் சிவசக்திகிரீவன் தெரிவித்துள்ளார். தமிழை முறையாகக் கற்றவர்கள் அருகிவரும் காலத்தில் பண்டிதரின் இழப்பு எம்மனதைப் புண்ணாக்கி விட்டது. கடந்த சனிக்கிழமை எம்மைச் சந்திப்பதற்காக வந்து சென்றபின் அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிப்பதை அறிந்து மிகுந்த மனவேதனை அடைந்தேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ச அரசாங்கத்துக்கு நட்பு நாடுகள் மிகக்குறைவு

## ஐ.நா. தீர்மானத்தை சுட்டிக்காட்டி சாடுகின்றார் எரான் விக்கிரமரத்ன



**கொழும்பு, மார்ச் 28**

**சர்வதேச அரங்கில் மிகவும் சொற்ப அளவான நட்பு நாடுகளையே ராஜபக்ச அரசு தக்கவைத்துள்ளது என்பதை அண்மையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் முன்வைக்கப்பட்ட புதிய தீர்மானத்துக்கு அளிக்கப்பட்ட வாக்குகள் வெளிப்படுத்தியுள்ளன.**

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

மிக மோசமான பொருளாதாரக் கொள்கைகளிலிருந்து தற்போது மோசமான வெளிநாட்டுக்கொள்கைகளை நோக்கி ராஜபக்ச அரசு நகர்ந்திருக்கின்றது. ராஜபக்சக்கள் தலைமையிலான இலங்கை அரசு தற்போது ஒரு நெருக்கடியிலிருந்து மற்றுமொரு நெருக்கடிக்கு உட்பட்டிருக்கின்றது. மிக மோசமான பொருளாதார நிர்வாகம், கொரோனாவைக் கட்டுப்படுத்துவதில் கையாளப்பட்ட மோசமான உத்திகள் ஆகியவற்றிலிருந்து இப்போது பேரழிவு தரும் வெளிநாட்டுக் கொள்கைகளை நோக்கி அரசு நகர்ந்திருக்கின்றது. போர் முடிவடைந்ததன் பின்னரான காலப்பகுதியில், இப்போதுதான் வெளிநாட்டுக் கொள்கை மிகவும் மோசமான மட்டத்தில் பேணப்படுகின்றது என்று கூறமுடியும். கடந்த 2009ஆம் ஆண்டில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட போரின்போது இடம்பெற்ற மீறல்கள் தொடர்பில் மாத்திரமன்றி, கடந்த 16 மாத காலத்தில் நாட்டில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களைச் சரி செய்வதற்கு அதிக முக்கியத்துவமளிக்கும் விதமாகவே ஐ.நாவின் புதிய தீர்மானம் அமைந்துள்ளது.

கொள்கைகளை வகுப்பதற்கான பொறுப்புக்குப் பொருத்தமற்ற நபர்களை நியமித்ததன் விளைவாக, கொள்கை அடிப்படையில் அரசு தோல்வியைத் தழுவியுள்ளது.

ஐ.நாவின் புதிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து பொருளாதார ரீதியில் ஏற்படக்கூடிய சவால்களையும் பாதகமான தாக்கங்களையும் எதிர்கொள்வதற்கும் அவற்றைக் குறைத்துக் கொள்வதற்கும் அவசியமான புதிய நடவடிக்கைகளை முன்னெடுப்பது அவசியமாகும். அதேவேளை, இலங்கை குறித்த கடந்தகால அறிக்கைகளில் முன்வைக்கப்பட்ட மனித உரிமைகளை வலுப்படுத்துவதற்கான பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதுடன், சர்வதேச சமூகத்தின் கரிசனைகளைத் திருப்திப்படுத்தக் கூடியவகையிலான உள்ளகப் பொறி முறைகளை அமுல்படுத்துவது அவசியமாகும். நாட்டு மக்கள் மீதான அக்கறையுடன் முன்னெடுக்கப்படக்கூடிய எந்தவொரு செயற்றிறனான நடவடிக்கைகளுக்கும் முழுமையான ஆதரவை வழங்குவதற்கு எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் நாம் தயாராக இருக்கின்றோம் - என்றுள்ளது. (ப-22)

# சிறு ஏற்றுமதிப் பயிர்களுக்கு உலக நாடுகளில் கிராக்கி

## பெருந்தோட்ட அமைச்சின் செயலர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 28

அரசு முன்னெடுக்கும் சுபீட்சத்தின் இலக்கு என்ற வேலைத்திட்டத்தின் கீழ் சிறிய ஏற்றுமதிப் பயிர்களை ஊக்குவிக்கும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது என்று பெருந்தோட்ட அமைச்சின் செயலாளர் ரவீந்திர ஹேவாவித்தாரண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறு ஏற்றுமதிப் பயிர்களின் மூலம் கூடுதலான அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்கான வாய்ப்பு கிடைக்கும். ஏற்றுமதிப் பயிர் ஆராய்ச்சி நிலையங்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் இணைக்கும் வகையில் கைதொழில் ஆய்வு பல்கலைக்கழகம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

தென்னை மரங்களை வெட்டும் நடவடிக்கை விரைவில் வரையறுக்கப்படவுள்ளதுடன், இதற்கான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. இலங்கையின் சிறிய ஏற்றுமதிப் பயிர்களுக்கு கூடுதலான கிராக்கி நிலவுகிறது - என்றார். (ப)

# மக்களைக் கண்காணிக்க விசேடமான மென்பொருள்!

## ஹரின் எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, மார்ச் 28

**மக்களைக் கண்காணிக்கவென 'பெகாசஸ்' எனும் மென்பொருளை அரசு கொள்வனவு செய்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பி**னர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களைக் கண்காணிப்பதற்காக 'பெகாசஸ்' எனும் மென்பொருளைப் பயன்படுத்திவரும் அரசு, அதனூடாக அவர்களின் தனிப்பட்ட விடயங்களையும் கண்காணிக்கின்றது. இந்த மென்பொருள் மிகவும் ஆபத்தானது. இதன்மூலம் இன்னுமொருவரின் கைத்தொலைபேசி கமராவை இயக்க முடியும் என்பதுடன் அவர்கள் எங்கு உள்ளனர் என்பதைக் கூட கண்டறிய முடியும்.

இதேவேளை. இந்த மென்பொருள் மூலம் எதிர்க்கட்சியை ஆராய்வதை விடவும் ஆளும் கட்சிக்குள் என்ன நடக்கின்றது என்பதையே அரசு ஆராய்கின்றது என்ற விடயத்தை நான் பொறுப்புடன் கூறமுடியும். எவ்வாறாயினும் இந்த மென்பொருளைப் பயன்படுத்தி தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் தனியார் தொலைத்தொடர்பு நிறுவனங்கள் மோசமான செயல்களில் ஈடுபடுமாக இருந்தால், இந்த அரசு கவிழ்ந்த பின்னர் பொறுப்புக்கூறியே ஆகவேண்டும். மக்களின் தனிப்பட்ட விடயங்களைக் கண்காணித்து, அவர்களைக் கட்டுப்படுத்த முயற்சிப்பது வெட்கமான செயல் அல்லவா? - என்றார். (ப-22)

# ஏப்ரல் ஒன்று தொடக்கம் அரிசிக்கு நிர்ணய விலை

## விவசாய அமைச்சர் உறுதி

கொழும்பு, மார்ச் 28

ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் சதொச, மொத்த விற்பனை கூட்டுறவு நிலையங்கள், பிரதான நிலை விற்பனை நிலையங்கள் மற்றும் ஆகியவற்றின் ஊடாக சிவப்பு மற்றும் வெள்ளை அரிசி ஒரு கிலோவை 95 ரூபாவுக்கும், நாட்டரிசி ஒரு கிலோவை 97 ரூபாவுக்கும் விற்பனை செய்யதீர்மானிக்கப்பட்டுள்ளது என விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசியின் நிர்ணய விலையைப் பேணுவது சவால்மிக்கதாக உள்ளது. அரிசியின் விற்பனை விலை தொடர்பில் அரசு வர்த்தமானி வெளியிட்டாலும், அவற்றை முறையாகப் பின்பற்ற முடியாத தன்மை காணப்படுகிறது. கடந்த காலங்களில் அரிசி உற்பத்தியாளர்கள் முறையற்ற வகையில் செயற்பட்டதன் காரணமாக அரிசி விற்பனை விலையில் மாறுபட்ட தன்மை ஏற்பட்டது. பண்டிகைக் காலத்தில் அத்தியாவசியப் பொருள்களின் விலைக் குறைப்பு, கூட்டுறவு விற்பனை நிலையங்களுக்கு கூடாக மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என பிரதமர் ஆலோசனை வழங்கியுள்ளார். இதன் முதற்கட்டமாக அரிசி விலையின் நிர்ணயத் தன்மையை உறுதியாகப் பேணத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய ஏப்ரல் மாதம் முதலாம் திகதி தொடக்கம் சிவப்பு மற்றும் வெள்ளை அரிசி ஒரு கிலோ 95 ரூபாவுக்கும், நாட்டரிசி ஒரு கிலோ 97 ரூபாவுக்கும் சதொச, மொத்த கூட்டுறவு விற்பனை நிலையங்கள், கார்கிள்ஸ் பூட் சிட்டி உட்பட பிரதான நிலைய விற்பனை நிலையங்கள் ஊடாக விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள் ளது.

நாடு தழுவிய ரீதியில் உள்ள 2 ஆயிரத்து 500 மொத்த விற்பனை கூட்டுறவு நிலையங்கள், 447 சதொச விற்பனை நிலையங்கள் மற்றும் பிரதான நிலை விற்பனை நிலையங்கள் ஆகியவற்றுக்கு 3 மாத காலத்துக்கு தேவையான அரிசி, நெல் சந்தைப்படுத்தல் சபை ஊடாக விநியோகிக்கப்படும். நாட்டில் அரிசி விநியோகத்தில் எவ்வித தட்டுப்பாடும் கிடையாது. 6 மாத காலத்துக்கு தேவையான அரிசி போதுமான அளவுக்கு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது -என்றார். (ப)

# கண்டுபிடிப்பாளர்கள் 62 பேருக்கு விருதுகள்

கொழும்பு, மார்ச் 28

இசுவாபிமானி 2020 தேசிய விருது வழங்கல் விழாவில், சமூக நலனில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய புதிய கண்டுபிடிப்பாளர்கள் 62 பேர் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனத்தால் 20ஆவது தடவையாக இந்த விருது வழங்கும் விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த விழாவானது கொழும்பு ஹில்டன் ஹொட்டலில் இடம்பெற்றது.

அரச மற்றும் பிரஜைகளின் பங்கேற்பு, சுகாதார மற்றும் சேமநலன், கல்வி மற்றும் கற்பித்தல், கலாசாரம் மற்றும் சுற்றுலாத்துறை, சுற்றாடல் மற்றும் பசுமை, நகர மயப்படுத்தல், வணிகம் மற்றும் வியாபாரம் போன்ற பல அடிப்படைப் போட்டிப் பிரிவுகளின் கீழ் இந்த விருதுகள் வழங்கப்பட்டன. (ப)

# ஒன்றுகூடல்களுக்குத் தடை; பயணக் கட்டுப்பாடு இராது

## இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 28

தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டு காலப்பகுதியில் பெரிய அளவிலான ஒன்றுகூடலுக்கு தடை விதிக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. இருப்[illegible] பயணக் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்த இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று கொரோனா கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

குடும்பங்கள் ஒன்றுகூடுவது தடைப்படும் என்பதனால் பயணக் கட்டுப்பாடுகள் குறித்து அரசு பரிசீலிக்கவில்லை. இருப்பினும் புத்தாண்டுக்கு முன்னர் பொலிஸாரும் சுகாதார அதிகாரிகளும் வழிகாட்டுதல்களை வழங்குவார்கள்.

இந்த நாள்களில் தற்போதுள்ள சுகாதார வழிகாட்டுதல்களை பொதுமக்கள் கண்டிப்பாக பின்பற்ற வேண்டும் - என்றார். (கு-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# களுத்துறை - கல்கிஸை பகுதியில் உருவானது செயற்கைக் கடற்கரை

கொழும்பு, மார்ச் 28

களுத்துறை - கல்கிஸை இடையே செயற்கைக் கடற்கரை அமைக்கும் பணி வெற்றிகரமாக எதிர்பார்த்த செலவிலும் பார்க்க குறைவான செலவில் பரிபாலனத் திணைக்களத்தால் நிறைவு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

மேற்படி செயற்றிட்டம் களுத்துறை கலிடோ கடற்கரையில் இருந்து ஒன்றரைக் கிலோமீற்றர் நீளமாக இரத்மலான- அங்குலான வழியாக 500 மீற்றர் கல்கிஸை கடற்கரையை உள்ளடங்கியதாக உள்ளது.

இது தொடர்பில், கடல்வளங்கள் முகாமைத்துவ திணைக்களப் பிரதம பொறியியலாளர் (கடற்கரை வடிவமைப்பு மற்றும் ஆராய்ச்சி)சுஜீவ ரணவக்க தெரிவித்துள்ளதாவது:

இந்தச் செயற்றிட்டத்தில், கல்கிஸை தொடக்கம் ஒரு லட்சத்து 50 ஆயிரம் கனமீற்றர் மண், வாகனங்கள் மூலம் வெள்ளவத்தை கடற்கரைக்கு கொண்டு வரப்பட்டு 15 மீற்றர் கடற்கரையை வெள்ளவத்தையில் உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

தெகிவளை - வெள்ளவத்தைப் பகுதியில் உள்ள வடிகான்களில் சேரும் மண் வடிகானின் முடிவில் சேரவிடாமல் தடுப்பதற்கும் அது எந்த நேரத்திலும் திறந்திருக்கும் வகையில் இருக்கும் கடற்கரை கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

வெள்ளவத்தை - கல்கிஸைக்கு இடைப்பட்ட கடற்கரைப்பகுதி காலநிலை மாற்றத்துடன் பல மாறுதல்களைக் கொண்டுள்ளது. நாடு தற்போது ஓர் அழகான கடற்கரைப் பகுதியைப் பெற்றுள்ளது. இதன்மூலம் நாட்டின் சுற்றுலாத் துறையை மேம்படுத்தக்கூடியதாக உள்ளது. - என்றார்.

(கு-இ)






# துப்புரவுப் பணி

முல்லைத்தீவு, மார்ச் 28

முல்லைத்தீவு உண்ணாப்புலவு சிறுவர் பூங்கா வளாகம் நேற்று துப்புரவு செய்யப்பட்டது.

ஆற்றல் அமைப்பால் முன்னெடுக்கப் பட்டுவரும் "சமூகப் பணி ஒன்று" வேலைத்திட்டத்தின் கீழ், யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல் துறைத் தலைவர் பேராசிரியர் கே .ரி கணேசலிங்கம் தலைமையில் இந்தப் பணி முன்னெடுக்கப்பட்டது.

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் பாராமரிப்பிலுள்ள இந்தப் பூங்கா கவனிப்பாரற்ற நிலையில் காணப்பட்டதையடுத்து இந்தப் பணி மேற்கொள்ளப்பட்டது.

இந்தப் பணியில் பேராசிரியர் கே.ரி கணேசலிங்கம், சிரேஷ்ட சட்டத்தரணி பரஞ்சோதி, ஆற்றல் அமைப்பின் முல்லைத்தீவு இணைப்பாளர் விவேகானந்தன், கரைதுறைப்பற்று பிரதேச சபைத் தவிசாளர் தவராசா, உப தவிசாளர் ரவீந்திரன், பொதுமக்கள் மற்றும் நலன் விரும்பிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

(ற-இ)




*பசறை விபத்து*

## சாரதிகள் இருவருக்கும் விளக்கமறியல் நீடிப்பு

பதுளை, மார்ச் 28

பசறையில் விபத்துக்குள்ளான பஸ் சாரதி மற்றும் டிப்பர் சாரதி ஆகியோரை ஏப்ரல் மாதம் முதலாம் திகதி வியாழக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க, நீதிபதி உத்தரவிட்டார். பசறை சுற்றுலா நீதிமன்றத்தில் நீதிபதி சமிந்த கருணாதாச முன்னிலையில் நேற்றுமுன்தினம் மேற்படி வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே இந்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. விபத்துக்குள்ளான பஸ் சாரதி பாதுகாப்பின் மத்தியில், பதுளை அரசினர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)

# பயிற்சி வகுப்பு ஆரம்பம்

மன்னார்,மார்ச் 28

மன்னார் மெசிடோ நிறுவனத்தின் அனுசரணையில் இளையோருக்கான மனித உரிமைகள் தொடர்பான பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் செயற்பாட்டில் ஆர்வமுள்ள 60 க்கும் மேற்பட்ட இளையோர்களுக்கு மூன்று மாதங்களுக்கு இந்தப் பயிற்சிநெறி நடைபெறவுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வு மன்னார் வாழ்வுதய கட்டடத்தில் நேற்றுமுற்பகல் நடைபெற்றது.

இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பாக பிரசித்தி பெற்ற வளவாளர்களைக் கொண்டு, இந்த பயிற்சி வகுப்புகள் நடைபெறவுள்ளன என்று சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் மன்னார் மாவட்ட பணிப்பாளர் யாட்சன் பிகிராடோ தெரிவித்தார்.

(ஜ-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# கோவில் உற்சவங்களில் சுகாதாரத்தைப் பேணவும்

## சுகாதாரப் பகுதியினர் அறிவிப்பு

சாவகச்சேரி,மார்ச் 28

**யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனாத் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில், கோவில்களில் நடத்தப்படும் பொங்கல் மற்றும் உற்சவங்களை குறைந்தளவு அடியார்களுடன் சுகாதார விதிமுறைகளுக்கு ஏற்ப நடத்துமாறு சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.**

பங்குனித் திங்கள், பொங்கல் உற்சவம் மற்றும் பங்குனி உத்தரப் பொங்கல் போன்றவற்றுக்கு கோவில்களின் நிர்வாகத்தினர் அனுமதி கோரியுள்ளனர்.

கொரோனாத் தொற்று அதிகரித்து வரும் நிலையில் மக்களின், பாதுகாப்பு அவசியம் எனக் கருதுவதால் வழங்கப்படும் அனுமதிக்கு ஏற்ப சுகாதார விதிமுறைகளை அனுசரித்து உற்சவங்களை நடாத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

சுகாதார நடைமுறைகளை மீறுவோர்மீது தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர். (ஐ-9)

## உணவுப் பொதிகள் கையளிப்பு



ஊர்காவற்றுறை, மார்ச் 28

கொரோனாத் தொற்றுக் காரணமாக ஊர்காவற்துறை மெலிஞ்சிமுனை பகுதியில் தனிமைப்படுத்தப்பட்ட 10 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

தமிழ் அரசுக் கட்சியின் ஊர்காவற்துறை மூலக்கிளையின் செயலாளர் மடுத்தீன் பெனடிக்ற் விடுத்த வேண்டுகோளை யடுத்து, வேலணை பிரதேச சபை உறுப்பினர் கருணாகரன் நாவலனின் நிதியுதவியில் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன்,பிரதேச சபை உறுப்பினர் நாவலன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஐ-319)

## குளத்தைச் சீரமைக்குமாறு விவசாயிகள் கோரிக்கை

சாவகச்சேரி,மார்ச் 28

நீண்டகாலமாக தூர்வாரிக் காணப்படும் இடைக்குறிச்சி மாவில்வெளி பெரிய குளத்தை சீரமைத்து வழங்குமாறு அப்பகுதி விவசாயிகளும், கால்நடைகள் வளர்ப்போரும் விவசாயத் திணைக்களத்தினரைக் கோரியுள்ளனர்.

முன்னைய காலத்தில் குளத்தில் சேகரிக்கப்படும் மழை நீர் அயலில் உள்ள தோட்டங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளவும், மேய்ச்சலுக்கு விடப்படும் கால்நடைகள் தண்ணீர் அருந்தவும் பயன்படுத்தப்பட்டு வந்தன. குறித்த குளம் நீண்டகாலமாக சீரமைக்கப்படாமல் உள்ளதால் குளம் தூர்வாரிக் காணப்படுகிறது. குளத்தை ஆழப்படுத்தினால் அயலில் உள்ள நிலங்களை பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்த முடியும். எனவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் குளத்தை ஆழமாக்கி மக்களின் தேவைகளுக்கு பயன்படுத்த உதவுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## விழிப்புணர்வு கலந்துரையாடல்

சாவகச்சேரி, மார்ச் 28

அதிகரித்து வரும் கொரோனாத் தொற்றை அடுத்து எதிர்வரும் நாள்களில் வரும் பண்டிகை கால சிறப்புச் செயற்பாடுகள் தொடர்பாக பங்குதாரர்களுடனான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-9)



## மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

முல்லைத்தீவு, மார்ச் 28

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில், கைதடி புலம்பெயர் அமைப்புக்களின் உதவியில், முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு உடையார்கட்டுக் கிராமத்திலுள்ள மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் நேற்று வழங்கப்பட்டன.

புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் கே.விஜயகுமார் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் யோகேஸ்வரன் மற்றும் கைதடி புலம்பெயர் அமைப்பைச் சேர்ந்தவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ற-19)



## கருமாரி அம்மன் தேர்த் திருவிழா

வவுனியா, மார்ச் 28

வவுனியா, குட்செட் வீதி ஸ்ரீ கருமாரி அம்மன் ஆலயத்தில் தேர்த் திருவிழா நேற்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

ஆலயத்தின் பிரதம குரு தலைமையில் விசேட பூசை வழிபாடுகள் மற்றும் வசந்த மண்டபப் பூசை என்பவை இடம்பெற்றன.

கருமாரி அம்மன் வீதி உலா வரும்போது அடியார்கள் தமது நேர்த்திக்கடன்களைத் தீர்க்க கற்பூரச்சட்டி ஏந்தியும், அங்கப் பிரதட்சணம் செய்தும் விசேட பூசை வழிபாடுகளில் கலந்து கொண்டும் கருமாரி அம்மனின் அருட்கடாட்சத்தைப் பெற்றுக் கொண்டனர். (ற-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய நாள்


**மேடம்:** உறவினருக்காக அலைந்து திரிந்து உதவ வேண்டியிருக்கும். செலவினங்கள் வந்தாலும் சமாளிக்கும்படிதான் இருக்கும். உங்களது திட்டங்களை நிறைவேற்றிக் கொள்வது நல்லது.


**இடபம்:** உழைப்புக்கேற்ற பலன் கிடைத்து மகிழ்வீர்கள். திட்டமிட்டு செயல்படுவது நல்லது. மகிழ்ச்சியாகப் பொழுது கழியும் . எதிர்பாலின நண்பர்களை சந்தித்து மகிழ்வீர்கள்.


**மிதுனம்:** நீண்ட கால பிரச்னைகளுக்கு நல்ல தீர்வு வரும். பிறரால் செய்ய முடியாதவற்றை செய்து பாராட்டுப் பெறுவீர்கள். பிள்ளைகளின் வாழ்வில் எதிர்பார்த்த முன்னேற்றம் தென்படும்.


**கடகம்:** மகிழ்ச்சியான செய்தி வந்து உங்களை பரவசப்படுத்தும். அக்கம் பக்கத்து வீட்டாருடன் அளவாகப் பழகுவது நல்லது. நண்பர்களோடு ஏற்பட்ட பகை தீரும். வீண் பயம் கூடும்.


**சிம்மம்:** வேற்று மதத்தவர் உதவுவர். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும் வேலையாட்கள் மதிப்பார்கள். பெரிய பொறுப்புகள் தேடி வரும் நன்மை அதிகரிக்கும். சம்பளம் உயர வாய்ப்பு உள்ளது.


**கன்னி:** மனைவியால் லாபமும் நன்மையும் உண்டாகும். நல்ல பெயரைக் காப்பாற்ற பொறுப்புடன் செயற்படுவீர்கள். செய்யும் பணியில் உயர்வான நிலை ஏற்படும்.


**துலாம்:** கௌரவமான பதவிகள் கிடைக்கும். பணிச்சுமை கூடும். வெளியூர், வெளிநாடுகளுக்கு செல்லும் விருப்பம் நிறைவேறும். மேலதிகாரியின் பாராட்டு மகிழ்ச்சி அளிப்பதாக அமையும்.


**விருச்சிகம் :** நல்ல வேலை வாய்ப்புக் கிடைக்கும். பெயர், புகழ் தேடிவரும். விரும்பிய இடமாற்றம் கிடைக்கப்பெற்று மகிழ்வீர்கள். உங்கள் பேச்சுக்கு மதிப்பும், மரியாதையும் உயரும்படி நடப்பீர்கள்.


**தனுசு:** பயணங்களை மேற்கொள்வீர்கள். பண வரவுக்கு பஞ்சம் இல்லை. முயற்சிகளில் வெற்றி கிட்டும். உடல்நலம் சுமாராக இருக்கும். உங்களின் நோக்கம் கைகூடும். மகிழ்ச்சி நிலவும்.


**மகரம்:** பெரியோர் ஆலோசனைக்குத் தகுந்த பலன் கிடைக்கும். செலவைச் சமாளிக்க குறுக்கு வழியில் செல்ல வேண்டாம். சிறப்பாக எதையும் எதிர்பார்ப்பதற்கில்லை. கவனம் தேவை.


**கும்பம்:** சந்தோஷம் அதிகரிக்கும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வாகன மாற்றம் பற்றி இப்போதைக்கு யோசிக்க வேண்டாம். நம்பகத்தன்மையை ஆராயுங்கள்.


**மீனம்:** பெரிய அதிர்ஷ்டம் எதையும் எதிர்பார்க்க வேண்டாம். அரசு சம்பந்தமான விடயங்களில் அனுகூலமான முடிவு வரும். நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். செல்வாக்கு அதிகரிக்கும்.




## நல்ல குடும்பமே சமூகத்தின் அடித்தளம்

திருமண உறவு நிரந்தரமானது, முறிபடாதது, புனிதமானது. ஏனெனில் ஒரு ஆணையும் பெண்ணையும் இணைப்பது கடவுள். இவர்களைப் பிரிக்க யாருக்கும் அதிகாரம் இல்லை என்கிறது இயேசுவின் போதனை. படைப்பின் தொடக்கத்திலேயே கடவுள் ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார். இதனால் கணவன் தன் தாய் தந்தையை விட்டுவிட்டுத் தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான் இருவரும் ஒரே உடலாய் இருப்பர். இனி அவர்கள் இருவரல்ல. ஒரே உடல்.

எனவே கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்.

இன்பத்திலும், துன்பத்திலும், நோயிலும், உடல் நலத்திலும், வறுமையிலும், செழுமையிலும் பங்கேற்று இறுதிவரை வாழ்வோம் என்று திருமணநாளில் கொடுத்த வாக்குறுதியை காற்றில் பறக்கவிட்டு விவாகரத்துப் பெற்றுநிற்கும் குடும்பங்கள் இன்று ஏராளம். பிரமாணிக்கம், புரிந்துணர்வு, வெளிப்படைத் தன்மை அழமான அன்பு, நம்பிக்கை, இறையச்சமின்மையே மணமுறிவுகளுக்கு காரணமாக அமைகின்றன.

குடும்ப பிணைப்புக்கள் தடம்மாறும்போது **சமுக வளர்ச்சியும், கட்டமைப்பும், பிள்ளைகளின் எதிர்காலமும் ஆட்டம் காணநேரிடும். எனவே ஒவ்வொரு குடும்பமும் ஒரு குட்டித் திருச்சபை என்பதை உணர்ந்து வாழ்ந்ததால் குடும்பங்களை அழுத்தும் சிலுவைகள் அழகிய மலர் மாலைகளாக தோள்களை அலங்கரிக்கும்.**

**எஸ்.யேசுதாஸ்,**
**கொழும்புத்துறை**











ஈழத்தில் அமைந்துள்ள சக்தி பீடங்களில் தொன்மையும், மேன்மையும் கொண்ட திருகோணமலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த பிரமோற்சவத்தின் தேர்த்திருவிழா நேற்று இடம்பெற்றது. (வ-40)

# அதிகாரப் பகிர்வை வலுவாக்க வேண்டும்

### சுதந்திரக்கட்சி யோசனை முன்வைப்பு

கொழும்பு, மார்ச் 28

புதிய அரசமைப்பின் ஊடாக அதிகாரப்பகிர்வு கோட்பாடு பொறிமுறை மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும் எனஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி யோசனை முன்வைத்துள்ளது. இந்தத் தகவலை அந்தக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவரான அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா உறுதிப்படுத்தினார்.

புதிய அரசமைப்புக்கான ஆரம்பக் கட்ட வரைவு நகலை தயாரிப்பதற்காக 9 பேரடங்கிய நிபுணர்கள் குழுவை அரசு அமைத்துள்ளது. அந்தக்குழு பொது மக்களிடமிருந்தும், சிவில் அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகளிடமிருந்தும் யோசனைகளை, முன்மொழிவுகளைக் கோரியிருந்தது.

இதன்படி சுதந்திரக்கட்சி நேற்று முன்தினம் யோசனை சமர்ப்பித்துள்ளது. அதில் அதிகாரப்பகிர்வுக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு அதனை மேலும் வலுப்படுத்தவேண்டும் என்றும் முன்மொழிந்துள்ளது.

"மாகாண சபை முறைமை தொடர்பில், அதிகாரப்பகிர்வு மேலும் பலப்படுத்தப்படவேண்டும் என்ற யோசனையை எமது கட்சி முன்வைத்துள்ளது. செனட் சபைக்கு ஒப்பான வகையில் சபையொன்று உருவாக்



கப்பட வேண்டும் என்ற யோசனையும், தேர்தல் முறைமை மாற்றப்படவேண்டும் என்ற முன்மொழிவும் முன்வைக்கப்பட்டுள்ளன." என்று நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார். (கு-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருந்து உற்பத்தி வலயம் அநுராதபுரத்தில் உருவாகும்!

## அமைச்சரவை ஒப்புதல்

கொழும்பு, மார்ச் 28

மருந்துப் பொருள்கள் உற்பத்தி செய்யும் வலயம் அநுராதபுரத்தில் நிறுவப்படல் வேண்டும் என்று சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராட்சியால் கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது என்று அரசாங்கப் பேச்சாளரும், தகவல் தொழில் நுட்ப அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

இந்த நிலையம் அநுராதபுரத்தில் ஒயானமடு என்ற இடத்தில் அமையவுள்ளது. உள்ளூர் முதலீட்டாளர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கும் முகமாகவும், அவர்கள் உயர்தரத்திலான மருந்து உற்பத்திகளை குறைந்த விலையில் வழங்குவதற்கு ஏதுவாகவும் இது அநுராதபுரத்தில் நிறுவப்படவுள்ளது.

எல்லா மருந்துப் பொருள்களும் சர்வதேச நியமங்களுக்கு அமைய உற்பத்தி செய்யப்படும். இதற்காக 24 நிபுணத்துவம் வாய்ந்த முதலீட்டாளர்கள் ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இந்த முதலீட்டாளர்கள் அண்ணளவாக 28 ஆயிரத்து 200 மில்லியன் ரூபா முதலீடு செய்ய உத்தேசித்துள்ளார்கள்.

இந்தத் திட்டத்துக்கான காணி 35 வருடக் குத்தகையுடனும் ஐந்து வருடங்களில் முழுமையாக இயங்கக் கூடியதாகவும் லீசிங் ஒப்பந்தம் ஊடாக ஒழுங்கு செய்யப்படும்.

இந்தச் செயற்றிட்டத்தை மருந்துப் பொருள்கள் உற்பத்தி இராஜாங்க அமைச்சு ஊடாக நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ந-இ)

# சுதந்திரக்கட்சி கைவிட்டாலும் மொட்டு நிச்சயம் மலருமாம்!

கொழும்பு, மார்ச் 28

இடம்பெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் சுதந்திரக் கட்சியை ஒன்றிணைத்து கூட்டணியாக போட்டியிடத் தீர்மானித்துள்ளோம். சுதந்திரக் கட்சியினர் தனித்துப் போட்டியிட உள்ளனர் என்று கூறுகின்றார்கள். இவர்கள் தனித்துச் செல்வதால் பொதுஜன பெரமுனவுக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படாது. பலமான கட்சிகள் எமது கூட்டணியில் அங்கம் வகிக்கின்றன.

இவ்வாறு போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

லங்கா பொதுஜன பெரமுன இடம்பெற்ற முடிந்த ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத்தேர்தலிலும் கூட்டணியமைத்து போட்டியிட்டது. அனைத்து தரப்பினரது ஒத்துழைப்பின் ஊடாகவே பொதுஜன பெரமுன மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவைப் பெற்றது.

இடம்பெறவுள்ள மாகாண சபைத் தேர்தலிலும் கூட்டணியமைத்து போட்டியிடத் தீர்மானித்துள்ளோம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மாகாண சபைத் தேர்தலில் தனித்து போட்டியிடவுள்ளது என்று குறிப்பிட்டுள்ளதாக அறிய முடிகிறது. சுதந்திரக் கட்சியினர் தனித்துச் செல்வதால் பொதுஜன பெரமுனவுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. பொதுஜன பெரமுனவில் பலம் வாய்ந்த கட்சிகள் உள்ளன. அக்கட்சிகளுடன் ஒன்றிணைந்து கூட்டணியாகப் போட்டியிடுவோம். சுதந்திரக் கட்சியின் ஒரு சில உறுப்பினர்களுக்கும், பொதுஜன பெரமுனவின் ஒரு சில உறுப்பினர்களுக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் காணப்படுவது இயல்பான தொன்று. ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையின் ஊடாக சுதந்திரக் கட்சியைப் பலவீனப்படுத்த முயற்சிப்பதாக சுதந்திரக்கட்சியின் உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளமை கவனத்திற்குரியது. ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்துக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொறுப்புக் கூற வேண்டும் என்பது நாட்டு மக்கள் அனைவரும் அறிந்த விடயம் - என்றார். (ப)

# ஈஸ்டர் தினத் தாக்குதல் அநுர 'திடுக்' தகவல்கள்

கொழும்பு, மார்ச் 28



**உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் நடை பெறுவதற்கு முன்னரும், நடைபெற்ற பின்னரும் இடம்பெற்ற சில சம்பவங்களை நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் பட்டியலிட்டு உரையாற்றிய அநுரகுமார திஸாநாயக்க, அவை தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு உரிய கவனம் செலுத்தவில்லை எனவும் சுட்டிக்காட்டினார்.**

தன்னால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு உண்மை கண்டறியப்படுமானால் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி யார், பின்புலம் என்னவென்பதைக் கண்டறியலாம் எனவும் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும்போது அவர் தெரிவித்தவை வருமாறு:

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலின் பின்னணியில் வெளிச் சக்தியொன்று உள்ளது, சூழ்ச்சி இருக்கின்றது என ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விடயம் ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அரச புலனாய்வு சேவையின் முன்னாள் பிரதானி, விசேட அதிரடிப்படையின் பொலிஸ் பிரதானி லத்தீப், சி.ஐ.டி. பணிப்பாளர் ஷானி உள்ளிட்டவர்கள் இது தொடர்பில் ஆணைக்குழு முன்னிலையில் குறிப்பிட்டுள்ளனர்.

நாட்டின் பாதுகாப்பு பிரதானி, புலனாய்வு பிரிவின் பிரதானி, சிறப்பு அதிரடிப்படையின் பிரதானி ஆகியோர் வெளிச் சக்தியொன்று உள்ளது. சூழ்ச்சி இருக்கக்கூடும் எனக் குறிப்பிடுவதை சாதாரண விடயமாகக் கருதிவிடமுடியாது. எனவே, சூழ்ச்சி தொடர்பான தகவல்கள் எங்கே? தாக்குதலைத் தடுக்க தவறியவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கலாம். ஆனால், வெளிச் சக்தி எது? சூழ்ச்சித் திட்டம் என்ன? என்பதனைக் கண்டறிந்து, பகிரங்கப்படுத்தும்வரை எமது நாட்டுக்கு அச்சுறுத்தல் தொடரும். ஏனெனில் அந்தச் சூழ்ச்சிக்காரர்கள் மீண்டும் எந்தநேரத்தில் வேண்டுமானாலும் சூழ்ச்சி செய்யமுடியும். எனவே, சூழ்ச்சி என்ன என்பது கண்டறியப் படவேண்டும். இந்த விடயத்தில் மிகவும் குறைந்த அவதானத்தையே ஆணைக்குழு செலுத்தியுள்ளது.

சஹ்ரானுக்கு மிகவும் நெருக்கமான, அவரை வழிநடத்தியவர் என நம்பப்படும் நௌபர் மௌலவி என்பவர் தாக்குதல் நடைபெற்று குறுகிய காலப்பகுதிக்குள் தம்புள்ளையில் வைத்து கைதுசெய்யப்பட்டார். அவர் கைதான பின்னர் முக்கிய தகவல்கள் வெளியாகின. அப்படி இருக்கையில் நௌபர் மௌலவி ஏன் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு சாட்சியம் பெறுவதற்காக அழைக்கப்படவில்லை? தாக்குதல் தொடர்பில் முக்கிய நபராகக் கருதப்படும் அவரிடம் சாட்சியம் பெறாததற்கான காரணத்தை அறிய விரும்புகின்றோம்? இது தொடர்பில் ஆராய்ந்தால் சூழ்ச்சித் திட்டத்தில் சில பகுதிகளை அறிந்துக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் என்பது சஹ்ரானின் முதல் தாக்குதல். 50 நாள்கள் ஆட்சியின்போது வவுணதீவில் இரு பொலிஸ் அதிகாரிகள் கொல்லப்பட்டனர். துப்பாக்கிகள் எடுக்கப்பட்டிருந்தன. இதுதான் சஹ்ரானின் முதலாவது பயங்கரவாத நடவடிக்கையாகும். இச்சம்பவத்துடன் தொடர்புடையவர் என முன்னாள் போராளி ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

தாக்குதல் நடத்தப்பட்ட இடத்தில் 'ஜக்கட்' ஒன்று இருந்துள்ளது. சி.ஐ.டியினர் பொலிஸ் மோப்ப நாயுடன் சென்றனர். அந்த பொலிஸ் நாயும் கைதான முன்னாள் போராளியையே காண்பித்தது. அப்படியானால் சஹ்ரானின் முதலாவது பயங்கரவாதத் தாக்குதல், விசாரணையின்றி திசைதிருப்பப்பட்டுள்ளது. வவுணதீவு சம்பவமானது, புலிகளின் செயலாக இருந்திருக்காது என சாதாரண பிரஜையாக இருக்கும்போது தற்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச குற்ற விசாரணைப் பிரிவின் பிரதி பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்னவிடம் தெரிவித்தார் என பத்திரிகையொன்றில் எழுதப்பட்டுள்ளது. ஜனாதிபதி ஆணைக்குழுவிடமோ அல்லது வேறு எங்குமோ இது தொடர்பில் ரவி செனவிரத்ன எந்தவொரு அறிவிப்பையும் விடுக்கவில்லை. ஆனால் திடீரென பத்திரிகையில் எப்படி அதுவும் கடந்தவாரம் இப்படியொரு தகவல் வெளியாக முடியும்?

அடுத்ததாக தாஜ் சமுத்திரா ஹொட்டல் மீது தாக்குதல் நடத்தப்படவில்லை . தாக்குதல் நடத்துவதற்கு சென்றிருந்த தற்கொலைக் குண்டுதாரி அங்கிருந்து அழைப்பொன்றை எடுத்துள்ளார். அந்த நபர் யாருக்கு அழைப்பை ஏற்படுத்தினார் என்பது புலனாய்வுப் பிரிவினராலோ அல்லது எந்தவொரு விசாரணைப் பிரிவாலோ இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. எனவே, அவர் யாருக்கு அழைப்பை ஏற்படுத்தினார் என்பது கண்டறியப்பட வேண்டும்.

இந்த தற்கொலைக் குண்டுதாரி தெகிவளை பகுதிக்குச் சென்றிருந்தார். குண்டுவெடிப்பு சம்பவம் இடம்பெற்று மூன்று, நான்கு மணிநேரத்துக்குள் இராணுவ புலனாய்வு அதிகாரியொருவர் அவரின் வீட்டுக்குச் சென்று அவரின் மனைவியிடம் விசாரணை நடத்தியுள்ளார். இது தொடர்பிலும் தகவல் கண்டுபிடிக்கப்படவேண்டும்.

தாக்குதல் நடந்தவுடனேயே அதற்கான பொறுப்பை ஐ.எஸ். அமைப்பு ஏற்கவில்லை. இந்தநிலையில் சஹ்ரான் என்ற மற்றுமொரு நபர் (சஹ்ரான் 02). இந்தோனேசியாவிலுள்ள ஐ.எஸ். அமைப்பின் பேச்சாளர் ஒருவருக்கு அழைப்பை ஏற்படுத்தியுள்ளார். அவ்வாறு ஏற்படுத்தி தாக்குதலுக்கு பொறுப்பேற்க வேண்டும் என்று கோரியுள்ளார். அவர் தற்போது தடுப்புக் காவலில் உள்ளார்.

சத்தியம் எடுக்காததால் பொறுப்பேற்கமுடியாது எனக் கூறப்பட்டுள்ளது. அதன்பின்னர் சத்தியம் எடுப்பது தொடர்பான வீடியோ வெளியான பின்னரே ஐ.எஸ். அமைப்பின் அறிவிப்பு வெளியானது. சஹ்ரானின் வெளிநாட்டு அழைப்புப் பற்றியும் தகவல் வேண்டும்.

அடுத்து, தாக்குதல் நடத்தப்படும் விதம், தாக்குதல் நடத்தும் நபர்கள், இடங்கள் தொடர்பான தகவல்களை ஏப்ரல் 4 ஆம் திகதியே புலனாய்வுப் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளது. 20 ஆம் திகதி மற்றும் 21 ஆம் திகதி காலையும் தகவல் வழங்கப்பட்டுள்ளது. 4ஆம் திகதி வழங்கப்பட்ட தகவலும், 21 ஆம் திகதி காலை வழங்கப்பட்ட தகவலும் சரியானவை.

ஆனால் ஏப்ரல் 7 ஆம் திகதி வங்கியிலிருந்து 47 மில்லியன் ரூபா மீளப்பெறப்பட்டமை தொடர்பிலும், ஏப்ரல் 9 ஆம் திகதி மாடறுப்பு செய்து அது பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளமை தொடர்பிலான தகவலும் வெளியாகவில்லை. ஏப்ரல் 16 ஆம் திகதி மோட்டார் சைக்கிளொன்றை வெடிக்க வைத்துள்ளனர். வெடிபொருள்களுடன் காத்தான்குடி சென்றுள்ளனர். வெடிபொருள்கள் சகிதம் பாணந்துறை வந்துள்ளனர். இவை தொடர்பான தகவல்கள் வெளிவரவில்லை. தாக்குதல் தொடர்பான சரியான தகவல்களை வழங்கியிருந்த தரப்புகளால் இவை குறித்த தகவல்கள் ஏன் அறிவிக்கப்படவில்லை? இது தொடர்பிலும் கவனம் செலுத்தப்படவேண்டும்.

இந்தக் காரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டால் தாக்குதலின் பின்புலத்தை அறியலாம். அதனை மையப்படுத்தியதாக விசாரணை அமைய வேண்டும் - என்றார். (த-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரிக்கு அநீதி இழைத்தால் சுதந்திரக்கட்சி அமைதி காக்காது

## அதன் பொதுச் செயலர் தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 28**

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட் டுக்கள் தொடர் பில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதிக்கு இவ்விவகாரத்தில் ஏதேனும் அநீதி இழைக்கப்படுமாயின் அதற்கு எதிராக முன்னெடுக்கப்பட வேண்டிய நட வடிக்கைகள் தொடர்பாகவும் அவதானம் செலுத்தப்பட்டது என்று சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரி வித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர் பில் சு.க. தலைவர், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது. நாடாளுமன்றத்திலும் இது தொடர் பில் கருத்து தெரிவித்திருக்கின்றோம். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஏதேனும் அநீதி இழைக்கப்படுமாயின் அது தொடர் பில் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அவதா னம் செலுத்தியுள்ளோம். எனவே எவரும் இது தொடர்பாக வீண் கலவ ரமடையத் தேவையில்லை. ஜனா திபதியொருவருக்கு எதிராக குற்றவி யல் நடவடிக்கை எடுப்பதற்கு எவருக்கும் அதிகாரம் கிடையாது.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பான சட்ட வரைவு குறித்து அமைச்சரவை யில் தீர்மானம் எடுக்கப்பட்டதன் பின்னர், எதிர்வரும் 30 ஆம் திகதி மீண்டும் கட்சியின் மத்திய செயற் குழுவைக் கூட்டி கலந்தாலோசிப்ப தற்குத் தீர்மானித்துள்ளோம். எவ் வாறிருப்பினும் கட்சியை வலுப்படுத் தும் வகையிலான தீர்மானங்களே எடுக்கப்படும்.



எம்மால் உருவாக்கப்பட்ட தற்போ தைய அரசில் குறைபாடுகள் காணப்படலாம். அவற்றை நிவர்த்தி செய்து முன்னோக்கிப் பயணிக்க வேண்டும். கூட்டணியாகத் தொடர்ந் தும் செயற்படவே எதிர்பார்த்துள் ளோம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட் சிக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகை யிலான எந்தவொரு தீர்மானத்தை யும் எடுப்பதற்கு நாம் எதிர்பார்க்க வில்லை - என்றார். (ப)

# ஆள்களுக்கு ஏற்றாற்போல் மாறுகிறது நாட்டுச் சட்டம்!

## முஜிபுர் ரஹ்மான் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 28

இந்த நாட்டுப் பிரஜைக்கு ஒரு சட்டம் என்றால், இந்திய பிரஜைக்கு ஒரு சட்ட மும் அசாத் சாலிக்கு வேறு சட்டமும் கைக்கொள்ளப் பட முடியாது. அத்துடன் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரியான சாராவை இலங் கைக்கு அழைத்துவர இந்திய அரசிடம் இதுவரை ஏன் எவ்வித கோரிக்கையும் அரசு முன்வைக்கவில்லை என முஜிபுர் ரஹ்மான் கேள்வியெழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஏப்ரல் தாக்குதல் தொடர் பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு வின் அறிக்கையில் தாக்குதல்கள் இடம்பெறுவதற்கு முன்னர் கிடைக்கப் பெற்ற புலனாய்வுத் தகவல்கள், தாக்கு தல்கள் நடத்தப்பட்டவிதம், திட்டமிடப்பட் டமை மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய நபர்கள் குறித்து ஒருபுறம் தெரிவிக்கப் பட்டுள்ளது. இருந்தபோதும் ஆணைக் குழுவின் அறிக்கையின் மூலம் சஹ்ரா னின் பின்புலம், அவருக்கு உதவிகளை செய்தவர்கள் மற்றும் அவரை வழிநடத் தியவர்கள் யாரென்பது போன்ற உண்மை கள் வெளிவரும் என அனைவரும் எதிர் பார்த்திருந்தோம். ஆனால், ஆணைக் குழுவின் அறிக்கையில் அவ்வாறான தகவல்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஆணைக்குழுவின் அறிக்கையில் சுட் டிக்காட்டப்பட்டுள்ள சில விடயங்களை தொடர்புபடுத்துவதன் மூலம் சில தெளி வுகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

ஆணைக்குழுவின் அறிக்கையில் 251 ஆவது பக்கத்தில், சாய்ந்தமருதுவில் குண்டுவெடிப்பு இடம்பெற்றமை தொடர் பில் சாட்சிமளித்துள்ள சஹ்ரானின் மனைவி, குறித்த குண்டு வெடிப்பு நடை பெற்ற சந்தர்ப்பத்தில் சாராவின் குரல் தனக்குத் கேட்டது எனவும், அவர் உயிரு டன்இருந்துள்ளார் என்றும் கூறியுள்ளார். ஆணைக்குழுவின் அறிக்கையிலும் சாராவின் தாயின் டி.என்.ஏ. பரிசோதனை யின் பிரகாரம் சாரா உயிருடன் இருந் துள்ளார் என்று கூறப்பட்டுள்ளது. அவ் வாறெனின், குண்டுவெடிப்பு இடம்பெற்ற சாய்ந்தமருதில் இருந்து சாரா இந்தியா வுக்கு தப்பிச்செல்லும் வரை அவருக்கு உதவிபுரிந்தது யாரென்ற பிரச்சினை எமக்குள்ளது. இது தொடர்பாகவும் விசா ரணை இடம்பெறவேண்டும்.

இந்தத் தாக்குதலை அடிப்படையாகக் கொண்டு மத்ரஸாக்களை தடைசெய்ய வேண்டும். புர்காவை தடைசெய்ய வேண்டும். அரபு மொழியைத் தடைசெய்ய வேண்டும் என்று பொலிஸுக்கு பொறுப் பான அமைச்சர் தெரிவித்து வருகின்றார். இலங்கையில் 20லட்சம் முஸ்லிம்கள் இருக்கின்றனர். அவர்களில் விரல்விட்டு எண்ணக்கூடியவர்களே இந்த தாக்குத லுடன் சம்பந்தப்பட்டிருக்கின்றனர். அந்த விரல் விட்டு எண்ணக்கூடியவர்களுக் காக ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தை யும் அழுத்தத்துக்குள்ளாக்கவேண்டாம். இதன் மூலம் சஹ்ரானின் அடிப்படை வாதத்துக்கு பதிலாக மேலுமொரு அடிப் படைவாதத்துக்கு இடமளிக்கவேண்டாம் - என்றார். (த-இ)

## தகவல் கூறினால் சன்மானம்

கொழும்பு, மார்ச் 28

போதைப்பொருள் கடத்தல், அதைப் பயன்படுத்துபவர்கள் மற்றும் போதைப் பொருளுடன் தொடர் புடைய தகவல்களை வழங்குவோருக்கு சன்மானம் வழங்கப் படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோகண தெரிவித்தார்.

**கொழும்பு குற்ற வியல் பிரிவின் ஊழல் ஒழிப்பு பிரிவு ஊடாக நேற்று பேலி யகொட, பட்டிய சந்தி யில் வைத்து 142 கிராம் ஹெரோய்னு டன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.** முகத்துவாரம் பிரதே சத்தில் 6 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருளு டன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். போதைப்பொருள் கடத்தல் உட்பட அத னுடன் தொடர்புடைய தகவல்களை அறியத் தந்தால் சன்மானம் வழங்கப்படும் என்று பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (த-இ)

ஈஸ்டர் தாக்குதல்

# முஸ்லிம் சமூகத்துக்கும் நீதி கிடைக்க வேண்டும்

## வேலுகுமார் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 28

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் அனைத்து விடயங்களும் கண்டறியப்பட்டு நீதி நிவாரணத்துக்காக ஏங்கித் தவிக் கும் கத்தோலிக்க சமூகத்துக்கு நீதி பெற்றுக்கொடுக் கப்பட வேண்டும். அதேபோல இந்தத் தாக்குதலை அடிப்படையாகக்கொண்டு அரசியல், பொருளாதாரம் மற்றும் இதர வழிகளில் வேட்டையாடப்பட்ட, பலிக் கடாக்களாக்கப்பட்ட முஸ்லிம் சமூகத்துக்கும் நீதி கிடைக்கவேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்ன ணியின் பிரதித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் கண்டி அலுவல கத்தில் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் சிலருடன் நேற்று நடைபெற்ற 'சமூக நீதி' தொடர்பான கலந்து ரையாடலின்போது கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஈஸ்டர் தாக்குதலின் பின்புலம் என்ன?, பிரதான சூத் திரதாரிகள் யார்?, திட்டமிட்டது யார்? என்பவை உட்பட தாக்குதல் தொடர்பில் அனைத்து விடயங்களும் கண்டறியப்பட வேண்டும் என்பதுதான் பேராயர் மல் கம் ரஞ்சித் ஆண்டகை உட்பட அனைவரினதும் கோரிக்கையாக இருந்தது. இந்நிலையில் தாக்கு தலை தடுத்து நிறுத்துவதற்கு தவறியவர்கள் தொடர் பில் ஜனாதிபதி ஆணைக்குழு கூடுதல் கவனம் செலுத்தியிருந்தாலும், அடி முடி தொடர்பில் உரிய வகையில் ஆராயவில்லை என்பதுதான் பொதுக் கருத்தாக இருக்கின்றது.

எனவே, ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் அனைத்து வழிகளிலும் உண்மைகள் கண்டறியப்பட வேண்டும். சூத்திரதாரிகள் யார் என்பது தொடர்பிலும், தாக்குத லின் உண்மையான நோக்கமும் உரிய வகையில் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும். இதன் பின்னணியில் செயற்பட்டுள்ள வெளிச் சக்திகள் உள்ளிட்ட விடயங்களும் வெளிச்சத்துக்கு வரவேண்டும். அவ்வாறு செய்வதன் ஊடாகவே பாதிக்கப்பட்ட கத்தோலிக்க சமூகத்துக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கக் கூடியதாக இருக்கும். ஆனால் நாட்டில் ஏதாவது நடைபெற்றால் அதனைத் தனக்கு சாதகமான வகையில் அரசியல் மயப்படுத்தி, அரசியல் பிழைப்பு நடத்தும் தற்போதைய அரசு, நீதி நிவாரணத்தை வழங்குமா என்பது சந்தேகமே. எது எப்படி இருந்தாலும் பேராயர் கூறியதுபோல சர்வதே சம் சென்றாவது அம்மக்களுக்கு நீதி பெற்றுக் கொடுக்கப்படும்.

அதேபோல ஈஸ்ரர் தாக்குதலை நடத்தியவர்கள் முஸ் லிம் இனத்தை சேர்ந்தவர்கள் என்பதற்காக, ஒட்டு மொத்த முஸ்லிம் சமூகம்மீதும் பேரினவாதிகள் பயங்கரவாத முத்திரை குத்தினர். இஸ்லாம் மதத்தை யும் அவதூறு படுத்தினர். அப்பாவி முஸ்லிம் மக்கள் பலிக்கடாக்களாக்கப்பட்டனர். அவர்கள் வேட்டையா டப்பட்டனர்.

எனவே, ஈஸ்டர் தாக்குதலையடுத்து பல வழிகளிலும் பாதிக்கப்பட்ட முஸ்லிம் சமூகத்துக்கும் நீதி வேண்டும். அவர்கள் தொடர்பான களங்கம் நீக்கப்படவேண்டும். தமக்கான கலை, கலாசார, பண்பாட்டு, மத உரிமை களை பின்பற்றி அவர்கள் சுதந்திரமாக வாழும் நிலை உருவாக்கப்பட வேண்டும் - என்றார். (ஒ.இ)



வெளிநாட்டிலிருந்து வந்து வசாவிளான் தனி மைப்படுத்தல் மையத்தில் தனிமைப்படுத்தப்பட் டிருந்த இலங்கையர்கள் 160 பேர் தனிமைப்ப டுத்தலை நிறைவு செய்து நேற்று தத்தமது வீடுக ளுக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். (ற-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவப்பிரகாச மகா வித்தியாலய கட்டட அமைப்பு பணி கிடப்பில்

## துரிதப்படுத்த வேண்டும் என்று பாடசாலைச் சமூகம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 28

**சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுவரும் இரு மாடிக் கட்டடத் தொகுதியின் நிர்மாணப் பணிகள் நீண்டகாலமாக முடிவடையாமலுள்ளன. அதனால் மாணவர்கள் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**



"அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" என்னும் வேலைத் திட்டத்தின் கீழ் பல மில்லியன் ரூபா நிதிச் செலவில் இந்தக் கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டு வருகின்றது. இதற்கான விலைமனுக் கோரல் வடக்கு மாகாண கட்டடத் திணைக்களத்தால் 2018ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதமளவில் கோரப்பட்டு, 2019ஆம் ஆண்டு அதன் அமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்தக் கட்டட நிர்மாணப் பணிகள் நீண்டகாலமாக இழுபறிபட்டுச் செல்கின்றது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கட்டடத்தொகுதி அமைத்து முடிக்கப்படாததால் மாணவர்கள் வகுப்பறை நெருக்கடிகளையும் எதிர்கொள்கின்றனர். அத்துடன் இந்தக் கட்டடத் தொகுதி நுழைவாயிலுக்கு அருகில் உள்ளதால் மாணவர்களின் போக்குவரத்தின்போது உயிர் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் பாடசாலை அதிபர் மாகாணக் கல்வி அமைச்சுக்கு அறிவித்துள்ளபோதும், எந்தவித முன்னேற்றமும் இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. மாணவர்களின் நலனின் அக்கறை செலுத்தி இந்தக் கட்டட நிர்மாணப் பணிகளைத் துரிதப்படுத்தி மாணவர்களது பாவனைக்குக் கையளிக்க வேண்டும் என்று பாடசாலைச் சமூகத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-319)

---

# மூடப்பட்ட வர்த்தக நிலைய பணியாளர்களுக்கு பி.சி.ஆர்.

*முதல் கட்டமாக இன்று முன்னெடுப்பு*

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ்ப்பாண நகரின் முடக்கப்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள், பணியாளர்கள் மற்றும் வகுப்புத் தொழிலாளர்கள் அனைவருக்கும் கொரோனா பரிசோதனை இன்று ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்படவுள்ளது.

காலை 7 மணிக்கு யாழ்ப்பாணம் நவீன சந்தை கட்டடத்தொகுதியின் மூன்று இடங்களில் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினரால் குறித்த பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

எனவே அனைவரும் குறித்த நேரத்துக்கு தங்கள் அடையாள அட்டை அல்லது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் வருகைதருமாறு யாழ்.வணிகர் கழகம் கேட்டுக்கொண்டுள்ளது.

மேலும் யாழ். நகர சந்தைப்பகுயில் உள்ள வியாபாரிகள் இதுவரை பரிசோதனை மேற்கொள்ளாமல் இருப்பின் அவர்களும் இப் பரிசோதனையில் தவறாது கலந்துகொண்டு தங்களுக்கான பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ)

---

# ஐ.நா. சபை கண்காணிப்பு இலங்கையில் தொடரட்டும்

*பிரிட்டன் வலியுறுத்து*

கொழும்பு, மார்ச் 28

இலங்கையில் கடந்த காலங்களில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் மீளவும் நடைபெறக் கூடிய அபாயம் உள்ளது என ஐ.நா. மனித உரிமைகள் சபை ஆணையாளர் எச்சரித்திருந்த நிலையில், இலங்கையில் ஐ.நா. தனது கண்காணிப்பைத் தொடரவேண்டும். அதற்கு ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் உதவிகரமானதாக இருக்கும். இவ்வாறு பிரிட்டனின் வெளிவிவகார அலுவலக இராஜாங்க அமைச்சர் தாரிக் அஹமட் தெரிவித்தார். 'இலங்கை மீதான தீர்மானத்தை வரவேற்கிறேன். இது மோதலுக்கு பிந்தைய நீதி மற்றும் பொறுப்புக் கூறலுக்கான சர்வதேச சமூகத்தின் தொடர்ச்சியான உறுதிப்பாட்டைக் குறிக்கிறது' என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ஒ.இ)

---

# தொற்றாளர்கள் எண்ணிக்கை யாழ்ப்பாணம் மூன்றாம் இடம்

கொழும்பு, மார்ச் 28

கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கையில் மேல் மாகாணத்துக்கு அடுத்ததாக யாழ்ப்பாண மாவட்டமே உள்ளது.

நேற்றுமுன்தினம் 26ஆம் திகதி நாடு முழுவதிலும் 272 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். இவர்களில் மேல் மாகாணத்துக்கு உட்பட்ட கொழும்பு மாவட்டத்தில் 55பேரும், கம்பஹா மாவட்டத்தில் 40பேரும் உள்ளடங்குகின்றனர். இதற்கு அடுத்ததாக யாழ்ப்பாண மாவட்டத்தில் 28பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ஒ.இ)

---

# கல்வி மறுசீரமைப்புக்காக டிஜிட்டல் தளம் உருவாக்கம்

*ஜனாதிபதி ஆரம்பித்துவைத்தார்*

கொழும்பு, மார்ச் 28

முன்மொழியப்பட்ட கல்வி மறுசீரமைப்பு பற்றி பொதுமக்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்வதற்கான 'டிஜிடல் தளம்' ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. egenuma.moe.gov.lk என்ற இந்த இணையத்தளம் மூலமாக அடுத்து வரும் மூன்று மாதங்கள் மூலம் மக்களுக்கு புதிய கல்வி மறுசீரமைப்புக்கான ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களை 'டிஜிட்டல் தளத்துக்கு' அனுப்ப முடியும்.

முன்பள்ளிக் கல்வி, ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்வி , தொழில் மற்றும் மூன்றாம் நிலைக்கல்வி, உயர் மற்றும் தொழிற்கல்வி என்ற பிரதான 04 உப துறைகளின் கீழ் மறுசீரமைப்பு ஆலோசனைகள் முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் உண்டு. பேண்தகு கல்விக் கொள்கை ஒன்றுக்காக மிகவும் பரந்த அளவில் பொதுமக்களின் கருத்துக்கள், ஆலோசனைகளை பெற்றுக்கொள்வதற்கு டிஜிட்டல் தளம் திறக்கப்பட்டுள்ளது. அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வின்போது இந்த தளத்தை ஜனாதிபதி ஆரம்பித்து வைத்தார்.

அதில் அவர் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:

ஒரு நாட்டின் சிந்தனை மற்றும் தொலைநோக்கு உருவாகுவது அந்த நாட்டின் கல்விக் கொள்கையின் மூலமே. காலங்கடந்த கல்விக் கொள்கையால் உருவாவது நவீன உலகுடன் முன்னோக்கிச் செல்வதற்கு முடியாத சமூகம் ஒன்றாகும். பரந்தளவிலான மக்கள் பிரதிநிதித்துவத்துடன் உருவாகும் ஒரு கொள்கையை அரசு மாறும் போது மாற்ற முடியாது.

நாட்டின் எதிர்கால சமூகத்தை அறிவு, திறன்களுடன் கூடிய சமூகமாக உலகுக்குக் கொண்டு செல்ல புதிய கல்வி மறுசீரமைப்பின் மூலம்தான் முடியும். இலங்கையின் அனைத்துப் பிள்ளைகளுக்கும் முன்பள்ளி முதல் முழுமையான கல்வியை வழங்குவது எமது எதிர்பார்ப்பு- என்றார். (த-இ)

---

# ஒரு மில்லியன் மக்களுக்கு பிறப்புச்சான்றிதழ் இல்லை

இலங்கையில் தற்போது ஒரு மில்லியன் வரையான மக்களிடம் பிறப்புச் சான்றிதழ் இல்லை. இதனால் அவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றார்கள். இவ்வாறு அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார். கம்புறுபிட்டி பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'நாட்டில் பலர் தேசிய அடையாள அட்டை இல்லாமல் இருக்கின்றார்கள். அவர்கள் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கின்றார்கள். தேர்தல் காலத்தில் மாத்திரம் அரசியல்வாதிகள் தேசிய அடையாள அட்டை தொடர்பில் அக்கறை கொள்வார்கள் என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ஒ.இ)

---

# நாகதம்பிரான் பொங்கலுக்கு வெளிமாவட்டத்தவருக்கு தடை!

கிளிநொச்சி, மார்ச் 28

கிளிநொச்சிபுளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழா இன்று நடைபெறவுள்ளது. இந்தப் பொங்கல் விழாவுக்கு வெளிமாவட்டத்திலிருந்து வருகை தரும் பக்தர்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று பிரதேச செயலாளர் தங்கவேலாயுதம் பிருந்தாகரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் உள்ளிட்ட பல பகுதிகளில் கொரோனாப் பரவல் அதிகரித்துள்ள நிலையில், கண்டாவளைப் பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

யாழ்ப்பாணம் உள்ளிட்ட பல பகுதிகளிலும் கொரோனாத் தொற்று அதிகரித்துக் காணப்படுகின்றது. இந்நிலையில், இந்த ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழாவுக்கான ஏற்பாடுகள் நிறைவடைந்துள்ளன.

மாவட்டச் செயலரின் பணிப்புக்கு அமைவாக இன்று இந்தப் பொங்கல் நிகழ்வுகள் இடம்பெறவுள்ள நிலையில், தீர்மானங்கள் சிலவற்றை எடுக்கவேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. அதற்கமைவாக கோயில் நிர்வாகத்தினர் மற்றும் பிரதேச செயலகம் ஆகியவை கலந்துரையாடி சில தீர்மானங்களை நேற்று எடுத்துள்ளன. இதன்படி, இந்த பொங்கல் நிகழ்வுக்கு வெளிமாவட்டங்களிலிருந்து வரும் எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் 100 பேருக்குக் குறைவானவர்களே பொங்கல் நிகழ்வில் கலந்துகொள்ள முடியும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார். (ற-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாடகைக்கு

யாழ் நகர் அருகாமையில் சகல வசதிகளோடு அறைகள் (றூம்கள்) ஆண்களுக்கு மட்டும் வாட கைக்குண்டு தொடர்புகளுக்கு

077 728 3811 077 071 3048

## Motor Bike உடன் விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் உள்ள NP BGJ இலக்க DT-100 Motor Bike உடன் விற்பனைக்குண்டு

தொடர்பு: 077 415 9507

## வீடு வாடகைக்கு

கச்சேரிக்கு அண்மையில் அரச, தனியார் நிறுவனங்கள்- அரச உத்தியோகத்தர்களுக்கு வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 189 3589, 077 987 9865

## திருமண சேவை

விசேடமாக கிறிஸ்தவ ஆவிக்குரிய சபைகளுக்காக உருவாக்கப்பட்ட திருமண இணையத்தளம்
www.kirubaimatrimony.com
பதிவுகள் இலவசம்.

தொடர்பு: 011 773 2288, 076 197 2285

## தேவை

சுன்னாகத்தில் புதிதாக இயங்கும் அச்சகத்திற்கு Computer Typesetting, Book Binding தெரிந்தவர்கள் தேவை.

தொடர்பு:- 077 707 2893

## விற்பனைக்கு

உயர் ரக Arc, Mig, Tig வெல்டிங் மற்றும் Plasma Cutter இயந்திரங்கள். Arc, Tig, Mig வெல்டிங் கூர்கள் மற்றும் வயர்கள். விற்பனையின் பின்னரான உயர்ந்த சேவை. உத்தரவாதம் மற்றும் குறைந்த விலை.

076 358 2389

## விற்பனைக்கு

மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, யம்பு, பசன்புறுட், ரகன் புறுட், தென்னங்கன்று, செவிழை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்னசா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்த்தான், ஏலக்கா, சிதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலை வேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், றெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஜந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: நியூ லங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு மேற்கு
பிள்ளையார் கோயில் வீதி,
கணேசா பாடசாலை அருகில்
077 612 9343

நியூ லங்கா பாம்
கிளை:
K.K.S. வீதி, இணுவில்

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்ப, 29 வயது இடபராசி, செவ்வாய் இல்லை, அரச உத்தி யோகம் பார்க்கும் மணமகளுக்கு பொருத்தமான மணமகனை பெற்றோர் எதிர்பார்க கின்றனர். திருவாதிரை, அத்தம், சுவாதி, உத்தராடம், திருவோணம், சத யம், பொருந்தாது. தொடர்பு பெற்றோர் மட்டும்.

076 143 4393

## மணமகள் தேவை

யாழ்ப்பாணம் கௌரவ கத்தோலிக்க குடும் பத்தைச் சேர்ந்த 39 வயதுடைய திருவோணம் நட்சத்திரம் மகர இராசியில் பிறந்த பட்டதாரியும் விவாகரத்துப் பெற்ற வெளிநாட்டில் நிரந்தர விசாவில் வாழும் மகனுக்கு பெற்றோர் வரன் பார்க்கின்றனர். ஜாதகமும் உண்டு. இந்து சமயத்தவரும் விரும்பினால் குறிப்புடனும் படத் துடனும் விண்ணப்பிக்கலாம்.

**விளம்பர இல : JF.1025**
**C/O உதயன் பப்பிளிக்கேசன்,**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

## SALE

வார இறுதி மலிவு விற்பனை சில்லறையாகவோ மொத்தமாகவோ பெற்றுக்கொள்ளலாம் கிறவுன் யெலி டிப்பிப்டிப் பிஸ்கட் நியோய் ஊதுபத்தி வளர்ப்பு மீன் உணவு சகல சனி, ஞாயிறு தினங் களில் காலை 10.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை வியாபாரிகளுக்கு விஷேட கழிவு உண்டு.

மேலதிக விபரங்களுக்கு www.royjoygroup.com வலையமைப்பைப் பயன்படுத்தவும் றோய் யோய் மார்க்கட்டிங் அன் டிஸ்ரிபியுட்டஸ்.

17 இராச வீதி
அச்சுவேலி
077 720 4883

## வேலை வாய்ப்பு

சாவகச்சேரி நுணாவில் பகுதியில் இயங்கிவரும் நிறுவனத்திற்கு


* சாரதி
* விற்பனைப் பிரதிநிதி
* விற்பனை மேம்படுத்தல் உத்தியோகத்தர் (பெண்கள்)

மேற்படி பதவிகளுக்கான விண்ணப் பத்தினை கீழ்வரும் ஒன்றின் ஊடாக அனுப்பி வைக்கவும்.

வைபர் / வட்ஸ் அப். இல:077 949 5004
ஈ.மெயில்:ads2019sales@gmail.com

## நெஞ்சை விட்டகலா நினைவலைகள்

12 ஆம் ஆண்டு



மலர்வு 16 . 08 . 1976
உதிர்வு 28 . 03 . 2009

**கனகரத்தினம் சுரேஸ்குமார் (சுரேஸ்)**
(பணியாளர் - ஆதாரவைத்தியசாலை புதுக்குடியிருப்பு)

அன்பிற்கு இலக்கணமாய் அவனியில்
வந்துதித்து பண்புடமை காத்து பக்குவமாய்
வாழ்ந்த வேளை காலனவன் கண்பட்டு
எனை இடை நடுவில் தவிக்கவிட்டு
பறந்து சென்றது ஏனோ...

பண்புள்ளோர் பலகாலம் வாழக் கூடாது
என்று பறித்து பன்னிரண்டாண்டுகள்
ஆனபோதும் ஆறிடுமா என்னிதயம்...

மனைவி - சு.பரிமளம் (மதி)
தாவளை இயற்றாலை.

12 ஆம் ஆண்டு



மலர்வு 17 . 05 . 1984
உதிர்வு 13 . 03 . 2009

**கந்தையா ஜெயக்குமார் (ஜெயம்)**

அன்பின் உறைவிடமாய் பாசத்தின்
திருவுருவாய் அவனியில் வந்துதித்த
தம்பியே.... பார்போற்றும் நல்லாசானாய்
இப்பூமியில் வாழும் போது காலனவன்
கண்பட்டு காற்றாய் பறந்து சென்றாயே....

மாறாத நினைவுகளோடு எப்போதும்
மனதை விட்டகலாய்.....

குடும்பத்தினர்.

என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திகின்றோம்.

## மரண அறிவித்தல்



தோற்றம் 30 . 12 . 1949
மறைவு 26 . 03 . 2021

### கார்த்திகேசு சுப்பிரமணியம்

சாத்திரந்தை அல்வாய் வடக்கு, திக்கத்தை பிறப்பிடமாகவும் இந்திரம்மன் கோவிலடி, துன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கார்த்திகேசு சுப்பிரமணியம் அவர்கள் நேற்றுமுன்தினம் (26.03.2021) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி. கார்த்திகேசு - வள்ளிப்பிள்ளையின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு.திருமதி. கணபதிப்பிள்ளை - செல்லம் மாவின் அன்பு மருமகனும் சகுந்தலா அவர்களின் பாசமிகு கணவரும் திரு வேணி (ஆசிரியர், யா/ மத்திய கல்லூரி), கலைவாணி (லண்டன்), இந்திரதாஸ் (ஆசிரியர் யா/ஊரெழு கணேசா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு தந்தை யாரும் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புச் சகோதரனும் தவனேசன் (ஆசிரியர் யா/ஹாட்லி கல்லூரி), குருபரன் (லண்டன்), மோகனபிரியா (ஆசிரியர் யா/ அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிநயா, ஆரணி, அஸ்மிகா, கம்சனா, தக்சயன், தக்சனா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 28. 03. 2021 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக பூத வுடல் கியான்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இந்திரஅம்மன் கோவிலடி, துன்னாலை,
கரவெட்டி.
தொடர்பு :- 077 34 49 451

தகவல்:
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 12 . 10 . 1970
இறப்பு 08 . 04 . 2020

### அமரர் தர்மஜெகநாதன் சிவகுமாரி

குடும்பத்தின் ஜீவனாகி
குலவிளக்காய் நீரிருந்தீர்
கொடுங்காலம் வந்ததுவோ
கொண்டும்மைச் சென்றதுவோ
ஆண்டொன்று போனாலும்
ஆறாது உம் பிரிவு
மீண்டுந்தான் காண்பதற்கு
மீளாதோ உம் வாழ்வு
கண்ணீரால் தான் நனைந்து
கரைக்கின்றோம் எம் வாழ்வை!
மண் மீது உமை எண்ணும்
மனதோடு வாழ்த்துகின்றோம்.

அன்னாரின் நினைவு அஞ்சலி இன்று (28.03.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து நடை பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொள்ளு மாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**புளியடி வைரவர் கோயிலடி,**
**உடுவில் தெற்கு,**
**சுன்னாகம்.**
**021 225 5889, 077 644 1604**


**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த சித்திரைப் புத்தாண்டிற்கு
பரிசுகள்
எங்களிடமிருந்துதான்
Signature
ரூ.3,500 க்கு மேற்பட்ட
கொள்வனவுகளுக்கு
Gift Vouchers
வெல்லும் வாய்ப்பு

மாத்தறை, அநுராதபுர, சிலாபம்,
Duplication Road, யாழ்ப்பாணம்,
கல்முனை, Marino Mall
பாணந்துரை

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 18 . 07 . 1941

இறப்பு 21 . 03 . 2019

## அமரர் சிவலிங்கம் வேதாரணியம்

தலைமகனாய் நீ பிறந்தாய்
தகுதியுடன் எமை வளர்த்தாய்
தரணியெங்கும் நாம் சிறக்க
தகுந்த வழி அமைத்துச் சென்றாய்...

சிறகடித்து நாம் பறக்க
சிரமமதை நீ பொறுத்தாய்
சிறந்த வாழ்வு எமக்கமைய
சிரஞ்சீவியாய் நீ இருந்தாய்...

கடமையென நினைக்கவில்லை
கடனே என பொறுக்கவில்லை
கண்ணியமாய் நாமும் வாழ
கடவுளாய் நீ பிறப்பெடுத்தாய்...

படிப்பு ஒன்றே வாழ்வு தரும்
பண்பு கூட படிப்பால் தான் வரும்
இதையெமக்கு உணர்த்தி நின்றாய்
இதனாலேயே எமக்கு படிப்பு தந்தாய்...

பிறப்பவர் இறப்பது மரபு
இறந்த பின் வாழ்வது அரிது
இறந்தும் வாழும் இறையே - எம்
குடும்ப கௌரவ நிறைவே...

இல.55, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் நினைவுகளுடன்
பிள்ளைகள்

# மரண அறிவித்தல்

## திருமதி வேலுப்பிள்ளை இராசம்மா

(இளைப்பாறிய ஆசிரியை,
கண்டி/மடுல்கலை மகா வித்தியாலயம், மற்றும் முல்லைத்தீவு இந்து மகா வித்தியாலயம்)



மண்ணில் 21.06.1928

விண்ணில் 21.03.2021

துன்னாலை.கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் , இலண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட எங்கள் அனைவரதும் அன்பிற்கும். பாசத்திற்கும் உரிய திருமதி வேலுப்பிள்ளை இராசம்மா அவர்கள் 21.03.2021 ஞாயிற்றுக் கிழமை அன்று லண்டனில் இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவி வேலுப்பிள்ளை அவர்களின் பாசமிகு மனைவியும். காலஞ் சென்ற சிதம்பரப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும். காலஞ்சென்ற அம்பலவி - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பான மருமகளும். காலஞ்சென்றவர்களான இலட்சுமிப்பிள்ளை. கணபதிப்பிள்ளை. குஞ்சிப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரியும், இராஜேஸ்வரி (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற நித்தியானந்தன். பரமானந்தன் (கனடா). சிவா னந்தன்(கனடா),விவேகானந்தன்(கனடா),விபுலானந்தன்(லண்டன்).யோகேஸ்வரி (லண்டன்). முருகானந்தன் (கனடா). ரூபேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும். கிருஸ்ண பிள்ளை (ஆஸ்திரேலியா).ஞானபாக்கியம் (லண்டன்).சாந்தரூபதி(கனடா). ஜெயவதனா (கனடா). பவுளி (லண்டன்).குமாரதேவன் (லண்டன்).செல்வதி (கனடா) ஆகியோரின் அன்பான மாமியா ரும். கிருந்திகரன் (ஆஸ்திரேலியா). நிரஞ்சனா (லண்டன்).கனடாவில் இருக்கும் பிரியதர்சினி. பிரதாஸ்.விஜிந்தினி. விவேன்.விவேக்(கலிபோனியா). ஜெவேதன்(கனடா).லண்டனில் வசிக்கும் விஜிதன். விஜேதரன்,விஜய்னிகா,கனடாவில் வசிக்கும் ஜனானி. ஆரணி ஆகியோரின் பேரன் பிற்குரிய பேர்த்தியும். வைகரன்(ஆஸ்திரேலியா).வைசிகன் (ஆஸ்திரேலியா).பவிஸ்னா (லண் டன்). பிரேமினா (இலண்டன்). கனடாவில் வசிக்கும் தருண்.அருண்.ஆதிரன், விரைஸ் (லண்டன்) ஆகியோரின் செல்லப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஞானாசாரியார் கல்லூரி வீதியிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (28.03.2021) ஞாயிறுற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வு நடைபெற வுள்ளது என்பதை அறியத்தருகிறோம்.


இவ்வறிவித்தலை உற்றார். உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளிற்கு :

| | | |
|---|---|---|
| யோகேஸ்வரி | - [illegible]-(லண்டன்) | - 447932071934 |
| விபுலானந்தன்(யோகி) | - மகன்-(லண்டன்) | - 447767013153 |
| இராஜேஸ்வரி | - மகள்-(ஆஸ்திரேலியா) | - 61-889456278 |
| விவேகானந்தன் | - மகன்-(கனடா) | - 416-418-0477 |
| பரமானந்தன் | - மகன்-(கனடா) | - [illegible] |
| முருகானந்தன் (ராஜன்) | - மகன்(கனடா) | - 647-271-7975. |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### பரதன் இராஜநாயகம்

யாழ்ப்பாணம், திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட பரதன் இராஜநாயகம் (முன்னாள் நிதர்சனம் பொறுப்பாளர்) லண்டனில் வியாழக்கிழமை காலமானார்.

இவர் வினோதினி (நடன, சங்கீத ஆசிரியை)யின் அன்புக் கணவரும், பார்க்கவி, அபிமன்யூ ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற இராஜநாயகம், காலஞ்சென்ற சிவயோகம் தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற லிங்கநாதபிள்ளை, மகாலக்ஷ்மி தம்பதிகளின் மருமகனும், பாரதி, சுரபி ஆகியோரின் அன்புச் சகோதரரும், துஷ்யந்தன், தாக்ஷாயிணி, கேதீஸ்வரன், சிவராஜா, தேவகி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சாந்தினி, சற்குணம், சுஜீந்திரா ஆகியோரின் சகலனுமாவார்.

இறுதி வணக்க நிகழ்வு 31.03.2021 புதன்கிழமை லண்டன் நேரம் முற்பகல் 10.00 மணிமுதல் 12.00 மணிவரை இடம்பெற்று பின்னர் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்**
**பாரதி (சகோதரன்) 0094 777304010**
**கேதீஸ்வரன் (மைத்துனர்) 0094 776334402**

## மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 01 . 1957



மறைவு 26 . 03 . 2021

### சுப்பிரமணியம் கோணேஸ்வரநாதன்

யாழ் வேலணை வடக்கு இராசையா வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கோணேஸ்வரநாதன் அவர்கள் கடந்த (26.03.2021) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் நாகம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும், மலர்மகள், குகனேசநாதன் (சுவிஸ்), கலைச்செல்வன், குலதீபன் (சுவிஸ்), தயாபரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருமூலநாதன், சித்திராதேவி, இராஜேஸ்வரி, ஜெயதர்சினி, பாமா ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஆருரன் (பொறியியலாளர், ஜேர்மனி), கஜானன் (MSc) ஆகியோரின் தாய் மாமனும், அர்ச்சனா, அரிகரன், ஆரகன், வருணி, மயூரேஸ், காயத்திரி, ஆதவன், அட்சயா, மாதுரி, லக்சிகன் ஆகியோரின் பெரிய தந்தையும் ரமணியின் உடன்பிறவா சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இராசையா வீதி,**
**வேலணை வடக்கு,**
**5ம் வட்டாரம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 926 2266**
**076 3934 697**

## மரண அறிவித்தல்

மண்ணில் 19 . 07 . 1988



விண்ணில் 27 . 03 . 2021

### லெப்டினன்ட் (NCC)
### பத்மநாதன் பரந்தாமன் Bsc.

(பகுதித் தலைவர், தொழில்நுட்ப பீடம், வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்)

சீனியர் லேன் , யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், இலக்கம் 56, குட்செட் வீதி , வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட லெப்டினன்ட (NCC) பத்மநாதன் பரந்தாமன் Bsc. (பகுதித் தலைவர், தொழில்நுட்ப பீடம், வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்) அவர்கள் 27.03.2021 சனிக்கிழமை வவுனியாவில் அகாலமரணமடைந்தார்.

அன்னார் பத்மநாதன் - தியாகேஸ்வரி தம்பதிகளின் ஏக புதல்வனும், பத்மஜா (பவானி - தாதிய உத்தியோகத்தர், ஆதார வைத்தியசாலை, செட்டிகுளம்), மயூரி (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், நவசோபன்(தாதிய உத்தியோகத்தர், பொது வைத்தியசாலை, வவுனியா) அவர்களின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை செல்லம்மா மற்றும் காலஞ்சென்றவர்களான தியாகராஜா சரஸ்வதி தம்பதிகளின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிஅஞ்சலி நிகழ்வு இன்று (28.03.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, அதன்பின் முற்பகல் 11.00 மணியளவில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் பாடசாலை சமூகத்தின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் நண்பகல் 12.00 மணியளவில் தட்சணாதன்குளம் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**56, குட்செட் வீதி,**
**வவுனியா.**
**076 439 3297**

தகவல்:
மாமா - திரு. [illegible]
(ஓய்வுநிலைக் கிராமசேவையாளர்)

## மரண அறிவித்தல்

பிறப்பு 29 . 03 . 1928



இறப்பு 27 . 03 . 2021

### ஏழூர்நாயகம் சின்னத்தங்கம்

ஆதி மயிலிட்டியைப் பிறப்பிடாகவும் இளவாலை வடக்கு, இளவாலைய வசிப்பிடமாகவும் கொண்ட ஏழூர்நாயகம் சின்னத்தங்கம் நேற்று (27.03.2021) சனிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னர் காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி - இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி - சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஏழூர்நாயகத்தின் அன்பு மனைவியும், ஈஸ்வரதேவி, ஆனந்தவேல், காலஞ்சென்ற ஈஸ்வரம் மற்றும் கனகவேல் ஆகியோரின் பாசமிகு தாயும், பிறேமதாசன் வசந்தமலர், ஸ்ரீவள்ளிநாயகி ஆகியோரின் அன்பு மாமியும், நர்த்தனன், நர்த்தலோஜினி, டினேசானந்தன், காலஞ்சென்ற சாமினி, கதீஸ்ஆனந்தன், கஜன், தேனுஷா, ஜாமினி, லலித்ரூபன், சுருதி, ஆர்பிதா, கேதாரணி, இராஜ்குமார் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மஹதி, ஆதீசன், வரூன், ரொனின்சயன், றியாசன், மைவிழி, அருணீஸ்வர் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இளவாலை வடக்கு,**
**இளவாலை.**
**021 222 5918**
**077 222 8996**

**தகவல்**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு வடமாகாணம்
### ஏல விற்பனை

எமது அமைச்சினால் பயன்படுத்தப்பட்ட பின்வரும் பொருட்கள் கல்வி அமைச்சு வளாகத்தில் எதிர்வரும் 30.03.2021 செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு ஏல விற்பனை செய்யப்படும்.

1. CPU
2. Photo Copier
3. Monitor
4. UPS
5. Printer
6. உடைந்த தளபாடம்
7. மின்சார உபகரணம்
8. பாவித்த வாகன உதிரிப்பாகம். ரயர்
9. ஏனைய சில அலுவலக உபகரணங்கள்

இ.இளங்கோவன்
செயலாளர்.

## தசாக கிருஹயக்ஞ அழைப்பு



தோற்றம் 25 . 12 . 1951

மறைவு 20 . 03 . 2021

நிகழும் சார்வரி வருஷம் பங்குனி மாதம் 07ம் நாள் (20.03.2021) சனிக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர்**

### சண்முககுருக்கள் பரமேஸ்வரக்குருக்கள்

அவர்களின் ஆத்மசாந்தி கிரியைகள் பின்வரும் தினாங்களில் நடைபெறவுள்ளதால் அக்கிரியைகளில் தாங்களும் குடும்ப சமேதராக கலந்து கொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

| | | |
|---|---|---|
| 29.03.2021 | திங்கட்கிழமை | முற்பகல் 10.00 மணிக்கு தசாகம் |
| 30.03.2021 | செவ்வாய்க்கிழமை | முற்பகல் 10.00 மணிக்கு ஏகோதிஷ்டம். மாசிகம் |
| 31.03.2021 | புதன்கிழமை | முற்பகல் 10.00 மணிக்கு சபிண்டீகரணம் |
| 01.04.2021 | வியாழக்கிழமை | முற்பகல் 10.00 மணிக்கு கிருஹயக்ஞம் |

அடுவம்பற்று,
அளவெட்டி தெற்கு.

குடும்பத்தினர்.

## துயர் சுமந்த திங்கள் ஒன்று!



**அமரர்**

### திருமதி. பங்கஜதேவி சோமாஸ்கந்தன்

நித்தம் அருகிருந்து. நிமிர்வை எமக்கு ஈந்து
சித்தம் சிவனடியே வைத்து
சீரிய சைவ வாழ்வில்
பேரரும் பேற்றினை எய்திப் பின் - எம்
தெய்வம் சிவன் கழல்
சேர்ந்து இன்றோர் திங்கள் ஆனதோ!

கடந்த 26.02.2021 அன்று சிவபதமடைந்த எமது குடும்பக் குலவிளக்கின் பிரிவுத் துயரின்போது உடனிருந்து உதவியவர்களுக்கும். இறுதிக் கிரியையின் போது கனத்த நெஞ்சத்துடன் கலந்து கொண்டோருக்கும். அன்னாரின் வாழ்வியல் தடங்களை நினைவூட்டி இரங்கலுரை வழங்கியோருக்கும். மேலும் தம் மனத்துயரை மலர் வளையம் மற்றும் கண்ணீர் அஞ்சலியினூடும் வெளிப்படுத்தி எமக்கு ஆறுதல் தெரிவித்தோருக்கும். அன்னாரின் இறுதிப் பயணத்தில் பங்கேற்றோருக்கும். இன்று வரை சகல வழிகளிலும் எம்மை ஆற்றுப்படுத்திய அனைத்து அன்புள்ளங்களிற்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**குறிப்பு:** அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை மற்றும் மதியபோசன நிகழ்வு தற்போதைய அசாதாரண சூழ்நிலை காரணமாக காலந்தாழ்த்தியே நிகழ்த்தப் படவேண்டியுள்ளதனால் அதுதொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும்..

உங்கள் நினைவுகளுடன்:
அ.சோமாஸ்கந்தன் (கணவர்)
சோ.சுதாகர் (மகன்)
குடும்பத்தினர்.

நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## Vacancy

Supermarket works, Studio works, Press works, Showrooms Works, Sales Rep, Salesman, Sales Girl, Accounts Clerk. 50க்கு மேற்பட்ட வேலைவாய்ப்புகள். கட்டணமின்றிய தெரிவுகளும் உண்டு. மேலதிக விபரங்களுக்கு dewmasweb.com ஐ பார்வையிடலாம்.

**DEWMAS Job Bank,**
**51, Amman Road, Nallur. 0741 38 3368**

## வேலையாட்கள் தேவையா!

உங்கள் நிறுவனங்களுக்கு தேவையான உத்தியோகத்தர்களை (Data Entry Operator, Clerk, Office Staffs, Cashier, Driver...) எம்மிடம் தெரிவுசெய்து பெற்றுக் கொள்ளலாம். மேலதிக விபரங்களுக்கு dewmasweb.com ஐ பார்வையிடலாம்.

**DEWMAS Job Bank,**
**51, Amman Road, Nallur. 0741 38 3368**

## காணி விற்பனைக்கு

பொற்பதி வீதி. கொக்குவில் கிழக்கு உடையார் ஒழுங்கையில் 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
(துரகர் தேவையில்லை)

**தொடர்புக்கு: 077 300 2075**

## ஊர்க் கோழிக்குஞ்சு விற்பனைக்கு

1 மாதம் பூர்த்தியடைந்த ஊர்க் கோழிக் குஞ்சு விற்பனைக்கு. கழுத்துவெட்டியும் உண்டு. விலை 175.00

**தொடர்பிற்கு: 077 477 5603**

## தேவை

பொருள் ஏற்றி இறக்கக்கூடிய சாரதிகள், களஞ்சிய பொறுப்பாளர்கள், கணினி அறிவுடையோர் தேவை.

**தொடர்பு:**
**இல.104, மாப்பியன் மில் லேன்**
**சுதுமலை, மானிப்பாய்.**
**0777722215, 076 3520489**
**077 180 5484**

## வீடு வாடகைக்கு

சுண்டுக்குளியில் சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்கு உள்ளது. அத்துடன் Room களும் வாடகைக்குள்ளது. (தனிநபருக்கானதும் உள்ளது)

**077 741 2713, 077 724 24 27**

## திருமண சேவை

உள்நாடு. வெளிநாடு. அரச. தனியார் துறை உத்தியோகத்தர்கள் மற்றும் அனைவருக்கும் ஏற்ற மணமக்களை தேர்ந்தெடுக்க அழையுங்கள் OR நேரில்

**077 302 0874**

## வேலைவாய்ப்பு

### அபான்ஸ் காட்சியறை
### திருநெல்வேலி கிளைக்கு

பின்வரும் வேலைகளுக்கு வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

➤காட்சியறை உதவியாளர் ➤விற்பனை உதவியாளர்

- **கல்வித்தகைமை** : O/L இற்கு மேற் விரும்பத்தக்கது
- **வயது எல்லை** : 18-25 (விரும்பத்தக்கது)
- **விண்ணப்பமுடிவுதிகதி** : 30 March 2021

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:

**அபான்ஸ் காட்சியறை**
**இல.142, பலாலி வீதி, திருநெல்வேலி.**
**T.P.: 021 577 6096, 077 359 9000, 077 554 1050**

## மரண அறிவித்தல்

### செல்வி.மேரி றீசா கொன்ஸ்ரன்ஸ் சவரிமுத்து



அன்னை மடியில் 09.07.1934

இறைவன் மடியில் 27.03.2021

சுருவிலைப்பிறப்பிடமாகவும். இல. 54. 4ஆம் குறுக்குத் தெரு. யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி மேரி றீசா கொன்ஸ்ரன்ஸ் சவரிமுத்து அவர்கள் நேற்று (27.03.2021) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிலிப் சவரிமுத்து. மேரிலூட்ஸ் தம்பதியரின் பாசமிகு மகளும். காலஞ் சென்றவர்களான ஜோ ஸ்ரனிஸ்லோஸ். சாள்ஸ் அமிர்தநாயகம். ஆன் யூலியற். பீற்றர் ஜெராட் மற்றும் மேரி ஸ்ரெலா. விக்ரட் இமானுவேல் ஆகியோரின் அன்புச் சகோதரியும். ஜெயதுங்க (ஜெயா) அவர்களின் வளர்ப்புத் தாயும். ஜெயா அனற் சுமதி அவர்களின் அன்பு மாமியாரும். ஜோசப். சாள்ஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (29.03.2021) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு யாழ் புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 54, 4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மேரி ஸ்ரெலா
ஜெயா
076 166 4481

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்லுக்கு நிர்ணய விலை விவசாயிகள் கோரிக்கை!

**மன்னார், மார்ச் 28**

**இலங்கை தனியார் நெல் கொள்வனவு சந்தையில் நெல்லுக்கான நிர்ணய விலை இது வரை நிர்ணயிக்கப்படவில்லை. நெல்லுக்கு ஒரு நிர்ணய விலை வேண்டும் என்று மன்னார் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.**



அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் நெல் நிரம்பல் சந்தையில் அதிகம் செல்வாக்குச் செலுத்தும் மாவட்டங்களில் மன்னார் மாவட்டத்தின் பங்களிப்பு அதிகமாக காணப்பட்டாலும் மாவட்ட விவசாயிகளின் நெல் உற்பத்திக்கான விலை நிர்ணயத்தை அரசாங்கம் இதுவரை உறுதிப்படுத்தவில்லை.

தனியாருக்கு நெல்லை விற்பனை செய்ய வேண்டிய நிலை காணப்படுகின்றது. காலநிலை பிரச்சினைகள், கால் நடை பிரச்சினைகள் மற்றும் நீர் தட்டுப்பாடுகளைக் கடந்து முழுமைப்படுத்தப்படும் நெற்செய்கையை திருப்தியான விலைக்கு விற்பனை செய்ய முடியாத நிலையில் நாம் உள்ளோம்.

இது ஒரு புறமிருக்க அரசாங்கத்தால் கொள்வனவு செய்யப்படுகின்ற நெல் காய்ந்த நிலையிலே கொள்வனவு செய்யப்படுவதனால் நெல்லை காய வைப்பதற்கு ஒழுங்கான இடம் மன்னாரில் இல்லாததால் வீதி ஓரங்களில் நெல் காய வைக்கப்படுகிறது.

எனவே நெல்லுக்கான நிர்ணய விலையை விவசாயிகளுடன் அரச அதிகாரிகள் கலந்துரையாடி மேற்கொள்ள வேண்டும். அதேநேரம் வலய ரீதியாக நெல் காய வைப்பதற்கான இடங்களையும் களஞ்சியப்படுத்துவதற்கான ஏற்பாடுகளையும் சம்மந்தப்பட்ட திணைக்களங்களும் அதிகாரிகளும் மேற்கொள்ள வேண்டும் - என்றனர். (ம-ஜ-56)

## மழை நீர் சேகரிப்பு மன்றத்தின் வள நிலையம் கிளிநொச்சியில்

கிளிநொச்சி, மார்ச் 28

இலங்கை மழை நீர் சேகரிப்பு மன்றத்தின் வள நிலையம் கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் திறக்கப்பட்டது.

கிளிநொச்சி தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அலுவலகத்தின் ஒரு பகுதியில் அமைக்கப்பட்ட அந்த நிலையம், இலங்கை மழைநீர் சேகரிப்பு மன்றத்தின் தலைவரால் திறப்பட்டது.

நிகழ்வில் பிராந்திய நீர் வழங்கல் வடிகாலமைப் புச்சபையின் பிரதம பொறியியலாளர், கிளிநொச்சி மாவட்டச் செயலக திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட இடர் முகாமைத்துவ நிலைய உத்தியோகத்தர், கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர் , மற்றும் கிராம அலுவலர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

குறித்த வள நிலையம் ஊடாக மழை நீர் சேகரிப்பு தொடர்பான தகவல்களை பொதுமக்கள் நேரடியாகப் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ப-113)

## சமூக சீர்கேடு
## பெண்கள் உள்ளிட்ட மூவருக்கு அபராதம்

சாவகச்சேரி, மார்ச் 27

சமூக சீர்கேட்டுக்கு ஏதுவாக விடுதி நடத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைதான முதியவர் மற்றும் இரு பெண்கள் உள்ளிட்ட மூவருக்கு சாவகச்சேரி நீதிமன்று அபராதம் விதித்தது.

கடந்த வருடம் எழுதுமட்டுவாழ் கரம்பகம் பகுதியில் வீடொன்றில் சமூகச் சீர்கேடு இடம்பெறுகிறது என்று கிடைத்த தகவலையடுத்து கொடிகாமம் பொலிஸார் அங்கு திடீர் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர். குறித்த வீட்டில் நின்ற இரண்டு பெண்களையும் விடுதி நடத்தினார் என்ற சந்தேகத்தில் முதியவர் ஒருவரையும் பொலிஸார் கைதுசெய்தனர். அவர்கள் மூவரும், நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரணை செய்த நீதிவான் விடுதி நடத்தினார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட முதியவருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். அத்துடன் கைதான இரு பெண்களுக்கும் தலா 500 ரூபா வீதம் அபராதம் விதித்தார். (ப-9)

# காங்கேசன்துறை- புத்தளம் கடற்பரப்பு கொந்தளிக்கும்
## மழைக்கும் சாத்தியம்

கொழும்பு, மார்ச் 28

காங்கேசன்துறையிலிருந்து புத்தளம் வரையான கடற்பரப்புகள் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும் என்றும், நாட்டின் பல பகுதிகளில் மழை பெய்வதற்கு வாய்ப்பு என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இது தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் உள்ளதாவது;

சப்ரகமுவ, மேல், வடமேல், மத்திய மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்வதற்கான சாத்தியம் காணப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொது மக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

காங்கேசன் துறையிலிருந்து மட்டக்களப்பு ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் காற்றானது வடகிழக்கு முதல் கிழக்கு வரையான திசைகளிலிருந்து வீசக்கூடும்.

புத்தளத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்றுள்ளது. (ப)

## புகழேந்தி நகரில் வீடு புகுந்து தாக்குதல்

முல்லைத்தீவு, மார்ச் 28

முல்லைத்தீவு மல்லாவி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புகழேந்திநகர் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மீது தாக்குதல் மேற்கொண்ட இனந்தெரியாத நபர்கள், அந்த வீட்டில் இருந்தவர்கள் மீதும் தாக்குதலை மேற்கொண்டு தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

குறித்த வீட்டில் உள்ள குடும்பத்தலைவர்மீது இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த நான்கு பேர் கடந்த 13 ஆம் திகதி இரவு வாள் வெட்டு தாக்குதலை மேற்கொண்டிருந்தனர். இதனால் காயமடைந்த அவர் மல்லாவி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வீடு திரும்பிய நிலையிலேயே நேற்றுமுன்தினம் இரவு இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. வீட்டின் கதவுகளை உடைத்து சேதப்படுத்திய தாக்குதல் தாரிகள், வீட்டில் இருந்தவர்கள் மீதும் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ப)

## மத்ரஸாவில் பணிபுரிந்த இரு இளைஞர்கள் கைது



கொழும்பு, மார்ச் 28

உயிர்த்த ஞாயிறு தின தற்கொலைத் தாக்குதல் சம்பவத்தின் பிரதான சந்தேகநபரான சஹ்ரான் ஹாசீம் நடத்தினார் என்று கூறப்படும் புத்தளம் பகுதியில் உள்ள ஒரு மத்ரஸா பள்ளியில் பணிபுரிந்த, இளைஞர்கள் இருவரை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

சந்தேக நபர்களிருவரையும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்துவதற்கு குற்றப்புலனாய்வு பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

சட்டமா அதிபர் வழங்கிய ஆலோசனைக்கமையவே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிலாபம் மற்றும் மதுரங்குளி பகுதியைச் சேர்ந்த 26, 27 ஆகிய வயதுகளையுடையவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். (த-இ)

# தொழில் முயற்சி ஊக்குவிப்புக்கு சமுர்த்தி வங்கியால் பயனாளிகள் தெரிவு

கொழும்பு, மார்ச் 28

பெண் சிறைத் தொழில் முயற்சியாளர்களுக்கான தொழில் ஊக்குவிப்பு வழங்கும் திட்டத்தின் கீழ், மாந்தை கிழக்கு பிரதேசத்துக்குட்பட்ட வன்னி விளாங்குளம் கிராமத்தில் சமுர்த்தி வங்கியால் நான்கு பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் 2021 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டின் பிரகாரம், 2.1 மில்லியன் ரூபா தொழில் ஊக்குவிப்பு சேவையைப் பெறுவதற்கே இவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் இருவர் பனையோலை கைவினைப் பொருள்கள் உற்பத்தி மற்றும் விற்பனைக்கும், இருவர் சிற்றூண்டி தயாரித்து விற்பனை செய்வதற்கும் தெரிவாகியுள்ளனர். இந்த நிலையில் இவர்களுக்கான கடைத்தொகுதி மற்றும் மூலப் பொருள்கள் என்பன சமுர்த்தி வங்கியால் வழங்கப்படவுள்ளன. (ந-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில்...

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீடம் ஆகியவற்றின் ஆய்வுகூடங்களில் 746 பேரின் மாதிரிகள் நேற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதிலேயே 143 பேருக்குத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அவர்களில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மருத்துவபீட மாணவர்கள் மூவர், தாதிய மாணவர் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நோயாளர்கள் 7 பேருக்குத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

திருநெல்வேலி பொதுச்சந்தைத் தொகுதியில் உள்ள மரக்கறி வியாபாரிகள், கடைகளின் வியாபாரிகள் மற்றும் தொழிலாளிகள் என 127 பேருக்கு தொற்று உள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளது.

சாவகச்சேரி வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகரில் ஏற்கனவே தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்கள் என சுயதனிமைப்படுத்தப்பட்டி ருத்த நால்வருக்குத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது' - என்றார். (ம-26)

## தாதியர்கள்...

னாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நோயாளர் விடுதியில் கடமை புரியும் தாதி ஒருவருக்கு அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட நிலையில் அவருக்கு தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது. பின்னர் அவருடன் நெருங்கிப் பழகிய மற்றொரு தாதிக்கும் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. அந்த இருவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்வதற்கு மாதிரிகள் பெறப்பட்டுள்ளன.

இதேவேளை, இந்தத் தாதியர்களுடன் தொடர்புகளைப் பேணிய சிலர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இருவரையும் கிளிநொச்சி மற்றும் கொழும்பில் அமைந்துள்ள கொரோனா மருத்துவமனைக்கு மாற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ம-த-110)

## பி.சி.ஆர்...

வர்த்தக நிலையப் பணியாளர்கள் தங்கள் பி.சி.ஆர். அறிக்கையை சுகாதாரத் தரப்பினரிடம் கையளிக்கவேண்டும். இவ்வாறு இராணுவத் தளபதியும், கொரோனா கட்டுப்பாட்டுச் செயலணியின் தலைவருமான சவேந்திர சில்வா தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் நகர மையப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்கள் 10 நாள்கள் முடக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒவ்வொரு மாவட்டங்களிலும் கொரோனாத் தடுப்புக்காக அந்தந்த மாவட்டச் செயலர்கள் தலைமையில் மாவட்ட கொரோனா தடுப்புச் செயலணிகள் அமைக்கப்பட்டுள்ளன. அதற்கு அமைவாக கொரோனாத் தொற்றாளர்கள் திடீரென அதிகரித்ததையடுத்து யாழ்ப்பாண மாவட்டத்தின் நகரத்தில் சில பகுதிகள் 10 நாள்கள் முடக்கப்பட் டுள்ளன.

இந்தக் கொரோனாத் தாக்கத்தால் வர்த்தகர்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே முடக்கப்பட்ட நாள்களுக்குள் வர்த்தகர்கள் பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொண்டு அதன் அறிக்கைகளை சுகாதாரப் பிரிவினரிடம் கையளிக்கவேண்டும். அதன் பின்னர் வர்த்தக நிலையங்க ளைத் திறக்க முடியும்.

பொதுமக்களும் முடக்கப்பட்ட பகுதிகளுக்குள் தேவையற்ற பயணங்களைத் தவிர்க்க வேண்டும். சுகாதார வழிகாட்டல்களை ஒழுங்கான முறையில் அனைத்துத் தரப்பினரும் பின்பற்ற வேண்டும். சுகாதாரப் பிரிவினர் மற்றும் பாதுகாப்பு படைகளின் சேவைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

ஒரு மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்கள் திடீரென அதிகரித்தால் அந்த மாவட்டத்தை முடக்குவதா இல்லையா என்பது மக்களின் நடத்தைகளில்தான் தங்கியுள்ளது. எனவே யாழ்ப்பாண மக்கள் சுகாதார ஒழுங்கு விதிகளை உரிய முறையில் கடைப்பிடிக்க வேண்டும் என்றார். (ம-ஒ.5,22)

## நீதிக்கான...

சிவில் சமூக அமையம் விசனத்துடன் தனது அறிக்கையை வெளியிட்டுள்ளது. இது தொடர்பில் அவர்களது ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ் மக்களுக்கு எதிராக தற்போதும் இடம்பெறுகின்ற அத்துமீறல்களை, தடுப்பதில் அல்லது கட்டுப்படுத்துவதில் எவ்வித கரிசனையையும் ஐ.நா. தீர்மானம் காட்டவில்லை. அடுத்தடுத்து வரும் இலங்கை அரசுகளின் கொள்கையானது கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையேயன்றி வேறல்ல என்று தமிழ் மக்கள் கருதுகின்றனர். இந்தத் தீர்மானமானது நிலைமையின் பாரதூரமான தன்மையைப் புரிந்து கொள்ளவுமில்லை. இனப்படுகொலையைத் தடுப்பதற்கான வழிவகைகளை முன்வைக்கவுமில்லை.

இத் தீர்மானமானது, சான்றுகளை சேகரிப்பதற்கான ஆணையை மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளருக்கு வழங்குவதன் மூலம் வெளித்தோற்றத்தில் வலுவான பிரேரணை போன்று தோற்றமளிக்கச் செய்யப்பட்டுள்ளது. எத்தகைய நீதிப் பொறிமுறைக்கு அத்தகைய சாட்சித் திரட்டல் பங்களிப்புச் செய்யப் போகின்றது என்பது தொடர்பிலான விளக்கம் இல்லாத போது சான்றுகளை சேகரித்தல், ஒன்று சேர்த்தல் மற்றும் பாதுகாத்தல் என்பவற்றுக்கான நோக்கம் பொருளற்றுப் போய்விடும்.

### தெளிவில்லை

பொறுப்புக்கூறலை சாத்தியப்படுத்த சர்வதேச நியாயாதிக்க வழிமுறையைப் பயன்படுத்துவதை தீர்மானமாக முன்வைத்த மையக்குழு உட்பட உறுப்பு நாடுகள் விரும்புகின்றனவா என்பது கூடத் தெளிவாக இல்லை. இலங்கை விடயத்தை ஐ.நா. பாதுகாப்புச் சபையில் எடுப்பதற்கான கோரிக்கை தொடர்பில் மையக்குழு தொடர்ந்து மௌனமாக உள்ளது. ஆணையாளரின் அறிக்கையில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள அனைத்துப் பரிமாணங்களையும் அவ்மையக்குழுவில் அங்கம் வகிக்கும் அரசுகள் ஏற்றுக் கொள்கின்றனவா? என்ற கேள்வி எழுகின்றது.

அரசியல் தீர்வு தொடர்பில் குறிப்பிடுகையில் தீர்மானத்தில்; '13ஆம் திருத்தத்தை நிறைவேற்றல்' மற்றும் 'உள்ளூராட்சி' என்று மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால் நாம் பெரிதும் விசனமடைகின்றோம். தீர்மானத்தின் இந்தப் பந்தியானது இந்திய அரசால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோளின் பேரில் சேர்க்கப்பட்டது என்று நாம் அறிகின்றோம். இலங்கை தொடர்பாகத் தனது நலன்களைப் பாதுகாப்பதற்கும் தக்கவைப்பதற்கும் 13 ஆம் திருத்தமும் அதனோடு தொடர்புபட்ட இந்திய இலங்கை ஒப்பந்தமும் முக்கியமானது என்ற விளங்கிக்கொள்ளலில் இந்தியா வெறுமனே தன் சுயநலனால் உந்தப்பட்டு இதனைச் சேர்ப்பித்துள்ளது.

### இது எம் தீர்வல்ல

ஆனால், சுய நிர்ணய உரிமைக்கான எமது கோரிக்கையை 'உள்ளூராட்சி' என்பதாக உரைத்தல் தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பாடல்ல என்பதைத் தெளிவாக அனைத்துத் தரப்புக்களும் புரிந்துகொள்ள வேண்டும். நாம் மறுபடி, குறிப்பிட்டு வந்திருப்பதுபோல், இறுக்கமான ஒற்றையாட்சி சட்டகத்தினுள் உள்ளடங்கியிருக்கும் 13ஆம் திருத்தச் சட்டமானது அரசியல் தீர்வொன்றின் ஆரம்பப்புள்ளியாகக்கூட அமையாது.

மையக்குழுவும் இந்தியாவும் தமிழ் மக்களும் அவர்களது பிரதிநிதிகளும் கடந்த 35 வருடங்களாக நிராகரித்து வந்துள்ள ஒரு அரசியல் தீர்வைத் திணிப்பதில் முனைப்புக் காட்டுகின்றன.

இத் தீர்மானமானது, வரலாற்றில் பொறுப்புக்கூறலைக் கையாள்வதில் அரை மனதுடன் செய்யப்பட்ட மற்றுமொரு முயற்சியென பதியப்படும். உண்மையில் இது தமிழ் மக்களுக்கு நீதி தொடர்பான பொய்யான நம்பிக்கையையும் எதிர்பார்ப்புகளையும் வழங்குவதற்கான மற்றொரு முயற்சி என்று நாம் அஞ்சுகின்றோம்.

### ஏமாற்றாதீர்கள்

இந்தத் தீர்மானமானது சரியான திசையிலான ஒரு அடி என்பதாகவும், அது இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்துக்கு பாரப்படுத்துவதற்கான கோரிக்கையை மறைமுகமாக ஆதரிக்கின்றது என்பதாகவும் பரிந்துரைக்கின்ற தமிழ் செயற்பாட்டாளர்களால் நாம் ஏமாற்றம் அடைந்துள்ளோம்.

நாம் அனைத்துத் தமிழ்ச் செயற்பாட்டாளர்களையும் தமிழ் மக்களுடனான தமது தொடர்பாடல்களில் வெளிப்படைத்தன்மையுடனும் நேர்மையுடனும் உண்மையாகவும் இருக்குமாறும் எம்மை நிரந்தரமான விரக்திக்குள்ளும் நம்பிக்கையின்மைக்குள்ளும் தள்ள வேண்டாமென்றும் கேட்டுக்கொள்கின்றோம்.

தமிழ் மக்கள் தற்போதாவது ஜெனிவாவுக்காகக் காத்திருப்பது பயனற்றது என்பதை அறிந்திருப்பர். எமது கூட்டு வலியைக் கருவியாக்குகின்ற நிகழ்ச்சி நிரல்களை நாம் மறுதலிக்க வேண்டும். முன்னால் உள்ள ஒரே வழி புதிய சிந்தனைகளுக்கானதும் புதிய போராட்ட முறைகளுக்கானதும் ஆகும். என்றுள்ளது. (ஒ.5)

## தாமரை...

இந்தச் சம்பவம் வவுனியா வைரவபுளியங்குளம் பகுதியில் நேற்றுக் காலை நடந்துள்ளது.

நகர்ப் பகுதி பாடசாலையொன்றில் கற்பிக்கும் ஆசிரியரான பரந்தாமன் என்பவரே உயிரிழந்தவராவார்.

வவுனியா, குட்செட் வீதி, கருமாரி அம்மன் ஆலயத்தின் தேர்திருவிழாவுக்காக குறித்த ஆசிரியர் தாமரைப்பூ மற்றும் தாமரை இலை ஆகியவற்றைப் பறிப்பதற்காக வைரவப்புளியங்குளம் குளத்துக்குச் சென்றுள்ளார். குளத்துக்குச் சென்றவரை நீண்ட நேரமாகக் காணாத நிலையில் அயலவர்கள் மற்றும் அந்தக் குளத்துக்குரிய கமக்கார அமைப்பினர் இணைந்து தேடிய போது, நீரில் மூழ்கிய நிலையில் சடலமாக ஆசிரியர் மீட்கப்பட்டார். (ம-ஐ18)

## குடாநாட்டில்...

கரித்து வருகின்றது. நேற்றுமட்டும் 143 பேர் புதிய தொற்றாளர்களாக அவதானிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் மேற்கொண்டு முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் நகர்வுகள் தொடர்பில் ஆலோசிக்கும் வகையிலேயே இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இன்று சில முக்கிய முடிவுகள் எடுக்கப்படலாம். இதன்படி சில இடங்கள் புதிதாக முடக்கப்படலாம் என்று கருதப்படுகின்றது. (ம-26)

## பெண் சிசு...

குறித்த சிசுவின் பெற்றோர் குழந்தைக்கான நேர்த்திக் கடனைச் செலுத்துவதற்காக நேற்றுமுன்தினம் நயினை நாகபூசனி அம்மன் ஆலயத்துக்குச் சென்றபோது குழந்தை அசைவற்றுக் கிடந்துள்ளது.

இதையடுத்து பெற்றோர் குழந்தையை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு சென்றபோது பிள்ளை ஏற்கனவே உயிரிழந்துவிட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து மேலதிக பரிசோதனைகளுக்காக மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன. (ம-26)

## சச்சினுக்கு...

ளது. இது தொடர்பில் சச்சின் தனது ருவிற்றர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:

சிறிய அறிகுறிகளுடன் கொரோனா இருப்பதால், வீட்டில் என்னைத் தனிமைப்படுத்திக் கொண்டுள்ளேன். அனைத்து விதிமுறைகளையும் பின்பற்றி நான் வீட்டில் தனிமையில் உள்ளேன்.

எனது குடும்பத்தினருக்கு பரிசோதனை செய்ததில் யாருக்கும் கொரோனா இல்லை. என்னுடன் தொடர்பில் இருந்தவர்கள் முன்னெச்ச ரிக்கையாக கொரோனா பரிசோதனை செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்- என்று குறிப்பிட்டுள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாரதி தேவை

கனரக வாகன அனுமதிப்பத்திரம் உள்ள சாரதி தேவை.

தொடர்புகளுக்கு:- 076 439 2220

## CCTV வேலைவாய்ப்பு

நேர்முகத் தேர்வு

31.03.2021 காலை 9.00 மணி

மேலதிக தகவல்களுக்கு எமது Facebook இல் எமது பக்கத்தை பார்வையிடவும்

Vcon It park Pvt. ltd

தொடர்புகளுக்கு
077 376 7899

## மணமகள் தேவை

யாழ் இந்து உயர் கௌரவ குடும்பத்தை சேர்ந்த 1990 ஆண்டு பரணி நட்சத்திரமும் 7ல் செவ்வாயும் 30 கிரக பாவமும் உள்ள MBBS டாக்டருக்கு மணமகள் தேவை.

தொடர்புக்கு: 076 369 8635

## வேலைஆட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கி வரும் அரிசி ஆலை ஒன்றிற்கு பின்வரும் பதவிகளுக்கு வேலை ஆட்கள் தேவை.

1. கணக்காளர் 2. விற்பனை பிரதிநிதி
3. கனரக வாகன சாரதி

தொடர்பு:-076 096 9728, 076 096 9732

## வேலையாள்கள் தேவை

சாவகச்சேரியில் வயோதிபப் பெண் ஒருவருடன் தங்கியிருந்து பராமரிப்பதற்கு 35-45 வயதிற்குட்பட்ட பெண் ஒருவர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:-077 473 9889

## JOBSIN வேலை வாய்ப்புக்கள்

அனைத்து விதமான வேலை வாய்ப்புக்கள் உங்களுக்காக காத்திருக்கின்றன. ஆண், பெண் இருபாலாரும் இணைந்துகொள்ளலாம்.

கோண்டாவில் ஐயப்பன் கோயிலுக்கு முன்பாக | தொடர்பு: 076 092 8460

## கடை வாடகைக்கு

இல. 221, மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம்.

முதலாம் மாடி மட்டும்.

சதுர அடி - 628 (18' X 48' 3")

தொடர்புகளுக்கு:
071 305 9237, 075 261 9446

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1992 ல் 7 செவ்வாயில் பிறந்த நில அளவையாளர் மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு:-077 446 9545

## விற்பனைக்கு

### ஊர்கோழிக்குஞ்சுகள்

ஒருகிழமை, 2 கிழமை, 1 மாதம், 1½ மாதம் எங்களிடம் உண்டு. 1½ மாதம் (சேவல் குஞ்சுகள்) சேவல்கள்

076 630 0799

## விற்பனைக்கு/குத்தகைக்கு

முல். மல்லாவியில் உள்ள சகல வசதிகளுடனான 6 பரப்பு காணியுடன் கூடிய கோழிப்பண்ணை விற்பனைக்கு / குத்தகைக்கு உண்டு.

தொடர்பு:- 076 7956309

## வீடு வாடகைக்கு

கிளிநொச்சியில் வீடு வாடகைக்குண்டு. வாடகை பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு:0777 111716, 076 860 4501

## கடை வாடகைக்குத் தேவை

சாவகச்சேரி நகரப்பகுதியின் பிரதான வீதியில் அமைந்துள்ள கடை ஒன்று வாடகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு
077 726 2447

## தேவை

யாழ் உயர்தர சைவ உணவகத்திற்கு தேர்ச்சிபெற்ற Chinese உணவு வகை தயாரிப்பாளர் தேவை. நேரில் வரவும்.

அக்ஷதை
நாகவிகாரை முன்பாக. ஸ்ரான்லி றோட்.
0777 112 269

## Looking for English Teaching Post at a School and Institutes

கொழும்பில் சர்வதேச பாடசாலையில் கற்பித்து தற்போது யாழ்ப்பாணத்தில் வசிக்கின்ற ஆங்கில ஆசிரியருக்கு பாடசாலையிலும் தனியார் கல்வி நிறுவனங்களில் கற்பிப்பதற்கு வெற்றிடம் இருந்தால் கீழ் உள்ள இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

K.Arulraj, Tel: 0777969540
sadhanaarulraj@gmail.com

## வீடு வாடகைக்கு

கொய்யாத் தோட்டத்தில் 4 1/2 பரப்பு காணியுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. வாடகை மாதம் 20,000/=

தொடர்பு:-077 802 3745

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் அமைந்துள்ள 4 அறைகள் 2 இணைந்த குளியலறைகள், சாதாரண குளியலறை, Hall with Varanta, சுற்றுமதில், பயன்தரும் மரங்கள், Office ஆகவும் வீடாகவும் பயன்படுத்தலாம். மாத வாடகை 40,000/=

தொடர்புகளுக்கு:
074 027 2778

## விற்பனைக்கு

**பெருக்கன், கட்டு, பூச்சு மணல், சல்லி, கண்டல், சீமெந்துக் கற்கள்** தேவைப்படின் நேரடித் தொடர்புக்கு அழைக்கவும்

076 760 3066, 075 842 6302

## காணி விற்பனைக்கு

யாழ். கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அருகில் 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

(நிலப்பரப்பு)

(தரகர் தேவையில்லை)

077 596 3845, 077 8147389

## VACANCIES

We are a private consultancy institute that provides services to businesses, government and non-governmental organizations. Focuses on the improvement, promotion and Development providing training, services and consultancies. Based in Point Pedro.

- Proposal and Report Writer (English)
  Should be fluent in English in both oral and written
- Content Writer (English)
  Should be fluent in English in both oral and written
- Web and Graphic Designer
  IT undergraduate in advance

Forward your CV to: isrd.consultancy@gmail.com

## Maalai Matrimony — மாலை திருமணசேவை

இலங்கையின் முதற்தர இணையத்தள உலகத்தரம் வாய்ந்த திருமணசேவையாக விளங்கும் மாலை திருமண சேவையில் இணையவில்லையா? இணைவதற்கான சந்தர்ப்பத்தில் இணைந்து உங்கள் வாழ்க்கையை இன்பமாக்குங்கள்.

எமது சேவையின் அனுகூலங்கள்

- **பதிவுக்கட்டணம் இலவசம்**
- **தரகுக் கட்டணம் இலவசம்.**
- **24 மணிநேர சினேகபூர்வ வாடிக்கையாளர் சேவை.**

(இந்த வருடம் மட்டும் 30 பேருக்கு மேல் எமது திருமண பந்தத்தில் இணைந்துள்ளனர்).

தொடர்பு: 077 408 8241
இணையத்தளம்: maalai.com

## வேலையாட்கள் தேவை

987/2, KKS Road, எனும் முகவரியில் இயங்கிக்கொண்டிருக்கும் தனியார் நிறுவனமொன்றிற்கு Machinary ல் வேலை செய்யக்கூடிய ஆண், பெண் இருபாலார் தேவை.

ஆர்வமுள்ளவர்கள் மின்னஞ்சல் மூலம் விண்ணப்பிக்கவும்

e-mail:nobertpriska2019@gmail.com
Phone No: 077 973 4816, 021 4927539

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

### af பிரெஞ்சு மொழி

- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf)
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).



021 222 8093 17, Kandy Road, Jaffna

# IMMEDIATE VACANCIES AT MANNAR

| Type of Field | Required staffs | Salary | Requirements |
|---|---|---|---|
| 01. Marketting Staff | 03 | 35,000-55,000 | with experience, Learners/ School Leavers |
| 02. Store Assistant (Boys) | 01 | 20,000-25,000 (Lunch will be Provided) | with experience, Learners/ School Leavers |
| 03. Accounting Staff (Girls) | 02 | 15,000-20,000 (Lunch will be Provided) | with experience, Learners/ School Leavers |

**Closing date :- 07.04.2021**

**Send your CV by Whatsapp to 077 394 4653**

## Wanted

### Accounts Assistant

### Nuffield School for the Deaf and Blind, Kaithady

**Requirements & Qualifications**

1. AAT final exam or equivalent
2. Computer Knowledge (Excel, Internet, Email)
3. Knowledge in Accounting package would be an advantage
4. Fluent in written and spoken Tamil & English
5. Work experience in related field - minimum two years
6. Valid driving license - Motor cycle
7. Age less than 45 years
8. Salary negotiable

Applications giving full details with names of two non-related referees should be emailed to nsdb1956@gmail.com and the original posted to undersigned by 05.04.2021 Only selected candidates will be called for interview.

Principal
Nuffield School for the Deaf and Blind
Kaithady.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 24

# சஞ்சீவி


Registered as a Newspaper

பிரேரணையொன்றை கொண்டுவந்து கொடியிறக்கி
அரோகரா சொல்லி முடிந்ததே ஜெனிவா திருவிழா – பிறகென்ன
காலத்தை இழுத்தடித்து இலங்கை தப்பித்திட மீண்டுமொரு
கோலத்தோடு பிரேரணைகளுக்குள் சேடமிழுக்குமே நீதி!

ஒட்டுக்குழ சுவாமிகள்

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2051 பங்குனி 15 ஞாயிற்றுக்கிழமை (28.03.2021) சிகரம் : 41

# மணல் மாபியாக்களின் மரண விளையாட்டு



## கூடியிருந்தவர்களே கொன்ற கொடூரம்

**பட்டப்பகலில் நட்டநடு வீதியில் நடந்த கொலை**

○ உளவாளி

**14.02.2021**
பரந்தன், விளாவோடை

நாங்களும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறம். என்ன சண்டித்தனப் பிளானோ? எல்லாரையும் வெட்டிக் கூறு போட்டிடுவம்"

திடீரென வசவுச் சொற்களோடு தங்களைச் சிலர் வழிமறிக்க அந்த இருவரும் வெலவலத்துப் போனார்கள். வந்தவர்கள் இருவரும் சகோதரர்கள். மறித்தவர்களும் தெரிந்தவர்கள்தான். ஆனாலென்ன, எதிராளிகள். ஏதோ அசம்பாவிதம் நடக்கப் போகின்றது என்பதை ஊகித்த சகோதரர்கள் இருவரும் சுதாகரிப்பதற்கிடையில், வழிமறித்தவர்களில் ஒருவன் தன் இடுப்பில் சொருகியிருந்த கத்தியைச் சடாரென வெளியே எடுத்து- அதேவேகத்தோடு சகோதரர்களில் ஒருவனைக் குத்த முனைய-

கத்தியின் வீச்சுக்கு இரையாகாமல் சகோதரர்களில் ஒருவர் லாவகமாகத் திரும்பி அதைத் தட்டிவிட்டான். ஆனாலும் கையில் காயம். இப்போது வழி மறித்தவர்களின் கூச்சல் அதிகமாகத் தொடங்கியது. இனியும் தனித்து நின்றால் வெட்டி எறிந்துவிட்டுப் போய்விடுவார்கள். உடனடியாகத் தொலைபேசியில் அழைப்பெடுத்து உதவி கோரினார்கள்.

" அண்ணை, இஞ்ச தம்பான்ர ஆக்கள் எங்களை வெட்ட வாறாங்கள், உடன வா. நீ வந்தால் தான் எங்களைக் காப்பாத்தலாம்"

இவர்கள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, மற்றைய குழுவும் தங்கள் பக்கத்துக்கு ஆட்களைச் சேர்க்கத் தொடங்கியது. ஆனால் அவர்கள் தொலைபேசியில் அழைக்க வேண்டிய அவசியம் இருக்கவில்லை. சண்டை மூண்ட இடத்துக்கு கிட்டவாக, ஏற்கனவே திட்டமிட்டபடி ஒளிந்திருந்த தம்பா குழுவைச் சேர்ந்த அடியாட்கள் எல்லோரும் கத்திகள், இரும்புக் கம்பிகள் என்பவற்றோடு வீதிக்கு வந்து குழுமத் தொடங்கினார்கள்.

'சர்ர்ர்ர்ர்க்!!!!'

புழுதி பறக்க, சடாரென பிறேக் அடித்து இரு தரப்புக்கும் இடையில் வந்து நின்றது அந்த மோட்டார் சைக்கிள். அதில் வந்தவன் சுமன். தம்பா குழுவிடம் மாட்டுப்பட்டு நின்றவர்களின் சகோதரன். தன் அத்தானையும் அழைத்துக் கொண்டு வந்த சுமனைக் கண்டதும், சகோதரர்களுக்கு பயம் போய்விட்டது. சுமன் தான் அவர்களுக்கு எல்லாமே. அவன் வந்துவிட்டால், எத்தனைபேரையும் சமாளித்து விடுவான்.

" ஏன் சண்டை ? என்ன பிரச்சினை என்று கதைச்சுத் தீர்ப்பம்" என்று கூறி தம்பா குழுவோடு சமரசம் பேச முற்பட்டான் சுமன்.

ஆனால் தம்பா குழுவினர் வேறு திட்டம் போட்டிருந்தனர். வெறுமனே சண்டை பிடிப்பதை விடவும், சுமன் குடும்பத்தவர்கள் அத்தனை பேரையும் கண்டந்துண்டமாக வெட்டி வீழ்த்துவதே அவர்களின் நோக்கம். தம்பா குழுவில் ஆள்களின் எண்ணிக்கை அதிகம் என்பதால் ,அந்தச் சமயத்தில் அவர்களின் கையே ஓங்கியிருந்தது. சுமனின் சகோதரி, தம்பாவின் மச்சானான அகிலனை ஒரு வளவுக்குள் வைத்து, "சண்டை வேண்டாம்" என்று கெஞ்சிக் கொண்டிருந்தார். ஆனால் அகிலன் கேட்கவில்லை. அப்போது அந்த வளவின் சொந்தக்காரரர் வந்து "சண்டை பிடிக்கிறதெண்டால் எங்கையும் போய் பிடியுங்கோ. என்ர வளவுக்கு ஒண்டும் வேண்டாம்" என்று சொல்லி அவர்களை வெளியே அனுப்பிவிட, அதே வேகத்தோடு கையில் கத்தியோடு சுமனை நோக்கி ஓடிவந்தான் அகிலன்.

சுமன் அதைக் கவனிக்கவில்லை. இதுதான் சமயமென்று சுமனின் கடைசிச் சகோதரனின் இரு கால்களையும், கைகளையும் அவன் எதிர்பாராத சமயத்தில் தம்பா குழுவைச் சேர்ந்தவர்கள் இறுகப்பிடித்துவிட அவனால் அசையமுடியவில்லை. அப்படியே ஓங்கி ஒரு வெட்டு. காலில் பெருங்காயம்.

"ஐயோ, அண்ணை காப்பாத்து" என்றபடி அவன் அப்படியே குத்திட்டு வீழ , தம்பியைக் காப்பாற்ற ஓடினான் சுமன். அந்தவேகத்தில் தன்னைச் சூழ்ந்துள்ள ஆபத்தை அவன் மறந்து விட்டான். அவனையும் இருவர் பின்பக்கமாக வந்து பற்றிப் பிடிக்க, அகிலன் தன் ஒட்டுமொத்த ஆத்திரத்தையெல்லாம் கத்தியில் காட்டி, சுமனின் உடலில் இறக்கினான்.

சுமனின் இரு கால்களில் மிகப் பாரதூரமான வெட்டு. ரத்தம் குபீரிட்டது. வெட்டு விழுந்த அதேசமயத்தில் இன்னொருவன் இரும்புக் கம்பியாலும் சுமனின் தலையில் ஓங்கி அடித்தான். சுமனுக்கு உலகம் இருளத் தொடங்கியது. அப்படியே காயத்தோடு மோட்டார் சைக்கிளில் ஏறித் தப்புவதே அவனுக்கு இருந்த ஒரே வழி.

தள்ளாடித் தள்ளாடி காயங்களோடு போய், தன் மோட்டார் சைக்கிளில் ஏறிச் செல்ல முனைந்தான். மோட்டார் சைக்

22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் சஞ்சீவி
28 மார்ச் 2021



# ஜெனிவாத தீர்மானம் 2021

○ நிலாந்தன்

புதிய ஜெனிவாத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரை ராஜதந்திர ரீதியாக இது ஒரு பின்னடைவு. ஆனால் அதற்காக தமிழ் மக்களை பொறுத்தவரையில் இது ஒரு மகத்தான வெற்றி என்று கூற முன்வருவது உண்மையல்ல. அரசாங்கத்துக்கு எதிரானவை எல்லாம் தமிழ் மக்களுக்கு சாதகமானவை என்பது மிகவும் எளிமையாக்கப்பட்ட தட்டையான ஒரு தர்க்கமே.

தீர்மானம் அரசாங்கத்துக்கு எதிரானது தான். ஆனால் அது தமிழ் மக்களுக்கு மகத்தான வெற்றி அல்ல. ஏனென்றால் தாயகத்திலிருந்து மூன்று தமிழ்த் தேசியக் கட்சிகளும் குடிமக்கள் சமூகங்களும் பாதிக்கப்பட்ட மக்களின் அமைப்புகளும் சேர்ந்து அனுப்பிய பொதுக் கோரிக்கைக்கு சாதகமான பிரதிபலிப்புகள் புதிய தீர்மானத்தில் பெருமளவுக்கு இல்லை எனலாம்.

இந்தத்தீர்மானத்தை நோக்கி அதிகம் உழைக்க தொடங்கியது புலம்பெயர்ந்த தமிழ் அமைப்பாகிய பிரித்தானிய தமிழர் பேரவைதான்(BTF). புலம்பெயர்ந்த தமிழ்ப் பரப்பில் உள்ள அமைப்புகளை ஒருங்கிணைத்து , அவர்கள் இந்த முயற்சியை முன்னெடுத்தார்கள். தாயகத்தில் இருக்கும் கட்சிகளையும் செயற்பாட்டாளர்களையும் ஒருங்கிணைத்தார்கள். ஜெனிவா கூட்டத்தொடர் தொடங்குவதற்கு சில மாதங்களுக்கு முன்னரே கடந்த ஆண்டின் இறுதியிலிருந்து பி.ரி.எப். இந்த முயற்சியில் ஈடுபடத்தொடங்கியது. இம்முயற்சிகளின் விளைவாக தாயகத்தில் மக்கள் பிரதிநிதிகளாக காணப்பட்ட ஒரு பகுதியினரை அவர்கள் தமது ஒருங்கிணைப்புக்குள் கொண்டுவந்தார்கள்.

எனினும் கூட்டமைப்பில் சம்பந்தர், சுமந்திரன், சாணக்கியன் ஆகிய மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களும் இம் முயற்சிக்கு ஒத்துழைக்கவில்லை. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை சேர்ந்த கஜேந்திரகுமாரும் கஜேந்திரனும் ஒத்துழைக்கவில்லை. அதாவது இரண்டு கட்சிகளின் தலைவர்களும் இம் முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில்தான் மன்னாரை மையமாகக் கொண்டியங்கும் தமிழ்த்தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவராகிய சிவகரன் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் மக்கள் அமைப்புகளைச் சேர்ந்த அன்னையரின் பின்பலத்தோடு தாயகத்தில் உள்ள சிவில் அமைப்புகளையும் ஒருங்கிணைத்து ஒரு முயற்சியை முன்னெடுத்தார்.

தாயகத்திலிருந்து முன்னெடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு மூன்று கட்சிகளும் சாதகமாக எதிர்வினை ஆற்றின. இம்முயற்சிகளுக்கு சமாந்தரமாக மற்றொரு முயற்சி கொழும்பை மையமாகக் கொண்டியங்கும் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்தின் தலைவரான பாக்கியசோதி சரவணமுத்துவால் முன்னெடுக்கப்பட்டது. மூன்று கட்சிகளும் இவ்விரு முயற்சிகளுக்கும் பொதுவாக ஒத்துழைப்பு வழங்கிய பின்னணியில் முடிவில் சிவில் சமூகங்களின் அனுசரணையோடு ஒரு பொது ஆவணம் தயாரிக்கப்பட்டது.

இந்த ஆவணம் ஒப்பீட்டளவில் தீவிரத் தன்மை அதிகம் உடையது. இந்த ஆவணத்தின் பிரதான கருப்பொருள் எதுவெனில் பொறுப்புக்கூறல் விடயத்தில் ஜெனிவாத் தீர்மானங்கள் வெற்றி பெறவில்லை என்பதே. 2015 ஐ.நா தீர்மானத்தின் பின் பொறுப்புக்கூறல் விடயத்தில் அரசாங்கத்தோடு சேர்ந்து உழைத்த கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் ஒரு விடயத்தை தெளிவாகச் சொன்னார். "கடந்த ஆறு ஆண்டுகளாக ஒரு பரிசோதனையில் ஈடுபட்டோம் அதில் வெற்றி பெறவில்லை என்பதால் இப்பொழுது பொறுப்புக் கூறலை ஜெனிவாவுக்கு வெளியே கொண்டு போகவேண்டும் என்று நாங்களும் கேட்கிறோம் "என்று.

எனவே பொறுப்புக்கூறலை ஜெனிவாவுக்கு வெளியே கொண்டு போக வேண்டும் என்று மூன்று கட்சிகளும் சிவில் அமைப்புகளும் கூட்டாக கோரிக்கையை முன்வைத்தன. இவ்வாறு தாயகத்தில் மூன்று தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஒன்றுபட்டு ஒரே குரலில் சிவில் சமூகங்களோடும் பாதிக்கப்பட்ட மக்கள் அமைப்புகளோடும் இணைந்து ஒரு பொதுக் கோரிக்கையை முன்வைத்தமை என்பது ஒரு மகத்தான அடைவாகப் பார்க்கப்பட்டது. இந்தக் கோரிக்கை வெளிவந்தபின் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் எழுத்துமூல அறிக்கையை வெளியிட்டார். அந்த அறிக்கை தமிழ் கட்சிகள் முன்வைத்த கோரிக்கைக்கு குறிப்பிடத்தக்க அளவுக்கு சமாந்தரமாகக் காணப்பட்டது. இவ்வாறான ஒரு பின்னணியில் ஜெனிவா தீர்மானத்தின் மீது தமிழ் தரப்புக்கள் ஏதோ ஒரு விதத்தில் செல்வாக்கைப் பிரயோகிக்கலாம் என்ற நம்பிக்கைகளும் ஒரு மூலையில் உருவாகின. ஆனால் புதிய தீர்மானம் அந்த நம்பிக்கைகள் மிகைப்படுத்தப் பட்டவை என்பதை நிரூபித்திருக்கிறது.

புதிய தீர்மானம் பொறுப்புக் கூறலை ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு உள்ளேயே தொடர்ந்தும் பேணுகிறது.

உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையை ஏற்றுக்கொள்கிறது.

நிலைமாறுகால நீதிக்கான முன்னைய தீர்மானங்களின் தொடர்ச்சியாகவே அது காணப்படுகிறது. மேலும் மூன்று கட்சிகள் கூட்டாக முன்வைத்த ஒரு கோரிக்கையில் சிரியாவில் உருவாக்கப்பட்டமை போன்ற ஒரு பொறிமுறையை உருவாக்க வேண்டும் என்று கேட்டிருந்தார்கள். அந்தப்பொறிமுறை சாட்சிகளையும் சான்றுகளையும் சேகரிப்பதற்கானது. சிரியாவில் அவ்வாறு உருவாக்கப்பட்ட பொறிமுறையானது ஐ.நா. பொதுச்சபையின் கீழேயே உருவாக்கப்பட்டது. அதுவும் இப்பொழுது அடுத்தடுத்த கட்ட வெற்றிகளைப் பெறவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

> ஒவ்வொரு தரப்பும் அதனதன் நிகழ்ச்சி நிரலின்படி தனியோட்டம் ஓடியிருக்கின்றன. இது தொடர்பில் ஒரு பொதுக்கட்டமைப்பை உருவாக்கி ஒரு பொது முடிவை எடுத்து , அப்பொதுமுடிவின் பிரகாரம் ஜெனிவா கையாளப்படவில்லை என்பதைத்தான் நடந்து முடிந்த ஜெனிவா கூட்டத் தொடரும் நிரூபித்திருக்கிறது.

இலங்கைக்கான புதிய தீர்மானத்தில் அப்படி ஒரு பொறிமுறைக்கான ஏற்பாடுகள் உண்டுதான். எனினும் அது எப்படிப்பட்ட பொறிமுறை என்பது தெளிவாகத் தெரிவிக்கப்படவில்லை. அது மனித உரிமைகள் பேரவைக்கு கீழ்ப்பட்டதாகவே தெரிகிறது. அதைவிட முக்கியமாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்குள்ள வரையறைகளின் பின்னணியில் வைத்து அதை பார்க்க வேண்டும். ஐ.நா. மனித உரிமைகள் பேரவையானது ஒரு நாட்டின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கும் ஆணையைப் பெற்றது அல்ல. ஒரு நாடு ஒத்துழைத்தால் மட்டுமே , அந்த நாட்டின் சம்மதத்தோடுதான் பேரவை எதனையும் அந்த நாட்டுக்குள் செய்ய முடியும். ஒரு நாட்டின் மீது பொருளாதார தடைகளை விதிக்கவோ தண்டனை விதிக்கவோ மனித உரிமைகள் பேரவைக்கு ஆணை கிடையாது. இப்படிப்பட்ட ஒரு பேரவைக்குக்கீழ் உருவாக்கப்படும் ஒரு தகவல் திரட்டும் பொறிமுறையானது குறைந்தபட்சம் சிரியாவில் உருவாக்கப்பட்டதைப் போன்றதும் அல்ல என்பது இங்கு சுட்டிக் காட்டப்பட வேண்டியது.

மேலும் இப்போதுள்ள இலங்கை அரசாங்கம் , முன்னைய அரசாங்கம் இணை அனுசரணை வழங்கிய தீர்மானத்திலிருந்து விலகுவதாக கூறி விட்டது. ஜெனிவா முன்னெடுப்புகளுக்கு எதிரான ஒரு நிலைப்பாட்டை கொண்டிருக்கிறது. எனவே இந்த அரசாங்கம் அப்படி ஒரு பொறிமுறைக்கு எந்தளவு தூரம் ஒத்துழைக்கும்? உள்நாட்டுக்குள் விசாரணையை எப்படி நடத்தும்? எனவே கூட்டிக் கழித்துப் பார்த்தால் தமிழ் கட்சிகளின் கோரிக்கையை, ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு சிறு வடிவமும் கூட, முழுமையாக நிறைவேற்றப் படவில்லை என்பதை இங்கு உற்றுக் கவனிக்க வேண்டும். எனவே புதிய தீர்மானம் தாயகத்திலிருந்து கட்சிகளும் சிவில் அமைப்புக்களும் விடுத்த கோரிக்கைக்கு சாதகமான பிரதி பலிப்புகளை காட்டவில்லை என்பதே மெய் நிலை ஆகும்.

ஆனால் தாயகத்தில் கூட்டமைப்பும் புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளும் அதில் அடைவுகள் இருப்பதாகக் கூறி அதற்கு உரிமை கோரும் ஒரு போக்கை காணக்கூடியதாக உள்ளது. இது விடயத்தில் புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புக்களுக்கும் கூட்டமைப்புக்கும் இடையே ஒருமித்த செயற்பாடு இருக்கவில்லை என்பதனை இக்கட்டுரையின் தொடக்கத்தில் கண்டோம்.

தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின் பி.ரி.எப் உட்பட ஐரோப்பாவை மையமாகக் கொண்டு இயங்கும் தமிழ் அமைப்புகளும் கனடாவில் இருக்கும் அமைப்புகளும் தெரிவிக்கும் கருத்துக்களை தொகுத்துப் பார்த்தால் ஒரு விடயம் தெளிவாகத் தெரிகிறது. கட்சிகளோடு பரிமாறிக்கொண்ட விடயங்களில் ஒரு பகுதி புதிய தீர்மானத்தில் காணப்படுகின்றது.

அத்தோடு பிரான்ஸை மையமாகக் கொண்டியங்கும் மற்றொரு அமைப்பின் உறுப்பினர் ஊடகங்களுக்கு வழங்கிய தகவல்களின்படி புதிய தீர்மானத்தை உருவாக்கும் பொருட்டு தமது அமைப்பு எப்படியெல்லாம் நாடுகளை நோக்கி லொபி செய்தது என்பதை குறிப்பிட்டிருக்கிறார்.

அதேசமயம் இரண்டு கட்சிகளோடு இணைந்து ஜனவரி மாதம் 15ஆம் திகதி ஒரு பொதுக் கோரிக்கையை முன்வைத்த கூட்டமைப்பு கிட்டத் தட்ட சில கிழமைகளுக்குள் ளேயே தலைகீழ் ஆகியது. ஜெனிவாத் தீர்மானத்தின் பூச்சிய வரைபு தொடர்பில் அந்தக்கட்சி கருத்துக்கூற மறுத்தது. அதன்பின் அந்தப்பூச்சிய வரைபு தொடர்ச்சியாக மாற்றங்களுக்கு உள்ளாகியபோது அக்கட்சி அது தொடர்பில் கருத்துகூற மறுத்தது. முடிவில் தீர்மானத்தை அக்கட்சி ஆதரித்தது. அத்தீர்மானத்தில் தான் ஏனைய இரண்டு கட்சிகளோடு இணைந்து அனுப்பிய கோரிக்கைகளில் சில மறைமுகமாக நிறைவேற்றப் பட்டிருப்பதாக ஒரு பொருள் கோடலையும் செய்கிறது. இவை அனைத்தையும் தொகுத்துப் பார்த்தால் ஒன்று தெளிவாகத் தெரிகிறது. புதிய தீர்மானத்தை உருவாக்கும் முயற்சிகளில் புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளும் கூட்டமைப்பும் ஏதோ ஒரு விகிதமளவுக்கு பங்களிப்புச் செய்திருக்கின்றன. ஆனால் இந்த பங்களிப்புக்கள் ஒன்றிணைக்கப்பட்ட ஒரு பொதுக் கட்டமைப்பால் ஒரு பொது

05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. தீர்மானமும் இந்திய இராஜதந்திரமும்



○ அ.நிக்ஸன்

இலங்கையைச் சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டுமெனஜெனிவா மனித உரிமைச் சபையின் ஆணையாளர் உறுப்பு நாடுகளுக்கு வழங்கிய பரிந்துரை உறுப்பு நாடுகளினால் பரிசீலிக்கப்படவேயில்லை என்பது வெளிப்படை. ஏனெனில் மனித உரிமைச் சபையின் இலங்கை குறித்த தீர்மானம் அதனைப் பகிரங்கப்படுத்தியுள்ளது. கடந்த நவம்பர் மாதம் ஆணையாளர் உறுப்பு நாடுகளுக்கு வழங்கிய பரிந்துரையும் வெறுமனே இலங்கை அரசாங்கத்தை எச்சரிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டதொரு கருவி மாத்திரமே. அந்தப் பரிந்துரையின் பிரகாரம் உள்ளக ரீதியாக இலங்கை அரசாங்கத்துடன் தமது புவிசார் அரசியலுக்குத் தேவையான விடயங்கள் அனைத்தையும் பேசி முடித்தவொரு நிலையிலேயே மனித உரிமைச் சபையில் சென்ற செவ்வாய்க்கிழமை தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்ற முடிவுக்கு வரலாம்.

இன அழிப்பும் அதற்கான சர்வதேச விசாரணையும் பொது ஆவணம் ஒன்றின் மூலம் தமிழ்த்தேசியக் கட்சிகளினால் கோரப்பட்டிருந்தன. ஆனால் அந்தப் பொது ஆவணமும் மனித உரிமைச் சபையில் விவாதிக்கப்படவில்லை. அல்லது உறுப்பு நாடுகள் அந்தப் பொது ஆவணத்தை ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளவில்லை என்றும் கருதலாம். ஆக இந்தோ பசுபிக் பிராந்தியப் பாதுகாப்பு அடிப்படையில் மாத்திரமே ஜெனீவாவில் இலங்கை விவகாரம் கையாளப்பட்டிருக்கின்றது என்பது தெளிவு.


2012 ஆம் ஆண்டு முதல் 2019 ஆண்டு வரை அமெரிக்கா கையாண்டது போன்று இந்த ஆண்டு ஜெனிவாவில் இலங்கை விவகாரத்தை பிரித்தானியா கையாண்டிருக்கிறது. இந்த இரு நாடுகளுமே பூகோள அரசியல் செயற்பாடுகளில் ஒரேபுள்ளியில் நின்று செயற்படுவதால், இந்தோ பசுபிக் பிராந்திய நலனை மாத்திரம் பிரதானமாகக் கொண்டு இம்முறை பிரித்தானியாவும் இலங்கை விவகாரத்தைக் கையாண்டிருக்கிறது. அதுவும் இந்திய மத்திய அரசின் ஆலோசனையோடுதான் இம்முறையும் ஈழத்தமிழர் விவகாரம் ஜெனீவாவில் பேசப்பட்டிருக்கிறது என்பது கண்கூடு.

ஈழத்தமிழர்கள் கோரிய இன அழிப்புக்கான சர்வதேச விசாரணைப் பொறிமுறை, வடக்குக் கிழக்கு இணைந்த சுயநிர்ணய உரிமை பற்றிய வாசகங்கள் முற்றாக நீக்கம் செய்யப்பட்டு அமெரிக்கா, பிரித்தானிய மற்றும் இந்தியா போன்ற நாடுகள் தாம் நினைத்ததை மாத்திரம் தீர்மானத்தில் புகுத்தியிருக்கின்றன. இப்படித் தாம் நினைத்ததையே தீர்மானத்துக்குள் கொண்டு வருவதென்றால், தமிழ்த்தேசியக் கட்சிகள் மற்றும் சில தமிழ் சிவில் அமைப்புகள் மூலமாகப் பொது ஆவணம் ஒன்று ஏன் தயாரிக்கப்பட்டது என்ற கேள்விகளும் எழாமலில்லை.

அந்தப் பொது ஆவணம் தயாரிக்கப்பட்டபோதுகூட ஈழத்தமிழ் மக்கள் நேரடியாகக் கோருகின்ற இன அழிப்புக்கான சர்வதேசப் பொறிமுறை, மற்றும் சுயநிர்ணய உரிமை பற்றிய கோரிக்கைகள் பெரும் இழுபறிக்கு மத்தியில் பத்தோடு பதினொன்றாகவே குறிப்பிடப்பட்டிருந்தன. அவ்வாறு நேரடியாகக் கோராமல் இலங்கை அரசாங்கத்தையும் கொஞ்சம் ஆசுவாசப்படுத்தும் வகையிலும் பொது ஆவணம் இருக்கருக்கவில்லை. ஆகவே ஜெனிவா அமர்வுக்கு முன்னரான கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பிருந்தே மார்ச் மாத அமர்வில் எப்படி இலங்கை விவகாரத்தைக் கையாள்வது என்பதும் எந்த அடிப்படையில் ஈழத்தமிழ் மக்களைச் சமாளிப்பது என்பது குறித்தும் இந்தியாவை மையப்படுத்திய வல்லாதிக்க நாடுகள் நன்கு திட்டமிட்டுச் சிலாகித்திருக்கின்றன. அதன் வெளிப்பாடே மனித உரிமைச் சபையின் இந்தத் தீர்மானம்.

வேண்டும் என்ற பிரித்தானிய வெளியுறவு அமைச்சின் ஆலோசனைகளுக்கு அமைவாகவும் அதேவேளை, ஈழத்தமிழ் மக்களிடம் தமது உள்நோக்கத்தைப் பிடி கொடுக்காமலும் பொது ஆவணம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

அப்படிக் கடுமையாக இல்லாமல் குறைந்தபட்சக் கோரிக்கையாக 'ஐ.சி.சி' எனப்படுகின்ற சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கையைப் பாரப்படுத்த வேண்டும் என்பதை முக்கியப்படுத்திய தமிழ்த்தேசியக் கட்சிகளின் பொது ஆவணம்கூட உறுப்பு நாடுகளினால் கவனத்தில் எடுக்கப்படவில்லை என்பதையே மனித உரிமைச் சபையின் தீர்மானம் வெளிப்படுத்தியிருக்கின்றது. சர்வதேசப் பிரதிநிதிகளினால் இலங்கை கண்காணிக்கப்படும் என்பது உள்ளிட்ட விடயங்கள் தீர்மா னத்தில் இருந்தாலும் பாதிக்கப்பட்ட ஈழத்தமிழர்களின் கோரிக்கைகள், அவர்கள் எதிர்பார்க்கின்ற சர்வதேச நீதி அந்தத் தீர்மானத்தில் இல்லை என்பதும் இங்கு விவாதத்துக்குரியது.



மனித உரிமைச் சபையில் இலங்கை குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் இலங்கையில் இடம்பெற்றுவரும் மனித உரிமைகள் தொடர்பான ஐ.நா.வின் கண்காணிப்பு நடவடிக்கைக்கு உதவுவதாக கனடா உடனயாகவே அறிவித்துள்ளது. கனேடிய வெளிவிவகார அமைச்சர் மார்க் கார்னியோ வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஆனால் அந்தக் கண்காணிப்பு என்பது பாதிக்கப்பட்ட ஈழத்தமிழர் நலன் சார்ந்து இருக்குமா என்பது கேள்வியே. ஏனெனில் தீர்மானத்தின் பிரகாரம் கண்காணித்தல் என்பது, இலங்கை வல்லாதிக்க நாடுகளுக்கு ஏற்றவாறு இந்தோ பசுபிக் பிராந்தியப் பாதுகாப்பு விடயத்தில் நகர்வுகளை முன்னெடுக்கின்றதா என்பதையே குறிக்குமென எதிர்பார்க்கலாம்.

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றை உறுதிப்படுத்த சர்வதேச சமூகத்தின் தொடர்ச்சியான ஆதரவை பிரதிபலிக்கும் வகையில் மனித உரிமைச் சபையின் தீர்மானம் அமைவதாகவும் கனடா நம்பிக்கை வெளியிட்டுள்ளது. ஆகவே ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை குறித்த விவகாரங்கள் நீக்கம் செய்யப்பட்டு இலங்கை மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் என்பது மாத்திரமே பேசப்படுகின்றது. இதனையே கனடா வெளிப்படுத்துகின்றது. அமெரிக்கா, பிரித்தானியா ஆகிய நாடுகளின் நட்பு நாடுதான் கனடாவும்.

இலங்கை அரசு என்ற கட்டமைப்பும் அதன் அரசியல் யாப்பும் ஒற்றையாட்சித் தன்மை கொண்டதென்றோ, ஏனைய இனங்களுக்கும் அதிகாரப்பங்கீடு அவசியமானதென்றோ எந்தவொரு கருத்துக்களும் தீர்மானத்தில் இல்லை. பொறுப்புக்கூறல், மனித உரிமைகளை உறுதிப்படுத்தல் என்பதன் மூலமாக ஒட்டுமொத்த இலங்கைத் தீவின் ஜனநாயகம் பற்றியே தீர்மானம் பேசுகின்றது. இதன்மூலம் ஈழத்தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை மறுதலிக்கப்படுகின்றது. இதற்காகவே இன அழிப்பு என்பதை மனித உரிமைச் சபை பேச விரும்பவில்லை. ஆணையாளர் உறுப்பு நாடுகளுக்கு வழங்கியிருந்த பரிந்துரையில் சர்வதேச நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்த வேண்டுமெனக் கூறப்படுகின்றதே தவிர இன அழிப்புக்கான சர்வதேச விசாரணை என்ற வாசகம் பரிந்துரையில் இருந்தி

13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திலும் கூறப்பட்டிருந்தது. அப்போது மன்மோகன் சிங் இந்தியப் பிரதமராக இருந்தார். அந்த ஆண்டு இடம்பெற்ற வாக்கெடுப்பிலும் இந்தியா கலந்துகொள்ளாது விலகியது. அதற்கும் நடுநிலை என்று காரணமும் கூறப்பட்டிருந்தது. இந்த ஆண்டும் அப்படித்தான் இந்தியா செய்திருக்கிறது. ஆக இந்தியாவில் எவர் பிரதமராக இருந்தாலும் ஈழத்தமிழர்கள் குறித்த விடயத்தில் ஒரே கொள்கையைத்தான் இந்தியா பின்பற்றி வருகின்றது என்பதும் இதன் மூலம் வெளிப்படுகின்றது.

இந்தோ பசுபிக் பாதுகாப்பு விவகாரத்தில் இந்தியாவின் ஒத்துழைப்பு பிரதானம் என்பதால் ஈழத்தமிழர்கள் விடயத்திலும் இந்தியாவின் கருத்துக்கே அமெரிக்கா, பிரித்தானியா போன்ற வல்லாதிக்கா நாடுகளும் செவிசாய்க்கின்றன. 2002 ஆம் ஆண்டு நோர்வேயின் ஏற்பாட்டோடு இடம்பெற்ற பேச்சுவார்த்தையின்போதும் இந்தியா சொல்வதைக் கேட்டே வல்லரசு நாடுகள் இயங்கியிருந்தன. இறுதியாக ஜப்பான் தலைநகர் ரோக்கியோவில் இடம்பெற்ற இணைத்தலைமை நாடுகளின் கூட்டத்தில் புலிகள் கலந்து கொள்ள மறுத்ததை மையமாகக் கொண்டே அதற்கு அடுத்த கட்ட அனைத்து நகர்வுகளும் செயழிலக்கும் நிலை உருவாகியிருந்தது. இந்த இணைத் தலைமை மாநாட்டில் இந்தியா இல்லை. ஆனாலும் அதன் பின்னணியில் இந்தியா செயற்பட்டிருந்ததாகவே அன்றைய அவதானிப்புகள் வெளிப்படுத்தியிருந்தன.

இந்தோ- பசுபிக் பிராந்தியத்தில் தன்னை முன்னிலைப்படுத்த விரும்பும் இந்தியாவுக்குச் சீனாவின் இலங்கை மீதான ஆதிக்கத்தையோ அல்லது ஆசியப் பிராந்தியத்தில் சீனா இராணுவ நோக்கில் மேற்கொண்டு வரும் பொருளாதாரஅபிவிருத்தித்திட்டங்களையோ தடுக்க முடியவில்லை. இதனாலேயே அமெரிக்காவை இந்தியா சார்ந்து செயற்படுகின்றது என்பதும் ஈழத்தமிழர் விவகாரத்தை முற்றாகவே நீக்கம் செய்ய முற்படுகின்றதென்பதும் வெளிப்படை.

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# 40 இற்கான கவிதைகள்

## பரிசு பெறும் கவிதை

உயிருள்ள வரை
ஊரான் ஆக்கியதை
உண்டு களிக்காது...
உண்பதைவிட அதிகமாய்
உற்பத்தி செய்யணும்
என்ற வாஞ்சையுடன்
தள்ளாடும் வயதிலும்
தன்கரத்தில்
தளராத ‘ நம்பிக்..கை..
ஊன்றி
உற்பத்திப் புரட்சி
செய்யுமிவரே...
உண்மை உழைப்பாளி...
பொருளாதாரத்தின்
பங்காளி...

**த.சிவா**, அல்வாய்

---

உடல் இளைத்தாலும்
உள்ளம் இளைக்கவில்லை
வயற் காற்றோடும்
சேற்று நீரோடும்
எம் உழைப்பு என்றும்
இளைத்திடாது

**வ.ஷஜி** , கோண்டாவில்

---

தள்ளாடும் வயதினிலே
தடி ஊன்றி
தன்மானம் ஒன்றே
தருமதி என்று
தணியாத வெய்யிலிலும்
தளராத துணிவோடு
தன் உழைப்பில்
தாங்கியே முதியவர்.

**இரா.கௌரிபாலா**
வதிரி

---

ஏர் பிடித்த கரம் – இன்று
கோல் பிடித்த வேளையிலும்
உன் கரம் கொண்ட மண்வெட்டி
நின் புகழ் பரப்பும் கைகொட்டி
உன் தலைமுடியின் வண்ணம் கூட
காட்டும் உன் கைவண்ணம்
நீ கடந்து வந்த பாதை கூறும்
ஒரு விவசாயியின் புகழை மேலும்

**சாளினி**
யாழ்ப்பாணம்

---

இயற்கை அழகு வனப்பூட்டும்
பசுமை எழில் வயல் காட்டில்
வஞ்சம் இல்லா நெஞ்சுடன்
வெள்ளை வேட்டி மடித்துக்கட்டி
முதியவரின் வறுமை ஓங்க
ஓய்வதிலும் உழைப்பு காட்டும்
பஞ்சம்மில்லா நேசத்துடன்
பயிர் வளர்க்கும் தேசச்சுடர்

**மதுசுதன்**, வற்றாப்பளை

---

முதுமைப் பருவ
முதிர் சிந்தனை
முகத்தில்
ஊன்று கோல்
துணையென்றாலும்
ஓய்ந்திடாத இள மனது
கை மண்வெட்டியுடனே
வயல் வரம்பில் நடைபோடும்
ஐயாவின் உயர் உழைப்பு
இன்றைய
தலைமுறைக்கு
எடுத்துக்காட்டு

அம்பிகை சண்முகலிங்கன்

---

உன்னை
மூழ்கடிக்கவில்லை
வீட்டினுள்
நடையின் போது
கால் தளரினும்
மண்வெட்டி பிடித்த
கைமட்டும் தளரவில்லை
உன்பிள்ளை உன்னை
கைவிடினும்
உன் உயிரில் கலந்த
விவசாயம்
உலகத்தை காத்திடும்

**சுதாகரன்**, மயிலிட்டி

---

முற்றி வளர்ந்த நெற்கதிர்கள்
காற்றில் ஆடும் எழில் கோலம்
பசுமை இனிமை இன்பம் தரும்
ஓய்வதிலும் உழைப்பு காட்டும்
முதியவரின் கடமை உணர்ச்சி
வளரும் பயிரின் பருவம் பார்த்து
வரம்பு வெட்டி நீரும் பாய்ச்சி
பாரில் உயிர்கள் பஞ்சம் போக்கும்
காலம் என்றும் உன்னைப் போற்றும்

**கவிதா** வற்றாப்பளை

---

**கவிதைக்கு பரிசு 1000/=**

41



உங்கள் கவிதைகள் எங்கள்
கதவைத் தட்ட
வேண்டிய கடைசி நாள்:
**02.04.2021**

அனுப்ப வேண்டிய முகவரி:
**உதயன் சஞ்சீவி**
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் முகவரி: sanjeevi@uthayan.com
0773165555

---

○ மௌனா

# மணிக்கதை



## போக்கிடம்

ஒரு மாடிவீட்டுக்காரரின் பழைய வெளிநாட்டுச் சப்பாத்தும் ஒரு குச்சு வீட்டுக்காரனின் பழுதடைந்த செருப்பும் ஒரே குப்பைக்குள் வீசப்பட்டுக்கிடந்தன.
செருப்பு, சப்பாத்திடம் கேட்டது....
“உன் பெயரென்ன விலாசமென்ன, கடைசியில் உனக்கும் இந்த இடம் தானா கிடைத்தது?
“பெயர் விலாசத்தில் என்ன இருக்கிறது? செத்துப்போனால் சவம் .உபயோகமற்றுப் போனால் குப்பை.... இது தான் பொதுவிதி” என்று சுடலை ஞானம் பேசியது சப்பாத்து.



## ஆத்மதீபம்

சுடலை காப்போனின் மனைவி இறந்துவிட்டாள். அடுக்கப்பட்ட சிதைக்கு தீ மூட்டிவிட்டு வந்து சுடலையையொட்டி இருந்த குடிசை வாசலில் கலங்கியபடி இருந்தான் அவன்.
இருளின் ஆளுகையில் சுவாலை விட்டு எரியும் சிதையில் அவன் மனமும் இணைந்து கொண்டிருந்தது. குடிசைக்குள் விளக்கேற்ற நெருப்புப் பெட்டியைத் தேடினாள் அவன் மகள். கிடைக்கவில்லை பார்த்துக்கொண்டிருந்த அவளின் கடைசித்தம்பி விளக்கை எடுத்துச்சென்று எரிந்து கொண்டிருக்கும் தாயின் சிதையில் அதனை ஏற்றிவந்து வைத்தான் . மகனின் செய்கையை அதிர்ச்சியுடன் பார்த்துக்கொண்டிருந்த தந்தைக்கு அந்தச் சுடரின் இறந்துபோன மனைவியின் முகம் ஜொலித்தது.



## கல்(வி)/அறிவு

அறிவு அவன் குருடன் பிச்சையெடுத்து ஜீவனம், வீதியோரத்து வாழ்க்கை அவன் முன்னிருக்கும் தகரக்குவளையில் சில்லறைகள் வீழும். சில்லறைப்புத்தி கொண்ட சிலர் கற்களையும் போடுவர்.
ஒரு நாள் கேட்டேன்” உனக்கு கற்களைப் பிச்சையாகப் போடுபவர்களை நீ ஏன் திட்டுவதில்லை?”
அவன் சொன்னான். “நான் இவர்களுக்காக இரக்கப்படுகின்றேன் . எனக்கு பார்வை மட்டும் தான் இல்லை . அவர்களுக்கு பார்வை இருந்தும் இதற்குள் போடவேண்டியது பணமா.. கல்லா என்று யோசித்துப் பார்க்கும் அறிவுமல்லவா இல்லாமல் போய்விட்டது”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெற்றியா? தோல்வியா?

O ந.பரமேஸ்வரன்

கடந்த செவ்வாய்கிழமை ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இலங்கையைக் கண்காணிப்பதை ஊக்குவிப்பதாக அமைந்துள்ளது.

2012 முதல் இலங்கைக்கு எதிரான சர்ச்சைக்குரிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தாலும், கடைசியாகக் கொண்டு வரப்பட்ட தீர்மானம் இலங்கை நிலவரம் தொடர்பாக கண்காணிப்பதையும் அறிக்கையிடுவதையும் ஊக்குவிப்பதாக அமைந்துள்ளது.

வருங்காலத்தில் மனித உரிமை மீறல்கள், பொறுப்புக்கூறல்கள்.தொடர்பான ஆதாரங்களை ஆய்வு செய்வதற்கும், பாதுகாப்பதற்கும் உரிய பொறிமுறையொன்றை உருவாக்குமாறு இந்தத் தீர்மானம் கூறுகிறது.

மனித உரிமை மீறல் மற்றும் குற்றங்கள் தொடர்பான சான்றுகளையும் தகவல்களையும் திரட்டி பொருத்தமான தந்திரோபாயங்களை பாவித்து யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பொறுப்புக்கூறுவதற்கான, நீதியை பெற்றுக்கொடுப்பதற்கான அங்கத்துவ நாடுகளின் ஆதரவை பெற்றுக்கொள்ளுமாறும் தீர்மானம் கூறுகிறது. ஐ.நா.சபையின் வரவு செலவுத்திட்டப்பணிப்பாளர் ஜொஹன்னர்ஸ் ஹுஸ்மன் (Johannes Huisman)






இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு 2,856,300 டொலர் தேவையெனக் கூறியுள்ளார். இந்த நிதி வரவு, 2022 ஆம் ஆண்டிற்குரிய செலவுத்திட்டத்திலேயே ஒதுக்கப்படும் எனவும் கூறியுள்ளார். இது ஐ.நா .பொறிமுறையின் அடுத்த கட்டத்துக்கு இந்தத் தீர்மானத்தை கொண்டு செல்லும். இது ஐ.நா.கட்டமைப்பில் இலங்கைக்கு அணுகுமுறை தொடர்பான சில சிக்கல்களை (Technical problems) ஏற்படுத்தும்.

இந்த தீர்மானத்துக்கு ஆதரவாக 22 வாக்குகளும் எதிராக 11 வாக்குகளும் கிடைத்துள்ளன 14 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. 11 நாடுகள் எதிராக வாக்களித்துள்ளன 25 நாடுகள் இந்த தீர்மானத்தை ஆதரிக்கவில்லை. என வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன கூறியுள்ளார். வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் விடுவதென்பது நடு நிலை வகிப்பதாகவே பொருள்படும்.

இந்தத் தீர்மானம் உடனடித் தீர்வை தமிழர்களுக்குத் தரா விட்டாலும், காலப்போக்கில் பல விடயங்களை நடைமுறைப்படுத்த வழி வகுக்கிறது. வாக்களிப்பு விடயத்தை எடுத்துக்கொண்டால் சகல நாடுகளும் தத்தமது நலன்கள் சார்ந்தே வாக்குகளை பிரயோகித்துள்ளதையும் அவதானிக்க முடிகிறது.

ஜப்பான் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் விட்டமைக்கு கடந்த ஆட்சியில் இந்திய அரசும் ஜப்பானும் இணைந்து செய்து கொள்ளப்பட்ட கிழக்கு முனைய ஒப்பந்தத்தை தற்போதைய அரசாங்கம் அமுல்படுத்தாமையே காரணம். இலங்கை முஸ்லிம்களின் ஜனாஸா எரிப்பு விவகாரத்தை புறந்தள்ளி பாகிஸ்தான், பங்களாதேஷ், உஸ்பெஸ்கிஸ்தான் போன்ற முஸ்லிம் நாடுகள் பிரதமர் மகிந்தவின் கோரிக்கையை ஏற்றுதீர்மானத்துக்கு எதிராக வாக்களித்துள்ளன. இந்த தீர்மானத்தின் மூலம் தெரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது என்னவெனில், ஐ.நா தீர்மானங்கள் நாடுகளின் நலன்கள் சார்ந்தே நிறைவேற்றப்படுகின்றன என்பது தான். இலங்கை முஸ்லிம்களின் கோரிக்கையை பாகிஸ்தான், பங்களா


Item 2: L.1/Rev.1 "Promoting reconciliation, accountability and human rights in Sri Lanka"

| | | |
|---|---|---|
| ARGENTINA | ERITREA | NETHERLANDS |
| ARMENIA | FIJI | PAKISTAN |
| AUSTRIA | FRANCE | PHILIPPINES |
| BAHAMAS | GABON | POLAND |
| BAHRAIN | GERMANY | REPUBLIC OF KOREA |
| BANGLADESH | INDIA | RUSSIAN FEDERATION |
| BOLIVIA (PLURINATIONAL STATE OF) | INDONESIA | SENEGAL |
| BRAZIL | ITALY | SOMALIA |
| BULGARIA | JAPAN | SUDAN |
| BURKINA FASO | LIBYA | TOGO |
| CAMEROON | MALAWI | UKRAINE |
| CHINA | MARSHALL ISLANDS | UNITED KINGDOM OF GREAT BRITAIN AND NORTHERN IRELAND |
| CÔTE D'IVOIRE | MAURITANIA | URUGUAY |
| CUBA | MEXICO | UZBEKISTAN |
| CZECH REPUBLIC | NAMIBIA | VENEZUELA (BOLIVARIAN REPUBLIC OF) |
| DENMARK | NEPAL | |

IN FAVOUR 22 · AGAINST 11 · ABSTAIN 14

தேஷ் போன்ற முஸ்லிம் நாடுகள் ஏற்றுக்கொள்ளவில்லை. "நீங்கள் வேண்டுமானால் உங்களது கிராமத்துக்கு இஸ்லாமாபாத் குடியிருப்பு என பெயர் சூட்டுங்கள் எமக்கு ஸ்ரீலங்கா தான் தேவை "என்பது போலவே இஸ்லாமிய நாடுகள் நடந்துள்ளன. (கிழக்கு மாகாணத்திலுள்ள ஒரு முஸ்லிம் கிராமத்துக்கு இஸ்லாமாபாத் குடியிருப்பு என பெயர் சூட்டப்பட்டுள்து. ) இலங்கையின் நீண்ட கால நட்பு நாடான ஜப்பான் மேற்குலகத்தினதும் இந்தியாவினதும் அழுத்தங்களால் நடு நிலை வகித்துள்ளது.


இது இலங்கைக்கு ஒரு ஒரு பின்னடைவு என்றே கருத வேண்டும். இதே போல் இந்தோனேசியா, பஹ்ரைன் போன்ற முஸ்லிம் நாடுகளும் இலங்கை முஸ்லிம்களின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை என்று கருதலாம் .வாக்கெடுப்பில் மௌனம் சாதித்ததன் மூலம் இந்த நாடுகள் இலங்கை முஸ்லிம்களுக்கு சார்பாகச் செயற்படவில்லை எனக் கருதலாம்.

அதே வேளை இலங்கைக்கு ஆதரவளிக்காமல் விட்டதன் மூலம் தமது எதிர்ப்பைக் காட்டியுள்ளன என்றும் கருதலாம். மேற்குலகத்தை ஒதுக்கி விட்டு அல்லது புறந்தள்ளி விட்டு இலங்கையால் செயற்பட முடியாது என்பதையே இந்தத்தீர்மானம் எடுத்துக்காட்டுகிறது. ஆயினும் தமிழர்களுக்கு சாதகமான பல அம்சங்கள் இந்தத் தீர்மானத்தில் அடங்கியுள்ளன . உடனடித் தீர்வைப் பெற்றுத்தரா விட்டாலும் காலப்போக்கில் பல சாதகமான விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இந்த தீர்மானம் வழிவகுக்கிறது . எனவே இந்தத் தீர்மானத்தை தமிழர்களனைவரும் வரவேற்பதே பொருத்தமானது.



## திருவள்ளுவரின் தேநீர்க்கடை

O இ.சு.முரளிதரன்




இரசாயனத் தாக்கங்கள் பல்வேறு தாக்க வீதத்தில் நிகழ்கின்றன. தாக்கவீதம் என்பது ஓரலகு நேரத்தில் நிகழும் மாற்றங்களின் அளவாகும். தாக்கவீதத்தில் பங்கு வகிக்கும் காரணிகளில் ஊக்கியும் ஒன்றாகும். இரசாயனத் தாக்கமொன்றில் தாக்கநெறியை மாற்றுவதனூடாக, அதனது தாக்க வீதத்தை அதிகரிக்கும் பதார்த்தமே 'ஊக்கி' என அழைக்கப்படும். இரசாயனத் தாக்கமொன்றில் தாக்கநெறியினை மாற்றுவதனூடாக, அதனது தாக்க வீதத்தைக் குறைக்கும் பதார்த்தம் 'நிரோதி' எனப்படும். உதாரணமாக ஐதரசன் பரஒட்சைட் திரவத்தோடு சங்கமித்த மங்கனீரொட்சைட் ஊக்கியாகவும், ஐதான சல்பூரிக்கமிலம் நிரோதியாகவும் செயலாற்றும். உயிரி ஒன்றில் நிகழும் சுவாசம், சமிபாடு, ஒளித்தொகுப்பு, புரதத் தொகுப்பு போன்ற பன்முக நிகழ்ச்சி நிரல்களின் வகிபாகமான நொதியங்களும் ஊக்கிகளாகவே அமைகின்றன.

தமிழர்களின் தொன்மப் பண்பாடாக விருந்தோம்பல் அமைந்துள்ளது. விருந்து வழங்கியின் முகபாவமானது மகிழ்நெறியில் அமையும் போது விருந்தினருக்கு ஊக்கியாகப் புலப்படும். விருந்து வழங்கியின் முகபாவமானது சற்றுத் திரிந்து மாறுபட்டால் நிரோதியாகி விடுகின்றது. அதிதி உளநெருடலுக்கு உள்ளாகிறார். மென்மையான தன்மைமிகு அனிச்சமலர் மோப்ப வெப்பத்திலே வாடுவதைப் போல விரோத முகமாற்ற நிரோதியால் விருந்தினரும் வாடிவிடுவர் எனத் திருவள்ளுவர் 90 ஆவது குறட்பாவிலே பதிவு செய்கின்றார்.

"மோப்பக்குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து"

# ஜெனிவாத்...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

வான வெளியுறவுக் கொள்கையின் அடிப்படையில் கூடித் தீர்மானித்து எடுக்கப்பட்ட முடிவுகளின் பிரகாரம் முன்னெடுக்கப்பட்டதா? என்பதே இங்குள்ள பாரதூரமான கேள்வியாகும்.

ஒவ்வொரு தரப்பும் அதனதன் நிகழ்ச்சி நிரலின்படி தனியோட்டம் ஓடியிருக்கின்றன. இது தொடர்பில் ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்கி ஒரு பொதுமுடிவை எடுத்து , அப்பொதுமுடிவின் பிரகாரம் ஜெனிவா கையாளப்படவில்லை என்பதைத்தான் நடந்து முடிந்த ஜெனிவா கூட்டத்தொடரும் நிரூபித்திருக்கிறது. இது ஒரு பாரதூரமான நிலைமை.தமிழ் மக்கள் தொடர்பில் யார் யாரோ முடிவெடுக்கிறார்கள். தமிழ் மக்கள் தொடர்பில் யார் யாரோ தீர்மானங்களை எழுதி ஒரு உலகப் பொது அரங்கில் நிறைவேற்றுகிறார்கள். தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக அம்பாசிடர்களாக யார் யாரோ உலகம் முழுதும் தங்களை காட்டிக் கொள்கிறார்கள். நாடுகளை நோக்கி லொபி செய்தோம் என்று கூறும் அமைப்புக்கள் இது தொடர்பில் எங்கே பொது முடிவை எடுத்தன?அந்த முடிவு எந்த அடிப்படையில் எடுக்கப்பட்டது? எந்த வெளியுறவுக் கொள்கையின் பிரகாரம் எடுக்கப்பட்டது? இது தொடர்பில் ஒரு மையத்திலிருந்து முடிவுகள் எடுக்கப்பட்டனவா?

இல்லை.இது மிகப்பாரதூரமான ஒரு வெற்றிடம்.தமிழ்த்தரப்பு தொடர்ந்தும் சிதறிக் காணப்படுகிறது என்பதைத்தான் நடந்துமுடிந்த ஜெனிவா கூட்டத்தொடர் நிரூபித்திருக்கிறதா? இந்த வெற்றிடத்துக்கு காரணம் தாயகத்திலுள்ள கட்சிகளே. அவை தங்களுக்கிடையே ஒரு பலமான பொதுக்கட்டமைப்பை உருவாக்க தவறிவிட்டன. இந்த மையத்தில் இருந்து புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளை ஒருங்கிணைக்க தவறிவிட்டன.ஜெனிவா அரங்கு எனப்படுவது புலம்பெயர்ந்த தமிழ்ப்பரப்பிலேயே அமைந்திருக்கிறது. அதனால் புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகள் அந்த அரசியலை கடந்த 12 ஆண்டுகளாக முன்னெடுத்து வந்தமை இயல்பானது.ஆனால் மையம் தாயகத்தில்தான் இருக்க வேண்டும். தாயகத்திலிருந்து புலம்பெயர்ந்த தமிழ்த்தரப்பை ஒருங்கிணைக்க வேண்டும். தாயகத்தில் இருக்கும் மையம் அதற்குரிய தகைமையோடும் தயாரிப்புகளோடும் இருக்க வேண்டும்.அப்படி இல்லாத ஒரு வெற்றிடத்தில்தான் ஜெனிவா அரசியலை தமிழ்த்தரப்பு 12ஆண்டுகளின் பின்னரும் ஒருங்கிணைப்பின்றிக் கையாண்டிருக்கிறதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் சஞ்சீவி
28 மார்ச் 2021

○ சூழியன்

# அறிந்தும் அறியாமலும்



## பறிபோகுமா பதவி?

வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகேவின் செயற்பாடுகளை ஆளுங்கட்சி உறுப்பினர்களே வெளிப்படையாக விமர்சிக்க தொடங்கியுள்ளனர். குறிப்பாக அவரது அவசர புத்தியாலேயே இந்தியாவின் ஆதரவு கைநழுவிப்போனது என டிலான் பெரேரா எம்.பி. விமர்சித்தார். அத்துடன், எதிரணி எம்.பிக்களும் விமர்சனக் கணைகளைத் தொடுத்துவருகின்றனர்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விவகாரம் தொடர்பில் முன்வைக்கப்பட்ட பிரேரணை மேலதிக 11 வாக்குகளால் கடந்த 23 ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது. பிரேரணைக்கு ஆதரவாக 22 நாடுகளும், எதிராக 11 நாடுகளும் வாக்களித்ததுடன், 14 நாடுகள் நடுநிலை வகித்தன. இதில் இந்தியா, ஜப்பான், நேபாளம், இந்தோனேசியா, பஹ்ரைன் ஆகிய நாடுகள் நடுநிலை வகித்தமையானது இலங்கைக்கு இராஜதந்திர மட்டத்தில் ஏற்பட்ட தோல்வியாகவே கருதப்படுகின்றது. குறிப்பாக இந்தியா நடுநிலை வகித்தாலேயே நேபாளம், ஜப்பான் ஆகிய நாடுகளும் அதே வழியில் பயணித்தன.

எனவேதான் இந்தியாவின் ஆதரவை பெறுவதற்கு ஆரம்பம் முதலே இலங்கை முனைப்பு காட்டியது. மறுபுறத்தில் தமிழகத்தில் தேர்தல் நடைபெறுவதால் இந்தியாவுக்கு முடிவெடுப்பது கடினம் என முன்கூட்டியே வெளிவிவகார அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டதுடன், மேற்குலகையும் கடுமையாக விமர்சித்தார்.

இந்நிலையில்தான் தற்போது விமர்சனத்துக்குள் சிக்கியுள்ளார் வெளிவிவகார அமைச்சின் செயலாளர். அரச உயர்மட்டத்துக்கு நெருக்கமானவர் என்பதால் அவரின் பதவியில் மாற்றம் வருமா என்பதை உறுதியாக கூறமுடியாது. மறுபுறத்தில் அமைச்சு இருந்தால்கூட அமைச்சின் செயலாளரே அதிகாரம்மிக்கவராக காணப்படுகின்றார் என சம்பிக்க ரணவக்க விமர்சித்துள்ளார்.



## விலகியது வியூகம்

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், தன்னைத்தானே தேசப்பற்றாளராக அடையாளப்படுத்திக்கொள்பவருமான அமைச்சர் விமல் வீரவன்சவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்படவிருந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை கைவிடப்பட்டுள்ளது.

இனங்களுக்கிடையில் குரோதத்தை விதைக்கும் விதத்தில் இனவாதத்தைக் கக்குதல் உட்பட மேலும் சில குற்றச்சாட்டுகளை மையப்படுத்தியே குறித்த பிரேரணை அதிஉயர் சபையில் சமர்ப்பிக்கப்படவிருந்தது. சஜித் அணியின் பின்வரிசை எம்.பிக்கள் சிலரே இதற்கான நகர்வுகளை முன்னெடுத்திருந்தனர். ஆளுங்கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள்கூட விமலை விளாசித் தள்ளுவதால், நம்பிக்கையில்லாப் பிரேரணையை இலகுவில் நிறைவேற்றிக் கொள்ளலாம் எனவும், அவ்வாறு முடியாமல் போனால் அரசின் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்துக்காவது சவால் விடுக்கலாம் என்பதே அவர்களின் எதிர்பார்ப்பு.

ஆனால் தற்போதைய அரசு பல வழிகளிலும் இறுகியுள்ளது. அரசுக்கு ஆலவட்டம் பிடித்த அமைப்புகள்கூட அதன் செயற்பாடுகளைச் சரமாரியாக விமர்சித்துவருகின்றன. அதுமட்டுமல்ல பௌத்த தேரர்கள்கூட வெளிப்படையாகவே சொற்கணைகளைத் தொடுத்துவருகின்றனர். மறுபுறத்தில் அரச கூட்டுக்குள்ளும், வெளியிலும் பிரச்சினைகள் தலைவிரித்தாடமங தொடங்கியுள்ளன. இவ்வாறானதொரு பின்புலத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை முன்வைத்தால் பொதுவான பிரச்சினைகள் திசைதிருப்பப்படக்கூடும் எனவும், பிளவுபட்டுள்ள அரச கூட்டணி ஐக்கியமாகக்கூடும் எனவும், அது வருகின்ற தேர்தலில் அரசுக்கும், விமலுக்கும் சாதகமாக அமையக்கூடும் எனவும் பின்வரிசை எம்.பிக்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்தே நம்பிக்கையில்லாப் பிரேரணை கைவிடப்பட்டுள்ளது. எனினும், அரசுக்கு எதிராக பல வழிகளிலும் போராடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## அதிரடிக்கு தயார்?

மலையக மக்கள் முன்னணியிலிருந்து நீக்கப்பட்டுள்ள அரவிந்தகுமார் எம்.பி., வெகுவிரைவிலேயே புதியதொரு அரசியல் இயக்கத்தை கட்டியெழுப்பவுள்ளார் என அவருக்கு நெருக்கமான சிலர் தகவல் வெளியிட்டனர்.

அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டத்துக்கு ஆதரவு வழங்கிய அரவிந்தகுமாரை ஆரம்பத்திலேயே தமிழ் முற்போக்கு கூட்டணி இடைநிறுத்தியது. ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு மலையக மக்கள் முன்னணியிடம் ஒப்படைக்கப்பட்டது. இதன்படி விசாரணைகளை ஆரம்பித்த மலையக மக்கள் முன்னணி, 4 குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் அரவிந்தகுமார் எம்.பியை கட்சியை விட்டும், அவர் வகித்த அனைத்து பதவிகளில் இருந்தும் அதிரடியாக அண்மையில் நீக்கியது.

" தெரிந்து துரோகம் செய்தவர்களிடம் நியாயம் கேட்காதே, அவர்கள் செய்த தவறுக்கு ஆயிரம் பதில்களை சொல்வார்கள் என ஹிட்லர் குறிப்பிட்டுள்ளார். இதன்படி அரவிந்தகுமார் எம்.பியும் தெரிந்தே தவறு செய்துள்ளார்" என அரவிந்தகுமாரை முன்னணியின் தலைவர் வீ. இராதாகிருஷ்ணன் மறைமுகமாக அரவிந்தகுமாரை துரோகி என விமர்சித்தார்.

மலையக மக்கள் முன்னணியின் இந்த நகர்வால் சினமடைந்துள்ள அரவிந்தகுமார் எம்.பி., பதுளை மாவட்டத்தில் உள்ள முன்னணியின் ஆதரவாளர்களை தம்பக்கம் வளைத்து போட்டுள்ளார். கட்சித் தொண்டர்களுடன் அடுத்தக்கட்டம் குறித்து தீவிரமாக ஆலோசனை நடத்திவருகின்றார்.

இதன்பிரகாரம் விரைவில் புதியதொரு அரசியல் இயக்கத்தை அவர் கட்டியெழுப்பக்கூடும் எனவும், அதனை மையப்படுத்தியே தற்போது நகர்வுகள் இடம்பெறுகின்றன எனவும் தெரியவருகின்றது.



## ரணிலை வாழ்த்திய சஜித்தின் சகாக்கள்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது 72 ஆவது பிறந்த நாளை மிகவும் எளிமையான முறையில் வீட்டிலேயே கொண்டாடினார். ஆசிய பசுபிக் வலய பொருளாதாரம் தொடர்பில் புத்தகமொன்றை எழுதிவரும் ரணில் விக்கிரமசிங்க, அதிலேயே கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றார். அவ்வப்போது அரசியல் மற்றும் இதர நிகழ்வுகளில் பங்கேற்றும் வருகிறார்.

பிறந்தநாளன்று ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்பை ஏற்படுத்திய பிரதமர் மகிந்த ராஜபக்ச, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் அவருக்கு வாழ்த்துக்களை தெரிவித்ததுடன், அரசியல் விவகாரங்கள் தொடர்பிலும் கருத்துகளை பரிமாற்றியுள்ளனர். குறிப்பாக "எப்போது நாடாளுமன்றம் வருவீர்கள்?"என மகிந்த ராஜபக்ச வினவினாராம். அதற்கு புன்னகையை மட்டுமே ரணில் பதிலாக வழங்கினாராம். அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் சிலரும் ரணிலுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர். இது ஒருபுறம் இருக்கட்டும். நடைபெறவுள்ள மாகாணசபைகளுக்கான தேர்தலில் கூட்டணி அமைத்து போட்டியிடுவது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி கவனம் செலுத்தியுள்ளது. தேர்தலுக்கான கூட்டணி சாத்தியப்படாது என்ற போதிலும் தேசிய மட்டத்திலான நகர்வுகளின்போது இணைந்து செயற்படுவதற்கு இரு தரப்புகளும் பச்சைக்கொடி காட்டியுள்ளன.

## 30 ஆம் திகதி என்ன நடக்கும்?

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் விசேட மத்திய செயற்குழுக்கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி கட்சி தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் கூடவுள்ளது.

முக்கிய சில முடிவுகள் எடுக்கப்படவுள்ளதால் இக்கூட்டத்தில் கட்டாயம் பங்கேற்குமாறு செயற்குழு உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. ஆளுங்கட்சியில் பங்காளியாக அங்கம் வகித்தாலும் சுதந்திரக்கட்சி கடும் அதிருப்தியுடனேயே இருக்கின்றது. அரசியிலிருந்து வெளியேற வேண்டும் என ஒரு தரப்பு அழுத்தம் கொடுக்கும் அளவுக்கு பிரச்சினைகள் உச்சம் தொட்டுள்ளன.

இந்நிலையில் மாகாணசபைத் தேர்தலுக்காக வேட்பாளர்களிடமிருந்து முன்கூட்டியே சுதந்திரக்கட்சி வேட்புமனுக்களை கோரியுள்ளது. எனவே, அடுத்தக்கட்ட நகர்வு சம்பந்தமான காத்திரமானதொரு முடிவு இக்கூட்டத்தில் எடுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# நீயா வேணுல செய்யணும் குமாரு!!!!

தமிழகத்தில் சட்டமன்றத் தேர்தல் பரப்புரைகள் களைகட்டியுள்ளன. வாக்குகளுக்காக எந்த அளவுக்கும் இறங்கிச் செல்லத் தயார் என்று போட்டி போட்டு தங்கள் திறமைகளைக் காட்டி வருகின்றனர் வேட்பாளர்கள். மறுபுறத்தில் மேடையில் எதிர்த்தரப்பினரை கிழித்துக் தொங்க விட்டுக்கொண்டி ருக்கிறார்கள் சிலர். கிடைக்கும் சின்னச் சின்ன சந்தர்ப்பங்களையும் தவறவிடாது, அடித்தாடுகின்றனர் வேட்பாளர்கள். தேநீர் கடையில் தேநீர் போடுவது, தெருவோரக் கடைகளில் தேநீர் குடிப்பது, உணவு உண்பது, வயதானவர்களைக் கண்டால் காலில் விழுவது, குழந்தைககளைக் கண்டால் தூக்கிக் கொஞ்சுவது என்று தங்களுக்குத் தெரிந்த மொத்த வித்தைகளையும் இறக்குகின்றனர். அப்படி சில பிரபலமான வாக்குச் சேகரிக்கும் விநோதங்கள் இவை.

O மயூ





மக்கள் நீதி மய்யத்தின் தலைவரும் நடிகருமான கமலஹாசனும் தன் பங்குக்கு தேர்தல் வித்தைகள் காட்டத் தொடங்கிவிட்டார். அவர் போட்டியிடும் கோவை தெற்குத் தொகுதியில் முகாமிட்டுள்ள கமல், வாக்காளர்களைக் கவர ஆரம்பத்தில் ஹெலிகொப்டரில் கூட்டமேடைகளுக்கு வருவதை வழக்கமாக்கினார்.

கமலைப் பார்க்க என்றில்லாவிட்டாலும், ஹெலிகொப்டரைப் பார்க்கவாவது கூட்டம் வருமே என்பது அவரது கணக்கு. ஆனால் எப்போதும் ஹெலிகொப்டரையே நம்பிக் கொண்டிருந்தால், கடைசியில் குத்துவிளக்கில் தான் கணக்குப் பார்க்கவேண்டியிருக்கும் என்பதால், இப்போது திட்டத்தை மாற்றி காலையில் மக்களோடு மக்களாக நடைப்பயிற்சி செய்தல், ஓட்டோவில் பயணித்தல் என்று ரூம் போட்டு யோசித்து புதிய புதிய ஐடியாக்களோடு பிரசாரம் செய்கிறார் கமல். என்னவோ ஹெலிகொப்டருக்கு கொடுத்த காசில் கொஞ்சமாவது வாக்குகளாக மாறினால் சந்தோசம் தான்.



நாகபட்டினத்தில் துணி துவைத்து வாக்குச் சேகரிக்கின்றார் அ.தி.மு.க. வேட்பாளர் தங்க. கதிரவன். அ.தி.மு.கவின் தேர்தல் அறிக்கையில் உள்ள அம்மா சலவை இயந்திரத் திட்டத்தை மக்களுக்குக் கொண்டு செல்வதற்காகவே இதனைச் செய்கின்றேன் என்கிறார் அவர். என்னவாகவும் இருந்துவிட்டுப் போகட்டும். ஆனால் அவர் துணி துவைக்கும் காட்சிகள் இணையத்தில் வெளியாகி, மக்கள் மத்தியில் சிரிப்பை வரவழைத்திருக்கின்றன. தனக்கு தனக்கு என்றால் சுளகு படக்கு படக்கு என்று அடிக்குமாம் என்று சும்மாவா சொன்னார்கள்?




இன்னொரு புறத்தில் மேடைகளில் எதிரணியினரை வறுத்து எடுக்கிறார் நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான். செய்யூறு தொகுதி வேட்பாளரை ஆதரித்துப் பரப்புரை செய்த சீமான், அ.தி.மு.க., தி.மு.க. என்று வஞ்சகம் இல்லாது வறுத்து எடுத்தார்.

" நாட்டை ஆள்வர்களுக்கும் நீட் தேர்வை வையுங்கள். அப்போது தான் ஆள்பவர்களின் தகுதி தெரியும். சமூகம், பொருளியல், அறிவியல், புவியியல், வரலாறு, வேளாண்மை, இலக்கியம் போன்றவற்றை ஒரு பாடமாக கொண்டு வந்து, தேர்வு வையுங்கள், அப்போது தான் அமைச்சராக முடியும் என்று சொல்லுங்கள். எடப்பாடி, மோடி, செல்லூர் ராஜு, ராஜேந்திர பாலாஜி எழுதுவார்களா? இல்லை, பார்த்து எழுதியாவது ஸ்டாலின் பாஸ் ஆவாரா? "என்று சகட்டு மேனிக்கு போட்டுத் தாக்கியிருக்கிறார்.



இராயபுரம் தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் அமைச்சர் ஜெயக்குமார் தேர்தல் பரப்புரைக்குச் சென்றபோது, வீதியோரம் குழாய்க் கிணற்றில் தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்த பெண்ணைப் பாத்திருக்கிறார். உடனே அவருக்கு மனம் பதறிவிட்டது. ஓடிச் சென்று குழாய்க்கிணற்றில் அந்தப் பெண்ணுக்கு தண்ணீர் அடித்துக் கொடுத்திருக்கிறார். அதுமட்டுமல்ல எம்.ஜி.ஆர். தொப்பி அணிந்து சைக்கிள் ரிக்சாவில் சென்று வாக்கு கேட்கிறார் அவர்.



விருகம்பாக்கம் தொகுதி தி.மு.க. வேட்பாளர் பரப்புரைக்குச் சென்றபோது உணவகத்துக்குள் சென்று தனது திறமையைக் காட்டியிருக்கிறார். அங்கு தோசை சுட்டு வாக்குக் கேட்டிருக்கிறார் அவர். தங்கள் தலைவர் வட்ட வடிவமாகத் தோசை சுட்டுவிட்டார், என்ன ஒரு திறமை என்று அவருடன் நின்ற ஆதரவாளர்கள் காணொலிப் பதிவுகளை சமூக வலைத்தளங்களில் பரப்பி வருகின்றனர்.

போடிநாயக்கனூர் தொகுதியில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் தங்க. தமிழ்ச்செல்வன் வீடு வீடாகச் சென்று வாக்குச் சேகரித்து வருகின்றார். அங்குள்ள வீதி ஒன்றில் சென்று கொண்டிருந்த அவருக்கு, அங்கு வீதியோரக் "அயர்ன்" கடையைப் பார்த்ததும் தலையில் "பல்ப்" ஒளிர்ந்திருக்கின்றது. அந்தக் கடையில் இருந்த முதியவரிடம் நலன் விசாரித்த அவர் அவரிடம் அயர்ன் பெட்டியை வாங்கி ஆடை ஒன்றை அயர்ன் செய்து கொடுத்திருக்கிறார். என்ன செய்வது காவடியைத் தோளில் வைத்தாயிற்று ஆடித்தானே ஆக வேண்டும்.



இந்திய அரசியல்வாதிகள் என்றால் உடனே எமக்கு நினைப்பு வருவது அடுக்கடுக்கான வாகனத் தொடரணிதான். அரசியல்வாதிகளின் பயணத்துக்காக அங்கு போக்குவரத்தைக் கூடத் தடை செய்வார்கள். அப்படி ராஜாவாக இருந்த அரசியல்வாதிகளுக்கு இப்போது போதாத காலம் தான். தேர்தல் என்பதால் அவர்கள் தடாலடியாக காலடியில் விழுந்துவிட்டனர். தமிழகத்தின் துணை முதல்வர் ஓ.பன்னீர்ச்செல்வம் வீதியோர தேநீர்க் கடைக்கே வந்து தேநீர் அருந்தினார். அந்த ஒளிப்படங்களை அவரது கட்சியினர் பகிர்ந்து வருகின்றனர். அரசியலில் இதெல்லாம் சர்வ சாதாரணமப்பா என்று நீங்கள் நினைப்பது புரிகின்றது.

திருப்பூரில் தி.மு.க. வேட்பாளர் அ.நல்லதம்பி பாட்டுக்கு நடனமாடி வாக்குச் சேகரித்துள்ளார். மேளதாளத்துக்கு தனது வாகனத்தில் இருந்தபடி மக்களுடன் நடனமாடியிருக்கிறார் அவர். ஒரு கட்டத்தில் உற்சாகமடைந்த அவர் வாகனத்தை விட்டு இறங்கி மக்களுடன் சேர்ந்து குதித்துக் கும்மாளமிட்டார். என்ன செய்வது கழுதைக்கு வாழ்க்கைப்பட்டால் உதை பட்டுத்தானே ஆக வேண்டும்.



அ.தி.மு.க. வேட்பாளர் ராஜேந்திர பாலாஜி மோட்டார் சைக்கிளில் பயணித்து மக்களிடம் வாக்குக் கேட்டு வருகின்றார். மோட்டார் சைக்கிளில் செல்வதால் மக்களிடம் தான் எளிமையானவன் என்று நிரூபிக்க முயல்கிறார் போலும். ஆனால் இது அனைத்தும் தேர்தல் முடிவு வரும் மட்டும்தான் என்பதை அறியாதவர்களா மக்கள்?



ஏப்ரல் மாதம் 6ஆம் திகதி சட்ட மன்றத் தேர்தல் வாக்குப்பதிவு நடக்க இருக்கின்றது. மே 2 ஆம் திகதி முடிவுகள் வெளியாகிவிடும். இப்போது என்னதான் குட்டிக்கரணம் அடித்து வித்தை காட்டினாலும், மக்களின் மனங்களில் உள்ளது அப்போதுதான் தெரியும். இவற்றையெல்லாம் பார்க்கும் போது மனதில் உள்ளூர ஒரு பயம் இருந்து கொண்டுதான் இருக்கின்றது. ஏறக்குறைய தமிழக அரசியலைப் போலவே இங்குள்ளவர்களின் அரசியலும் மாறிக் கொண்டிருக்கின்றது. இதையெல்லாம் பார்க்கும் எங்கள் அரசியல்வாதிகளும் இதேபாணியில் இறங்கிவிட்டால் தாங்க முடியாதடா சாமி!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புதிர்மலை மர்மங்கள் 36

மாயன்

ஆபத்து என்னவென்று அறியும் மட்டுமேபயமிருக்கும். துணிந்து விட்டால் பயம் கூட பஞ்சணை மெத்தைதான். அந்தப் போர்க் குணம் புதிர்மலைப்பகுதி யில் சிக்கிக் கொண்டிருந்த அனைவரிடமும் இருந்தது. அதனால் என்னதான் ஆபத்து வந்தாலும் புதிர்மலை யின் மையப்பகுதியான நாகமலைக்குச் சென்று, காலச்சக்கரத்தை மீட்டு வருவது என்று அனைவரும் திடசங்கற்பம் பூண்டனர்.

இளவரசர்கள் தங்கள் உறைகளில் இருந்த வாள்களை கையில் எடுத்து கூர்மை பார்த்துக் கொண்டனர். அதற்கிடையே செல்வன் " சற்றுப்பொறுங்கள், இதோ வருகின்றேன் என்று எங்கோ ஓடிச் சென்றான்.

அவன் எங்கு அவ்வளவு அவசரமாகப் போகின்றான் என்பது எவருக்கும் புரியவில்லை.

"இயற்கை உபாதையாக இருக்கும் என்று கேலியாகச் சொன்னான் துவாரகன். அதைக் கேட்டதும் அவ்வளவு நேரமும் இருந்த இறுக்கமான சூழலை மறந்து அனைவரும் 'கொல்'லென்று சிரித்தனர். ஆனால் அவர்கள் சிரித்தது எவ்வளவு அபத்தம் என்பதை அடுத்த ஓரிரு நொடிகளில் அறிந்து கொண்டனர்.

செல்வன் சென்ற பக்கமாக ஒரு பெரும் புழுதிப்படலம் எழுந்தது. அந்தப் புழுதிப்படலம் இவர்கள் இருக்குமிடம் நோக்கி நகரவும் செய்தது.

"இருக்கின்ற துன்பங்கள் போதாது என்று இதென்ன புதிய ஆபத்து? என்று எல்லோரும் நினைத்த போது, அந்தப் புழுதிப்படலத்தின் மத்தியில் செல்வனின் உருவம் தெரிந்தது. அவனது இதழ்களில் ஒரு மந்தகாசப் புன்னகை. அந்தப் புன்னகைக்கு காரணம் என்னவென்பதை, அவன் அமர்ந்திருந்த புரவியும், அதனருகே கூட வந்த குதிரைகளும் உணர்த்தின. பார்த்த மாத்திரத்திலேயே அந்தக்குதிரைகள் சாதாரணமானவையல்ல என்பது இளவரசர்களுக்கும், ஏனையவர்களுக்கும் புரிந்தது. அவர்களின் வாழ்நாளில் அப்படி ராஜகம்பீரமும், வேகமும் கொண்ட குதிரைகளை அவர்கள் கண்டதேயில்லை. இத்தனைக்கும் அவர்கள் அல்லும் பகலும் குதிரைகளோடு பழகியவர்கள். வியப்பு மேலிட ,தங்களை நோக்கி ஒரு குதிரைக் கூட்டத்தோடு வந்து கொண்டிருந்த செல்வனைப் பார்த்து அவர்கள் ஆரவாரம் செய்தனர்.

அந்த உற்சாகக்குரல் செல்வனுக்கு இன்னும் மகிழ்வைக் கொடுக்கவே, தன் குதிரையின் வேகத்தை இன்னும் அதிகப்படுத்தி அவர்கள் இருக்குமிடத்தை அண்மித்து, அப்படியே தாவி இறங்கினான்.

அவன் இறங்க முன்னரே அப்படியே ஓடிச் சென்று செல்வனை ஆரத்தழுவினான் தீபவர்மன்.

"செல்வா, எங்கள் பயணத்தை இலகுவாக்கி விட்டாய். நாகமலையை எப்படி நடந்து சென்று அடையப்போகிறோம்என்றொருதயக்கம்எமக்குள்இருந்தது. ஆனால் நீ மட்டும் தான் அதற்கான தீர்வைக் கண்டுபிடித்திருக்கிறாய் என்று அவனைப் பாராட்டவும் செய்தான்.

"அதிகமாக என்னைப் புகழாதீர்கள். நான் என் கடமையைத்தான் செய்தேன். ஒரு உண்மையைச் சொல்லட்டுமா? இவை என்னுடைய குதிரைகளே அல்ல. இவற்றை உங்களிடம் ஒப்படைக்க வேண்டுமென்பது காலத்தின் கட்டாயம். அதைத் தான் நான் செய்தேன் என்றான் செல்வன்.

"நீ சொல்வது புரியவில்லையே செல்வா? என்று கேட்டான் இளஞ்சந்திரன்.

"அதெல்லாம் பெரிய கதை, இப்போது அதைச் சொல்லிக் கொண்டிருந்தால் நாகமலைக்கு உடனடியாகப்புறப்படமுடியாது. ஆதலால் இப்போது பயணத்தைத் தொடங்குவோம். போகும் வழியில் குதிரைகள் என்னிடம் வந்த கதையைச் சொல்கிறேன் என்று உரையாடலுக்கு முற்றுப்புள்ளி வைத்தான் செல்வன்.

அதைத்தொடர்ந்து எல்லோரும் அருகில் தென்பட்ட அருவி ஒன்றில், தங்கள் முகங்களைக் கழுவி புத்துணர்ச்சி பெற்று, குதிரைகளில் தாவி ஏறினர். அவர்கள் ஏதும் செய்யாமலே அந்தக் குதிரைகள் நாகமலை நோக்கி விரையத் தொர்டங்கின. காக்கை குப்தன் ஒரு சந்தேகத்தோடு வரைபடத்தை எடுத்துப் பார்த்தான். நாகமலைக்குச் செல்லும் சரியான பாதையில் தான் அந்தக் குதிரைகள் சென்று கொண்டிருக்கின்றன என்பதை உறுதிப்படுத்திக் கொண்டான்.

" செல்வா, இதென்ன அதிசயக் குதிரைகளாக இருக்கின்றனவே. பழக்கப்பட்டவை போல, நாகமலைக்குச் செல்லும் பாதையில் ஒரு அட்சரம் கூடப் பிசகாது பயணிக்கின்றனவே என்று காக்கை குபதன் கேட்க, அந்தக் குதிரைகளின் கதையைச் சொல்லத் தொடங்கினான் செல்வன். அது தனியே குதிரைகளின் கதை மட்டுமல்ல செல்வனின் கதையும் தான்.

(புதிர்கள் தொடரும்)




## நாடு முழுவதும் வியாபிக்க நாம் தயார்

அலியான்ஸ் Life உடன் சந்தைப்படுத்தல் துறையில் நீங்களும் தொழில் வாய்ப்பை பெற்றிடுங்கள்.

தகைமையுள்ள விண்ணப்பதாரிகளுக்கு உயர் பயிற்சி வாய்ப்புக்கள் மற்றும் கவர்ச்சிகரமான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளுடன் தொழில் வாய்ப்பு.

**நீங்கள்,**

- 18 வயதிற்கு மேற்பட்டவரா?
- கனவுகள் மற்றும் குறிக்கோள்களை அடைய ஆர்வமாக உள்ளீர்களா?
- சுய ஊக்கப்படுத்தல் மூலம் சுய முயற்சியினால் இலக்குகளை அடைபவரா?

**உங்களுக்கு,**

- நீங்கள் எதிர்பார்க்கும் வருமானத்தை/இலக்கு வைத்துள்ள வருமானத்தை ஒரு வருடம் போன்ற காலத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
- நிபுணத்துவத் தொழிலில் முன்னேறும் வாய்ப்பு.
- சர்வதேச பயிற்சிகள், ஊக்கப்படுத்தும் பிரயாணங்களுடன் கொடுப்பனவுகள் மற்றும் பெறுமதியான பரிசுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

### விற்பனை ஆலோசகர் தேவையான தகுதிகள்

- க.பொ.த. சா/தரம் சித்திபெற்றிருத்தல் குறைந்தபட்ச தகுதியாகும்.
- க.பொ.த. உ/தரம் சித்திபெற்றிருத்தல் மேலதிக தகுதியாகும்.
- சிறந்த தொடர்பாடல் ஆற்றல் மற்றும் நல்ல தோற்றத்துடன் கூடிய ஒருவராயிருத்தல்
- தொழில்நுட்ப கருவிகள் பயன்படுத்தலை உரிய முறையில் மேற்கொள்ளக்கூடியவராக மற்றும் ஸ்மார்ட் தொலைபேசி, சமூக ஊடகங்களை தொடர்ந்து பயன்படுத்துவராயிருத்தல்

### குழுத் தலைவர் தேவையான தகுதிகள்

- க.பொ.த. சா/தரம் மற்றும் க.பொ.த. உ/தரம் சித்திபெற்றிருத்தல் குறைந்தபட்ச தகுதியாகும்.
- உயர்கல்வித் தகைமைகள் பெற்றிருத்தல் மேலதிக தகுதியாகும்.
- நிதி மற்றும் ஆயுள் காப்புறுதி சந்தைப்படுத்தல் துறையில் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.
- குழுக்களை கட்டியெழுப்புதல் மற்றும் நிர்வகித்தலில் சிறந்த அனுபவத்தைப் பெற்றிருத்தல்.
- வலுவான தலைமைத்துவம், ஊக்குவித்தலுடன் சிறந்த தனிப்பட்ட தொடர்புகள் உட்பட சிறந்த வர்த்தக முகாமைத்துவ திறனுடன் கூடியவராயிருத்தல்.
- தொழில்நுட்ப கருவிகள் பயன்படுத்தலை உரிய முறையில் மேற்கொள்ளக்கூடியவராக மற்றும் சந்தைப்படுத்தலில் எல்லையற்ற வருமானம் பெறுதலை இலக்காக கொண்டு நேர்மறை சிந்தனையுடன் கூடியவராயிருத்தல்.
- நம்பிக்கை, சிறந்த ஆளுமைத் திறமையுடன் தனிப்பட்ட தொடர்புகளைப் பேணுவதில் சிறப்பு ஆற்றலைப் பெற்றிருத்தல்.

**நீங்களும் விண்ணப்பிக்க விரும்பினால், உங்கள் விண்ணப்பத்தை 2021 மார்ச் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் careers-life@allianz.lk ஊடாக எமக்கு அனுப்பி வையுங்கள். விண்ணப்பிக்கும் பதவியை தலைப்பில் (subject இல்) குறிப்பிடவும். மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்: 011 2317988/9**

Allianz


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








## இனி எப்போ வரும்....!

குச்சொழுங்கையில் கொழுத்தும் வெயிலிலும்
குட்டைப் பூவரச மர நிழலிலும்
குந்தியிருந்த நாள் இனி எப்போ வரும்?

செட்டி வளவும் கல்லணிஞ்சிற்பழமும்
பறித்து சுவைத்த மரங்கள்
இனி எப்போ வரும்?

முடியில்லா வேந்தனும் கூடவே ஔவையும்
குழுமி மகிழ்ந்த மரநிழல்
இனி எப்போ வரும்?

முழு நிழல் வேளையில்
முழு நாளும் சுதந்திரமாய் சுற்றித்திரிந்த நாள்
இனி எப்போ வரும்?

நடு இரவில் விழித்து துலாவும் பட்டையுமாய்
மரங்களுக்கு நீர் பாய்ச்சும் காலம்
இனி எப்போ வரும்?

மரங்களின் ஒலி ஓய்ந்து அடங்கும் முன்
ஊரே திரண்டு வரும் நாள்
இனி எப்போ வரும்?

எம் பூமி எம் சூழல் இவையெல்லாம்
இனி எப்போ வரும்?

**ச.பிறேமியா**, தரம்09
யா/மகாஜனக் கல்லூரி

## ஓர் ஓவியரானால்...

1. நான் ஒரு ஓவியரானால் இயற்கைக் காட்சிகளை வரைவதிலேயே அதிகம் ஈடுபடுவேன்.
2. நல்ல கருத்துக்களை மக்களுக்கு ஓவியத்தின் ஊடாக எடுத்துக் கூறுவேன்.
3. சிறுவர்கள் பார்த்து மகிழ்ந்திட அழகிய ஓவியங்களை வரைவேன்.
4. பல ஓவியப் போட்டிகளில் கலந்து பரிசுகள் பெற முயற்சிப்பேன்.
5. நான் வரைந்த ஓவியங்களை அனைவரும் பார்க்கும் வண்ணம் கண்காட்சிக்கு வைப்பேன்.
6. உலகப் புகழ் பெற்ற மோனாலிசாவின் ஓவியத்தையும் வரைந்து பார்ப்பேன்.
7. இத்துறையில் நான் உலக சாதனை பெற முயற்சிப்பேன்.

**செ.சஷ்டிகா**, தரம் 5
யா/புனித ஜோண்
பொஸ்கோ வித்தியாலயம்

## வழிகாட்டிடுவோம்



## அம்மா

பத்து மாதம் சுமந்தென்னை
பலமாய் பெற்றெடுத்த என் தாயே
பாலூட்டி எனை வளர்த்த பத்தினியே
உன்போல் எனக்கு யாரும் இல்லை

நிலாவினைக் காட்டி எனக்கு
அமுதூட்டி வளர்த்தாயே.
இவ் உலகில் உன்னைவிட எனக்கு
உயர்ந்த தெய்வம்
யாருமே இல்லையே அம்மா.

**பி.ஆதிரை**
யா/மகாஜனக் கல்லூரி



## ஒத்த கருத்துச் சொற்கள்

அசதி - அயர்ச்சி
ஆசிரியன் - உபாத்தியாயன்
ஆரணியம் - காடு
ஈதல் - கொடுத்தல்
இடும்பை - துன்பம்
ஊசல் - ஊஞ்சல்
எழில் - அழகு
ஏகம் - அழகு
ஐசுவரியம் - செல்வம்
ஐயை - தலைவி

செ.துவாரகன், தரம்:8
யா / சித்திவிநாயகர் வித்தியாலயம்.

## பிஞ்சு தூரிகைகள்





கே.அக்ஷிதா,
தரம்– 3A,
யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.



த.துளசிகா,
தரம்– 9,
யாழ்.இந்து மகளிர் கல்லூரி






வீ.ஹரிஸ்,
தரம்– 1,
யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை

## வர்ணம் தீட்டுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் சஞ்சீவி
28 மார்ச் 2021



# கோரோனா தோற்றில் சுவிஸும் இலங்கையும்

○ நோக்கரிய நோக்கன்

கொரோனாப் பெருந்தொற்றைக் கட்டுப்படுத்துவதில் முன்னணியில் உள்ள நாடுகளில் ஒன்றாகவுள்ள சுவிஸ், அந்தப் பெருந்தொற்றில் இருந்து விடுபடும் நம்பிக்கையை முழுமையாக வெளிப்படுத்தியுள்ளது. தொடர்ச்சியான இறுக்கங்களுக்கு மத்தியில் அவற்றைப் படிப்படியாகக் கைவிடும் நம்பிக்கையை கடந்த 12ஆம் திகதியன்று அறிவித்துள்ளது. இதுகாலும் 5 பேர் மட்டுமே குடும்ப நிகழ்வுகளில் பங்குபற்றலாம் என்று கொண்டிருந்த விதியை தற்போது தளர்த்தியுள்ள சுவிஸ் இனிவரும் நாள்களில் 10 பேர் வரையில் மேற்படி நிகழ்வுகளில் பங்குபற்றலாம் என்ற அறிவிப்பை விடுத்துள்ளது.

## இறுக்கமான கட்டுப்பாடுகள்

குடும்பமட்டச் சந்திப்புக்களில் இந்த நிலையென்றால், சமூக மட்டத்தில் சுவிஸ் அரசின் விதிகள், கட்டுப்பாடுகள் எவ்வாறு இருக்கும்?. அதை இன்னும் பாரதூரமாக நடைமுறைப்படுத்துகின்றது சுவிஸ். உணவகங்கள் திறந்திருப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள போதிலும் விருந்தினர்கள் விடயத்தில் கட்டுப்பாடுகள் உள்ளன. விருந்தினர்கள் விடுதிகளில் உலாவருவது தடை செய்யப்பட்டுள்ளது. விடுதிக்குள் விருந்தினர்கள் நீண்ட நேரம் தங்கியிருப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. உப்பரிகைத் தளங்களில் விருந்தினர்கள் அமரலாம். பொழுதுபோக்கு நிறுவனங்கள் மீண்டும் திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. விலங்குக் காட்சிசாலை மற்றும் தாவரவியல் பூங்கா என்பவற்றை முழுமையாகத் திறக்கலாம். ஆனால் சமூக இடைவெளியை மிக இறுக்கமாகப் பின்பற்ற வேண்டும். சுமார் 60 ஆயிரம் பேர் அமரக்கூடிய மைதானமாக இருந்தாலும் 200 பார்வையாளர்களே அனுமதிக்கப்படுவரென கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. உள்ளக அரங்க நிகழ்வென்றால் 50 பேருக்கு மட்டும்தான் அனுமதி. பார்வையாளர்கள் நிகழ்வைப் பார்த்தபடி உணவுண்ணல் தடை செய்யப்பட்டுள்ளது. அதேநேரம் மாஸ்க் அணிந்தபடி விளையாட்டுப் பயிற்சிகளை மேற்கொள்ள அனுமதிக்கப்பட் டுள்ளது.

மூச்சுத் திணறல் உள்ளவர்கள், முதியோர் இல்லங்களில் வாழ்பவர்கள் தடுப்பூசி பெற்றுக்கொண்டால் முகக் கவசம் அணியும் கட்டாய நிபந்தனையில் இருந்து விடுவிப்பு வழங்கப்பட்டுள்ளது. பெருந்தொற்றுக்கு ஆளானவருடன் தொடர்பிருந்தால் அவர் தன்னைத் தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும் எனும் விதியிலிருந்து தடுப்பூசி இட்டுக் கொண்டவருக்கு விலக்கு வழங்கப்பட்டுள்ளது.

## அதிக அளவான கட்டுப்பாடுகளை ஏன் இறுக்கியது சுவிஸ்?

நியூசிலாந்து, ஆஸ்திரேலியா போன்று சுவிற்சர்லர்தும் ஆரம்பத்தில் கொரோனாவால் பெரிய அளவில் பாதிக்கப்பட்ட நாடாக இருக்கவில்லை. ஆனால் கட்டுப்பாடுகள் அற்ற நிலையில் அல்லது தளர்த்தப்பட்ட நிலையில் சுவிஸின் விடயம் பாரதூரமாகியது. குறிப்பாக 2020ஆம் ஆண்டு மத்திய பகுதிக்குப் பின்னர் சுவிற்சர்லாந்தில் நிலைமை பாரதூரமானது. இதன் விளைவாகவே அதிகளவான கட்டுப்பாடுகளை இறுக்கி நிலைமையை மீண்டும் கட்டுக்குள் கொண்டுவந்துள்ளது சுவிஸ்.

## இலங்கையும் சுவிஸும்

சுவிஸில் சுகாதாரத்துறை முற்றுமுழுதாகச் சிவில் நிர்வாகத்தின் கீழேயே நிர்வகிக்கப்படுகின்றது. இலங்கையில் நிலைமை வேறு. அத்துடன் இலங்கையில் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் சாவுகளின் எண்ணிக்கையும் அதிகரித்துக்கொண்டிருந்தபோது மேலும் தளர்வுகளை இலங்கை அரசு அறிவித்தது. அன்றாட உழைப்பாளிகளின் குடும்பங்கள், வருமானம் இழந்து தவித்தமையால் இந்தத் தளர்வுகள் உடனடியாக இலங்கைக்கு அவசிமாயிற்று.

நியூசிலாந்து. ஆஸ்திரேலியா போன்று சுவிற்சர்லாந்தும் ஆரம்பத்தில் கொரோனாவால் பெரியளவில் பாதிக்கப்பட்ட நாடாக இருக்கவில்லை. ஆனால் கட்டுப்பாடுகள் அற்ற நிலையில் அல்லது தளர்த்தப்பட்ட நிலையில் சுவிஸின் விடயம் பாரதூரமாகியது. குறிப்பாக 2020ஆம் ஆண்டு மத்திய பகுதிக்குப் பின்னர் சுவிற்சர்லாந்தில் நிலைமை பாரதூரமானது.



அத்துடன் ஏற்கனவே பாதிக்கப்பட்டிருக்கும் இலங்கைப் பொருளாதாரமும் வர்த்தகமும் சாதாரண மக்களை வருத்திவரும் நிலையில், தொடர்ந்து வாரக்கணக்கான முடக்கங்களை மக்களால் தாங்கமுடியாது எனும் யதார்த்தமும் உள்ளது.

சுவிஸ் நாட்டின் மொத்தச் சனத்தொகை ஏறத்தாழ 87 லட்சம். போதிய போசாக்கு ஆரோக்கிய மருத்துவ சுகாதாரப் பாதுகாப்புக் கிடைக்கும் மக்களாக அவர்கள் திகழ்கிறார்கள்.

அந்தத் தொகையில் 5 இலட்சத்து 80 ஆயிரம் மக்கள் கொரோனாத் தொற்றுக்குட்பட்டதை ஆகக் கூடுதலான அளவில் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனைகள் மூலம் நேர்மையாக சுவிஸ் சுகாதாரத்துறை உறுதிப்படுத்தியது. சுவிஸில் தற்போது சுமார் 10 லட்சம் பேர் தடுப்பூசிகளைப் பெற்று விட்டனர்.

இலங்கையின் சனத்தொகை தற்பொழுது 2 கோடியே 15 லட்சத்தை எட்டுகிறது. ஆனால் இலங்கையின் சனத்தொகையுடன் ஒப்பிடுகையில் இங்கு அன்றாடம் மேற்கொள்ளப்படும் கொரோனாப் பரிசோதனைகள் மிகமிகக் குறைந்தளவே. பரிசோதனைகளின் எண்ணிக்கையை அதிகரித்தால் மட்டுமே இங்கு எத்தனை தொற்றாளர்கள் என்பதையாவது குறைந்தபட்சம் உறுதிப்படுத்த முடியும். இலங்கையில் போசாக்கற்று உரிய சுகாதாரக் கட்டமைப்பு அற்று வாழும் மக்கள் சுவிஸின் மொத்தச் சனத்தொகையைக் காட்டிலும் அதிகம்.

கடந்த ஆண்டின் நவம்பர், டிசம்பரிலும் இந்த ஆண்டின் ஜனவரி, பெப்ரவரியிலும் இலங்கையில் தொற்றுப்பரவலின் வீச்சும் பாதிப்பும் அதிகரித்த வேளையில்தான் வினோதமான வகையில் கொரோனாக் கட்டுப்பாட்டு இறுக்கங்கள் இங்கு தளர்த்தப்பட்டன. 'கட்டுப்பாடற்ற' வகையில் பொதுப் போக்குவரத்தும் நடைபெறத் தொடங்கியது. பொது வைபவங்கள், விழாக்கள் எல்லாம் ஒழுங்குபடுத்துவோர் நினைத்தவாறே நடைபெறுகின்றன. அரசியல் பிரமுகர்களின் கூட்டங்கள், கோவில்கள், விகாரைகள், கிறிஸ்தவத் தலங்களின் கொண்டாடங்கள், வெவ்வேறு தேவைகளுக்கான ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், உணவுத் தவிர்ப்புப் போராட்டங்கள் முதலியவையும் கொரோனா வீச்சுக்கு மத்தியில் தாராளமாக நடக்கின்றன.

சுவிஸில் இந்ந நிர்வாக முரண் நிலைகள் இல்லை. அங்கு மக்கள் தாமே தம்மைத் தற்காத்துக் கொள்பவர்களாக, சமூகத்தின் இருப்பை உறுதிசெய்து கொள்பவர்களாக உள்ளனர். அரசுதான் இந்த நிலையை உருவாக்க வேண்டுமென்றல்ல. இது ஒவ்வொரு தனிமனித மாற்றத்தின் வெளிப்பாட்டிலும் உள்ளது. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசி.கந்தராஜா



சிறுகதை

# கையது கொண்டு மெய்யது பொத்தி...!

அந்தச் சிறுவன் எந்தவித சலனமுமின்றி நின்றான். பதினைந்து வயதுக்கு மேல் இருக்காது. கைகள் குருதியால் நனைந்திருந்தன. அவனருகில் நடுங்கியபடி அவள். பத்து வயது மதிக்கலாம். வயசுக்கு மீறிய வளர்ச்சி அவள் உடலில் தெரிந்தது. வயிற்றிலும் மார்பிலும் கசிந்த இரத்தம், கிழிந்து தொங்கிய அவளது சட்டையூடாக வடிந்து கொண்டிருந்தது. அந்த அதிகாலை வேளையிலும், சிரிய அகதிகளும் லெபனானியர்களும் சிறுவர்களைச் சுற்றி நின்று வேடிக்கை பார்த்தார்கள். பொலிஸ்காரன் ஒருவன் அலைபேசியில் தகவல் சொல்லிக் கொண்டிருந்தான்.

லெபனான் தலைநகர் பெய்ரூத்தி லுள்ள அமெரிக்க பல்கலைக்கழகத்துக்கு முன்னே, மத்தியதரைக் கடற்கரையோரம், காலையிருந்து மாலைவரை அகதிச் சிறுவர்கள் றோசாப் பூ விற்பார்கள். இவர்களுக்கு நிரந்தர இருப்பிடமோ முகவரியோ இல்லை. சிவப்பு றோசாக்கள் காதலின் சின்னமாகையால், மாலை வேளைகளிலும் விடுமுறை நாட்களிலும் அவை அமோகமாக விற்பனையாகும். பெரும்பாலான அகதிச் சிறுவர்கள் பூ விற்பதுடன் மட்டும் நின்றுவிடுவதில்லை. பிச்சை எடுப்பார்கள், அசந்தவர்களிடம் 'பிக்பொக்கற்' அடிப்பார்கள். பெய்ரூத் நகர பொலிசாருக்குப் பாரிய தலையிடியாக இருக்கும் இவர்கள், குற்றம் செய்து பிடிபட்டால் நேரடியாக சிறுவர்கள் தடுப்பு முகாமுக்கு அனுப்பப்படுவார்கள்.

இந்தக் கதையின் நாயகர்களும் அகதிச் சிறுவர்களே. இவர்கள் மேட்டுக் குடிச் சூழலில் வளர்ந்தவர்களாக இருக்க வேண்டும். அரபு மொழியுடன் சரளமாக ஆங்கிலமும் பேசினார்கள். வேலை முடிந்து செந்தில்நாதன் கடற்கரை ஓரமாயுள்ள பரிஸ் வீதியால் நடந்து வரும்போது, இந்தச் சிறுவர்கள் தினமும் பூ வாங்கும்படி கேட்பார்கள். பரிதாபத்தின் காரணமாக பலமுறை அவர்களிடம் ரோசா மொட்டுக்கள் வாங்கியிருக்கிறார். ஆனால் அவற்றைக் கொடுப்பதற்கு பெய்ரூத்தில் அவருக்கு யாருமில்லை. அவருடைய மனைவி சிட்னியில் இருந்தாள். இதனால் ஒரு முறை பூ வாங்காமலே சிறுவனுக்குப் பணம் கொடுத்தார். பணத்தை அவன் வாங்க மறுத்த பண்பும் அதற்கு அவன் சொன்ன காரணமும் அவருக்கு மிகவும் பிடித்திருந்தது. இந்த சம்பவத்துக்குப் பிறகு அவர்களைக் காணும் போதெல்லாம் நலம் விசாரித்து செந்தில்நாதன் அவர்களுடன் பேசுவதுண்டு. இப்படியானதொரு சந்தர்ப்பத்திலேதான், தனது பெயர் அலி எனவும் தங்கையின் பெயர் பாத்திமா எனவும் சிறுவன் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டான்.

சிரிய சனத்தொகையில் அரைவாசிக்கு மேற்பட்ட மக்கள் அகதிகளாக லெபனான், துருக்கி, ஈராக், ஜோர்தான் ஆகிய நாடுகளில் தஞ்சமடைந்தார்கள். இவற்றுள் லெபனானே மிகச் சிறிய நாடு. 10,452 சதுர கிலோ மீற்றர் மாத்திரம் கொண்டது. இந்நிலையில், 2015 ஆம் ஆண்டு லெபனானில் தஞ்சம் அடைந்த சிரிய அகதிகளின் எண்ணிக்கையே 1.5 மில்லியனைக் கடந்திருந்தது. லெபனானின் 'பெக்கா' பள்ளத்தாக்கில் இவர்களுக்காக பல முகாம்கள் அமைக்கப்பட்டிருந்தன. இப்பகுதியில் கடும் குளிரும், பனியும் நிலவுவதால் அதைச் சமாளிக்க முடியாது, அகதிகளில் பலர் இடம்பெயர்ந்து தலைநகர் பெய்ரூத்துக்கு வந்தனர். பெய்ரூத்தில் இவர்களுக்கு அகதி முகாம்கள் இல்லை. இதனால் பலர் பிச்சை எடுத்தார்கள். பெண்களில் சிலர் சோரம் போனார்கள். நிர்க்கதியான சில பெண்கள் வன்புணர்வுக்குள்ளாக்கப்பட்டனர். மொத்தத்தில் இவர்கள் ஐ.நா. சபை பட்டியலில் தொலைந்து போனவர்களாகப் பதியப்பட்டார்கள்.

சிரியாவின் இரண்டாவது பெரிய நகரமான அலப்போ மிகவும் புராதனமான நகரம். யுத்தத்துக்கு முன்னர் அலப்போவை தரிசிப்பதற்காகவே உல்லாசிகள் சிரியாவுக்கு படையெடுப்பார்கள். பல வருடங்களாக சிரியாவில் தொடரும் கொடிய யுத்தத்தினால் தற்போது அது பாதிக்கப்பட்டு உலகின் கைவிடப்பட்ட நகரங்களில் ஒன்றாக மாறியிருக்கிறது.

அலப்போவிலுள்ள அமெரிக்கப் பாடசாலை ஒன்றில் இவர்களது தந்தை நீண்டகாலம் அதிபராக பணியாற்றியதாக அலி சொன்னான். அங்குதான் இவர்களும் கல்வி கற்றார்களாம். தந்தை இறந்த பின்னர் தாயுடன் 'அன்ரி லெபனான்' (AntiLebanon mountain) மலையைத் தாண்டி, லெபனானுக்கு நடந்து வந்ததாகச் சொன்னான்.

பரிஸ் வீதியருகே, கடற்கரை ஓரமாகவுள்ள ஒரு பொதுக் கழிப்பிடத்தில் குளிப்பதற்கும் வசதியுண்டு. பெய்றூத் மாநகர சபை அதை ஓரளவுக்குச் சுத்தமாக வைத்திருந்தது. அதிகாலை வேளையில் ஒரு தோல் பையுடன் வரும் அலியும் தங்கையும் அங்கு காலைக் கடன்களை முடித்தபின் பூ விற்கத் தொடங்குவார்கள். அலி பேசிய இலக்கண சுத்தமான ஆங்கிலம் செந்தில்நாதனின் நட்பை மேலும் நெருக்கமாக்க, மாலையில் வேலை முடிந்து அவர் வரும் போது வாசித்து முடித்த ஆங்கில சஞ்சிகைகளை, அலி கேட்டு வாங்குவான். மறுநாள் தான் வாசித்த கட்டுரைகள் பற்றி அலி ஆக்கபூர்வமான கருத்துக்களை செந்தில்நாதனுடன் பகிர்ந்து கொள்வான். அவனிடம் வயதுக்கு மீறிய விவேகமும் அறிவும் இருந்தன. 'இப்படியானதொரு புத்திசாலிச் சிறுவனது எதிர்காலம் என்னவாகும்...?' என செந்தில்நாதன் பல முறை கவலைப் பட்டதுண்டு. இதனால் அவர்கள் மீது இயற்கையான பரிவு ஏற்பட, அவர்களை லெபனீஸ் 'ஹெபாப்' (Kebab) சாப்பாட்டுக் கடைக்கு அழைத்துச் சென்றார். அன்றைய தினம் தாயாரின் ஆண்டுத் திதி என்பதால் இரண்டு சோடி உடுப்புக்களும் அவர் களுக்கு வாங்கியிருந்தார். அவர்களுக்கு மிகுந்த சந்தோசம். 'ஹெபாப்' சாப்பிடும் போது பலமுறை அவருக்கு நன்றி சொன்னார்கள். கதையோடு கதையாக 'பெக்கா' பள்ளத் தாக்கிலுள்ள அகதி முகாம் வாழ்க்கை பற்றி செந்தில்நாதன் கேட்டார். அலி 'ஹெபாப்' சாப்பிடுவதை நிறுத்தி தரையைப் பார்த்தவாறு அமர்ந்திருந்தான். பாத்திமாவின் கண்களில் கண்ணீர் வழிந்தோடியது. 'அந்தப் பிஞ்சுகளின் மனதைக் காயப்படுத்தி விட்டேனோ...?' என செந்தில்நாதன் தவித்தபோது, அலி தன்னுடைய அழுகையைக் கட்டுப்படுத்தி பெரிய மனுஷத் தோரணையில் பேசத் துவங்கினான்.

'சேர், சிரிய அரசுக்கும் பல்வேறு இஸ்லாமிய [illegible] இடையில் நடைபெறுவதாக வெளியே [illegible] டாலும், எனது அறிவுக்கு எட்டியவரை இது ஷியா பிரிவைச் சார்ந்த சிரிய அரசுக்கும் சுனி பிரிவினரான கிளர்ச்சிக் குழுக்களுக்கும் இடையில் நடைபெறும் யுத்தமே...' என்றவன் திடீரென வயிற்றைப் பிடித்துக்கொண்டு எழுந்து, அவசரமாக ரொயிலெற்றை நோக்கி நடந்தான்.

வெளியே, 'பிசுபிசு'வென மழை பெய்து கொண்டிருந்தது. இடையிடையே வெயிலும் தூறலும் இணைந்த அர்த்தநாரீஸ்வர கோலம். மத்திய தரைக் கடலிலே வானவில் வர்ணங்கள். இப்படியானதொரு மழை நேரத்தின்போதே, செந்தில்நாதன் பஸ் தரிப்பு நிலையமொன்றில், முதல் முறையாக அலியைச் சந்தித்தார். அவன் தங்கள் நாட்டின் போர் நிலவரம் பற்றி நண்பர்களுடன் பேசிக் கொண்டு நின்றான். அவர்களின் உரையாடல் சற்று அதிகப்பிரசங்கித் தனமாக இருந்தது. ஆனால், கால ஓட்டத்தில் அவர் சந்தித்த சிரிய அகதிகள் அனைவருமே, வயது வித்தியாசமின்றி தமது நாட்டின் அரசியல் பின்னணியை ஆதியோடந்தமாகத் தெரிந்து வைத்திருப்பதை செந்தில்நாதன் அவனித்தார்.

வயிற்றின் அலைக்கழிப்பிலிருந்து மீண்ட அலி, தான் விட்ட இடத்திலிருந்து கதையைத் தொடர்ந்தான்.

'சேர்.... நீங்கள் 'சாவை' நேரடியாகப் பார்த்தீர்களோ தெரியாது. ஆனால் நான், கொடூரமாக பலர் கொல்லப் படுவதை நேரில் கண்டிருக்கிறேன். விடுதலையின் பெயரில், அப்பா மதச்சாயம் பூசப்பட்டு எங்கள் முன்னிலையில் துள்ளத்துடிக்க கொல்லப்பட்டார். அன்றிரவே அலப்போவை விட்டுப் புறப்பட்ட நாங்கள், இருபத்தொரு நாள்கள் மலையைத் தாண்டி நடந்து, லெபனானிலுள்ள பெக்கா முகாமுக்கு வந்தோம்...'

அலி உணர்ச்சி வசப்பட்டதால் அவனது உதடுகள் நடுங்கின. அவனைச் சற்று சாந்தப்படுத்தும் நோக்கில்,"இந்து மதத்திலும் சைவம், வைஷ்ணவம் என்ற பிரிவுகள் உண்டு. சில நூற்றாண்டுகளுக்கு முன்பு இவர்களுக்கிடையேயும் சண்டைகள் நடந்ததுண்டு. ஆனால் அந்த விரோதம் படிப்படியாக மறைந்து போயிற்று"என்றார் செந்தில்நாதன். 'சேர், பிரச்சனை அதுவல்ல. சிரியாவில் இஸ்லாமியர்கள், கிறீஸ்தவர்கள் மற்றும் டுறூஸ்(Druze) மதத்தவர்கள் அனைவரும் அன்றாட வாழ்க்கையில் ஒற்றுமையாகவே வாழ்ந்தோம். இதேபோல பெக்கா பள்ளத்தாக்கிலுள்ள அகதி முகாமிலும் எல்லா மதத்தவர்களும் இருந்தார்கள்...' என்றவன் மேலும் தொடர முடியாமல் விக்கிவிக்கி அழுதான்.

'அலி, விட்டுவிடு. வேறு விஷயங்கள் பற்றிப் பேசுவோம்' என்றவாறு எழுந்து சென்று அவர்கள் இருவருக்கும் செந்தில்நாதன் ஐஸ்கிறீம் வாங்கி வந்தார்.

'எனது மனக் குமுறல்களை வெளியில் கொட்டுவதற்கு எனக்கு வேறு சந்தர்ப்பம் கிடைக்காது, என்னைச் சொல்ல விடுங்கள். என்னுடைய தாயார் சமூக சேவகியாக சிரிய அரசில் பணியாற்றியவர். தனது சோகங்களுக்கு வடிகாலாக, அகதி முகாமிலும் அவர் சேவை செய்யத் தொடங்கினார். இதனால் உணவுப் பங்கீடு செய்வதற்கு உதவுமாறு முகாம் அதிகாரி கேட்டுக் கொண்டார். இது பெக்கா பள்ளத்தாக்கில் இயங்கும் சிரிய கிளர்ச்சிக் குழுவொன்றுக்கு ஏனோ பிடிக்கவில்லை...'

இந்த இடத்தில் அலி தனது முகத்தை அழுத்தித் தடைத்தபடி அமைதியாக இருந்தான். பின்னர் தங்கை பாத்திமாவை உணவுச் சாலையில் சிறுவர்கள் விளையாடுவதற்கு ஒதுக்கப்பட்ட இடத்துக்கு அனுப்பிய பின் கதையைத் தொடர்ந்தான்.

'ஒரு நாள் முகத்தை மூடிய கிளர்ச்சிக் குழுவினர் துப்பாக்கிகள் சகிதம் எங்கள் கூடாரத்துக்கு வந்தார்கள். பயம் காரணமாக ஏனைய அகதிகள் தங்கள் கூடாரங்களுக்குள்ளே அடங்கிக் கிடந்தார்கள். (23ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவிட்-19 இலிருந்து பாதுகாப்பாயிருத்தல்
# நேற்றைய கதையின் தொடர்ச்சி
## அங்கம் 7

நீங்கள் வேலைவாய்ப்பிற்காக அல்லது நிரந்தரமாக வதிவதற்காக வேண்டி வெளிநாட்டுக்குச்செல்ல விரும்புகிறீர்களா. தயவுகூர்ந்து உங்களினதும் உங்களின் நெருங்கிய உறவுகளினதும் பாதுகாப்பை பற்றி முதலில் அக்கரை எடுத்துக்கொள்ளுங்கள். வெளிநாட்டுக்கு செல்ல விரும்பினால் எப்பொழுதும் பாதுகாப்பான பாதையை தெரிவு செய்யுங்கள். இந்த சித்திரக்கதையில் ராஜாவுக்கு என்ன நிகழ்கின்றது என்பதை தொடர்ந்து அவதானிக்கும் போது பாதுகாப்பான புலம்பெயர்வை பற்றிய உங்களின் பார்வைக்கோணத்தை அதிகரித்துக்கொள்ள முடியும். **இப்பத்திரிகையில் 7 நாட்களுக்கு தொடராக பிரசுரிக்கப்படவிருக்கும் சித்திரக்கதையின் 7ஆவது அங்கம் இதுவாகும். ஒவ்வொரு அங்கத்தின் இறுதியிலும் பரிசுகளை பெறும் வாய்ப்புக்களும் வழங்கப்பட்டுள்ளது.**

**மனித கடத்தல்காரர்கள் பற்றி விழிப்புடனிருங்கள்! பாதுகாப்பான வெளிநாடு செல்லும் பாதையை தெரிவு செய்வதற்கு IOM நிறுவனத்தின் நேரடி இலக்கம் 0774410086 இற்கு அழையுங்கள்.**



கோவிட்-19 இலிருந்து தப்பித்து தமது தாய்நாட்டுக்கு எப்படி திரும்புவது என தெரிந்து கொள்ள ராஜாவுக்கு அவசியம் ஏற்பட்டது.




இதற்கிடையில் வேளிநாட்டில் அவரைப் போலவே நிர்க்கதியானோர் சமூக ஊடகங்களில் பதிவிடும் சில விடயங்கள் அவரின் கண்களில் பட்டது.



சில பதிவுகளில் இலங்கை வந்ததும் கட்டாய தனிமைப்படுத்தல் அவசியமில்லை எனவும் உடனே வீடுகளுக்கு செல்ல முடியும் எனவும்



சில பதிவுகளில் முறையற்று இலங்கையிலிந்து சென்றவர்கள் நாட்டுக்கு திரும்பும் போது விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்படுவர் எனவும் காணப்பட்டது.



ராஜாவை போல முறையற்று புலம்பெயர்ந்தவர்களும் பதிவுகளை இட்டிருந்தனர்.



இலங்கைக்கு திரும்பிச் செல்வதா அல்லது தொடர்ந்தும் ஒழிந்திருந்து கோவிட்-19 தொற்றின் ஆபத்திற்கு முகம் கொடுப்பதா என குழப்பமாக இருந்தது.

**வினா : தமது உடல் ஆரோக்கியத்தை பாதுகாத்துக் கொள்ள ராஜா என்ன செய்ய முடியும்?**



விடை 1: தான் தங்கியிருக்கும் நாட்டிலுள்ள இலங்கை தூதரகத்தை அல்லது சுகாதார அதிகாரிகளை தொடர்பு கொண்டு உதவி கோர வேண்டும். He can contact the Sri Lankan embassy in the country he is in or the health authorities and tell the truth to receive assistance.



விடை 2: தனது தலைவிதியை நொந்த வண்ணம் அந்நாட்டிலேயே மறைந்து தங்கியிருக்க வேண்டும்.

மேலுள்ள கேள்விக்கு சரியான விடையை தெரிவு செய்வதன் மூலம் நாளாந்த பரிசுக்குலுக்களில் பரிசினை வெல்லுங்கள். உங்களின் விடையை அல்லது விடைகளை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களுடன் IOM நிறுவனத்தின் 0774410086 என்ற நேரடி இலக்கத்திற்கு அனுப்பி வையுங்கள்.
விடைகளை SMS அல்லது வட்சப் அல்லது வைபர் மூலமாக 0774410086 என்ற இலக்கத்திற்கு அனுப்ப முடியும். S5 என்ற குறியீட்டை தவறாமல் குறிப்பிடவும்.

**S5 விடை எண்(கள்), பிரசுரமான திகதி, பத்திரிகையின் பெயர்**
**பால்: ஆண் / பெண், வயது, ஊர் – மாவட்டத்தின் பெயர்**
**உதாரணம்: S5 3,4 22.03.2021 – உதயன், ஆண் 20 சிலாபம் – புத்தளம் மாவட்டம்.**

**விடைகள் 07.04.2021 திகதி வரை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.**

**பாதுகாப்பான மற்றும் முறையான புலம்பெயர்வு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இச்சித்திரக்கதை IOM நிறுவனத்தினால் பிரசுரிக்கப்பட்டுள்ளது.**

**புலம்பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனம் (IOM)**
9ஆம் மாடி, IBSL கட்டடம்,
80A, எல்விடிகலை வீதி, பொறல்லை, கொழும்பு 8.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எத்தடியிலேயே குடித்தனம்!

## வவுனியாவின் நாடோடிகள்

"துரை" "சாமி" என்று அழைப்பதை வழமையாகக் கொண்டுள்ளனர்.. கணவனை "மாப்பிள்ளை" என்கின்றனர். மனைவியை "நாயகி" என்றும் சூரியனை "வேந்தன்"என்றும் குறிப்பிடுகின்றனர்.

"எவன் செஞ்ச புண்ணியமோ.. ஆண்டவன் சாப்பாட்டுக்கு குறை வைச்சதேயில்ல. இத்தினை வருசமாப் போச்சு . பட்டினியாக் கிடந்ததும் இல்லை"

"எங்களுக்கு காணி.வீடு எல்லாம் தேவையே இல்லை.இப்பிடியே விட்டாக் காணும்.. நாம காலத்தைக் கழிச்சிருவோம்"

○ பா.குமுதன்

உலகம் நமக்கு பல்வகையான மனிதர்களையும் சமூகக் குழுமங்களையும் தினமும் அறிமுகப்படுத்திக் கொண்டேயிருக்கின்றது. ஒவ்வொரு மனிதக்கூட்டத்தினரும் தமக்கிடையே வெவ்வேறு வாழ்க்கை முறைகளையும், மரபுகளையும் கடைப்பிடிக்கின்றனர். அவர்களில் சில மனிதர்களின் வாழ்வியல் எமக்கு வியப்பையும் ஆச்சரியத்தையும் ஊட்டுபவை. அவ்வாறானதொரு சமூகக் குழுமத்தின் வாழ்வியலை இந்தப் பத்தி பதிவு செய்ய முனைகின்றது.

வடக்கின் வாசலாகக் கருதப்படும் வவுனியா மாவட்டம் பல்வேறு நிலபுலம்சார்ந்த அடையாளங்களைக் கொண்டுள்ளது. அதன் மற்றுமொரு அடையாளமாக குளத்தினுள் குடித்தனம் நடத்தும் சிறிய சமூகக்குழுமமொன்று மாறி வருகின்றது. வவுனியாக் குளத்தின் அணைக்கட்டுவழியாக பயணம் செய்பவர்கள் அவர்களின் வாழ்வியலையும்,இருப்பையும் நன்குஅறிந்திருப்பர்.அண்ணளவாக 15தொடக்கம் 20 பேரைக் கொண்டதாக இருக்கும் அந்தக்குழுவின் வாழிடங்களாக வவுனியாக்குளமும் அதனைஅண்டிய மரங்களும்,பாறைகளும் இருக்கின்றன. நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் அவர்கள் வவுனியாவுக்கு வந்திருந்தாலும் கூட , இப்போது அவர்களது நிலையான இருப்பிடமாகிவிட்டது அந்தக் குளத்தடி.

பெண்கள் ,குழந்தைகள் ,முதியவர்கள் என வயது, பால் வேறுபாடின்றி பலரையும் உள்ளடக்கியிருக்கும் குளத்தடி மக்களின் அல்லது குளக்கட்டாரின்அந்தரங்கவாழ்வியல் வீதிகளிலேயே ஆரம்பித்து , வீதிகளிலேயே முற்றுப்பெறுகின்றது. பகல் முழுவதும் குளத்தடி மரநிழலிலும் ,பாறைகளின் இடுக்குகளிலும் கூட்டமாக அமர்ந்திருப்பார்கள். அவர்களுக்கு வீடுகள் கிடையாது.கடுமையான வெப்பம்,உறைபனி என்பவற்றால்கூட அவர்களை எதுவும் செய்யமுடிவதில்லை.இரவானால் நகருக்குள் சென்று வியாபார நிலைய வாயில்களில் படுத்துறங்குவார்கள்

"நம்மளுக்கு எல்லாமே இந்தக் குளம்தான். இந்த இடத்த விட்டுப் போறம் எங்கிறதை நினைச்சுப் பாக்கமுடியாது சாமி" என்கிறார் அந்தக் கூட்டத்தில் உள்ள வயதில் மூப்பான ராணி என்ற பெண். ராணிக்கு பூர்வீகம் பதுளை. இருபதுவருடங்களுக்கு முன்னரே வவுனியாவுக்கு வந்துவிட்டார். வீதியிலும் குளத்தடியிலும் தான் அவரது வாழ்க்கை வருடக்கணக்காக நகர்ந்து வருகின்றது.

"பதுளைப் பக்கமா ஒரு தோட்டத்திலதான் தேயிலை பறிச்சிக்கிட்டு இருந்தம்..எனக்கு ஒரு மவன் இருந்தான். கட்டின புருசனும் விட்டுட்டு பொயிற்றான். மகனும் தன்ர இஷ்டப்படி கலியாணத்தை கட்டிப் போயிட்டான். சொந்த முண்ணு சொல்லிக்க யாரும் இல்லை.. அப்படியே இந்த வாழ்க்கைக்கு வந்திற்றன். இது பழகிப்போச்சு சாமி.மூணு நேர சாப்பாடு. நல்ல நித்திரை. அதுமட்டும் கிடைச்சாலே போதும். வேற எதைப்பற்றியும் நாம யோசிக்கிறதில்லை" என்கிறார் ராணி வெள்ளாந்தி பெண்ணாக.

ராணியைப் போலவே அங்கிருக்கும் ஒவ்வொருவரும் சந்தர்ப்ப சூழ்நிலைகளாலும் , வறுமை நிலையாலும் வீதிக்கு வந்தவர்களே.அவர்கள் ஒவ்வொருவருக்குப் பின்னாலும் பொதிந்துகிடக்கும் சோகக்கதைகள் சொல்லிலடங்காதவை. கணவனால் துரத்திவிடப்பட்டவர்கள்.. மனநிலை பாதிக்கபட்ட நிலையில் குடும்பத்தவர்களால் ஒதுக்கப்பட்டவர்கள், தகாத உறவுகளால் வாழ்வைத் தொலைத்தவர்கள் என நீள்கிறது அவர்களின் துயரப்பட்டியல்.

### உணவுக்கு பஞ்சமில்லை

உழைப்பில்லாவிடினும் தமக்கு உணவுக்கு பஞ்சம் ஏற்பட்டதில்லை என்கின்றனர். அந்தமக்கள்.குளத்தினை அண்டிய பாறை இடுக்குகளில் அவர்களால் அமைக்கப்பட்ட தற்காலிக அடுப்புகளில் சமைத்து உண்ணுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். சில ஆண்கள் நகரப்பகுதிக்கு சென்று மூடை தூக்குவது,செருப்புத்தைப்பது போன்ற தொழில்களையும், சிலர் யாசகம் பெறுவதையும் வழக்கமாகக் கொண்டுள்ளனர். அதற்காக கிழிந்த ஆடைகளை அணிவதும்,ஊனமுற்றவர்கள் போல பாசாங்கு செய்வதும் அவர்களுக்குப் பழக்கப்பட்டுவிட்டது. அவ்வாறு கிடைக்கும் பணத்தில் சமைப்பதற்குத் தேவையான பொருள்களை கொள்வனவு செய்வார்கள். குளத்தில் மீன்களையும் பிடித்து சமைத்து அனைவரும் கூட்டாக அமர்ந்து ஆனந்தமாக உண்பார்கள். சிலவேளைகளில் நகரத்தில் அமைந்துள்ள உணவகங்கள், ஆலயங்களில் இலவசமாக உணவைப் பெற்றும் உண்பார்கள். இது தான் வாடிக்கை.

"எவன் செஞ்ச புண்ணியமோ.. ஆண்டவன் சாப்பாட்டுக்கு குறை வைச்சதேயில்ல.இத்தினை வருசமாப் போச்சு .பட்டினியாக் கிடந்ததும் இல்லை" என்கிறார் ராணி.

### குடியும் கூத்தும்

சமூகத்தின் கீழ்மட்டத்தில் இருந்தாலும் "குடி" இல்லாமல் அவர்கள் இருந்ததில்லை.எப்படியாவது பணத்தைச் சேர்த்து மாலை 6 மணிக்குப் பின்னர் மது அருந்திவிடுவார்கள். பெண்களும் அதில் சளைத்தவர்கள் அல்லர். மது போதையில் சண்டையிடுவதும், தகாத வார்த்தைகளைப் பிரயோகித்து குழப்பங்களை ஏற்படுத்துவதும் அவர்களின் வழக்கமாக இருக்கின்றது. விடிந்ததும் அனைத்தையும் மறந்து விட்டு தமது இயல்பான வாழ்கையை வாழ்வதற்குத் திரும்பிவிடுவார்கள்.

"பின்னேரமாகிடிச்சிண்ணா..நுளம்புக்கடி அதிகமா இருக்கும்..சரியா தூங்கமுடியாது.அதால சாராயத்தை வாங்கி குடிச்சிட்டு படுத்துடுவம். வாழ்க்கேல என்னத்தைத் தான் கண்டம்..? ஒண்ணுமே இல்லையே.."என்று தாம் குடிப்பதை நியாயப்படுத்துகின்றார் ராணி.

இவர்கள் பார்ப்பதற்கு அமைதியானவர்கள் போல, இருந்தாலும் மதுபோதையில் அவர்களுக்கிடையில் ஏற்படும் சண்டைகள் சிலசமயங்களில் பூதாகரமாகிவிடும். பெரும் காயங்களுடன் மருத்துவமனைகளில் இவர்கள் அனுமதிக்கப்பட்ட சந்தர்ப்பங்களும் பல உண்டு. இவர்களது சண்டையால் அந்தப்பகுதியில் உள்ள ஆலயத்தை வழிபடவருபவர்கள் மற்றும் சிறுவர் பூங்காவைப் பயன்படுத்துபவர்கள் பல்வேறு அசௌகரியங்களையும் சந்தித்திருக்கின்றனர். ஆனால் குளத்தடிவாசிகளுக்கோ எவரைப் பற்றியும் கவலையில்லை. தூசண வார்த்தைகளை பேசுவது,பொது இடத்தில் ஆடைகளைக் களைந்து நீராடுவது என்று தங்களது செயற்பாடுகளை தொடர்ந்தே வருகின்றனர்.

"எங்களுக்கு யாரு பற்றியும் கவலை இல்லை சாமி..எவன் கதையும் நமக்குத் தேவையும் இல்லை.இது எங்கட மண்.. எங்களப் பிடிக்காதவங்க.. ஏன் இந்தப்பக்கமா வந்து நம்மளையே பாக்கிறாங்க...இதுதான்நம்ம வாழ்க்கை.. அந்த வாழ்க்கை பழக்கமாயிடிச்சி " என்கிறார் அங்கிருக்கும் இன்னொருவர்.

14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## பாலியலும் வீதியிலே...!

அங்கு செல்வோரை அதிகம் முகஞ்சுளிக்க வைக்கும் ஒரு விடயம், தமக்கான பாலியல் தேவைகளையும் அவர்கள் நடுவீதியில் அரங்கேற்றுவதுதான்.

கிடைத்த இடங்கள் எல்லாம் அவர்களின் படுக்கையறைகள். நேரம் , காலம், இடம், பொருள் என்பவையெல்லாம் இவர்களுக்கு ஒரு பொருட்டேயல்ல. ஒருவனுக்கு ஒருத்தி என்ற வரையறையும் கற்புக்கோட்பாடும் இவர்களுக்குப் பொருந்தாது. அதை அவர்கள் கடைப்பிடிப்பதும் இல்லை.

சில சமயங்களில் பெண்களுக்காக ஆண்கள் சண்டையிடும் சம்பவங்களும் நிகழ்வதுண்டு. அப்படியான சண்டைகள் பொலிஸ் நிலையம் வரைக்கும் சென்றிருக்கின்றன. குறிப்பிட்ட காலம் கணவன், மனைவியாக வாழ்வது, பின்னர் பிரிந்து செல்வது என்பவையெல்லாம் அவர்களின் வழக்கமாகிவிட்டன.

குறிப்பாக அந்தக்கூட்டத்தைச் சேர்ந்த சில பெண்கள் பாலியல்தொழிலிலும் ஈடுபட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் இரவுநேரங்களில் அவர்கள் தங்கியுள்ள பகுதிக்குச் செல்லும் ஆடவர்கள் அங்குள்ள பெண்களை தகாத உறவுக்கு அழைப்பது வழமையாக மாறிவருகின்றது. அதனால் பல்வேறு முரண்பாடுகளும், சமூகச்சீர்கேடுகளும் ஏற்படத் தொடங்கியுள்ளன. அந்தக் கூட்டத்தைச் சேர்ந்த சில ஒழுக்கமான பெண்களும் இதனால் பல்வேறு துன்பங்களைச் சந்தித்துவருகின்றனர். என்றாலும் இவை அனைத்தையும் சகித்துக் கொண்டு தொடர்கின்றது அவர்களது வாழ்க்கைப்பயணம்.



## அவர்களின் மொழியுலகம்

அனேகமாக சிங்களம், தமிழ் என இரண்டுமொழிகளையும் அவர்கள் சரளமாகபேசுகின்றனர். சில விசேடமான பேச்சுவழக்கும் அவர்கள் மத்தியில்இருக்கின்றது. ஏனைய மனிதர்களை "துரை" "சாமி" என்று அழைப்பதை வழமையாகக் கொண்டுள்ளனர்.. கணவனை "மாப்பிள்ளை" என்கின்றனர். மனைவியை "நாயகி" என்றும் சூரியனை "வேந்தன்" என்றும் குறிப்பிடுகின்றனர். கழுத்தில் சிலவகையான மாலைகளை அணிந்திருக்கும் அவர்கள் அவை தம்மைப் பாதுகாப்பதாக நம்புகின்றனர். இறைநம்பிக்கை நிறையவே இருக்கின்றது. எனினும் ஆலயம்சென்று இறைவழிபாட்டில் ஈடுபடுவதில்லை.



## இருப்பிடம் தேவையில்லை

மனிதர்களின் அத்தியாவசியத் தேவையான வீடுகளை இவர்கள் வெறுக்கின்றனர். இருப்பிடங்களை அமைத்துக் கொடுப்பதற்கு அரசு தயாராகவிருந்தாலும் அங்குசென்று வாழ்வதற்கு அந்த மக்கள் தயாரில்லை என்பதை உறுதியாகக் கூறுகின்ற னர்.


"எங்கட சனங்களுக்கு காணி, வீடு எல்லாம் தேவையே இல்லை. இப்பிடியே விட்டாக் காணும்.. நாம காலத்தைக் கழிச்சிடுவோம்" என்கிறார்கள் இவர்கள்.

கடந்த வருடம் நாட்டில் கொரோனா தொற்றினால் அமுல்படுத்தப்பட்டிருந்த முடக்கநிலையால் இவர்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தனர். உணவுக்கும் பஞ்சம். எனினும் பொது அமைப்புக்கள் மற்றும் அரச திணைக்களங்களின் உதவியினால் மூன்றுநேரமும் சமைத்தஉணவுவழங்கப்பட்டது. அத்துடன் அவர்களது பாதுகாப்பைக்கருதி தகுந்த இடம் ஒன்றிலும் தங்கவைப்பதற்கு பிரதேச செயலகத்தால் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அதன்படி வாகனங்களில் ஏற்றப்பட்ட அவர்கள் குடியிருப்புப்பகுதியில் அமைந்துள்ள கலாசாரமண்டபத்தில் தங்கவைக்கப்பட்டனர். அவர்களுக்கு அனைத்து வசதிகளும் செய்துகொடுக்கப்பட்டிருந்தன. எனினும் அந்த வாழ்வையும் புறக்கணித்த இந்த மக்கள் இரண்டு நாள்கள் கடப்பதற்கு முன்னரே மண்டபத்தின் சுவரால் ஏறிக்குதித்து வழமையான இருப்பிடங்களுக்குத் திரும்பிவிட்டனர்.

அந்தமக்கள் இந்தச் சூழலுக்கு நன்குஅறிமுகமாகி இயைபாக்கமடைந்துவிட்டனர் வீடுகளில் வசிப்பதை சிறைச்சாலைகள் போலவே உணர்கின்றனர். முதியோர் இல்லங்கள், பொதுக்காப்பகங்களில் சென்று வசிப்பதற்கும் அவர்கள் தயாரில்லை. "அங்கிட்டு எல்லாம் போய் இருந்தமுன்னா.. நம்ம சுதந்திரமே பறிபோயிடும்..சாமி.. "என்று புலம்புகிறார்கள்.

காப்பகங்களில் மது அருந்தமுடியாது, அசைவஉணவு உண்ணமுடியாது, புகைக்கமுடியாது போன்ற காரணங்களே அவர்கள் அவற்றை வெறுப்பதற்கான பின்னணி.

> எங்கட சனங்களுக்கு காணி, வீடு எல்லாம் தேவையே இல்லை. இப்பிடியே விட்டாக் காணும்.. நாம காலத்தைக் கழிச்சிடுவோம்



## நோயற்ற வாழ்வு

நாட்டில் கொரோனாப் பரவல்அடையாளம் காணப்பட்டு ஒரு வருடம் கடந்துவிட்ட நிலையிலும் இன்றுவரை இவர்களுக்கு கொரோனா தொற்றும் பீடிக்கவும் இல்லை, எந்தவிதமான பரிசோதனைகளும் முன்னெடுக்கப்படவுமில்லை. எனினும் அவர்கள் ஆரோக்கியமாகவே இருக்கின்றார்கள்.

காலநிலை மாற்றங்களின் போது வருகின்ற சாதாரண தடிமன், காய்ச்சல்கூட அவர்களை இலகுவில் தாக்குவதில்லை. அதற்கேற்றாற்போல அவர்களது உடல்நிலை இயைபாக்கமடைகின்றது. வைத்தியசாலையும் மருந்துமாகத் திரிகின்ற மக்கள் மத்தியில் அவர்களது வாழ்வியல் வியப்பை ஏற்படுத்துகின்றது "65 வயதாப்போச்சு.. இண்ணைக்கு வரைக்கும் ஆஸ்பத்திரிப் பக்கம் போனதில்லை " என்கிறார் ராணி.. எனினும் குழந்தை பெற்றுக்கொள்ளும் காலங்களில் மாத்திரம் அவர்கள் மருத்துவமனைக்குச் செல்கின்றனர்.

வயதுமூப்பு மற்றும் ஏனைய சிலகாரணங்களால் அவர்களில் சிலர் சாவடையவும் சந்தர்ப்பங்கள் அதிகம், இருவருடங்களுக்கு முன்பாகவும் இந்தக் குழுமத்தைச் சேர்ந்த பெண் ஒருவர்வீதியில் இறந்து கிடந்தார். பின்னர் பொலிஸாரே அந்தச்சடலத்தை அகற்றிச்சென்றிருந்தனர். அதுவரை இவர்கள் அந்தப்பகுதிக்கு வரவில்லை. சடலம் அகற்றப்பட்ட பின்னரே வந்தனர்.

மரணம் எப்போதும் தமக்கு உண்டு என்பதை உணர்ந்துள்ளமையால் மரணத்தை எண்ணி இவர்கள் பெரிதாகக் கவலைப்படுவதில்லை. அருகிலிருப்பவருக்கு மரணம் ஏற்பட்டாலும் சடலத்தை வீதியில் எறிந்துவிட்டு தமது அன்றாடக் கடமைகளை முன்னெடுக்கச் சென்றுவிடுவார்கள்.

இயற்கையே அவர்களின் சொத்து. நாடோடி வாழ்க்கையை வாழ்ந்தாலும் நான்கு சுவர்களுக்குள் நாம் அனுபவித்திராத வாழ்வியலை அவர்கள் எட்டிப்பிடித்துள்ளனர். இவர்களுக்கு இந்த நாட்டில் என்ன நடக்கின்றது? யார் தம்மை ஆள்கிறார்கள்? என்பதொன்றும் தெரியாது. அவ்வளவு ஏன், இவர்களுக்கு அரசியல் தெரியாது, தேர்தல் தெரியாது, நாகரிகம் என்ற பகட்டுவாழ்வு தெரியாது. ஒவ்வொரு மனிதர்களிடமும் இருக்கும் அன்பும் காதலும், பாசமும், சந்தர்ப்பவாதமும் இவர்களிடத்திலும் நிறையவே இருக்கின்றன.

## ஐ.நா. ...



(தொடர்ச்சி)


ஆனால் ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை குறித்த விவகாரத்தை நீக்கம் செய்து அமெரிக்காவின் ஒத்துழைப்போடு இந்தோ பசுபிக் பிராந்தியத்தில் தன்னை முன்னிலைப்படுத்தலாமென இந்தியா நம்புவது ஆரோக்கியமான இராஜதந்திர நகர்வு அல்ல. ஏனெனில் இந்தியாவை ஆசியப் பிராந்தியத்தில் வல்லரசாக்க அமெரிக்கா விரும்புமா என்பது சந்தேகமே. அன்று ரஷ்யாவைப் பலவீனப்படுத்த சீனாவைப் பலப்படுத்திய அமெரிக்கா, இன்று இந்தோ பசுபிக் பிராந்திய வல்லாதிக்கப் போட்டியில் சீனாவை ஓரங்கட்ட முற்படுகின்றது. இதே நிலை இந்தியாவுக்கும் ஏற்படும் என்பது இந்தியக் கொள்கை வகுப்பாளர்களுக்கும் தீர்மானம் எடுப்பவர்களுக்கும் நன்கு தெரிந்திருக்கும்.

ஆகவே இதன் பின்புலத்தில் நின்று கொண்டுதான் ஈழத்தமிழர் விவகாரத்தை இந்தியா துணிவோடு கையிலெடுத்திருக்க வேண்டும். மாறாக ஈழத்தமிழர் விவகாரத்தை ஒப்பாசாரத்துக்காகப் பேசிக்கொண்டு, அமெரிக்கா போன்ற வல்லாதிக்க நாடுகளோடு இணைந்து இந்தோ பசுபிக் பிராந்தியப் பாதுகாப்பு விடயத்தில் புதுடில்லி தொடர்ந்தும் ஈடுபட்டுக்கொண்டிருப்பது இந்தியாவின் ஒட்டுமொத்த இராஜதந்திர நகர்வுகளுக்கு ஏற்புடையதல்ல. ஈழத்தமிழர் விவகாரம் 1983 ஆம் ஆண்டு ஆயுதப் போராட்டமாக ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து இன்றைய ஜெனிவா அமர்வுவரை மூன்று வகையாக இந்திய ம்த்திய அரசின் செயற்பாடுகளைப் பிரிக்கலாம். ஒன்று, 1980களில் இந்திரா காந்தியால் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அணிசேராக் கொள்கைகள். இரண்டாவது, 1991 ஆம் ஆண்டு ராஜீவ்காந்தி கொல்லப்பட்ட பின்னரான காங்கிரஸ் கட்சியின் தனிப்பட்ட வன்மம். அந்த வன்மம் இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள், தீர்மானம் எடுப்போர் வரை தாக்கம் செலுத்தியிருந்தமை.

மூன்றாவது, 2009 ஆம் ஆண்டு மே மாதம் ஈழப்போர் இல்லாதொழிக்கப்பட்ட பின்னரான சூழலில் ஜெனீவா மனித உரிமைச் சபையை அமெரிக்காவைப் பயன்படுத்திச் சிங்கள ஆட்சியாளர்களுக்கு ஏற்றவாறு திசைதிருப்பி விட்டமை. ஆனால் எந்த விவகாரமாக இருந்தாலும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளும் ஐரோப்பிய நாடுகளும் இலங்கை அரசோடு நேரடியாகவே பேச வேண்டும் என்ற சிந்தனை 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னரான சூழலில் சிங்கள ஆட்சியாளர்கள் மத்தியில் வளர்ச்சியடைந்து வருகின்றது. எதற்கெடுத்தாலும் இந்தியாவோடு பேசிவிட்டுக் கொழும்புக்கு வந்து செல்வதை சர்வதேச இராஜதந்திரிகள் தவிர்க்க வேண்டுமென்பதே இலங்கையின் சமீபகால நிலைப்பாடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம் போட்டி 40



அனுப்புபவர் பெயர்:......................................................

முழுமையான தபால் விலாசம்: ..................................

.......................................................................

கையொப்பம்:...........................................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. கல்யாணம் 4. கால் 6. துப்பாக்கிச் சூடு 7. நால்வகை நிலங்களுள் ஒன்று. 8. காதணி வகைகளுள் ஒன்று 10. ரக 12. துறவிகளது ஆடை வகை 13. ஒன்றை ஒத்ததான 14. பிசாசு. 15. ஈரமான இடத்தில் படருவது 16. பெருக்கல் குறி 17. குழு/ சூடிக் கொள்ளல் 18. கூடிய/ சராசரிக்கு மிஞ்சிய 19. குடும்பகாரன் 21. இடம்பெயர/ அசைய 22. விநோதம்/ அதிசயம்

## மேலிருந்து கீழ்

1. புத்திசாலித்தனம் 2. வறு/ வாடச் செய் 3. ஆயுள்வேத வைத்தியத்தில் பயன்படுத்தப்படுவது. 4. தன்னிறைவான உணவுப் பதார்த்தம் 5. ஒவ்வொரு மனிதரதும் வாழ்க்கையைத் தீர்மானிப்பது 7. முந்திய/ அல்லது முற்பட்ட எனப் பொருள்படும் 9. பாடல்/ பாடல் யாக்கும் திறன் படைத்தவன் 11. மிடி/ வறுமை 13. ஒரு தமிழ் மாதம் 14. ஒன்றை வழங்கி அதற்குப் பதிலாக மற்றொன்றைப் பெற்றுக் கொள்வதற்கான பேச்சுவார்த்தை 15. திண்மத்துக்கும் திரவத்துக்கும் இடைப்பட்ட நிலை. 16. பத்து. 17. ஆசிய நாட்டவர்களின் முக்கிய உணவுக்கான மூலப் பொருள். 18. தமிழ்மொழியின் ஆரம்ப எழுத்து 20. திறப்பு 21. ஆறு.

### சொற்சிலம்பம் போட்டி 38 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1.அமாவாசை 5. ஊர்தி 7. சமர்த்தன் 9. தின் 10. தாடி 11. அணை 12. மகான் 14. கதி 15. முகடு 16. எண்பது 18. கள் 19. குழு 20. திரி 21. நீதிபதி 23. புகார் 24. துண்டம்

**மேலிருந்து கீழ்**

1. அசதி 2. மாமன்மகள் 3. வார் 4. சைத்தான் 5. ஊன் 6. திண்ணை 8. தடி 11. அதிபதி 13. காடு 14. கண் 15. முகப்பு 16. எழுபது 17. துரிதம் 19. குதி 21. நீர் 22. திண்

**சொற்சிலம்பம் போட்டி இல.40**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
என்னும் முகவரிக்கு
**03.04.2021 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக**
தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

**போட்டி இலக்கம் 38 இல் வெற்றி பெற்றோர் விபரம்**

**1 ஆம் பரிசு**
**சி.ராஜீவ்**
பிரதேச செயலகம், முசலி, மன்னார்.

**2 ஆம் பரிசு**
**துஷாரா சிறீஸ்கந்தராசா**
மாணவி, 1ஆம் வருடம், மருத்துவ பீடம், யாழ்ப்பாணம்.

**3 ஆம் பரிசு**
**அ.தருணீஸ்கன்**
சோதிவாசம், தையிட்டிபுலம், வித்தகபுரம், தெல்லிப்பளை.

**4 ஆம் பரிசு**
**பா.ஜனகன்**
இல.238/1, 1ஆம் குறுக்குத்தெரு, உக்குளாங்குளம், வவுனியா

**5 ஆம் பரிசு**
**[illegible]**
கலட்டி[illegible], பருத்தித்துறை .



கோகுலராகவன்

காலை எழுந்ததும் முற்றம் கூட்டுவது எமது பிரதேசத்தில் காலைக் கடமைகளில் முக்கியமான ஒன்று. முற்றம் கூட்டுவது என்பது ஒரு கலைதான். எங்கள் பகுதியில் முற்றம் கிட்டத்தட்ட ஒரு பரப்புக்குமேல். வீடுகள் பெரும்பாலும் பத்து பரப்புக்கு மேற்பட்ட காணிகளுக்குள்தான் அமைந்திருக்கும். எனவே முற்றம் ஒரு பரப்போ இரண்டு பரப்புகளுக்கு மேற்பட்டதாகவோதான் இருக்கும். காலை 6 மணிக்கு தொடங்கினால் சாதாரணமாக எட்டு மணியளவில் தான் கூட்டி முடிக்கலாம். வாசலில் நீர் தெளித்து கோலம் போடும் மரபு என்பது மிக குறைவு. முற்றம் கூட்டி குப்பைகளை அள்ளுவதுதான் எமது பகுதிகளின் சிறப்பம்சம். ஆண்களை விட பெண்களே முற்றம் கூட்டுவதில் சிறப்புடையவர்கள். நீங்கள் வீதியில் போகும் போது காலையில் ஒவ்வொரு வீடுகளிலும் “சறார் சறார்” என்று முற்றம் பெருக்கும் சத்தம் காதில் இனிமையாகக் கேட்கும்.




யாழ்ப்பாணம், வலிகாமம் பிரதேச இந்த வேலை மிகக் குறைவு. அங்கு முற்றம் என்பது ஒவ்வொரு வீடுகளிலும் ஒரு பொங்கல் பானை வைத்து பொங்கும் இடப்பரப்பு என்பதாகவே இருக்கும்.

“அம்மா தேத்தண்ணி”

“முற்றம் கூட்டிப் போட்டு ஓடிவாறன்”

இது பொதுவாக எமது பிரதேச தாய்மார்களின் பதிலாக இருக்கும்.

மணல் பிரதேசமான எமது பகுதியில் முற்றம் கூட்டி விட்டு திரும்பிப் பார்த்தால் ஒரு தனி அழகு தெரியும். முற்றம் கூட்டி முடிய முன்புறம் நிற்கும் நாலு செம்பரத்தைக்கும் ஒரு அலரிக்கும் தண்ணீர் ஊற்றி விட்டால் அதிலும் ஒரு அழகு புலப்படும்.

சில பெண்கள் முற்றம் கூட்டும்போது தெல்லுமாறிக் கூட்டுவார்கள். பார்க்க ‘ ‘சிக் சைக்’தையல் மாதிரி வடிவாக இருக்கும்.

முற்றம் என்பது சில வேளை வீட்டைச் சுற்றியும் அமைந்திருக்கும். அநேகமாக எல்லோரும் வீட்டைச் சுற்றி கூட்டிவிடுவார்கள். இரவில் கள்ளர் காவாலிகளின் நடமாட்டம் இருந்தால் காலடியை வைத்தே கண்டுபிடித்து விடலாம். மிகத் தெளிவாக இருக்கும்.

வயது வந்த பெண்பிள்ளைகளும் முற்றம் கூட்டுவது வழமை. தாய்க்கு உதவியாக இது நடக்கும்.

“பிள்ளை எழும்பு ! கொப்பர் போகப்போறார். முத்தத்தைக் கூட்டு”

சித்திராக்கா முற்றம் கூட்டி முடிய கேற்றைத் திறந்து கேற்றுக்கு முன் ஒழுங்கையையும் ஒருக்கா கூட்டி விடுவார்.

ராசாண்ணை தங்கள் வீட்டு கிணற்றடியில் கடைக்குப் போக குளித்துக் கொண்டிருப்பார். கிணற்றுப் படிக்கட்டில் ஏறி நின்று குளிக்கும்போது ஒழுங்கையில் முற்றம் கூட்டும் சித்ராக்காவையும் வடிவாகத் தெரியும்.

ராசாண்ணை பாடல் ஒன்றை பாடிக் கொண்டே குளிப்பார். ராசாண்ணைக்கு பிடித்த பாட்டு “பொன் வீணையே என்னோடு வா” பொன் வீணை வந்ததோ இல்லையோ? சித்ராக்காவை ராசாண்ணை தான் கலியாணம் கட்டினார். அந்தக் கல்யாண வீட்டுக்கு நான் பள்ளிகூடம் போகாமல் ஞானப்பிரகாசம் சேரிடம் இரண்டு அடி வாங்கியதும் நல்ல ஞாபகம்.

காலையில் யாராவது வீட்டில் இருந்து நற்காரியமாக புறப்படும்போது விளக்குமாற்றோடு நின்றால் சுபமங்கலம்தான். பேச்சு வாங்கி செத்தே போகவேண்டும்.

முற்றம் கூட்டி முடிய விளக்குமாறு வேண்டாத பொருளோடு மறைவாக வைக்கப்படும். “பாவம் விளக்குமாறு” என்று வைத்துக் கொள்வோம்.

எங்கள் வீட்டில் அம்மாதான் முற்றம் கூட்டுவது வழமை. சில வேளைகளில் ( விடுமுறை நாள்களில் ) அப்பா கூட்டுவார்.

ஒருநாள் அப்பா முற்றம் கூட்டிக் கொண்டு நின்றார். ஒரு நல்லெண்ணெய் வியாபாரி நல்லெண்ணை விற்றுக்கொண்டு வந்தார். அம்மாவும் நல்லெண்ணெய் வாங்க அவரைக் கூப்பிட்டார்.

“என்ன விலை?”

“போத்தல் 120 ரூபா பிள்ளை”

“நூறு போட ஏலாதோ?”

“நூற்றுப் பத்து”

“இல்லை நூறு”

பேரம் பேசல் அமர்க்களமாக நடக்குது. முற்றம் கூட்டிக் கொண்டு நின்ற அப்பா சமாதானமாக்க எண்ணி

“இஞ்சார் நூற்றுப்பத்துக்கு வாங்கும்” எண்ணெய்க்காரர் அப்பாவைத் திரும்பிப் பார்த்து,

“முத்தம் கூட்ட வந்தால் முத்தத்தைக் கூட்டிப் போட்டு போம். எண்ணெய் கொடுக்க எனக்குத் தெரியும்”

“ஆ... சரி சரி”

[illegible] என்று நினைத்து விட்டார். அப்பாவுக்கு சிரிப்பு அடக்க [illegible]லை. சிரித்து கொண்டு பேசாமல் நின்றார். பாவம் எண்ணெய்க்காரர், அம்மாவுக்கு நூறுக்கே எண்ணெயைக் கொடுத்துவிட்டுப் போனார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனர்வாழ்வின் பின்னும் கைது!


நடேசு குகநாதன்

புனர்வாழ்வு பெற்று விடுதலையாகி மூன்று மாதங்களின் பின்னர் மீண்டும் கைது செய்யப்பட்டு 12 வருடங்களாக வழக்கு விசாரணைகள் எதுவும் இன்றி சொல்லமுடியா துன்பங்களுடன் தனது வாழ்க்கையை சிறையில் கழித்து வரும் தமிழ் அரசியல் கைதி தான் நடேசு குகநாதன்.

புனர்வாழ்வு முடிந்த பின்னர் கைது செய்யப்பட்டு சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள ஒரே ஒரு நபர் இவர் தான் என்ற ரீதியில் அவருடைய மனைவியான முல்லைத்தீவு உடையார் கட்டில் வசிக்கும் யோகராணி குகநாதன் தனது கணவருக்கு நடந்த துயரச் சம்பவங்களை உதயன் சஞ்சீவி வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறார்.



## வழக்குமில்லை: விசாரணையுமில்லை!

தொகுப்பு : பொ.சோபிகா

எனது கணவர் விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்தபோது கடந்த 2003 ஆம் ஆண்டு என்னைத் திருமணம் செய்துகொண்டார். எமக்கு ஒரு மகனும் மகளும் உள்ளனர். 2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தம் நடைபெற்ற வேளை 2009.05.18 அன்று வட்டுவாகலில் இருந்து ஓமந்தை நோக்கி இடம்பெயர்ந்து சென்றோம். அப்போது ஓமந்தைச் சோதனை சாவடியில்வைத்து புலி உறுப்பினர்களை சரணடையுமாறும் விசாரணைகளின் பின்னர் விடுவிப்பதாகவும் இராணுவத்தினர் அறிவித்தார்கள். அப்போது என்னையும் பிள்ளைகளையும் விட்டுவிட்டு அவர் சரணடைந்தார்.

### புனர்வாழ்வின் பின் விடுதலை

அங்கிருந்து அவர் வவுனியா பூந்தோட்டம் முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டு, மகரம்பைக்குளம் முகாமுக்கு மாற்றப்பட்டு, ஒரு மாதம் வவுனியா யோசேப் முகாமில் வைத்திருந்தார்கள். அங்கிருந்து பயங்கரவாத தடுப்பு பிரிவினரிடம் 2009.08.24 ஆம் திக்தி பாரப்படுத்தப்பட்டு விசாரிக்கப்பட்டார். பின்னர் 2009 ஆண்டு செப்ரெம்பர் மாதம் பூசாவுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு 21 மாதங்கள் இருந்தார்.
பின்னர் 2011 ஆம் ஆண்டு 05 ஆம் மாதத்தில் இருந்து நீதிமன்றச் சிறையில் 10 மாதங்கள் வைத்திருந்தார்கள். அங்கு அடிப்படை மனித உரிமைகள் வழக்கு பதிவு செய்து கடந்த 2012. 03.24 அன்று புனர்வாழ்வு என தீர்ப்பளிக்கப்பட்டு வவுனியா மருதமடு முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டார். ஒருவருடப் புனர்வாழ்வை நிறைவு செய்து 2013.03.24 அன்று எனது கணவர் விடுதலை செய்யப்பட்டார்.

### 3 மாதங்களில் மீண்டும் கைது

புனர்வாழ்வின் பின்னர், கணவர் விட்டில் இருந்த போது 2013.07.11 ஆம் திகதி பயங்கரவாத தடுப்பு பிரிவினரிடம் இருந்து தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது. வவுனியா யோசேப் முகாமுக்கு வருமாறும் விசாரணை ஒன்றை முடித்து அனுப்புவதாகவும் கேட்டுக்கொண்டனர். அங்கு நாங்கள் உடனடியாகச் சென்றோம். உள்ளே அழைத்துச் சென்று விசாரணை செய்துவிட்டு என்னை வீடு செல்லுமாறு கூறினார்கள். எனது கணவரை 4 ஆம் மாடிக்கு கொண்டு சென்று விசாரணையின் பின்னர் ஒரு வாரத்தில் விடுதலை செய்வதாகக் கூறினார்கள். ஆனால் அங்கிருந்து பூசா முகாமுக்கு கொண்டு போய் 18 மாதங்கள் தடுத்து வைத்தார்கள். பின்னர். 2015.01.02 நீதிமன்றில் முற்படுத்தினார்கள். அங்கு எந்த வழக்கும் பதிவும் செய்யப்படவில்லை. அங்கிருந்து மகசின் சிறைக்கு அனுப்பி வைத்தார்கள்.

### [illegible]

2015 ஆம் ஆண்டில் இருந்து இன்றுவரை வழக்கு விசாரணைகள் எதுவும் இன்றி எனது கணவர் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார். எனது கணவருடன் மேலும் 5 பேர் அன்றைய தினம் கைது செய்யப்பட்டார்கள் அதில் இருவர் விடுதலை செய்யப்பட்டு விட்டார்கள். ஏனைய மூவருக்கும் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. ஆனால் எனது கணவருக்கு வழக்கும் இல்லை , விசாரணையும் இல்லை.
எதற்காக கைது செய்தார்கள்? ஏன் தடுத்துவைத்துள்ளார்கள்? என்றும் தெரியவில்லை. புனர்வாழ்வு பெற்று வந்தவர் 3 மாதங்களில் என்ன குற்றத்துடன் தொடர்புபட்டிருப்பார்? அவர் மேல் எந்த பிழையும் இல்லை என்ற அனைவருக்கும் தெரியும். ஆனால் அவரை விடுதலை செய்ய எவரும் அக்கறை காட்டவில்லை என்பது வேதனையாக உள்ளது. அவரைக் கைது செய்தபோதே ஒருவேளை வழக்கு பதிவு செய்திருந்தால் இப்போது அவருடைய தண்டனைக் காலமும் நிறைவேறி விடுதலையாகியிருப்பார். ஆனால் அநியாயமாக அவரின் வாழ்க்கையை அழிக்கிறார்கள்.

### ஏன் தடுத்துவைத்துள்ளார்கள்?

எனது கணவர் 38 வயதில் கைது செய்யப்பட்டார். தற்போது 50 வயதாகிறது. தனது குழந்தைகளை அவர்களின் சிறுவயதில் பிரிந்து சென்றார். இப்போது அவர்கள் பெரியவர்களாகிவிட்டார்கள், பிள்ளைகளும் நானும் எனது கணவரும் மனதளவில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளோம். சொல்லமுடியாத வேதனைகளை அனுபவித்து வருகிறோம். ஏன் அவரைத் தடுத்து வைத்துள்ளார்கள் என்ற காரணம் கூடத் தெரியாமல் தவிக்கிறோம். யாரும் இதற்கு பொறுப்பு கூற முன்வரவில்லை. அக்கறையெடுப்பதாகவும் தெரியவில்லை. வங்கியில் 4 லட்சம் ரூபா கடன் பெற்று எனது கணவரின் விடுதலைக்காக ஒரு சட்டத்தரணியிடம் பணம் கொடுத்தேன். ஆனால் அவர் முன்னேற்றமான எந்த நடவடிக்கையும் இதுவரை எடுத்ததாகத் தெரியவில்லை.

### எனது கணவர் பழிவாங்கப்படுகிறாரா?

புனர்வாழ்வு பெற்று எம்முடன் வாழ வந்த எனது கணவரை விடுவிப்பதற்காக என்னால் முடிந்த அளவு முயற்சிகளையும் செய்துள்ளேன். செய்துகொண்டும் இருக்கிறேன். ஆனால் எந்தவொரு முயற்சியும் பயனளிக்கவில்லை. இதனுடன் சம்பந்தப்பட்ட அனைவருக்குமே தெரியும் என் கணவர் குற்றமற்றவர் என்று . எந்தவொரு காரணமும் இன்றி அவர் சிறையில் இருப்பது எந்த வகையில் நியாயம் என்று எனக்கு புரியவில்லை. அரசு இவரை விடுதலை செய்ய விரும்பாததற்குக் காரணம் கூட எமக்கு தெரியாது .அவர் தமிழ் மகன் என்றதற்காக பழிவாங்கப்படுகிறாரா? ஏனென்றால் தமிழன் என்றால் குற்றவாளிகளாக மட்டும் தான் பார்க்கிறார்கள். அவர் குற்றம் செய்தாரா, இல்லையா என்பதை விசாரிப்பதை விட்டுவிட்டு குற்றவாளி என்றேமுடிவு செய்து விடுகிறார்கள். இது தான் எனது கணவர் விடயத்திலும் நடக்கிறது என எண்ணுகிறேன்.

### [illegible]

எனது கணவரை விடுவிக்கக் கோரி 100க்கும் மேற்பட்ட கடிதங்களை பல்வேறு தரப்பினருக்கும் அனுப்பியிருந்தேன். ஆனால் யாரிடம் இருந்தும் எந்தவொரு பதிலும் எனக்குக் கிடைக்கவில்லை. மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் பல முறை சென்றேன். உரிய தரப்பிடமிருந்து பதில்வரவில்லை என்றே அவர்கள் கூறுகிறார்கள். அவர்கள் எந்வொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. கடந்த ஆட்சியில் இருந்த ஜனாதிபதிக்கு பல கடிதங்கள் அனுப்பினேன், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனைவருக்கும் கடிதம் அனுப்பினேன். ஒருவர் கூட பதிலளிக்கவில்லை.
எனது கணவர் உண்ணாவிரதம் இருக்கும் காலப்பகுதியிலும், தற்போதும் எமது தமிழ்த் தேசிய அரசியல் கட்சி தலைமைகளிடமும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் இதற்கான நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருந்தேன். அவர்கள் மௌனமாக உள்ளார்கள். இந்த விடயத்துடன் சம்பந்தப்பட்ட அனைவரிடமும் கோரிக்கை முன்வைத்தோம் ஒருவர் கூட பதில் தரவில்லை. சில அரசியல்வாதிகள் நடவடிக்கை எடுப்பதாக கூறினார்கள். ஆனால் என்ன நடவடிக்கை என எனக்குப் புரியவில்லை. மீண்டும் கடந்த வருடம் மார்ச் மாதம் ஜனாதிபதிக்கும் சம்பந்தப்பட்ட அதிகரிகளுக்கும், எனது கணவரை பிணையிலாவது விடுதலை செய்யுங்கள் எனக் கோரி கடிதம் அனுப்பினேன். அதே நேரம் அரச அதிபர் ஊடாகவும் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பினேன். அதன் பின்னர் ஒரு முறை பயங்கரவாத தடுப்பு பிரிவினர் வந்து என்னிடம் விசாரணை செய்துவிட்டுச் சென்றார்கள். அதன் பின்னர் எந்த நடவடிக்கையும் இல்லை.

**புனர்வாழ்வு பெற்று எம்முடன் வாழ வந்த எனது கணவரை விடுவிப்பதற்காக என்னால் முடிந்த அளவு முயற்சிகளையும் செய்துள்ளேன். செய்துகொண்டும் இருக்கிறேன். ஆனால் எந்தவொரு முயற்சியும் பயனளிக்கவில்லை. இதனுடன் சம்பந்தப்பட்ட அனைவருக்குமே தெரியும் என் கணவர் குற்றமற்றவர் என்று . எந்வொரு கார ணமும் இன்றி அவர் சிறையில் இருப்பது எந்த வகையில் நியாயம் என்று எனக்கு புரியவில்லை.**

மீண்டும் 2020 ஆம் ஆண்டு ஜுலை மாதம் ஜனாதிபதிக்கும் சிறைச்சாலைகள் ஆணையாளருக்கும் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கும் கடிதம் அனுப்பியுள்ளேன். இதுவரை பதில் வரவில்லை.


### பிணையிலாவது விடுதலை செய்யுங்கள்

எனது கணவரைப் பிரிந்து வாழுவது எமக்கு மிகவும் கடினமாக உள்ளது. யாரிடமும் உதவி கேட்டு போக முடியவில்லை உதவி செய்வதற்கு யாரும் தயாராகவும் இல்லை. எனது கணவர் விடுதலையானால் மட்டும் போதும், வேறு எந்த உதவியும் எமக்குத் தேவையில்லை. கொரோனா காலம் என்பதால் கடந்த 2019 ஆம் ஆண்டுக்கு பின்னர் நாம் அவரைச் சென்று சந்திக்க முடியவில்லை. அவர் மனதளவில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார் . குழந்தைகளுடன் வாழவேண்டும் என்பதற்காக சிறையில் தன்னாலான முயற்சிகளை செய்து தனது உடல்நிலையை கவனித்து வருகிறார். எத்தனை காலத்துக்கு இந்தக் கடின வாழ்க்கை எனப் புரியவில்லை. அரசு அரசியல் கைதிகள் விடயத்தில் மனிதாபிமான ரீதியில் விரைவில் முடிவெடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உயர் குருதி அழுத்தம் அல்லது இரத்தக்கொதிப்பு (Hypertension)



**1** **எனது கணவருக்கு 50 வயது. எவ்வித நோயுமின்றிய சுகதேகி. ஒரு கிழமையின் முன் இரத்ததான முகாமொன்றுக்கு சென்ற வேளையில், தாதி குருதி அமுக்கத்தை பரிசோதித்து அதிகமாக 160/96 mmhg இருப்பதாக கூறி மருத்துவரை சந்திக்கச் சொல்லியுள்ளார். எவ்வித அறிகுறியுமின்றி எப்படி பிரசர் வரும் டாக்டர்? நாம் மருத்துவரை சந்திப்பது அவசியமா?**



மருத்துவர் ப்ரியா கமலசிங்கம்
(யாழ்.போதனா மருத்துவமனை,
– சிலாபம் மாவட்டப்
பொது மருத்துவமனை)

உலகெங்கிலும் நிகழும் அகால மரணத்திற்கான, தடுக்கக்கூடிய மிகவும் முக்கிய காரணி
**உயர் இரத்த அழுத்தம்**


இதன் அர்த்தம் உடலின் இரத்த அழுத்தம் பொதுவாக இருக்க வேண்டிய அளவை விட அதிகமாக இருத்தல். அதாவது ஒரு மாத கால இடைவெளியில், மூன்றுமுறை மருத்துவர் உங்கள் குருதியமுக்கத்தை அளவிடுகையில் தொடர்ந்து இரத்த அழுத்தம் 140/90 mmhg என்ற அளவுக்கு மேலே இருப்பின் உங்களுக்கு உயர் குருதியமுத்தம் இருப்பதாகக் கணிக்கப்படுகிறது.

உயர் இரத்த அழுத்தம் பொதுவாக இருவகைப்படும்

**1. முதன்மை/ அத்தியாவசிய உயர் அழுத்தம்**
சுமார்- 90-95 வீதம் இவ்வகையிலடங்கும். அதாவது வெளிப்படையான காரணங்கள் ஏதும் இனங்காணப்படாமலிருக்கும் பட்சத்தில் ஏற்படும் உயர் இரத்த அழுத்தம்.

**2. இரண்டாம் நிலை உயர் இரத்த அழுத்தம்**

மீதமுள்ள 5-10 வீதம்
சீறுநீரகம், தமனிகள், இதனம், சுரப்புகள் அல்லது வேறு நிலைமைகளின் காரணத்தால் தூண்டப்பட்டு உருவாகும் உயர் இரத்த அழுத்தம்.
உதாரணம்: குளுக்கோசு சகிப்புத்தன்மை இன்மை, நிலவு முகத் தோற்றம், மார்பு மற்றும் அடிப்புற பருமன், குஷிங் சின்ரோம், தைரொயிட் நோய்.




உயர் இரத்த அழுத்தத்தின் மிகவும் சிக்கலான விடயம் என்னவென்றால் எவ்வித அறிகுறிகளும் வெளிப்படாமல் இருத்தல். பெரும்பாலான நோயாளிகள் தமக்கு உயர் குருதியழுத்தம் இருப்பது தெரியாமல் இன்னபிற காரணங்களுக்கு வைத்தியசாலைக்கு வருகையில் கண்டுபிடிக்கப்பட்டு அதை ஏற்றுக் கொள்ள முடியாத மனநிலையில் வைத்தியருடன் வாக்குவாதப்படும் நிலை காணப்படுகிறது.

## பொதுவான அறிகுறிகள்

1. கடும் தலைவலி
2. களைப்பு
3. குழப்பமான மனநிலை
4. பார்வைக்கோளாறு
5. நெஞ்சுவலி
6. மூச்சுவிடச் சிரமப்படல்
7. நெஞ்சுத்துடிப்பு அதிகரித்தல்/ படபடப்பு
8. சிறுநீரில் இரத்தம்
9. தலைசுற்றுதல்
10. காதுகளில் ரீங்காரம் அல்லது இரைச்சல்
11. மயக்கம் ஏற்படுதல்

### வகைப்பாடு -

| Classification (JNC7) | இதய சுருங்கியக்க அழுத்தம் | இதய விரிவியக்க அழுத்தம் |
|---|---|---|
| | mmHg | mmHg |
| சாதாரணம் Normal | 90–119 | 60–79 |
| Prehypertension – உ.கு.அ. ஏற்படுவதற்காக அபாய நிலை | 120–139 | 80–89 |
| Stage 1 – Hypertension – உ.கு.அ. முதலாம் படிநிலை | 140–159 | 90.99 |
| Stage 2 – Hypertension – உ.கு.அ. இரண்டாம் படிநிலை | ≥160 | ≥100 |
| Isolated Sysout Hypertension | ≥140 | >90 |

### மேற்கொள்ளப்படும் பரிசோதனைகள்

| System | பரிசோதனைகள் |
|---|---|
| Renal | Microscopic urinalysis, புரதச் சிறுநீர், serum BUN (இரத்த யூரியா நைதரசன்) and/or கிரியாட்டினைன் |
| Endocrine | Serum சோடியம், பொட்டாசியம், கல்சியம், TSH (thyroidstimulating hormone) |
| வளர்சிதைமாற்றம் | Fasting blood glucose, total cholesterol, HDL and குறையடர்த்தி கொழுமியப்புரதம் cholesterol, டிரைகிளிசரைடு |
| Other | Hematocrit, இதய துடிப்பலைஅளவி, and chest radiograph |

### உங்களுக்கு உயர் குருதியமுக்கம் இருப்பின் மேற்கொள்ள வேண்டிய நடைமுறை

1. அன்றாடம் உடற்பயிற்சி செய்தல், உடல் எடை BMI –18–24.5 இற்கிடையில் இருத்தல் அவசியம்.
2. அன்றாடம் உட்கொள்ளும் உப்பின் அளவைக் குறைத்தல்
3. மதுப்பழக்கமிருப்பின் நிறுத்தல்
4. (குறைந்த ஒரு எல்லை வைத்துக் கொண்டாலும் அது உங்கள் இரத்த அழுத்தத்தை அதிகரிக்கவே செய்யும்)
5. மனசை இலேசாக வைத்துக் கொள்தல்
6. மனஅழுத்தம்– உயர் குருதி அழுத்தத்தை அதிகரிக்கும்
7. புகைப்பிடிப்பதை அறவே தவிர்த்தல்
8. கிரமமாக மருத்துவப் பரிசோதனையை மேற்கொள்ளுதல்




**உயர் இரத்த அழுத்த கட்டுப்பாட்டில் வாழ்க்கை முறையில் மாற்றத்தை கொண்டு வருதல், மற்றும் வாழ்நாள் முழுவதும் பரிந்துரைக்கப்படும் மருந்துகளை உட்கொள்ளும் அர்ப்பணிப்பு தேவைப்படுகிறது.**

### சிகிச்சை

உயர் இரத்த அழுத்தமானது முற்றிலும் குணப்படுத்த இயலாதது. ஆனால் முறையான பராமரிப்பு மற்றும் மருந்துகள் மூலம் இதைக் கட்டுப்படுத்த இயலும். உயர் இரத்த அழுத்த சிகிச்சையானது உங்கள் மருத்துவர் எடுத்த இரத்த அழுத்த அளவீடுகளை பொறுத்து அமையும்.

- உங்கள் சிஸ்டாலிக் இரத்த அழுத்தம் 120–129 mm Hg அளவில் இருந்து ஆனால் டைஸ்டாலிக் பிபி 80 mm Hgக்கு குறைவாக இருந்தால், மருத்துவர் உங்களை ஆரம்ப நிலை இரத்த அழுத்த நோயாளி என்று, அதாவது முன் உயர் இரத்த அழுத்த வகையைச் சேர்ந்தவர் என்று கூறுவர். இந்த வகையைச் சேர்ந்தவர்களுக்கு மருந்துகள் தேவையில்லை. ஆனால் தினசரி உடற்பயற்சியும் உணவுக் கட்டுப்பாடும் வேண்டும். ஒவ்வொரு 15 நாட்களுக்கு ஒரு முறை இரத்த அழுத்ததை வீட்டில் மின்னணு இயந்திரம் மூலம் அல்லது மருத்துவ நிலையத்தில் சென்று இரத்த அழுத்த அளவீடுகளை பரிசோதித்து பார்த்தல் வேண்டும்.
- உங்கள் சிஸ்டாலிக் பிபி 130–139 mm Hg அளவில் ஆனால் டைஸ்டாலிக் பிபி 80–89க்கும் குறைவாக இருந்தால், உங்களுக்கு முதல் நிலை உயர் இரத்த அழுத்தம் இருப்பதாக அர்த்தம். ஆதலால் மருத்துவர் உங்களுக்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மருந்துகள், உணவு மாற்றங்கள், உடற்பயிற்சி மற்றும் கட்டுப்பாடான இரத்த அழுத்த பரிசோதனைகளைப் பரிந்துரைக்கலாம்.
- உங்கள் சிஸ்டாலிக் பிபி 140mm Hg அளவில் அல்லது அதிகமாக இருந்து மற்றும் டைஸ்டாலிக் பிபி 90mm Hg மெர்குரியின் அளவுக்கும் குறைவாக அல்லது அதிகமாக இருந்தால், உங்களுக்கு இரண்டாம் நிலை முன் உயர் இரத்த அழுத்தம் இருப்பதாக அர்த்தம். ஆகையால் மருத்துவர் உங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மருந்துகள், கட்டுப்பாடான உணவு மாற்றங்கள், உடற்பயிற்சி மற்றும் கண்டிப்பான இரத்த அழுத்த கண்காணிப்புகளைப் பரிந்துரைக்கலாம்.
- கால்சியம் சேனல் பிளாக்கர்ஸ், எசிஇ இன்ஹிபிட்டர்ஸ், பீட்டா பிளாக்கர்ஸ், மற்றும் டையூரிட்க்ஸ் போன்ற உயர் இரத்த அழுத்த மருந்துகள் ஆண்டிஹைப்பர்டென்சிஸிவ் மருந்துகளாக பயன்படுகின்றன. இதில் ஒன்று அல்லது இரண்டின் கலவை அல்லது அதற்கு மேற்பட்ட மருந்துகளின் கலவை உயர் இரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்துகிறது. இரத்த அழுத்த அளவீடுகள், நோயின் தீவிரம், வயது மற்றும் தேவையான மருந்துகள் இவற்றின் அடிப்படையில் மருத்துவர் மருந்துகளைத் தேர்வு செய்வார்.

**உயர் இரத்த அழுத்தம் ஏற்படுவதற்கான காரணங்கள்:**

உயர் இரத்த அழுத்தம் ஏற்படுவதற்கான காரணங்கள் எப்பொழுதும் விளக்கப்படுவதில்லை. ஆனால் பின்வருபவை ஒருவித காரணியாகச் செயல்படுகிறது.

1. குறைவான உடல் உழைப்பு
2. உடல் எடை அதிகரிப்பு (Overweight or Obese)
3. உணவில் சேர்க்கப்படும் அதிக அளவு உப்பு
4. குடிப்பழக்கம்/ புகைப் பிடித்தல்
5. உயர் இரத்த அழுத்தத்திற்கான குடும்பப் பின்னணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகிம்சையின் அக்கினிப் பாய்ச்சல்

உதிரத்தில் கொதித்தெழும்
கொடூர உணர்வுகளை எல்லாம்
அறிவென்னும் அங்குசம் கொண்டு
அடங்கத்தவறும் அதிகாரத்தின்
கைதிகளான மேய்ப்பர்களுக்கு
சுய மண்ணில் தலை நிமிரும்
அகிம்சா யாகங்கள்
மனசாட்சியின் கதவுகளை
இலேசாக தட்டக்கூடுமோ?

ஒரு இனத்தின்
உயிர்த் துடிப்பாக நாவில் உலாவரும்
மொழிக் கோலங்கள் மனித
ஜீவன்களின்
ஐக்கியத்திற்கு ஒரு திறவுகோலாக
இதயங்களில் முகை விரிக்கும்
உணர்ச்சிப் பெருக்கிற்கு
அணை போட முடியாமல்
அடிவானமும் மண்டியிடும்

மத பாரம்பரியமாக
இருவேறு கூறுகளாயினும்
அந்த மொழி என்னும்
சிந்தனைச் சூக்குமதாரியின்
ஒருங்கிணைப்பில் உத்வேகம் பெறும்
சத்தியப் பயணம்
நிச்சயம் முடிவில்
ஒரு விடியல் பூவாய் விரியும்

ஒற்றுமைக்கு
அன்பியல் வழிதேடி
மானிட ஈடேற்றத்திற்கு
நிலைக்களனான
நியாயத்தின் புனிதத் தன்மை
இங்கு இனமத பேத இருள்
கொளிக்கும்
வனாந்தரங்களில் சிக்கி
மனித மாண்பினை மறுதலித்து
பொய்மையின் புரட்சி வடிவங்களாக
உயர உட்காரும்

சொல்லிலும் செயலிலும்
தர்மத்தின் இருப்பு மழுங்கடிக்கப்படும்
சுகபோக கற்பித மாயைகளின்
வன்பிடியில் நீதி நியாயங்கள்
நிர்மூலமாகும்..
பாதிப்புகளின்
தொடர் பங்குதாரிகளாய்
நசுங்கும் ஒரு குழாத்தின்
எழுச்சிப் பெருக்கு வரலாற்றில்
நெருப்பு வரிகளாய் நிலைபெறும்

ஆனையூர்க்கவிராயர்





# ஒரு புதிய அழைப்பு

○ ம.பா. மகாலிங்கசிவம்

**ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றோ ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லைக் கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு**

என்பது ஔவையாரின் பாடல். உழவுத் தொழிலின் பெருமையைச் சொல்வது ஆற்றங்கரையில் ஆற்றுநீரினால் வளம் பெற்று உயர்ந்து நிற்கின்ற மரம் மாத்திரமன்றி, அரசனே அறியும் படியும் உயர்வாக வாழ்ந்த வாழ்க்கையும் ஒருநாள் விழுந்து விடும். ஏனைய எல்லாத் தொழில்களிலுமே மேலதிகாரியின் தொல்லை, அரசின் வரையறைகள் எனப் பல குறைபாடுகள் உள்ளன. அதனால் சுதந்திரமான உழவுத் தொழிலுக்கு எந்தத் தொழிலுமே ஈடாகமாட்டாது என்பது ஔவையாரின் கருத்தாகும். நாங்கள் சேற்றிலே கால் வைக்காவிட்டால் நீங்கள் சோற்றிலே கைவைக்க முடியாது என்பது விவசாயத்தின் பெருமை பேசும் இன்னொரு கவிதை ஆகும்.

1970 களில் ஸ்ரீமாவோ பண்டார நாயக்க பிரதமராக இருந்த போது வெளிநாட்டு இறக்குமதிகளுக்குத் தடை விதித்து உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவித்தார். விவசாயத் துறை பெருவளர்ச்சி பெற்றது. மக்கள் தமது பூச்சாடிகளில் பூக்கன்றுகளுக்குப் பதிலாக மிளகாய், கத்தரி முதலிய மரக்கறிப் பயிர்களை நட்டனர். பலாலி, வசாவிளான் முதலிய வளமான விவசாயக் கிராமங்களின் விவசாயிகள் பெரும் செல்வந்தர்களானதும் இந்தக் காலத்திலே தான்.

இதே போன்ற தொரு சூழல் தற்போதைய அரசின் கொள்கை காரணமாக மீண்டும் உருவாகியுள்ளது. விவசாயப் பொருள்களின் இறக்குமதி பெருமளவுக்குத் தடை செய்யப்பட்டுள்ளது. இது பற்றி முற்கூட்டியே திட்டமிடாமல் திடீரெனத்தடை விதிக்கப்பட்டதால் உழுந்து, பயறு, மஞ்சள், இஞ்சி முதலிய பொருள்களுக்குப் பெருந் தட்டுப்பாடு நிலவுகிறது. விலையும் ஆயிரத்தைத் தாண்டிவிட்டது.

எனவே விவசாயத் தொழில் மீண்டும் மதிப்புமிக்க தொழிலாகவும், பெரும் வருமானத்தை ஈட்டித் தருகின்ற தொழிலாகவும் மாறிவிட்டது. விவசாயத் தொழிலை ஊக்குவிக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. இந்தநிலையில் பயிர்ச் செய்கைக்கு மக்களைத் தூண்டக் கூடியயதான ஹிந்திக் கவிதையின் மொழிபெயர்ப்பு இன்றைய தேன் கூட்டில் இடம்பெறுகின்றது. ராமாவதார் தியாகியின் கவிதையை இளம் பாரதி மொழிபெயர்த்துத் தமது வலசை போகிறேன் என்ற நூலிலே தந்துள்ளார்.

வயல்களுக்குச் செல்லுங்கள்
அல்லது ஆலைகளுக்கு!
ஊர்வலங்களால், கோஷங்களால்
ஆர்ப்பாட்டங்களால், பிரச்சாரங்களால்
மட்டும்
எந்த நாடும் உருப்பட்டதில்லை
மேடைகளைத் தகர்த்தெறியுங்கள்
வயல்களுக்கோ ஆலைகளுக்கோ
செல்லுங்கள்!

உடல் மூட ஆடைகள்
வயிற்றுக்குச் சோறு
மேடைகள் நெய்வதில்லை
கோஷங்கள் விளைவிப்பதில்லை
நாட்டு கௌரவம் நடுத்தெருவில்!
இதுவே தருணம் பணிபுரிய
வாய் கிழியப் பேசுவதால்
புதைந்த வரலாற்றைத் தோண்டுவதால்
மட்டும்
எந்த நாடும்
உருப்பட்டதில்லை
மேடைகளைத் தகர்த்தெறியுங்கள்
வயல்களுக்கோ ஆலைகளுக்கோ
செல்லுங்கள்!

இந்த நாட்டின் மானம் காக்க
வியர்வைப் பெருக்கே இன்றைய தேவை

தியாகம் என்றொரு தோட்டம் அமைத்தால்
மலரும் பூவின் மணமும் இணைந்தால்
வசந்தங்கள் தாமே வரும்

இருண்ட வீடுகளில் தீபம் ஏற்ற
நலிந்த கண்களில் ஒளியினை ஏற்ற
வீதிகளெங்கும் வெளிச்சம் பரப்ப
வாழ்க்கை நடையில் திருப்பங்கள் தேவை

சிந்தனைத் தோரணங்களால்
வறண்ட கருத்துரைகளால்
மட்டும்
எந்த நாடும் உருப்பட்டதில்லை
மேடைகளைத் தகர்த்தெறியுங்கள்!
வயல்களுக்கோ ஆலைகளுக்கோ
செல்லுங்கள்!

## தேன் கூடு

1925 ஆம் ஆண்டு இந்திய உத்தரப் பிரதேச மாநிலத்திற் பிறந்தவர் ராமாவதார் தியாகி. சிறந்த கவிஞரான இவர் 15 கவிதை நூல்களையும், நாவலையும் ஹிந்தி மொழியில் வெளியிட்டுள்ளார். எழுத்தாளராக மட்டுமன்றிப் இதழியலாளராகவும் பணியாற்றியவர்.

நேரடியாக அரசியல் வாதிகளைச் சுட்டி அவர்களின் தொண்டை கிழியக் கத்தும் வீர வசனங்களால் நாடு உருப்படப் போவதில்லை வயல்களுக்கோ தொழிற்சாலைகளுக்கோ சென்று பணிபுரியுங்கள் என்று மக்களை அழைக்கும் தொனியிற் கவிதை உள்ளது.

**வயல்களுக்குச் செல்லுங்கள்
அல்லது ஆலைகளுக்கு!
ஊர்வலங்களால் கோஷங்களால்
மட்டும்
எந்த நாடும் உருப்பட்டதில்லை.
மேடைகளைத் தகர்த்தெறியுங்கள்
வயல்களுக்கோ ஆலைகளுக்கோ
செல்லுங்கள்!**

எனக் கவிதையின் ஆரம்பப் பகுதியில் ஊர்வலங்கள் கோஷங்களால் எந்த நாடும் உருப்பட்டதில்லை என முகத்தில் அடித்தாற் போலக் கூறும் ராமாவதார் தியாகி பேச்சு மேடைகளைத் தகர்த்து எறியுங்கள் என்றும் துணிச்சலோடு கர்ச்சிக்கிறார்.

உடல் மூட ஆடைகளையோ, வயிறு நிறையச் சோற்றையோ மேடைகள் தருவதில்லை. அரசியல் வாதிகள் மேடைகளைப் பயன்படுத்திப் பேசும் குரோதப் பேச்சுக்களால் நாட்டின் கௌரவமே நடுத்தெருவிற்கு இழுத்து வரப்பட்டுள்ளதாகக் கவிஞர் கூறுகின்றார்.

**"வாய்கிழியப் பேசுவதால்
புதைந்த வரலாற்றைத் தோண்டுவதால்
மட்டும்
எந்த நாடும் உருப்பட்டதில்லை"** என்னும் அவரது கவிவரிகள் தொடர்ந்து தோண்டிக் கொண்டிருக்கும் எமது நாட்டுக்கும் பொருந்துபவை போல உள்ளன.

கவிதையின் இறுதிப் பகுதி முழுவதும் அழகான உருவகங்கள் நிறைந்துள்ளன.
தியாகம் என்றொரு தோட்டம் அமைத்தால்
மலரும் பூவின் மணமும் இணைந்தால்
வசந்தங்கள் தாமே வரும்

இங்கு தியாகம் தோட்டமாகவும் வளமான வாழ்க்கை வசந்தமாகவும் உருவகிக்கப்பட்டுள்ளன.

**இருண்ட வீடுகளில் தீபம் ஏற்ற
நலிந்த கண்களில் ஒளியினை ஏற்ற
வீதிகளெங்கும் வெளிச்சம் பரப்ப
வாழ்க்கை நடையில் திருப்பங்கள் தேவை.
சிந்தனைத் தோரணங்களால்
வறண்ட கருத்துரைகளால்
மட்டும்
எந்த நாடும் உருப்பட்டதில்லை."**

என்னும் பகுதியில் வாழ்க்கை முன்னேற்றத்தைத் தீபமாகவும் சிந்தனையைத் தோரணமாகவும் கவிஞர் உருவகித்துள்ளார். இவற்றின் மூலம் முதலாளித்துவம் கம்யூனிஸம் முதலிய சிந்தனைகளால் எந்தப் பயனும் இல்லைஎன்பதும் செயற்பாடற்றவறண்ட கருத்துக்களால் நாட்டுக்கு எந்த முன்னேற்றமும் நிகழாது என்பதும் கூறப்பட்டுள்ளன. கவிதையின் நிறைவுப் பகுதியில் கவிஞர் கூறவந்த விடயம் மீண்டும் ஒருமுறை மீள வலியுறுத்தலாக வருகின்றது.

**மேடைகளைத் தகர்த்தெறியுங்கள்!
வயல்களுக்கோ ஆலைகளுக்கோ
செல்லுங்கள்!**

எனவே அரசியல் செய்வதை விட்டு விட்டு அனைவரும் அபிவிருத்திச் செயற்பாடுகளில் ஈடுபடுங்கள் என்று அழைக்கும் சிறந்த கவிதையாக ஒரு புதிய அழைப்பு உள்ளது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் தினேஸ் குணவர்த்தனவுக்கு...



## அவசரமா ஒரு கடுதாசி!

இப்ப உங்களுக்கு நல்ல காய்ச்சல் எண்டு கேள்வி. கொரோனா காய்ச்சல் எண்டாலும் பரவாயில்லை. நீங்கள் இன்னும் ஐ.நா. காய்ச்சலிலை தான் இருக்கிறியளாம். ஐ.நா.விலை இந்த முறை உங்களுக்குக் கடும் பேதி தந்திட்டினம் எண்டு கேள்வி.

இருந்தாலும் நீங்கள் குடிச்ச சீனக்காரப் பாணி இன்னும் உங்கடை இரத்தத்தை உசுப்பேத்திக் கொண்டிருக்கிறதாச் சொல்லுகினம். அதாலை தான் நீங்கள் இருக்கிறதை இல்லை எண்டு சொல்லுறியள். இல்லாததை இருக்கு எண்டு எண்டு சொல்லுறியள். நடந்ததை நடக்கேல்லை எண்டும் நடக்காததை நடந்ததெண்டும் சொல்லிறியள்.

அது மட்டுமில்லை பார்லிமெண்டிலை சொன்னவையாம் அந்தக் காலத்திலை நீங்கள் கணக்குப் பாடத்திலை நல்ல கெட்டிக்காரன் எண்டு. அதாலைதான் போல ஐ.நா. கூட்டத்தொடரிலை இலங்கைக்கு மேலை வைச்ச குற்றச்சாட்டுக்கு எதிரா வாக்களிச்சு இலங்கையைத் தோக்கப் பண்ணினதைச் சகிக்காமல் ஒரு புதுக்கணக்கொண்டைப் போட்டிருக்கிறியள். இப்ப நீங்கள் 47-22=25 11 = 14+11=25 எண்டும் ஒரு புதுக் கணக்கை உண்டாக்கிச் சொல்லியிருக்கிறியள். "நடுநிலை வகிச்சவையள் எங்களுக்கு ஆதரவாத்தான் வாக்களிக்க யோசிச்சிருந்தவை. பிறகு அமெரிக்கா அவையளை வெருட்டிப்போட்டுது. அதாலை பயந்து போய்த்தான் அவை நடுநிலை வகிச்சவை. உண்மையா அவை எங்களுக்குத்தான் சப்போட். அதாலைதான் நான் சொல்லுறன் எங்களுக்குத்தான் வெற்றி." எண்ட மாதிரி நீங்கள் சொல்லுறதைப் பாத்தால் நீங்கள் பகிடி விடுறியளோ எண்ட மாதிரியும் யோசிக்க வேண்டி இருக்கு.

நான் இதுவரை பைதகரஸ் தேற்றம், ஆக்கிமீடிஸின்ரை தத்துவம், இராமன்ரை கணக்கு எண்டுதான் கேள்விப்பட்டனான். இப்பதான் தினேஸ் குணவர்த்தனாவின்ரை தேற்றம் ஒண்டைப் புதுசாக் கேள்விப்படுறன்.

அது மட்டுமில்லை " உயர் நீதிமன்றம். நீதிமன்ற கட்டமைப்பு, ஜனாதிபதி ஆணைக்குழு எல்லாத்திலையும் நாட்டின்ரை இறையாண்மை மற்றது மனித உரிமைகள் எல்லாத்தையும் பாதுகாக்கிறம். இஞ்சை தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் எல்லாரும் ஒற்றுமையாக வாழினம். அப்பிடி இல்லாத இடத்திலையும் அதுக்கான சூழலை உருவாக்கிக் கொண்டும் வாறம். அப்பிடி எல்லாம் ஒரு ஒற்றுமையான ஸ்ரீலங்காவாக ஆக்கிறதுக்கு எவ்வளவு கஷ்டப்படுகிறன். கோத்தாபயவோடை சேந்து இந்தமாதிரி ஜனநாயகம் உள்ள நாடு எண்டு நாலு பேர் கதைக்கிற மாதிரிக் கட்டமைக்க வேணும் எண்டதுதான் என்ரை கனவு. அப்பிடி எல்லாம் கஷ்டப்படேக்கை வீண் பழி போடுற மாதிரி இப்பிடி எல்லாம் எங்களைப் பற்றிக் கதைக்கினமே எண்டு நினைக்க மனதுக்கு வேதனையாக் கிடக்கு. திரும்பவும் சொல்லுறன்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப் பட்ட 46/1 தீர்மானம் இலங்கைக்கு எதிராக மற்றவை சுமத்தியிருக்கிற குற்றச்சாட்டுகளுக்கு முதலாவது அடிப்படை ஒண்டு இல்லாத குற்றச்சாட்டு அதை எங்கை வேணும் எண்டாலும் வந்து சொல்ல நான் தயார். ஐக்கிய நாடுகளின்ரை கொள்கைப் பிரகடனத்துக்கு எதிராக உறுப்பு நாடுகள் செயற்படேலாது. அப்ப பாருங்கோ அடிப்படைக் கொள்கைகளை மீறித்தானே ஒருங்கிணைந்த நாடுகள் இலங்கை தொடர்பிலான பிரேரணையை கொண்டு வந்திருக்கினம். அது பிழை எல்லே? என்னெண்டு அதைச் சரி எண்டு நாங்கள் ஏற்கிறது?

எங்களைப் பிழை காரராக்கக் கொஞ்சப்பேர் சேந்து நிண்டு கொண்டு புலம்பெயர்ந்து சீவிக்கிற தமிழர் கொஞ்சப் பேரையும் சேத்துக் கொண்டு எங்கடை முகத்திலை கரியைப் பூச வெளிகிடுகினம்.

எங்கை பாப்பம் ஆர் வெல்லப் போறதெண்டு? சீனாக்காரை எடுத்துக் கொள்ளுங்கோவன். அவை எவ்வளவு நேர்மையானவை.

எவ்வளவு பய பக்தியுள்ளவை. அவையும் புத்த சமயத்தைத்தான் கடைப்பிடிக்கிறவை. அவை ஆருக்குச் சப்போட் பண்ணினம் எண்டு பாருங்கோ? அவை கண்ணைமூடிக்கொண்டு எங்களை ஆதரிக்கினம். கேக்க முன்னம் கடன் தருகினம். அதை எப்ப திருப்பித் தர வேணும் எண்டு கேட்டால் இப்ப தரச் சொல்லி ஆர் உங்களைக் கேட்டது? எண்டு அவை கோவிக்கினம். அவைக்கு நீதி நியாயம் விளங்கிதெண்டால் மற்றவைக்கு அதிலை பாதி தன்னும் விளங்கேல்லை எண்டதுதான் என்ரை கவலை." எண்டு சொல்லி நீங்கள் கவலைப் பட்டதும் இந்த அன்னமுத்துவுக்குத் தெரியும்.

ஆனால் போகிற போக்கிலை அமெரிக்கன் என்ன செய்வன் எண்டு சொல்லத் தெரியேல்லை. பொறிக்கை ஆப்பிட்ட எலியை இரண்டு விரலாலை பிடிச்சு எறிஞ்ச மாதிரி பின்லேடனைக் கடலுக்கை எறிஞ்ச மோசமான ஆக்கள் அவங்கள். இப்ப இருக்கிறவர் ட்ரம்ப் மாதிரி இல்லை எண்டு கதைக்கினம். ஆள் வலு நிதானமான ஆளாம். பக்கத்திலை இருக்கிவவும் சரியான ஆலோசனை சொல்லக் கூடியவ எண்டும் கதைக்கினம்.

**நீங்கள் குடிச்ச சீனக்காரப் பாணி இன்னும் உங்கடை இரத்தத்தை உசுப்பேத்திக் கொண்டிருக்கிறதாச் சொல்லுகினம். அதாலை தான் நீங்கள் இருக்கிறதை இல்லை எண்டு சொல்லுறியள். இல்லாததை இருக்கு எண்டு எண்டு சொல்லுறியள்.**

அப்ப வண்டில்காற மணி அண்ணை சொல்லுற மாதிரி ஆரோடையும் மிண்ட முன்னம் வடிவா ஆளைப்பாருங்கோ.

ஆரோடை மிண்டிறம் எண்டும்? அவையின்ரை கைகாலிலை அவை என்னத்தை வைச்சிருக்கினம் எண்டதையும் சரியா நோட் பண்ணுங்கோ. அவைக்கு சீனடி சிலம்படி மட்டுந்தான் தெரியுமோ? அதுக்கு அங்காலையும் என்னவேன் தெரியுமோ எண்டைதையும் ஒருக்காப் பாருங்கோ. பிறகுதான் நாங்கள் சீன வெடியைக் கொளுத்திப் போடுவம்.

எங்களுக்குக் கராட்டி தெரியும். கம்படி தெரியும் எண்டு வாயாலை வெருட்டுங்கோ. அதுக்கு முன்னம் வாயை விட்டிட்டு வாங்கிக் கட்டாதையுங்கோ. கவனம்.

நன்றி



# தாயின் குழந்தைகள்

ஒரு நிமிடக் கதை

○ அகமது ஃபைசல்

அந்தக் குழந்தை பிறந்தபோது சிரிக்கவேயில்லை அழுதது. அதுதான் அதன் முதல் அழுகை. சிறிது நேரம் கழித்து தனது முதலாவது சிரிப்பை தாயிடம் சமர்ப்பித்தது. அதுவும் தாயின் முலையில் பால் குடிக்கும்போது.

அவள் அந்தச் சிரிப்பை வாங்கிக்கொண்டாள். பின்னர் சிரிப்புக்கெல்லாம் கடைக் குட்டியான அவளின் மெல்லிய சிரிப்பை குழந்தைக்கு சிரித்துக் காட்டினாள். தனக்கான முதல் பரிசு என தாயிடமிருந்து அந்த சிரிப்பைக் குழந்தை வாங்கிக்கொண்டது.

இதுவரை காலமும் தான் எத்தனை சிரிப்புக்கள் சிரித்திருப்பேன் என்பதை மனதால் கணக்கெடுப்பதுபோல் இருந்தது அவள் முகம். எந்த சிரிப்பு மேன்மையானது? இந்தப் பிஞ்சின் முகத்தைப் பார்த்து சிரித்த சிரிப்பை விடவா இன்னொரு சிரிப்பு மேன்மை பெறப்போகிறது எனவும் தனது சிரிப்பை வகைப்படுத்தினாள்.

திடீரென அறையினுள் நர்ஸ் வந்தாள், சிரித்தாள். இது நர்ஸின் எத்தனையாவது சிரிப்பு என்பதை அவளிடமே கேட்கலாம் என்று நினைத்தாள். பிறகு தூக்கத்தில் தான் சிரித்ததையெல்லாம் கணக்கில் சேர்க்கவில்லையே. குழந்தை வயிற்றுக்குள் இருக்கும்போது காலால் உதைத்ததே அப்போது சிரித்ததையும் கணக்கில் சேர்க்கவில்லையே என்று மீண்டும் முதலில் இருந்து தன் சிரிப்பை எண்ணத் தொடங்கினாள்.

பள்ளியில் படிக்கும்போது நண்பிகளுடன் வித விதமாக சிரித்தது, அவனை முதன் முதலில் கண்டபோது ஒரு விதமாக சிரித்தது, ஒரு தடவை "என்ன நீ குரங்கு போல சிரிக்கிறாய்"என்று உம்மா சொன்னது. எல்லாமாக ஓராயிரம் சிரிப்புகள் அவள் ஞாபகத்தில் வந்து நின்றது. ஞாபகத்திற்குள்ளே சிரிப்பொலி கேட்கத் தொடங்கியது. மண மேடையில் சிரித்தது மிக மோசமான, அதிலும் வலிந்து உதட்டின் அனுமதி பெறாமல் சிரித்த சிரிப்புதானே என்று நினைத்து மெல்ல சிரித்தாள். அப்போது அவள் கணவன் எதிரே வந்தான். பிறந்து கிடக்கும் பிஞ்சுக் குழந்தையைப் பார்த்து தன் அளவில்லாத மகிழ்ச்சியை வெளிப்படுத்திச் சிரித்தான். இது அவருடைய எத்தனையாவது சிரிப்பாக இருக்கும் என மனக்கணக்குப் போட்டாள். அவன் குழந்தையைச் சிரிக்கச் சொன்னான். செல்போனில் படமெடுத்தான். குழந்தை சிரிக்கவேயில்லை. உடனே அவள் தன் சிரிப்பையெல்லாம் எண்ணுவதைக் கைவிட்டாள். குழந்தையின் சிரிப்பை இப்போதிலிருந்தே எண்ணத் தொடங்கிவிட்டாள்.

இப்போது அவள் பிள்ளைக்கு நான்கு வயது. சில மாதங்களாக தானும் சிரிப்பதைக் குறைத்துக் கொண்டாள். பிள்ளை நன்றாக சிரிக்கிறது. ஆனால் இன்னும் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லையே "உம்மா என்றாவது. துக்கத்தில் பிள்ளையின் சிரிப்பை எண்ணுவதை மறந்து அதன் வார்த்தைகளை எண்ணத் தயாராகிக் காத்துக் கிடக்கிறாள். "உம்மா எங்க சொல்லுங்கோ உம்மா"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னந்தோப்புகளில் மண் ஈரத்தை பேணல் -05

11

○ வடகோவை வரதராஜன்



அண்டைக்கு பறதியிலை பாய்ஞ்சு விழுந்து போட்டாய். சரி இண்டைக்குச் சொல்லு. பொச்சு தாக்கிறதாலை என்ன நன்மையெண்டு"

"முந்திச் சொன்னமாதிரி பொச்சு தன்னை விட மூன்று மடங்கு நீரை உறிஞ்சி வைச்சு தென்னை மரத்துக்கு கொடுக்குது . இதே பொச்சு மண்ணுக்குக் கீழை கிடந்து உக்கி மண் வளத்தைக் கூட்டி, மண்ணை பொலுபொலுவெண்டு வைச்சிருக்கிறதோடை மரத்துக்கு பசளையாயும் போகுதண்ணை."

"குழி வெட்ட நிறைய காசெல்லோ முடியும் மோனை"

"பொச்சுத் தாக்கிறதுக்கு தென்னை அபிவிருத்திச் சபை மானியம் கொடுக்குதண்ணை. அதுக்கு விண்ணப்பிச்சு அந்த மானியக் காசை எடுத்து நீங்கள் குழி வெட்டலாம். அத்தோடை இன்னொரு வேலை செய்தும் குழி வெட்டின காசை மீளப் பெறலாம் "

" அதென்ன விதானையார்?"

என்று கேட்ட பர்வதம்மாமி தான் வறுத்து எடுத்த கச்சானை உடைத்து எங்களுக்கு முன்னால் இருந்த தட்டில் போட்டார் . அள்ளி வாயில் போட் டுக் கொறிக்க சூடான கச்சான் முத்துக் கள் சுவை பேசின . "குழிகளை ஒக்ரோபர் முதல் மழையோடை வெட்டி பொச்சுகளைப் போட்டு மண்ணால் மூடவேண்டும். மூடின குழிக்கு மேலை வத்தாளம் கொடித் துண்டங்களை நட்டுவிட்டால் பொச்சு ஈரத்தில் அவை விளைஞ்சு உங்களுக்கு நல்ல லாபம் தரும் "

"நல்ல யோசனை எல்லாம் சொல்லுறீங்கள் விதானையார் " என்று பர்வதம்மாமி எனக்கு புகழாரம் வைத்தார் .

"பொச்சு தாக்கிறாதலை இறைப்பைக் குறைக்கலாம் எண்டு அண்டைக்கு என்னமோ சொன்னாய் , அதைச் சொல்லன் " என்றார் செல்லையர் ."

" பொச்சு உறிஞ்சி வைச்சிருக்கிற தண்ணி ஏறத்தாழ அறுபது நாள்களுக்கு, அதாவது இரண்டு மாதங்களுக்கு இருக்குமண்ணை. நீங்கள் ஐப்பசி (ஒக்ரோபர்) மாதத்திலை பொச்சைத் தாட்டு முடிச்சால் மார்கழி வரை பெய்கிற மழையை பொச்சு உறிஞ்சி வைச்சிருக்கும். மார்கழி 25 ஆம் திகதி (டிசெம்பர்25 ) யோடை எங்களுக்கு மாரி மழை முடிஞ்சிடும் . பிறகு தெர்ப்போட்டத்தில்

## விதானையார் வீட்டு முற்றம்

தையிலை கொஞ்ச மழை கிடைக்கும். பேந்து மாசியிலை (பெப்ரவரி) 'உப்பட்டி' மழை எண்டு ஒரு சின்ன மழை பெய்யும். இப்பிடி மாசிவரை பொச்சு ஈர மாகவே இருக்கும் . இந்த ஈரம் பங்குனி சித்திரைவரை பொச்சிலை இருந்து தென்னைக்கு கிடைக்கும். பிறகு சித்திரை சிறு மாரி என்று சொல்லுறது. சித்திரை மாதத்திலை நல்ல மழை கிடைக்கும் .

சித்திரை 28 குழப்பத்தில் ஒரு பெரிய மழை கிடைக்கும் .

இந்த மழையளால கிடைக்கிற ஈரத்தை எல்லாம் பொச்சு உறிஞ்சி வைச்சிருக்கிறதாலை ஜுலை-10 ஆம் திகதி வரை தென்னையளுக்கு இறைப்புத் தேவையில்லை ."



"அப்ப ஒக்ரோபர் 10 தொடக்கம் ஜுலை10 ஆம்திகதிவரை இறைப்பு தேவையில்லை எண்டுறியள் விதானையார் "

நான் சொன்ன விடயங்களை நுணுக்கமாக உள்வாங்கி பொழிப்பாக கூறினார் பர்வதம்மாமி .

"அதேதான் . இப்ப நான் சொன்னது பொதுவான கணிப்பீடு . இந்த இடைக்காலங்களில் மழையில்லாவிட்டால், கடைசியாக மழை பெய்த நாளில் இருந்து 50 நாள் இறைக்க வேண்டி இருக்கும் ."

"விதானையார் பஞ்சாங்கமும் படிச்சனீங்களே ? சாத்திரி சொன்னமாதிரி எல்லாம் பொழிப்பாய் சொல்லுறியள்" என்று வியந்தார் பர்வதம்மாமி .

நான் அசடாக சிரித்து வைத்தேன் .

இந்தக் கணக்குகள் விளங்காமல் தற தற வென்று முழுசிக்கொண்டு நின்றார் செல்லையர்.

" எங்களுக்கு சவாலான மாதங்கள் ஜுலை தொடக்கம் செப்ரெம்பர் வரை உள்ள காலப் பகுதியே. ஒக்ரோபர் மாதம் மீண்டும் மாரி மழை தொடங்கி விடும் .

இந்த ஜுலை தொடக்கம் செப்ரெம்பர் வரை உள்ள காலப் பகுதியில் இரண்டு கிழமைக்கு ஒருக்கா பொச்சுகள் நல்லாய் நீரை உறிஞ்சும் வகையில் இறைச்சம் எண்டால் நாங்கள் வெற்றிகரமான நீர் மேலாண்மை செய்யலாம்."

" எவ்வளவு கரண்ட் காசு மிச்சம் விதானையார் . இதுகள் தெரியாமல் நாங்கள் கிழமைக்கு ஒருக்கா மாய்மாய் எண்டு மாய்ஞ்சு இறைச்சு , கரண்ட் காசையும் கரியாக்கி, தண்ணியையும் வீணாக்கி இருக்கிறம் " பர்வதம்மாமி வியப்பில் மூழ்கினார்.

" நீ கண்டிக்கு போய் ஏதோ கனக்கப் படிச்சனி எண்டு நினைச்சன் .நீ அங்கை போயும் இந்த பொச்சைப் பற்றித்தான் ஆராய்ச்சி செய்திருக்கிறாய் ."

செல்லையர் தன்ரை வழமையான நளினத்தைத் தொடங்க நான் மோட்டார் சைக்கிளை உதைத்துக் கிளப்பினேன்.

" அண்டைக்கு ஏதோ பொசிவு நீர் குட்டை எண்டு சொன்னனீங்கள் , அடுத்தமுறை வந்து கட்டாயம் அதைப்பற்றி சொல்லவேணும் விதானையார் " என்று பர்வதம்மாமி அன்புக் கட்டளையிட நான் தலையாட்டி சிரித்தபடி அக்ஸ்சிலேற்றரை முறுக்கினேன்.

# வித்துவான் பதில்கள்!



வித்தூஸ் காதல் கசக்குமா? இனிக்குமா?

பூரணி, கிளிநொச்சி

நீங்கள் கசக்காவிட்டால் இனிக்கும்.

வித்து... தனக்கு தூக்கத்தில் நடக்கும் வருத்தம் உள்ளது என்று பக்கத்து வீட்டுக்காரன் கூறுகின்றானே பயமாக இருக்கிறதே?

சதீஸ், துன்னாலை

கவனம். அவன் உங்களை தன் வீட்டுப் பாய் என்று நினைத்து விடப்போகிறான். கேற்றைப் பூட்டியே வையுங்கள்.





வித்து ஐயா... கொரோனாக் காலத்தில் அமெரிக்காவில் பிறப்பு வீதம் குறைவு என்று செய்தி வந்துள்ளதே?

வேலாயுதம், கொக்குவில்

சமூக இடைவெளியை [illegible] தம்பதிகள் [illegible] பயன்படுத்தியுள்ளனர்.

நீங்களும் வித்துவானிடம் கேள்விகள் கேட்கலாம்...
உங்களை கேள்விகளை கீழ்க்காணும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்

அனுப்ப வேண்டிய முகவரி:
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)



# கொலையாளிகளிடம் கைக்குண்டு?



கிளில் அவன் ஏறிய மறுகணமே, அவன் முதுகில் இன்னொருமுறை கத்தி ஆழமாகச் சென்று மீண்டது. அவ்வளவுதான்.

அப்படியே மோட்டார் சைக்கிளோடு கீழே விழுந்த சுமன், பின்னர் எழுந்திருக்கவில்லை.

எழ முடியாமல்

"ஐயோ, ஆராவது காப்பாத்துங்கோ. கொல்லுறாங்கள். ஓடிப்போய் ஆரையும் கூட்டி யாங்கோ" என்று சுமன் கத்தத் தொடங்கினான். சுமனின் சகோதரன் ஒருவனும், அத்தானும் அங்கிருந்து தப்பித்து ஓடத் தொடங்கினர். இரு குழுக்கள் மோதிக் கொள்வதை அவதானித்த ஊரவர் ஒருவர் இராணுவத்துக்கு சம்பவம் தொடர்பில் ஏற்கனவே அறிவித்திருந்தார். அதனால் சற்றைக்கெல்லாம் படையினர் அங்கு வந்துவிட்டனர்.

" டேய் ஆமியடா, எல்லாரும் ஓடுங்கோ"

அந்தக் குழுவின் தலைவனான தம்பா கட்டளையிட, எல்லோரும் திசைக்கொருவராக ஓடத் தொடங்கினர். ஆனாலும் படையினரும் விடவில்லை. அவர்களைத் துரத்தத் தொடங்கினர். அப்போது தம்பாவின் கையில் இருந்த பையிலிருந்து கைக்குண்டு ஒன்று வீழ்ந்தது. அப்படியே அதை எடுத்து காணிக்குள் போட்டுவிட்டு தம்பாவும் மறைந்து விட்டான்.

கொலையாளிகளை விரட்டிச் சென்ற படையினரிடம் மாட்டிக்கொண்டது, தப்பித்தோடிய சுமனின் தம்பிதான். நீண்டநேர விளக்கத்தின் பின்னர் அவன் தாக்குதல் நடத்தவில்லை என்பதை உறுதிப்படுத்திய படையினர், தம்பா குழுவைக் காட்டித்தருமாறு தம்மோடு அழைத்துச் சென்றனர். அவனும் தம்பாவின் வீட்டைக் காட்டினான்.

ஆனால் என்ன ஆச்சரியம்!

குளித்து, வேறொரு ஆடை அணிந்து எதுவுமே தெரியாதவன் போல வந்தான் தம்பா.

" என்ன சேர், ஏன் என்னட்ட வந்திருக்கிறியள்?" என்று கேட்கவும் செய்தான்.

அவன் சொல்லி முடிப்பதற்கிடையில், 'பொட்' டென்று வீழ்ந்த அடியில் தம்பாவுக்கு பொறி கலங்கியது.அதிலிருந்து தம்பா மீள்வதற்கிடையில் படையினரால் பொலிஸ் வாகனத்தில் ஏற்றப்பட்டான். தம்பா பிடிபட்டதை அறிந்த அகிலன் ( தம்பாவின் மச்சான்) தனது நண்பர் ஒருவருக்கு போன் செய்தான். " மச்சான் ஒருக்கா பொலிஸ் ஸ்ரேசனுக்கு போக வேணும், உன்ர ஹயெஸைக் கொண்டு வாறியா?"

நண்பரும் ஏதுமறியாதவராக, அகிலனை ஏற்றிக் கொண்டு போய் பொலிஸ் நிலையத்தில் இறக்கிவிட, அவன் உள்ளே போய் பொலிஸிடம் ,

" நான் தான் வெட்டினனான்" என்று கூறிக்கொண்டே சரணடைந்தான்.

இப்படி திட்டமிட்டு, சுமனையும் அவனது குடும்பத்தையும் கொலை செய்யுமளவு ஆத்திரத்தோடு தம்பா அலைந்தது ஏன்? தம்பாவுக்கும் சுமனுக்கும் என்ன தொடர்பு? இருவரில் யார் நல்லவன், யார் கெட்டவன்? தன் மச்சானுக்கான சுமனைக் கொல்லுமளவுக்கு விசுவாசமானவனா அகிலன்?

இப்படியெல்லாம் நிறையக் கேள்விகள் உங்களுக்கு எழுந்திருக்கும். அந்தக் கேள்விகளுக்கான விடைகளைத் தேடினால் சினிமாப் படங்களை விடவும் பயங்கரமான திருப்பங்கள் கொண்ட சம்பவங்களைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

3

## மணலால் வந்த முரண்

சுமனின் தந்தைக்கு ஒரு வயல் காணி உண்டு. அந்தக் காணிக்கு செல்லும் பொதுப்பாதையால் தான் வெள்ளம் வழிந்தோடுவது வழக்கம். இம்முறை மாரியில் கரை புரண்டோடிய வெள்ளம் , கூடவே மணலையும் சேர்த்து அள்ளி வந்து வயலுக்குச் செல்லும் பொதுப்பாதையின் இரு புறங்களிலும் குவித்திருந்தது. மணல் மாபியாக்கள் இப்படி வலிய வந்த சீதேவியை சும்மா விடுவார்களா என்ன?

மழை ஓய்ந்த கையோடு தம்பா குழு களத்தில் இறங்கி விட்டது. டிப்பர் டிப்பராக அந்தப் பாதையில் இருந்த மணலை வழித்து துடைக்கத் தொடங்கினார்கள். இந்தச் செய்தி சுமனின் காதுகளுக்கு போக உடனேயே அங்கே தன் ஆட்களோடு ஓடோடி வந்தான்.

"அண்ணை, இது வயலுக்கு போற பாதை . இப்பிடி மண்ணை வறுகியெடுத்தா நாங்கள் வயலுக்கு போய் வாறேலையா? உங்களுக்குதான் மணல் அள்ள நிறைய இடம் இருக்கே. அதை விட்டிட்டு இதுக்கை ஏன் அண்ணை அள்ளுறியள்? என்று கொஞ்சம் சூடாகவே கேட்டான் சுமன். இது தம்பாவின் ஈகோவை பலமாகவே அசைக்க உள்ளிருந்த பகையும் அதோடு கைகோர்க்க,

"எங்களுக்கு எங்க மணல் அள்ளவேணுமெண்டு நீ சொல்லத் தேவையில்லை.உன்ர வேலையை நீ பார்த்துக் கொண்டு போ. இது பொதுவான பாதை. ஆரும் மணலைக் கிள்ளலாம் என்று காரமாகவே தம்பாவும் சொல்லிவிட்டு, தன் ஆட்களை வைத்து தொடர்ந்தும் அங்கு மணலை அள்ளிக்கொண்டிருந்தான். அதற்குப் பிறகு சுமன் எதுவும் கதைக்கவில்லை. தன் பொக்கற்றில் இருந்த செல்போனின் தம்பா குழு மணல் அள்ளுவதை வீடியோவாக எடுத்துவிட்டான். அதன்பிறகு இரு தரப்பும் கீரியும், பாம்பும்தான். எங்கு எதிர்ப்பட்டாலும் இரு தரப்பினரும் ஆளையாள் முறைத்து கொள்வதும், வார்த்தைகளால் மோதிக் கொள்வதுமாக இருந்தனர். ஒருகட்டத்தில் இந்தச் சண்டையை முடித்துக் கொள்வோமென சுமனின் சகோதரர்கள் தம்பாவுடன் 'டீல்'பேசினார்கள். அதற்கு தம்பா" உங்கட அண்ணை எடுத்த வீடியோவை எங்களுக்கு முன்னாலை அழிக்கச் சொல்லு, அதுக்கு பிறகு பார்ப்பம் என்று சொல்ல,

திரும்பவும் முட்டலும் மோதலும் தான்.

## காட்டிக்கொடுத்தது

4

## யார்?

இப்படி இருதரப்புக்களும் பகை கொண்டிருந்த சமயத்தில் அனுமதியின்றி மணல் ஏற்றிக்கொண்டு வந்ததாக சுமனின் டிப்பர் இயக்கச்சிப் பகுதியில் பொலிஸாரிடம் பிடிபட்டது. தம்பா தரப்பு போட்டுக் கொடுத்த தாலேயே தங்களின் டிப்பரை பொலிஸ் பிடித்து விட்டதாக சுமன் தரப்பு எகிறிக் குதித்தது. சொல்லி வைத்தாற் போல, அடுத்த நாள், தம்பாவின் டிப்பர் ஒன்றும் மணல் ஏற்றிக் கொண்டு வரும் போது, கிளிநொச்சியில் வைத்து பொலிஸிடம் சிக்கியது. இப்போது தம்பா குழு , " சுமன் குரூப் தான் எங்களை மாட்டிவிட்டுட்டாங்கள். அவங்களைச் சும்மா விடக்கூடாது" என்று பொங்கத் தொடங்கினார்கள். இந்தக் கோபத்தோடு தான் , தனக்கு தெரிந்த சகலரையும் வரவழைத்து,, இரவிரவாக பார்ட்டி வைத்தும், திட்டம் தீட்டி சுமனை, தம்பா குழு தீர்த்துக் கட்டியது.

5

## நடந்தது என்ன?

"அண்டைக்கு காலமை 10.30 மணி போல, சாமான் வாங்க நானும் அண்ணாவும் பரந்தனுக்குப் போய்க்கொண்டிருந்தம். விளாவோடை திருப்பத்துக்கு கிட்ட மூண்டுபேர் நிண்டாங்கள், திடீரெண்டு எங்களை மறிச்சு கீழை தள்ளினாங்கள். அதோட இடுப்பில செருகியிருந்த கத்தியை எடுத்து குத்த ஒராள் வந்தான். நான் அவன்ர கையைப் பிடிச்சுத் தள்ளி விட்டன். எண்டாலும் எனக்கு கையில் கத்தி வெட்டி சின்னக் காயம். எங்களை வெட்டாமல் விடமாட்டங்கள் எண்டு தெரிஞ்சதால மூத்த அண்ணாவுக்கு (சுமனுக்கு) கோல் எடுத்து நிலைமையைச் சொன்னன். தம்பா குரூப்பும் போனில ஆக்களை வரச்சொல்லிக்கூப்பிட்டாங்கள். அதைவிடவும் அக்கம் பக்கத்திலயும் அவங்கட ஆக்கள் ஒளிச்சிருந்திட்டு, கத்தி, வாள் , இரும்புக் கம்பி எண்டு ஆயுதங்களோட வந்தாங்கள். எங்கட கண்ணுக்கு முன்னால அண்ணையை (சுமனை) தம்பான்ர மச்சான் அகிலன் தான் வெட்டினவன். ஆமி வராட்டி எங்களையும் வெட்டிக் கொண்டிருப்பாங்கள். ஆமியைக் கண்டவுடன ஓடேக்க தம்பா வைச்சிருந்த உரபாக்குக்குள்ள இருந்து கிரனேட் ஒண்டு விழுந்தது. ஒருக்கா மணல் அள்ளேக்க ஒரு பெட்டி நிறைய கிரனேட் குண்டு தம்பா எடுத்தவன். தனக்கு ஏதும் உயிர் போற அளவுக்கு பிரச்சினை வந்தால் அதில இருந்து தப்ப கிரனேட் உதவும் எண்டு வைச்சிருக்கிறான்.

**- இது சம்பவத்தில் பாதிக்கப்பட்டவரின் வாக்குமூலம். அன்று கொல்லப்பட்ட சுமனின் தம்பி இவர்.**

2

## உறவும் பிரிவும்

சில வருடங்களுக்கு முன்பு....

தம்பாவின் குழுவில் தான் சுமன் இருந்தான். தம்பாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களில் சுமன் முதன்மையானவன். தனது மைத்துனனான அகிலனோடு ஒருமுறை தம்பாவுக்கு தகராறு. அதனால் சுமனை வைத்து அகிலன் மீது தாக்குதல் நடத்துமளவுக்கு(மச்சானை விடவும்) சுமனை நம்பினான் தம்பா. கிட்டத்தட்ட தளபதி பட மம்முட்டி –ரஜினி போல தம்பாவும், சுமனும் இருந்தார்கள்.

தம்பா ஊரில் அடிதடியோடு பல வியாபாரங்களையும் செய்து வந்தான். அதில் முக்கியமானது மணல் ஏற்றுவது. அதிலும் கள்ள மணல் ஏற்றுவது தம்பா குழுவுக்கு சொக்கிலேற் சாப்பிடுவது போல அலாதியானது. எல்லாமே நன்றாகவே போய்க்கொண்டிருந்தது, சுமன் புதிதாக டிப்பர் வாகனமொன்றை எடுக்கும்வரை. என்னதான் தனக்கு விசுவாசமானவாக தம்பா இருந்தபோதும், தனக்கு நிகராக அவனும் ஒரு மணல் மாபியாவாக உருவெடுக்க நினைப்பதை தம்பாவால் ஜீரணிக்க முடியவில்லை. அதனால் சுமனைக் கூப்பிட்டு.

" சரி என்னைக் கேக்காமல் டிப்பர் எடுத்திட்டாய். ஆனால் எங்கட ஆக்களைத் தவிர வெளியாக்களுக்கு மணல் குடுக்கக் கூடாது என்று எச்சரித்தான். சுமனும் எதற்கு வீண்வம்பு? என்றுவிட்டு, தம்பாவின் மைத்துனனான அகிலனுக்கே மணலைக் கொடுத்து வந்தான். இந்த அகிலன் மீது ஒருகாலத்தில் சுமனையே அடிக்க வைப்பித்து, தலையிலும் ஒரு காயத்தை உண்டாக்கியிருந்தான் தம்பா. இப்போது அவர்கள் இருவரும் இணக்கமாகிவிட, சுமன் எதிரியாக மாறியிருந்தான். ஆனாலும் தம்பா பெரிதாக அதை வெளிக்காட்டவில்லை. ஆனால் மதுபோதையில் பலரிடமும் தன்னுடைய எதிரி சுமன் தான் என்று பலமுறை சொல்லியிருக்கிறான்.

உள்ளுக்குள் புகைந்து கொண்டிருந்த தம்பாவின் பகைத்தீயை கொளுந்து விட்டெரிய வைப்பது போல ஒரு சம்பவம் அரங்கேறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தம்பாவின் குழுவில் தான் சுமன் இருந்தான். தம்பாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களில் சுமன் முதன்மை யானவன். தனது மைத்துனனான அகிலனோடு ஒருமுறை தம்பாவுக்கு தகராறு. அதனால் சுமனை வைத்து அகிலன் மீது தாக்குதல் நடத்துமளவுக்கு (மச்சானை விடவும்) சுமனை நம்பினான் தம்பா. கிட்டத்தட்ட தளபதி பட மம்முட்டி – ரஜினி போல தம்பாவும், சுமனும் இருந்தார்கள்.**



# கள்ளமண்காரரே இரண்டு தரப்பும்

6

கொலை செய்யப்பட்ட சுமனைப் பற்றியோ, அவரைக் கொலை செய்வித்த தம்பாவைப் பற்றியோ ஊரவர்களிடம் நல்லபிப்பிராயம் அறவே கிடையாது.

"உயிரிழந்த தரப்பினரும் சரி, வெட்டிய தரப்பினரும் சரி இரண்டு தரப்பினருமே அடாவடிக்காரர்களே.

ஒருகாலத்தில் ஒன்றாகச் சேர்ந்து சட்டவிரோதமாக மணல் ஏற்றி விற்பனை செய்தவர்கள்தான். கள்ள மண் வியாபாரம் தான் இவர்களின் பிரதான தொழில்.

மீள்குடியேற்றம் நடந்த போது பலரும் கைவிட்டு சென்ற மாடுகளை பிடித்து தனது பெயரில் குறிசுட்டு முஸ்லிம் வியாபாரிகளுக்கு விற்பனை செய்து வந்தான் தம்பா. முதலில் மாடு பிடித்து விற்பதே பிரதான வேலையாக செய்த தம்பா, பின்னர் தான் உழவு இயந்திரம், அதன் பின்னர் டிப்பர் என படிப்படியாக வாங்கி கள்ளமணல் ஏற்றி விற்பனை செய்யத் தொடங்கினான்.வயலுக்குள் தம்பாவின் பட்டிமாடுகள் இறங்கி மேய்ந்தால் வயல் உரிமையாளர்கள் சத்தமிடுவார்கள். ஆனால் அன்றிரவு தம்பா ஆட்களை வைத்து அவர்கள் மீது தாக்குதல் நடத்துவான் . அவ்வளவு அடாவடியான ஆளாக தம்பா செயற்படுவதற்கு பிரதான காரணம் பணபலம். அவனுக்காக யாருக்கும் அடித்துவிட்டு பிடிபட்டால் "காசைக் கட்டி பிணையில் எடுத்துவிடுவேன்" எனும் உத்தரவாத்திலேயே கள்ளமணல் ஏற்றும் கூலியாட்களை வைத்து தம்பா அடாவடிகளைச் செய்வித்து வந்துள்ளான்.

உயிரிழந்த சுமனும் ரௌடிதான். அவனுக்கு முதல் இரண்டு திருமணங்கள் நடந்து, இப்போது துன்னாலையைச் சேர்ந்த ஒரு பெண்ணை மூன்றாவதாகத் திருமணம் முடித்திருந்தார். துன்னாலையிலும் ரவுடிக் கும்பல் ஒன்றை சுமன் வைத்திருக்கிறான். கள்ள மணல் ஏற்றுவதே இவர்களின் பிரதான தொழில்.

ஆனால் சம்பவ தினத்தன்று சண்டைக்கு சுமன் தரப்புச் செல்லவில்லை. தம்பாவும் அவரது மச்சான் தரப்பினருமே திட்டமிட்டு தாக்குதல் நடத்தியுள்ளனர்.

உடையாள் புரம் பகுதியில் உள்ள விளாவோடைச் சந்தியில் மரங்களுக்கு கீழே பயணம் செய்த களைப்பில் இருப்பது போலவும் ,நண்பர்களுடன் உரையாடுவது போலவும் தம்பா குழுவினர் இருப்பார்கள். பொலிஸாரின் நடமாட்டத்தை அவதானித்து ,மணல் கடத்தும் வாகனங்களுக்கு தகவல் கொடுக்கவே இப்படி அவர்கள் வழிப்போக்கர்கள் போல நாடகமாடுவார்கள். கள்ள மண் வியாபாரிகளை பொலிஸார் கட்டுப்படுத்தாது விட்டால் இவ்வாறான கொலைகள் தொடரத்தான் செய்யும்."

என்று அந்த ஊர்க்காரர்கள் சொல்கிறார்கள்.

### கொலைக் குறிப்பு 1

தம்பா தப்பியோடும் போது கைக்குண்டு ஒன்றை வைத்திருந்தார் என்பதை அங்கு நின்றவர்கள் சொன்ன போது, "அதை வாக்குமூலத்தில் சாட்சி சொல்லும் போது பதிவோம்" என்றிருக்கிறார். ஆனால் வாக்குமூலம் பெறும்போது எவரிடமும் பொலிஸார், கைக்குண்டு பற்றி எந்தவொரு கேள்வியும் கேட்கவில்லை. பாதிக்கப்பட்டவர்களும் சொல்லவில்லை. ஒரு பெட்டி நிறைய தம்பாவிடம் கைக்குண்டுகள் இருப்பதாகச் சொல்லப்படுகையில் பொலிஸார் ஏன் அந்த விடயத்தில் பாராமுகமாக இருக்கின்றனர் என்பது சந்தேகமான விடயமே.

### கொலைக் குறிப்பு 2

கொலையுண்டவரான சுமன், முதலில் வெட்டு வாங்கிய பின்னர் மோட்டார் சைக்கிளில் ஏறும் போதே மீண்டும் முதுகில் வெட்டிக் கொல்லப்பட்டார். இதன் போது ஒரு சில வெட்டுகள் மோட்டார் சைக்கிளில் பட்டுள்ளது. அப்படியிருக்கையில் குறித்த மோட்டார் சைக்கிள் இந்தக் கொலை வழக்கில் சான்று பொருளாக சேர்க்கப்படவில்லை.

" நீங்களும் மோட்டார் சைக்கிளைப் பற்றி சொல்லவேண்டாம். நாங்களும் அதைக் கவனிக்காத மாதிரி விடுறம். இரத்தத்தை கழுவிப் போட்டு பயன்படுத்துங்கோ" என பொலிஸார் தெரிவித்துள்ளனர். அதனையடுத்து சுமனின் சகோதரர்கள் மோட்டார் சைக்கிளில் படர்ந்திருந்த இரத்தக் கறைகளை கழுவிவிட்டு அதனைப் பயன்படுத்தி வருகின்றனர்.

### கொலைக் குறிப்பு 3

குறித்த சம்பவம் தொடர்பில் தகவல் சேகரிப்பதற்காக அப்பகுதிக்கு எமது குழுவினர் சென்றவேளை "தகவல் சேகரிப்பதற்காக 'மீடியா' வைச் சேர்ந்தவர்கள் வந்துள்ளனர்" என பொலிஸ் தரப்பினருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்போது 'எங்கட விசாரணையைக் குழப்புவதே இந்த மீடியாக் காரர் தான்'என பொலிஸ் அலுவலர் ஒருவர் தெரிவித்துள்ளார். இந்தத்தகவலை அறிந்த அப்பகுதியைச் சேர்ந்த முதியவர் ஒருவர்சொன்னார், " மீடியாக்காரர் வந்து குழப்பாட்டி மட்டும் இவை விசாரிச்சு கிழிச்சுப்போட்டுத் தான் அடுத்த வேலை பாப்பினம். கனபேர் சேர்ந்துதான் வெட்டினவங்கள், ஆனால் அவங்களைப் பிடிச்சது ஆமி. ஒருத்தன் சரணடைஞ்சவன். தப்பி ஓடின மூன்று பேர இன்னும் பிடிக்கேல. இதுக்க வாய் வீரத்துக்கு மட்டும் குறைச்சலில்லை"

7

# திட்டமிட்ட தாக்குதலே!

சுமனைத் தற்செயலாக தம்பா குழுவினர் கொல்லவில்லை தன் நண்பர் ஒருவருக்கு போன் பண்ணிய தம்பா " சுமனை போட்டுத்தள்ள வேணும். நீயுமொருக்கா வா" என்று கேட்டுள்ளார்.எனினும் இவர்களுடன் சேர்ந்தால் தனது குடும்பம் நடுத்தெருவில் தான் நிற்கவேண்டும் என்பதால் அவர் பின்னர் வரவில்லை.

சம்பவம் இடம்பெற்ற அன்றைய தினம் காலையில் பரந்தன் புகையிரத நிலையத்துக்கு அண்மையாகவுள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் நின்று சுமன் தரப்ப்பினரை வெட்டிக் கொல்வேன் என்று தம்பா கூறியுள்ளார்.

தன் தரப்பைச் சேர்ந்த அடியாட்களுக்கு கொலை நடப்பதற்கு ஒரு வாரத்துக்கு முன்பிருந்தே தொடர்ச்சியாக பியர் ,மதுபானம் என்பவற்றை வாங்கி கொடுத்து வந்துள்ளார் தம்பா. அந்த ஒரு வாரமும் தம்பா தரப்பினர் சுமன் மற்றும் சகோதரர்களுடன் வலிந்து சண்டைக்கு இழுக்கும் வேலைகளை செய்து வந்துள்ளனர்.

கொலை நடந்த பின்னர் தம்பாவும் அவனது சகாக்களும் கைதுசெய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர். அப்போது அங்கே சுமனின் அத்தான் சென்றுள்ளார். அவரைப் பார்த்ததும் "அத்தான்" என அழைத்த தம்பா கட்டை விரலை உயர்த்தி "எப்படி?" எனக் கிண்டலாகக் கேட்டுள்ளார்.



• சிறுகதை
• கவிதை
• கட்டுரை
• பத்தி எழுத்து
• ஓவியம்

நீங்களும் எழுதலாம்

எதுவானாலும் அனுப்பி வையுங்கள்.
தரமானவற்றை பிரசுரிக்க
சஞ்சீவி
காத்திருக்கிறது.

அனுப்ப வேண்டிய முகவரி:
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

sanjeevi@uthayan.com

தொடர்புகளுக்கு
0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடவுளின் மொழி

○ விருமாண்டி

தூதுவளை இலை அரைச்சு..." பாட்டைக் கேட்டவுடனேயே நான் யாழ்ப்பாணத்து மினிபஸ் ஒன்றில் இருப்பதைக் கண்டுபிடித்திருப்பீர்கள்.

"...மானிப்பாய் , சித்தன்கேணி , சுழிபுரம் , மூளாய் ,காரைநகர் "

-என்று கூவியபடி அந்த மினிபஸ்ஸின் நடத்துநர் பயணிகளை ஏற்றுகிறார் . மாலை 6 மணியிருக்கும், மினிபஸ் மெல்ல மெல்ல அசைகிறது. யாழ் . நகரைக் கடக்கிறது. அப்போது ஒரு இளைஞன் ஓடி வந்து, பேருந்தில் ஏறுகின்றான் .

அவசரமாக வந்து ஏறிய இளைஞன் நின்றவாறே தனது அலைபேசியை எடுத்துப் பார்க்கின்றான். இருக்கையின் கரையோரம் சாய்ந்து நின்றபடி இருக்கையில் இருந்த ஒருவரிடம் சைகையில் ஏதோ கேட்க முனைகின்றான். ஆனால் அவன் கேட்பது என்னவென்று புரியாது அவர் தடுமாறுகிறார். அந்த இளைஞன் அங்கும் இங்கும் பார்த்து , மீண்டும் அவரின் தோளில் தட்டுகின்றான். கேட்கின்றான். எனினும் அவருக்கு அவன் கேட்பது புரியவில்லை . தான் கேட்க வந்ததை விசாலமாக தனது கையை அசைத்து மீண்டும் கேட்கின்றான்.

இப்போது மினிபஸ்ஸில் இருந்த அனைவரும் அந்த இளைஞனை குறுகுறுவென்று பார்க்கின்றனர். அந்த இளைஞனும் அங்கிருந்த அனைவரையும் பார்க்கின்றான். அவனது பார்வையில் ஒருவித ஏக்கம்.

அவனது கேள்வி தங்களிடமும் வந்துவிடுமோ என்ற பீதியில் பார்த்தும் பார்க்காதவர்களாக தங்களது தலைகளை இருக்கையின் பின்புறமாக மறைத்துக் கொள்கின்றனர் சில பயணிகள். சிலர் மினிபஸ்ஸின் பக்கக் கண்ணாடியால் வெளியில் பார்க்கின்றனர். இருக்கையில் அமர்ந்திருந்த மற்றுமொ ருவரின் தோளில் தட்டுகின்றான் அந்த இளை ஞன். சரி, அவன் என்னதான் கேட்க முனை கின்றான் என்று அவர் அவனது சைகை களை கூர்ந்து நோக்கத் தொடங்கினார். அவரிடம் தனது கேள்விகளைக் கேட்க இளைஞன் முனைகின்றான் . அவரும் தடுமாறுகிறார். ஆமை கழுத்தை நீட்டுவது போல் அனைவரும் மீண்டும் இளைஞனைப் பார்க்கின்றனர். இப்போது மினிபஸ் ஸில் ஒரு பாடல் இசைக்கிறது.

"ஊனம் மனம் ஊனம் இங்கே ஊனம் யாருங்கோ.. உடம்பில் உள்ள குறைகள் எல்லாம் ஊனம் இல்லீங்கோ"

அங்கிருந்தவர்களுக்கு அது விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது போலும். சிலர் அந்த இளைஞன் கூறுவதை கேட்டுவிடத் துணிகின்றனர். ஆனாலும் யார் முதலில் கேட்பது என்று தயக்கம் அவர்களுக்கு. சிலர் தாங்களாகவே முன்வருகின்றனர். ஒருவருக்கொருவர், தங்களுக்கு தெரிந்ததை வைத்துக்கொண்டு அவன் கேட்டது என்ன என்பதை விளங்கிக்கொள்கின்றனர். எனினும் அவர்களுக்கு அதற்கான பதிலைக் கூறத் தெரியவில்லை. தங்களது கைகளை அசைத்து பதிலைக் கூற முனைகின்றனர். அவர்களுடைய அசைவுகளை வைத்து நொடிப் பொழுதில் இளைஞன் அந்தப் பதிலைப் புரிந்து கொள்கின்றான். அவன் கேட்டது "யாழ்ப்பாணத்தில் இருந்து காரைநகருக்கு கடைசி பஸ் எத்தனை மணிக்கு புறப்படும் ?"என்பதே.

இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள் சிலவுண்டு. ஒன்று, சிங்கள மொழியைப் பேசுவதற்கு நாங்கள் பல முயற்சிகளை மேற்கொள்கின்றோம். இரண்டாவது, வெள்ளைக்காரர்களுடைய ஆங்கிய மொழியைக் கற்று தெரிந்து கொள்வதால் எமக்குப் பெருமை என்கின்றோம். இத்தனையும் தாண்டி , வேறுபல வெளிநாட்டு மொழிகளை யும் தெரிந்து கொள்கிறோம். அப்படி பிறமொழிகளை கற்றறிவதில் காட்டும் ஆர்வத்தின் ஒரு துளி யைத் தானும், கடவுளின் மொழி எனப்படும் வாய்பேச முடியாதவர்க ளின் சைகை மொழியைக் கற்பதில் காட்டுகிறோமா?

மினிபஸ்ஸில் வந்த இளைஞனைப்போன்று பலர் எம் மத்தியில் வாழ்ந்து கொண்டுதான் உள்ளார்கள். வீட்டில் உறவினர்களாக , அலுவலகங்களில் சக பணியாளர்களாக, சமூகத்தில் நண்பனாக, தோழனாக , தோழியாக அவர்கள் எம்மத்தியில் உள்ளனர். அவர்கள் தங்களுடைய தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள அவர்களுக்கு மட்டும் சைகை மொழி தெரிந்தால் போதாது என்பது அந்த மினிபஸ்ஸில் இடம்பெற்ற ஒரு சிறிய சம்பவம் உணர்த்திவிடுகிறது . அவர்களின் தேவைகளைக் கேட்டுப் புரிந்து கொண்டு அதைச் செயற்படுத்துவதற்கு எமக்கும் சைகை மொழி கண்டிப்பான ஒன்று. இம்மாதிரியான ஒரு சிறிய விடயத்தையே புரிந்து கொள்ளாத நாம், அவர்களுடைய வாழ்க்கையில் இருக்கும் சிக்கல்களை எப்படிப் புரிந்து கொள்ளப்போகின் றோம்? சமூக ஆர்வலர்கள் என்று கூறும் பலர் அவர்களும் எமது சமூகத்தினர் என்பதை உணர்ந்திருந்தால் கண்டிப்பாக அந்த மொழியைக் கற்றுக்கொண்டிருப்பார்கள்.

> **பிறமொழிகளை கற்றறிவதில் காட்டும் ஆர்வத்தின் ஒரு துளியைத் தானும், கடவுளின் மொழி எனப்படும் வாய்பேச முடியாதவர்களின் சைகை மொழியைக் கற்பதில் காட்டுகிறோமா?**

ஆனால் எம்மில் எத்தனை பேருக்கு அந்தச் சைகை மொழி தெரியும், அதில் பாண்டித்தியம் பெறவேண்டும் என்று நான் கூற முனையவில்லை. ஆனால் வாய்பேச முடியாது இன்னல்படும் அவர்களுடைய கருத்துக்களை கொண்டு செல்லும் ஒரு காவியாக இருப்பதற்காவது எமக்கு அந்த மொழி தெரிந்திருக்க வேண்டும். சைகை மொழியை கற்பிப்பதற்கு பலர் உள்ளனர். ஒரு சில பாடசாலைகளில் சைகை ஒரு மொழியாகவே கற்பிக்கப்படுகிறது என்று தெரிவருகிறது . எனினும் மாணவர்கள் மத்தியில் மட்டுமல்லாது . எந்த இனம், மதம் , மொழியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அனைவரும் புரிந்து கொள்ளும் ஒரே மொழியாக சைகை மொழி உள்ளதால் இனியாவது அதை அனைவரும் கற்றுக்கொள்ள முன்வருவார்களா?



(11ஆம் பக்கத் தொடர்ச்சி)



# கையது...

வந்தவர்களுள் இருவர், துப்பாக்கிகளை எங்கள் தலைகளில் குறி வைக்க, எங்கள் முன்னிலையிலேயே தாயாருடன் மாறிமாறி அவர்கள் வன்புணர்வு செய்தார்கள். இறுதியில் நெற்றிப்பெட்டில் சுட்டு நிர்வாணமான அவரது உடலை கூடாரத்துக்கு வெளியில் வீதியோரம் எறிந்து விட்டு சென்றார்கள்.

இதைச் சொல்லும் போது அவனுடைய முகம் இறுகிக் கறுத்திருந்தது. அலி மனம் விட்டு அழாதது செந்தில்நாதனுக்கு பயமாகவும் இருந்தது. எந்தவித சலனமுமின்றி அவன் வீதியை வெறித்துப் பார்த்தபடி இருந்தான்.

அன்றைய சந்திப்பின் பின்னர் செந்தில்நாதன் அந்தச் சிறுவர்களைக் காணவில்லை. இன்று, இரத்தச் சகதியின் மத்தியிலே அவர்களைக் கண்டதும் விறைத்துப் போனார். சுற்றி நின்றவர்கள் அரபு மொழியில் குசுகுசுத்தார்கள். அங்கு நடந்ததை செந்தில்நாதன் மெல்லப் புரிந்து கொண்டார்.

பூக்கடையின் ஓரமாகவுள்ள ஓடையிலே அலி தன்னுடைய தங்கையுடன் இரவில் தூங்குவான். பாத்திமாவின் பூரிப்பான உடல் அங்குள்ள ஒருவனின் கண்களை உறுத்தவே சமயம் பார்த்துக் காத்திருந்தவன், அலி காலைக் கடன் கழிக்கச் சென்ற நேரம், பாத்திமாவை கெடுக்க முயற்சித்திருக்கிறான். அலறல் சத்தம் கேட்டு ஓடிவந்த அலியால், அவனை விலக்க முடியவில்லை. பார்த்திமாவின் சட்டையைக் கிழித்து, பிடியை அவன் மேலும் இறுக்கவே, தண்ணீர் கொண்டு வந்த கண்ணாடிப் போத்தலை உடைத்து அவனுடைய கழுத்தில் பல முறை குத்தியிருக்கிறான் அலி. கழுத்திலுள்ள நாடி நரம்பு அறுந்து குருதி பெருகிய நிலையில் ஓட நினைத்த காமுகன் பூக்கடையின் முன்னால், வீதியோரமாகச் சாய்ந்தான்.

அங்கு நின்ற பொலிஸ்காரன் கொடுத்த தகவல் அறிந்து, பொலிஸ் வண்டி வரும் சைரன் ஒலி வெகு தூரத்தில் கேட்டது. பொலிஸ் வண்டியை சம்பவ இடத்துக்கு அழைத்துவர பொலிஸ்காரன் பிரதான வீதிக்குச் சென்றான். பொலிசில் அகப்பட்டால் சிறுவர்களது வாழ்க்கை முற்றிலும் சீரழிந்துவிடும். வெளிநாட்டிலிருந்து வந்து தொழில் புரியும் செந்தில்நாதன் இதில் தலையிடுவது நிலமையை மேலும் சிக்கலாக்கும் என்பதை அவர் அறிவார். இவர்களை எப்படிக் காப்பாற்றலாம் என்ற பதகளிப்பில் அவர் தவித்தபோதே, அது நடந்தது.

எங்கிருந்தோ ஒரு இஸ்லாமியப் பெரியவர் ஒரு வாளி நிறைய தண்ணீருடன் வந்து, சிறுவர்களின் தோல்ப்பை இருந்த ஓடைக்குள் அவர்களை அழைத்துச் சென்றார். துரித கதியில் அவர்களைச் சுத்தப்படுத்தி உடையை மாற்றி 'இங்கிருந்து தப்பி ஓடிவிடுங்கள்' எனக் கலைத்துவிட்டார்.

அந்த அதிகாலை வேளையிலும் சுற்றி நின்று வேடிக்கை பார்த்தவர்கள், அங்கு சுவாரஸியம் குறையவே மெல்லக் கலைந்து போனார்கள். பொலிசாரின் கைகளில் சிக்கி, சிறுவர்களின் வாழ்க்கை சீரழியாமல் காப்பாற்றிய இஸ்லாமியப் பெரியவரும், கலைந்து சென்ற கூட்டத்துடன் சங்கமித்தார். லெபனானிலுள்ள அகதிகள் சமுத்திரத்தில், சிறுவர்களை இனிமேல் பிடிக்க முடியாதென்பது செந்தில்நாதனுக்கு சற்று ஆறுதல் தந்தது. பெரியவர் சென்ற திசையை நோக்கி 'சலாம்' வைத்த செந்தில்நாதன், கனத்த மனசுடன் வேலைக்குச் சென்றார்.

தெருவில் கிடந்த காமுகன் சடலத்தினருகே, தெரு நாயொன்று குந்தி இருந்தது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஆர்.பிரகாஷ்

# தூக்கம் தொலையும் போர்முனை!

உலக உலா

மீண்டும் ஒருமுறை பதற்றம் கலந்த அச்சமான சூழலுக்குள் தள்ளப்பட்டுள்ளது கொரியத் தீபகற்பம். வடகொரியாவை அச்சுறுத்தும் வகையில் அமெரிக்கா - தென்கொரியா என்பவை இணைந்து மேற்கொண்ட கூட்டுப்போர்ப் பயிற்சியையும், அதற்குப் பதிலடியாக வடகொரியா நடத்திய ஏவுகணைச் சோதனைகளையும் அடுத்தே இந்தப் பதற்றம் கொரியாவில் குடிகொண்டுள்ளது.

ட்ரம்பின் ஆட்சிக் காலத்தின் நடுப் பகுதியில் அமெரிக்கா - வடகொரியா இடையிலான மோதல் போக்கு கணிசமான அளவு குறைந்திருந்தது. வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்னை இருமுறை சந்தித்த காரணத்தாலும் அந்தச் சந்திப்பு வெற்றி என்று அறிவித்த காரணத்தாலும் ட்ரம்ப் வடகொரியாவுடனான பகைமையை வெளிப்படுத்த இயலாத தர்மசங்கட நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தார். இதனால் பைடனின் ஆட்சிக்காலத்தில் வடகொரியாவுடன் அமெரிக்கா முரண்படும் என்பது பொதுவான அபிப்பிராயமாகவே இருந்தது. அதை மெய்ப்பிக்கும் வகையில் அமைந்துள்ளன கொரியத் தீபகற்பத்தில் தற்போது அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கும் நகர்வுகள்.

உலகில் பலஸ்தீனத்துக்கும் இஸ்ரேலுக்கும் அடுத்தபடியான பகைமை நாடுகள் உண்டென்றால் அது வடகொரியாவும் தென்கொரியாவும்தான். அயல் நாடுகளான இவை, இன்று ஒன்றை இன்னொன்று அழித்தொழிக்கும் நிலையில் உள்ளன. இவ்வாறிருக்க தென்கொரியாவுடன் இணைந்து கொரியத் தீபகற்பத்தில் அமெரிக்கா கூட்டுப் போர்ப் பயிற்சியை நடத்தினால் எவ்வாறிருக்கும்?. வடகொரியாவிடம் இருக்கக்கூடிய இராணுவத் தளபாடங்களை மேற்கோள்காட்டி பொருளாதாரத் தடைகளை விதித்துவிட்டு அதன் எதிரிநாடான தென்கொரியாவுக்கு இராணுவப் பயிற்சிகளையும் போர்ப் பயிற்சிகளையும் வழங்குவதென்பது வடகொரியாவை சினமூட்டும் செயல்தான். இதற்குப் பதிலடியாக காரசாரமான எதிர்வினையை ஆற்றியுள்ளது வடகொரியா.

இந்தப் போர்ப் பயிற்சி நடத்தப்பட்ட 48 மணிநேரத்துக்குள் ஏவுகணைச் சோதனைகளை நடத்தியுள்ளது வடகொரியா. ஏவுகணையுடன் இணைக்கப்பட்ட முறையில், 'அமெரிக்கா அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு நிம்மதியாக இருக்க வேண்டுமெனில் வடகொரியா விவகாரத்தில் தலையிடாமல் இருப்பதே சிறந்தது' என்ற எச்சரிக்கையும் அமெரிக்காவை நோக்கி வடகொரியாவிடம் இருந்து ஏவப்பட்டுள்ளது.

பொதுவாக எந்தவொரு நாடும் ஏவுகணைச் சோதனைகளை மேற்கொண்டால், அந்த ஏவுகணையின் வலிமையை 5 ஆயிரம் கிலோமீற்றர், 10 ஆயிரம் கிலோமீற்றர் பாயக்கூடியது என்றுதான் அடையாளப்படுத்துவதுண்டு. ஆனால் இந்த ஏவுகணையின் வலிமையை வடகொரியா அடையாளப்படுத்தியுள்ள பாங்கு விசித்திரமானது. 'பியாங்யாங்கில் இருக்கு வொஷிங்டன் வரை' என்றுதான் மேற்படி ஏவுகணை பாய்ந்து செல்லும் தூரத்தை வடகொரியா கோடிட்டுக் காட்டியுள்ளதாம். அதாவது வடகொரியத் தலைநகர் பியாங்யாங்கில் இருந்து அமெரிக்கத் தலைநகர் வொஷிங்டனை அந்த ஏவுகணை மூலம் தாக்கலாம் என்பதுதான் வடகொரியாவின் எச்சரிக்கை.

இந்த எச்சரிக்கை நிச்சயம் அமெரிக்காவைக் கோபம் கொள்ளவே செய்திருக்கும். இதை இத்துடன் அமெரிக்கா விட்டுவிடாது. கணதியான துலங்கலொன்றை அது ஆற்றியே தீரும். அந்தத் துலங்கல் கொரியத் தீபகற்பத்தின் தூக்கத்தை தொலைக்கும் வகையிலும் அமையலாம்.

# டெல்லிக்கு யார் தலைமை ?

ஐ.பி.எல். தொடர் ஆரம்பமாவதற்கு இன்னும் சில தினங்களே உள்ள நிலையில், டெல்லி அணி இம்முறை பெரும் பின்னடைவுக்குள் தள்ளப்பட்டுள்ளது. அந்த அணியின் தலைவரான ஸ்ரேயாஸ் தோள்பட்டை விலகல் காரணமாகத் தொடரில் இருந்து விலகியுள்ளார். இதனால் டெல்லி அணியின் தலைமைத்துவம் எவரிடம் செல்லப்போகின்றது என்பதில் எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

டெல்லி அணியின் தலைமைத்துவம் ஸ்ரேயாஸிடமும் உபதலைமை ரிஷப் பன்ட்டிடமும் கொடுக்கப்பட்டிருந்தது. எனவே பன்ட் அடுத்த தலைவராகப் பெயரிடப்பட வாய்ப்பு உள்ளது. எனினும் ஐ.பி.எல். போன்ற பெரும் அழுத்தமான சூழலை 21 வயதேயான பன்ட் எப்படிக் கையாள்வார் என்பது கேள்விக்குரியதே: ஆதலால் அவரை உபதலைவராகத் தக்கவைத்து தலைமைக்கு பிறிதொருவரைத் தேடுவதற்கே டெல்லி முயற்சிக்கும்.

தவான், அஸ்வின், ரகானே, ஸ்மித் ஆகிய வீரர்களும் டெல்லி அணியில் உள்ளனர். இவர்கள் இதற்கு முன்னர் ஐ.பி.எல். அணிகளை வழிநடத்திய அனுபவமுள்ளவர்கள். ஒப்பீட்டளவில் ஸ்மித்தின் ஐ.பி.எல். தலைமைத்துவம் சிறந்ததாகவே இருந்துள்ளது. எனவே ஸ்மித் டெல்லி அணியை வழிநடத்தக்கூடும். ஆனால், இந்தத் தொடர்தான் டெல்லி அணிக்காக ஸ்மித் விளையாடும் முதல் தொடர். ஆனால் ரகானே கடந்த வருடமும் டெல்லி அணிக்காக விளையாடியவர். அணியின் சாதக - பாதகங்களை அறிந்தவர். ஆதலால் ரகானேயை தலைவராக நியமிக்கவும் வாய்ப்புக்கள் உள்ளன.

**" திண்ணையில இருந்தவனுக்கு திடுக்கென்று கல்யாணமாம்"**



ஆர்.லயனல்

# இருளில் ஓர் ஒளி

இருள் நிறைந்த பயணத்தை மேற்கொண்டிருந்த இலங்கைக் கிரிக்கெட் அணிக்கு மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்துடன் நம்பிக்கையின் ஒளி தற்போது ஓரளவு கிடைத்துள்ளது.

இந்த ஆட்டத்தில் முதல் இன்னிங்ஸுக்காக வெறும் 169 ஓட்டங்களை மட்டுமே இலங்கை அணி பெற்றிருந்தது. மேற்கிந்தியத் தீவுகள் அணி 271 ஓட்டங்களைப் பெற்று 102 ஓட்டங்கள் முன்னிலை வகித்தது. இதனால் இலங்கை அணி கிட்டத்தட்டத் தோல்வியடைந்துவிடும் என்றே அனைவரும் கருதினர். ஆனால் இரண்டாவது இன்னிங்ஸில் இலங்கை அணியின் ஆட்டம் வேறு விதமாக இருந்தது.

திரிமன்னே 76, /ஒஷட பெர்னான்டோ 91, பத்தும் நிஷங்க 103, டிக்வெல்ல 96 என்று அடுத்தடுத்து சிறப்பான பெறுபேற்றை வெளிப்படுத்தினர்.

இதையடுத்து 476 ஓட்டங்களைக் குவித்த இலங்கை அணி 375 ஓட்டங்களை இலக்காக நிர்ணயித்தது. ஆட்டம் சமநிலையானது. இலங்கை அணியிடம் இருந்து இப்படியான ஒரு ஒருங்கிணைந்த அணிப் பெறுபேறு வெளிப்படுவது நீண்ட நாள்களின் பின்னர் தற்போதே இடம்பெற்றுள்ளது. அதிலும் அறிமுக வீரரான பத்தும் நிஷங்க தன் முதல் ஆட்டத்திலேயே சதத்தைப் பதிவுசெய்திருப்பது ஏதோவொரு நம்பிக்கையை இலங்கை ரசிகர்களின் மனங்களில் விதைத்துள்ளது.

வனிந்து ஹசரன்க, டிக்வெல்ல, பத்தும் நிஷங்க, தனஞ்சய டி சில்வா என்று இளம் வீரர்கள் தற்போது அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் மேலும் மெருகேற்றப்படும் பட்சத்தில் இலங்கைக் கிரிக்கெட் அணிக்கு விடிவுகாலம் வெகுதூரத்தில் இல்லை.

**" ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம். ஆனால் ஒரு போட்டி பதமாகுமா?"**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org